அப்பொழுது வந்தது மைவிழியின் கேள்வி, ''போருக்குப் போகப் போகிறீர்களா இளவரசரே?'' என்று. அவள் குரலில் ஏளனம் பூர்ணமாக ஒலித்தது.

இளவரசன் திரும்பி அவளைச் சுட்டுவிடுவது போல் நோக்கினான். ''நான் எங்கு போனால் உனக்கென்ன?'' என்ற சுடு சொற்களையும் உதிர்த்தான்.

''ஆமாம். இனிமேல் எனக்கென்ன?'' என்று கேட்ட மைவிழி பஞ்சணையில் ஒருக்களித்து வேறு பக்கம் திரும்பிப் படுத்தாள்.

''உனக்கென்ன என்றால்?'' என்று சீறினான் பல்லவ இளவல்

''அக்கறைப்படுவதற்கு வேறு ஒருத்தி வந்து விட்டாள்'' என்று கூறினாள் மைவிழி அவனுக்கு முதுகுப் பக்கத்தைக் காட்டிய வண்ணம்.

''யாரவள்?''

''அரச மகள்.''

''அவளைப் பற்றி அனாவசியமாகப் பேசாதே.''

''ஓகோ.''

''என்ன ஓகோ.''

''அவளிடம் அத்தனை சொந்தம் வந்து விட்டதா?''

''சொந்தமா? என்ன சொந்தம்?''

''தங்களுக்குத் தெரியாத சொந்தம் ஏதுமில்லை,''

''உளறாதே''

''உளறுவது நானல்ல..''

''உன்மத்தம் பிடித்திருக்கிறது உனக்கு.''

''அதுவும் எனக்கல்ல.'' இதைச் சொன்ன அவள் உடலை நன்றாகக் குறுக்கிப் படுத்தாள்.

அறை மூலையிலிருந்தே அவளை நோக்கிக் கொண்டு நின்றான் பல்லவ இளவல் பல விநாடிகள். ஒருக்களித்துக் கிடந்த அந்த நிலையிலும் பூங்கொடியொன்று வளைந்து கிடைப்பதைப் போலிருந்தது அவள் சரீரம். முதுகைக் காட்டியதாலும் கால்களைக் குறுக்கியதாலும் நன்றாக எழுந்து கண்களுக்கு முன்பு விளையாடிய அவள் பின்புற அழகு ரங்கபதாகாதேவியின் நினைப்பை நொடிப் பொழுதில் பறக்கடித்து விட்டது. தன் பரிதாப நிலையை ஒரு விநாடி நினைத்துப் பார்த்தான். இரு மங்கையரும் தன்னைப் பிடித்துக் கொண்டு விட்டதையும் அவ்விருவரில் ஒவ்வொருத்தியைச் சந்திக்கும் போதும்



அவள் அழகு மற்றொருத்தியின் அழகை மறைத்துவிடுவதையும் நினைத்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். அறை வாயிற்கதவைச் சாத்தி விட்டு மைவிழியினருகில் வந்து பஞ்சணையில் உட்கார்ந்து அவளை மெல்லத் தொட்டான். அவள் திரும்பவில்லை. கையை எடுத்துக் கோபத்தால் எறியவுமில்லை. ''சற்றுக் குனியுங்கள்'' என்று மட்டும் ரகசியமாகச் சொன்னாள்.

பல்லவ இளவல் வியப்படைந்தான். அவள் குரலில் சற்று முன்பு இருந்த எரிச்சலில்லை. ஏன், காதல் கூட இல்லை. இந்தத் திடீர் மாற்றத்துக்குக் காரணம் புரியாமல் தயங்கிய இளவரசன் அவள் சொற்படிக் குனிந்தான். ''இந்தப் பஞ்சணைக்குக் கீழே பாருங்கள்'' என்றாள்.

''என்ன அங்கே?'' என்று கேட்ட பல்லவ இளவல் சற்று வளைந்து கட்டிலின் அடியை நோக்கினான்.

பல ஓலைச் சுவடிகள் அங்கு பரப்பட்டிருந்ததைத் தவிர வேறெதையும் அங்கு காணோம். ''சுவடிகள் இருக்கின்றன'' என்றான் இளவரசன்.

''அவற்றில் விடிமோட்சமும் இருக்கின்றது'' என்றாள் மைவிழி.

''என்ன விடிமோட்சம் மைவிழி?''

''இரவு சொல்கிறேன்'' என்று கூறினாள் மைவிழி.

''இப்பொழுது சொல்லக்கூடாதா?''

''கூடாது.''

# 32. ஓலைக் குவியல்

கடல் மல்லைக் கட்டழகி மைவிழி படுத்திருந்த பஞ்சணைக்குக் கீழே பற்பல ஓலைச் சுவடிகள் பரப்பப்பட்டுக் கிடந்ததைப் பார்த்ததும் சிறிது வியப்பே அடைந்தான் பல்லவ இளவல். ஓலைச் சுவடிகளை வைக்கத் தகுந்த இடம் படுக்கும் பஞ்சணைக்கும் கீழ்ப்புறமல்ல வென்பது அவனுக்குத் தெள்ளெனத் தெரிந்தே இருந்தது. ஓலைச் சுவடிகளைச் சாதாரணமாகப் பயபக்தி யுடனும் பாதுகாப்புடனும் வைக்க வேண்டியது அவசியமாயிருக்க அவற்றைக் குப்பை போல் கட்டிலுக்குக் கீழே கொட்டியிருப்பதை ஆசார்யர் எப்படி ஒப்புக் கொண்டார் என்ற கேள்வியை உள்ளத்தே எழுப்பிக் கொண்ட பல்லவ இளவலுக்கு விடையேதும் கிடைக்கவில்லை. அத்துடன் கதவைச் சாத்தியபின் தன்னிடம் கட்டிலின் அடியிலுள்ள ஓலைச் சுவடிகளை

மைவிழி காட்டியதும், அதில், விடிமோட்சம் இருப்பதாகக் கூறியதும் அவன் வியப்பை அதிகப்படுத்தவே செய்தன. தவிர அவள் விடிமோட்சத்தைப் பற்றி இரவில் விவரிப்பதாகக் கூறி முடிவுகட்டி விட்டதும், பகலில் சொல்லுவதில் ஆபத்து ஏதோ இருப்பதாகக் குறிப்பிட்டதும் அவன் மனத்தில் பலவித யோசனைகளைக் கிளறி விட்டது. தான் ஒரு முழு இரவிலும் காலையிலும் கண்டு பிடிக்க முடியாத என்ன ரகசியத்தை மைவிழி கண்டுபிடித்திருப்பாள் என்ற யோசனை அவன் மன உச்சியில் எழுந்து நின்றது. அதன் விளைவாக ஏற்பட்ட ஆர்வத்தால் வினவினான், ''கதவு தான் தாளிட்டிருக்கிறதே மைவிழி! சொன்னால் என்ன?'' என்று.

மைவிழி அவனை நோக்கித் தலையை மட்டும் திருப்பி, ''இந்த மாளிகையில் கதவுகளோ சுவர்களோ பெரும் தடையல்ல'' என்று கூறினாள்.

பல்லவ இளவலுக்கு வியப்பு இன்னும் அதிகமாயிற்று. ''அப்படியானால்...'' என்று இழுத்து வாசகத்தை முடிக்காமல் கேள்விளைத் தொக்கி விட்டான்.

''கண்காணிப்பு பலமாயிருக்கிறது'' என்றாள் மைவிழி.

''எப்படித் தெரியும் உனக்கு? நானில்லாத சமயத்தில் யாராவது உள்ளே நடப்பதைக் கண்காணித்தார்களா?''

''இல்லை. அப்படி எதுவும் பகிரங்கமாக நடக்கவில்லை. திடீரென்று பணிமக்கள் யாராவது வருகிறார்கள். கதவை லேசாகத் திறந்து ஏதாவது தேவையா என்று விசாரிக்கிறார்கள். பிறகு கதவு சாத்தப்படுகிறது. கதவோரமாக யாரோ அப்புறம் நிற்பதுபோல் தோன்றுகிறது எனக்கு.''

''வீண் பிரமை!''

''பிரமையல்ல. நிச்சயம் நமது ஒவ்வோர் அசைவும் கவனிக்கப்படுகிறது.''

இதைக் கேட்ட இளவரசன் சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினான். திடீரென எழுந்து சென்று சரேலெனத் தாழை நீக்கிக் கதவையும் திறந்தான். கதவுக்கு வெளியே யாரையும் காணோம். அந்தக் கட்டின் பெரிய கூடம் வெறிச்சென்று கிடந்தது. பிறகு கதவைத்திறந்தபடி போட்டு மீண்டும் மைவிழி படுத்திருந்த கட்டிலண்டை வந்த ராஜசிம்மன் கூறினான், ''பார்த்தாயா மைவிழி! கதவுக்கு வெளியே யாரு மில்லை. கூடம் வெறிச்சிட்டுக் கிடக்கிறது'' என்று.



குறுகிப் படுத்த நிலையிலிருந்து சற்று நிமிர்ந்து ஒரு கையைத் தலையில் ஊன்றி ஒருக்களித்த வண்ணம் பஞ்சணையில் சாய்ந்து திரும்பி, திறந்த கதவை நோக்கினாள். மைவிழி. ராஜசிம்மன் கூறியபடி கூடத்தில் யாருமில்லையென்றாலும் அவள் மனத்திலிருந்த உறுதி சிறிதும் தளரவில்லை. ஆகவே அவள் இளவரசனை நோக்கி, ''இப்பொழுது யாருமில்லை யென்பது உண்மைதான். ஆனால் நீங்கள் வருமுன்பு அடிக்கடி இக்கதவின் முன்பாக ஆள் நடமாட்டம் இருந்தது. அந்த நடமாட்டத்தில் எனக்குச் சந்தேகமிருந்ததால் நான் கதவைச் சாத்தித் தாழிட்டு அறையை ஆராய்ந்தேன். கட்டிலில் பஞ்சணை விரிக்கப்பட்டிருந்த முறை விசித்திரமாயிருந்தது. அதன் மீதிருந்த விரிப்புப் புதிதாயிருந்தது. ஆகவே கட்டிலுக்கடியில் பார்த்தேன். கட்டிலுக்கடியில் ஓலைச் சுவடிகளிருந்தன. ஓலைச் சுவடிகளை வைக்க இடம் இது அல்லாதலால் அவற்றில் என்ன எழுதியிருக்கிது என்று பார்க்க ஆசைப்பட்டேன். அதற்குப் பூர்வாங்கமாகக் கதவைத் தாழிட்டு, சேலையைப் பிரித்துக் கட்டிக் கொண்டேன். யாராவது கண்காணித்தாலும் சேலை கட்டிக் கொள்வதற்காகத் தாழிட்டதாக நினைத்துக் கொள்ளட்டும் என்றே அப்படிச் செய்தேன். அப்படிச் சிறிது நேரத்தை ஓட்டிவிட்டு அடியிலிருந்த ஓலைச்சுவடிகளைப் பார்த்தேன். கட்டுக்கட்டாக எடுத்து, ஏதேதோ சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன பலவற்றில். எனக்கு அவை ஏதும் விளங்கவில்லை. ஆனால் விளங்கிய ஓலைச் சுவடி நாலைந்து கட்டிலுக் கடியில் கிடந்தது. அதை மீண்டும் அந்த இடத்திலேயே வைத்து மற்றச் சுவடிகளை அதன்மீது போட்டேன். பிறகு மறுபடியும் சென்று கதவைத் திறந்தேன். கதவு திறக்குமுன்பு அவசரமாக யாரோ சென்ற காலரவம் என் காதில் விழுந்தது. இது நடந்த கதை'' என்று விளக்கினாள்.

அவள் விளக்கம் அவனுக்கு வியப்பைத் தருவதாயிருந்தது. ''இப்பொழுது அந்த ஓலையைப் பார்த்தாலென்ன?'' என்று வினவினான் பல்லவ இளவல், வியப்புக் குரலிலும் ஒலிக்க.

''நான் தான் முன்பே சொன்னேனே அதில் ஆபத்திருக்கிற தென்று'' என்றாள் மைவிழி.

''அந்த ஆபத்து இரவில் மட்டும் விலகிவிடுமா?'' என்று வினவினான் இளவரசன்.

''இந்த ஓலைக்குவியலைப் போட்டவர்கள் அப்படித்தான் நினைத்திருக்க வேண்டும்.''

இதைக் கேட்டதும் இளவரசனுக்கே தூக்கி வாரிப் போட்டது. அவன் கண்களில் ஒரு விநாடி அதிர்ச்சியின் சாயை படர்ந்தது. ''இதை

வேண்டுமென்றே யாரோ குவித்திருக்கிறார்களென்று நினைக்கிறாயா?'' என்று வினவினான் அவன்.

''நினைக்கவில்லை. உண்மைதான்'' என்று மைவிழி கூறினாள்.

''எப்படித் தெரியும் உனக்கு? இந்த அறையில் இரவில் நான் தங்கியிருக்கிறேன். நான் கவனிக்காதது உனக்கு மட்டும் புலப்பட்டுவிட்டதா?'' என்று கேட்டான் இளவரசன்.

''ஆம்.''

''அப்படியென்ன பெரும் தகுதி உனக்கு?''

''பெண் என்ற தகுதி'' என்ற மைவிழி லேசாகப் புன்முறுவல் காட்டினாள். அத்துடன் மேலும் சொன்னாள்: ''இரவில் உங்களுக்கு அறையைத் திறந்து விட்டார்கள். படுத்து உறங்கிவிட்டீர்கள். ஆனால் நான் காலையில் வந்திருக்கிறேன். என்னைச் சிற்றுண்டி அருந்த அழைத்தார்கள். வருவதாகக் கூறிவிட்டு, நீங்கள் படுத்திருந்த பஞ்சணையைத் தட்டிச் சுருட்டினேன். அதில் தூசி விழுந்ததால் அறை மூலையிலிருந்த துடைப்பத்தை எடுத்து அறையை விளக்கினேன்...''

இந்த இடத்தில் இடை புகுந்த இளவல், ''நீயா! விளக்கி னாயா?'' என்று வினவினான் வியப்புத் ததும்பிய குரலில்.

மைவிழி அவனைப் பார்த்து மெல்ல நகைத்தாள். ''ஏன், நான் விளக்கக் கூடாதா?'' என்றும் கேட்டாள் நகைப்பின் ஊடே.

''இளவரசனை நாளை மணக்கப் போகிறவள்!'' என்று சீறினான் இளவரசன்.

''அதனாலென்ன?''

''ராணி பணிப் பெண்ணல்ல.''

''எந்த ராணியும் கணவனுக்குப் பணிப்பெண்தான். நீங்கள் என்னை மணந்து மண்டலாதிபதியானாலும், பணிப் பெண்கள் பலர் எனக்கிருந்தாலும், அவசியமிருந்தால் நான் அறையை விளக்கத்தான் செய்வேன். சிலசில வேலை சில சில ஜன்மங்களுக்கு இயற்கை. அதலிருந்து அவர்கள் விடுபட முடியாது'' என்ற மைவிழி, ''அது கிடக்கட்டும் இளவரசே! உங்களுக்கு, நீங்களிருக்குமிடத்திற்கு, நான் எந்தப் பணியைத்தான் செய்ய மாட்டேன்?'' என்று கேட்டு மேலும் தொடர்ந்தாள், ''அறையை விளக்கினேனா?'' என்று.

''உம்.'' இளவரசன் ஹுங்காரத் தொனி கிளப்பினான். அவன் மனம் மைவிழியை நினைத்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்தது.



அவள் பெருந்தன்மையை, தன்னிடம் அவள் கொண்டுள்ள காதலின் வலிமையை நினைத்து, ''இவளுக்கு நான் என்ன பிரதி செய்ய முடியும்?'' என்று கேள்வி கேட்டு இயங்கிக் கொண்டிருந்தது.

ஆனால் இளவரசன் உள்ளத்திலோடிய எண்ணங்களைப் பற்றி கவலைப்பட்டாளில்லை மைவிழி. ஓலைச் சுவடிகளைப் பற்றிய செய்தியை விளக்கிச் சொன்னாள். ''அறைக் கதவைச் சாத்திக் கொண்டு விளக்கினேன். அப்பொழுது கட்டிலின் கீழ் ஏதுமில்லை சிற்றுண்டி வேண்டாமென்று சொன்னேன். பணிப் பெண்கள் கேட்கவில்லை. அவர்களுடன் வேண்டாவெறுப்பாகச் சென்று பால் மட்டும் சிறிது அருந்தி மீண்டேன். நான் திரும்பிய போது பஞ்சணை மீண்டும் விரிந்திருந்தது. அதில் புதிதாக ஒரு பட்டாடையும் விரிந்து கட்டிலின் அடியை மறைத்துத் தொங்கியிருந்தது. இதென்ன புதிதாக இருக்கிறதே யென்று நினைத்தேன். அந்தச் சமயத்தில் கதவுக்கு வெளியே யாரோ நடப்பது தெரிந்தது. கதவைச் சாத்தித் தாழிட்டேன். புடவையை உதறிக் கட்டிக் கொள்வது போல் பாசாங்கு செய்தேன். பிறகு பஞ்சணையில் விரித்திருந்த பட்டாடையைச் சிறிது கையில் தூக்கிப் பார்த்தேன். கட்டிலின் அடியில் ஓலைச்சுவடிக் குவியல் தெரிந்தது'' என்ற மைவிழி இளவரசனை நோக்கினாள்.

''பிறகு?'' இளவரசன் கேள்வியில் ஆர்வமிருந்தது.

''ஒரு வேளை ஆசார்யர் உத்தரவின் மேல் பணிப் பெண்கள் அதை அங்கு போட்டிருக்கலாமென்று முதலில் நினைத்தேன் பணிப் பெண்களை அழைத்து விசாரிக்கலாமா என்றுகூட யோசித்தேன். பிறகு எந்தக் காரணத்தாலோ நான் யாரையும் அழைக்கவில்லை. எதற்கும் ஓலைச் சுவடிகளை அடுக்கி ஓர் ஒழுங்காக வைக்கலா மென்று சுவடிகளை எடுத்துத் தலைப்புகளைப் பார்த்து பார்த்து அடுக்கினேன். நாலு கட்டுக்களைத்தான் எடுத்திருப்பேன். அடியில் ஒரு புதுவிதக் கட்டு தெரிந்தது. அந்தச்சுவடியும் பழையதுதான். ஓலை கறுத்துத்தானிருந்தது. ஆனால் மற்றச் சுவடிகளைப்போலல்லாமல் அது குட்டையாயிருந்தது. மற்ற சுவடி ஓலைகளைவிட நன்றாகப் பெரிதாய், பட்டையாய் இருந்தது. கயிற்றினைப் பிரித்து ஓலைகளைப் புரட்டிப் பார்த்தேன்...''

இளவரசன் ஏதும் பேசவில்லை. ''சொல் மேலே'' என்பதற்கு அறிகுறியாகக் கையை ஆட்டினான்:

மைவிழி அவனை நோக்கி உதடுகளை லேசாகத் திறந்தும் மூடியும் மிக ரகசியமாகச் சொன்னாள், ''அந்தச் சுவடி ஓலைகளில் எழுத்து ஏதுமேயில்லை'' என்று.

இளவரசன் குரலும் முணுமுணுத்தது. ''வேறென்ன இருந்தது?''

''கோடுகள்.''

''கோடுகளா?''

''ஆம்.''

''என்ன புரிந்து கொண்டாய்?''

மைவிழி தன் பெருவிழிகளை அவன் விழிகளுடன் உறவாட விட்டாள். ''இப்பொழுது கேட்காதீர்கள். பொறுங்கள்'' என்றாள்.

''பொறுக்க வேண்டுமா?'' இளவரசன் குரலில் சிறிது கடுமை தெரிந்தது.

''ஆம்.''

''எது வரை?''

''இரவு வரை.''

## 33. இருவரின் ரகசியம்

**ப**ஞ்சணையில் ஒயிலாக ஓவியப் பாவையெனச் சாய்ந்த நிலையில் ஓலைச் சுவடிக் கோடுகளைப் பற்றிப் பிரஸ்தாபித்து விட்டு முழு மர்மத்தையும் அறிய இரவுவரை பொறுக்க வேண்டுமென்று திட்டமாகவும் கூறிவிட்ட மைவிழிச் செல்வியை நீண்ட நேரம் உற்று நோக்கினான் பல்லவ இளவல். பஞ்சணையின் பக்கத்தைத் தனது உரமான கால்களால் அணைத்து நின்ற வண்ணம். அந்தக் காலை நேரத்தில் மைவிழியின் மனோகர உடல் அவன்மீது கணைக்கிலாக் காமக் கணைகளை வீசியபோதும் அவன் நினைப்பெல்லாம் அவள் கூறிய ஓலைக் கதை மீதே நிலைத்துநின்றபடியால், அவன் மனம் அக்கணைகளை வாங்க இயலாத பாறாங்கல்லாகவே இருந்தது. அப்படிக் கடினப்பட்டு விட்ட மனத்தின் காரணமாக அவன் கட்டிலின் அருகாமையை விட்டு அறையில் அப்படியும் இப்படியும் உலாவலானான். உலாவ உலாவ அவன் மனப்பாறாங்கல்லிருந்தும் யோசனை ஊற்றுக்கள் சில தோன்ற முற்படவே, அவன் அவளை நோக்கிச் சில கேள்விகளைக் கேட்கவும் முற்பட்டான். மைவிழி முதன் முதலாக அந்த அறை வாயிற்படியில் வந்து தன்னையும் ரங்கபதாகா தேவியையும் நோக்கிய காலத்திற்கும் தான் ரங்கபதாகா தேவியின் அறைக்குச் சென்று திரும்பிய காலத்திற்கும் இடைவெளி கிட்டத்தட்ட அரை ஜாமம் இருக்குமென்பதை அவன் சிந்தனை வலியுறுத்தவே, ''என்ன நடந்திருந்தாலும் அந்த அரை ஜாம இடைவேளையில்



நடந்திருக்கவேண்டும்'' என்று தீர்மானித்தான். ரங்கபதாகா தேவியின் அறையிலிருந்த சிற்ப சிருஷ்டிகளும் வர்ணங்களைக் கற்க அவள் காட்டிய ஆசையுமே தன்னை அளவு மீறி அவள் அறையில் தங்க வைத்துவிட்டதென்பதையும் பல்லவ இளவல் புரிந்து கொண்டான். ''அந்த இடைவேளைக்குள் இவள் பஞ்சணையைத் தட்டிப் போடவும், பிறகு அறையை விளக்கவும், அதற்குப் பிறகு பணிமக்கள் அவளைச் சிற்றுண்டி அருந்த வற்புறுத்தவும் திரும்பி வரும்போது ஓலைக் குவியல் இருக்கவும் இத்தனையும் நேர்ந்ததென்றால் ஏதோ முன்னேற்பாட்டுடன் காரியங்கள் நடந்திருக்கின்றன' என்று ஊகித்தவனாய் அவன் கேட்டான். ''நீ வந்தபோது பஞ்சணை புழுதியாகவா இருந்தது.'' என்று.

சற்று எட்ட நின்ற நிலையில் அந்தக் கேள்வியைக் கேட்ட பல்லவ இளவலை ஏறெடுத்து நோக்கிய மைவிழி, ''இல்லை. புழுதியில்லை. சற்றுக் கலைந்து கிடந்தது. விடியற்காலையில் அரச மாளிகையில் படுக்கைகள் தட்டிவிரிக்கும் வகையில் இல்லை'' என்று கூறினாள்.

''வேறு எப்படி இருந்தது?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

''இரவில் படுத்திருந்த பஞ்சணையைச் சுருட்டி விரித்தவர்கள் பின்பு அதில் எதையோ தேடிய மாதிரி கலைந்திருந்தது என்றாள் மைவிழி.

''வீண் பிரமை. நான் இங்கு வந்தபோது கத்தியைத் தவிர வேறெதுவும் என்னிடமில்லை. அதையும் ஒரு மூலையில் சாத்தியிருந்தேன். என் பஞ்சணையில் யார் என்ன தேடியிருக்க முடியும்?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

''யார் என்ன தேடியிருக்க முடியுமோ தெரியாது. எதைத் தேடியிருந்தாலும் அவசரமாகத் தேடியிருக்கிறார்கள். அதனால் தான் நான் பஞ்சணையைத் தட்டிப் போட்டேன். பிறகு அறையையும் விளக்கினேன். அதுவும் நீங்கள் அரச குமாரியை பார்க்கப் போனதுமே விளக்கினேன். நான் விளக்கி முடிந்ததும் முடிக்காததுமாக அறைக்கு வெளியே காலரவம் கேட்டது. சட்டென்று மூடிய கதவைத் திறந்தேன். அங்கு நின்றிருந்தாள் ஒரு பணிப் பெண்'' என்றாள் மைவிழி.

''சொல் மேலே'' என்று ஊக்கியது இளவலின் குரல்.

மைவிழி மேலும் சொன்னாள்: 'இங்கு எதற்காக நிற்கிறாய் என்று நான் அந்தப் பணிப் பெண்ணைக் கடிந்து கொண்டேன். ஆனால் என் கடுமையைக் கண்டு அவள் அஞ்சவில்லை. 'உங்களைச் சிற்றுண்டி அருந்த அழைத்து வரச் சொன்னார்கள். அதற்காக வந்தேன். கதவைத் தட்டக் கையை எடுத்தேன். அதற்குள் நீங்களே திறந்து விட்டீர்கள்' என்று அவள் சொன்னாள் எனக்குச் சிற்றுண்டி தேவையில்லையென்று

சொல்லிக் கதவைச் சாத்த முயன்றேன். அவள் வாயிற்படியைத் தாண்டி என்னைக் கதவை அடைக்க விடாமல் செய்தாள். ''ஆசார்யர் மாளிகையில் அனைவருக்கும் உபசரிப்பது எங்கள் கடமை. உங்களுக்கு இஷ்ட மானதை முடிந்ததைச் சாப்பிடுங்கள். இல்லையேல் ஆசார்யர் எங்களைக் கோபிப்பார்'' என்று வற்புறுத்தினாள். வேண்டா வெறுப்பாக நான் அவளுடன் சென்றேன். உணவுக் கூடத்தில் எனக்கு மனை சேர்த்து இலை சேர்த்து உபசரித்தார்கள். எதுவும் வேண்டாம் என்றேன். பாலாவது அருந்துங்கள் என்று மன்றாடினார்கள் மற்றப் பணிப்பெண்கள். அதற்குச் சம்மதித்தேன். பால் கொஞ்சத்தில் வரவில்லை. புதுப் பாலைக் கற்கண்டு ஏலம் குங்குமப்பூ போட்டுக் காய்ச்சுவதாகச் சொன்னார்கள். காலம் தாமதித்துப் பால் வந்தது. அது மிகச் சுவையாய்த்தானிருந்தது! இருந்தும் அதை ரசிக்க என்னால் முடியவில்லை. வேகமாக அருந்தி அறைக்குத் திரும்பினேன். அறையில் பஞ்சணை மிக அழகாகப் போடப்பட்டிருந்தது. பெரிய விரிப்பு ஒன்று அதன் மீது போடப்பட்டு அது மஞ்சத்தின் அடியை மறைத்துத் தொங்கியது. மீதி விஷயத்தை உங்களுக்கு ஏற்கனவே சொல்லி விட்டேன்.'' இதைச் சொல்லி முடித்த மைவிழி பல்லவ இளவலை நோக்கினாள்.

ராஜசிம்மன் முகம் தீவிரச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது! கடைசியில் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவன்போல் தானே தலையை ஆட்டிக் கொண்டான். பிறகு மைவிழியை நோக்கி, ''சரி, அந்த ஓலையை இரவில் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறினான். அங்கிருந்து வெளி வந்ததும் பக்கத்துக்கு அறைக்குச் சென்று வாயிற்படியில் நின்ற வண்ணம் உள்ளேயிருந்த சீனனையும் வீரபாகுவையும் நோக்கினான். சாதாரணச் சமயமா யிருந்தால் அந்த உள்ளிருந்த நிலையைப் பல்லவ இளவல் பெரிதும் ரசித்திருப்பான். உள்ளே வீரபாகு வெறுப்புத் தட்டிய முகத்துடன் மஞ்சமொன்றில் அமர்ந்திருந்தான். யாங்சின் தரையில் அந்த அறையின் கதவுக்கருகில் உட்கார்ந்து கொண்டு வீரபாகுவைப் பார்த்த வண்ணமிருந்தான். அந்தப் பார்வையால் வெகுண்ட வீரபாகுவின் வதனத்தில் அவ்வப்பொழுது வெறுப்புடன் எரிச்சலும் கலந்து கொண்டிருந்தது.

இளவரசன் யாங்சின்னைத் தன்னுடன் வரும்படி சைகை செய்தான். பிறகு வீரபாகுவை நோக்கி, ''இனி நீ இம்மாளிகையை விட்டுப் போகலாம்'' என்று கூறினான்.

வீரபாகு மஞ்சத்தில் துள்ளி உட்கார்ந்தான். ''உத்தரவு வந்து விட்டதா?'' என்று வினவவும் செய்தான் பெரிய மீசை சிறிது அசைய.



''எதற்கு உத்தரவு?'' இளவலின் கேள்வி வியப்புடன் எழுந்தது.

''என்னை விடுதலை செய்ய உனக்கு உத்தரவு வந்திருக்க வேண்டும்'' என்றான் வீரபாகு சிறிது மரியாதையையும் கைவிட்டு.

''அதனால்தான் விடுதலை செய்கிறேனா?'' என்று வினாவினான் பல்லவ இளவல்.

''ஆம்.'' கம்பீரமாக வந்தது வீரபாகுவின் பதில். வீரபாகு மஞ்சத்தைவிட்டு இறங்கி எழுந்து கம்பீரமாக நிற்கவும் செய்தான்.

பல்லவ இளவல் ஒருவிநாடி வீரபாகுவை வேடிக்கை ததும்பிய கண்களுடன் நோக்கினான். பிறகு அதே கண்களில் வருத்தம் தெரிந்தது. ''பாவம்'' என்ற சொற்கள் இரைந்து உதிர்ந்தன பல்லவ இளவலின் இதழ்களிலிருந்து.

''ஆம் ஆம்'' என்பதற்கறிகுறியாகத் தலையை ஆட்டினான் சீனன்.

''என்ன பாவம்! என்ன ஆம், ஆம்?'' என்று இருவரையும் நோக்கி எரிந்து விழுந்தான் வீரபாகு.

பல்லவ இளவலோ சீனனோ அதற்குப் பிறகு வீரபாகுவை நோக்காமல் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள முற்பட்டார்கள்.

''யாங் சின்.'' என்றான் பல்லவ இளவல்.

''எசமான்?''

''வீரபாகு...''

''உம்...இவர்...''

''பெரிய வீரர்...''

''ஆம், ஆம்.''

''சாளுக்கியர் உபதளபதிகளில் இவர் முக்கியமானவர்.''

''இவரை நாம் விடுதலை செய்தால்...''

''இவர் பதவிக்கும் மதிப்புக்கும் பெரும் இழுக்கு.''

''அப்படியானால் என்ன செய்கிறாய்?''

சீனன் சட்டென்று தன் மெல்லிய கத்தியை எடுத்தான். ''இவரை இந்த அறையில் தள்ளிப் பூட்டிவிடுகிறேன்'' என்றும் சொன்னான். தாழை நாகம் போன்ற அந்தப் பூங்கத்தியைக் கண்டதும் வெல வெலத்துப் போனான் வீரபாகு. இருப்பினும் சற்று மிடுக்காகவே பேசத் தொடங்கி, ''சாளுக்கியப் படைத் தலைவனை அறையில் வைத்துப் பூட்டுவது பெரும் குற்றம்'' என்று சீறினான்.

''இந்த நாட்டில் அது குற்றமில்லை. உன்னைக் கொலை செய்தால் கூட இங்கு யாரும் ஏனென்று கேட்க மாட்டார்கள்!''

''பொய், பொய்.''

''பொய்யல்ல. நீ விடுதலையடைவது உன் மன்னருக்கும் இஷ்டமில்லை. தவிர...''

''தவிர? வேறு யாருக்கு இஷ்டமில்லை.''

''ஸ்ரீராமபுண்ய வல்லபருக்கு'' என்று மெள்ளச் சொற்களை உதிர்த்தான் பல்லவ இளவல்.

அந்தப் பெயரைக் கேட்டதும் இடியரவம் கேட்ட அரவு போல் நடுங்கினான் வீரபாகு. ''போர் மந்திரியா?'' என்று நடுங்கும் குரலில் கேட்கவும் செய்தான்.

பல்லவ இளவல் அவனை நோக்கிப் புன்முறுவல் செய்தான். ''இதற்கே உனக்குத் தண்டனை கிடைக்கும்'' என்றான்.

''எதற்கு?'' கிலிதாண்டவமாடியது வீரபாகுவின் முகத்தில்.

''பதவியை தவறாகச் சொன்னதற்கு!''

''எதைத் தவறாகச் சொல்லிவிட்டேன்?''

''ஸ்ரீராமபுண்ய வல்லபர் போர் அமைதி இரண்டுக்கும் மந்திரி. அவரை வெறும் போர் மந்திரி என்று எப்படிச் சொன்னாய்?''

இதைக் கேட்டதும் உண்மையாகவே மேலும் அச்சமடைந்த வீரபாகு, ''உனக்கு எப்படி அவரைத் தெரியும்?'' என்று கேட்டான்.

''சற்று முன்பு பேசிக் கொண்டிருந்தேன். அவர் பல விஷயங்களை கேட்டார். உன்னைப் பற்றி ஏதும் கேட்கவில்லை'' என்று கூறிய பல்லவ இளவல் அவனை உற்று நோக்கினான்.

மேற்கொண்டு வீரபாகு பேசும் சக்தியை இழந்தான். அந்த மாளிகைக்கு ஸ்ரீராமபுண்ணிய வல்லபர் வந்து போயிருப்பதே பெரும் வியப்பாயிருந்தது அவனுக்கு. இஷ்டப்பட்டால் வீரர்களை விட்டுப் பல்லவ இளவலை அவர் அழைத்துப் போயிருக்க முடியும் என்று நினைத்த வீரபாகு, ''போர் அமைதி மந்திரி அப்படிச் செய்யாததுடன் அவராகவே வந்து பல்லவ இளவலுடன் பேசிவிட்டுப் போயிருப்பதும், பேசிய பின்பு அவனைச் சிறைசெய்யாமல் சென்றிருப்பதும், அது மட்டுமின்றி என்னைச் சிறை மீட்காமல் சென்றிருப்பதும் மிக மிக விசித்திரம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அப்படி அவர் தனது விடுதலையை விரும்பாவிட்டால் தான் விடுதலை அடைவது உசிதமா என்று எண்ணிப் பார்த்தான். விடை ஏதும் கிடைக்காமல் குழம்பினான்.

அந்தக் குழப்பத்தை உடைத்தன பல்லவ இளவலின் சொற்கள். ''வீரபாகு! விடுதலையடைந்து எதிர் மாளிகைக்குச் சென்று உங்கள்



போர் அமைதி மந்திரியிடம் உன் தோல்விக்குச் சமாதானம் சொல்லி மன்னிப்புக் கேட்க விரும்கிறாயா? அல்லது இங்கு என்னிடம் மேலும் சிறையிலிருக்க விரும்புகிறாயா?'' என்று வினவினான் ராஜசிம்மன்.

வீரபாகு ஒரு விநாடிதான் சிந்தித்தான். பிறகு சீனனையும் ராஜசிம்மனையும் பார்த்துவிட்டு விடுவிடு என்று வாயிலை நோக்கிய மற்ற இரு கட்டுக்களை நோக்கி வேகமாக நடந்து சென்றான்.

அவன் சென்றதும் யாங்சின் பின்தொடர அந்த மாளிகையைச் சுற்றி வந்தான் இளவரசன். அந்த மாளிகை அவனக்குப் புதிதல்ல வென்றாலும், பல ஆண்டுகள் அவன் பாடம் படித்த இடமென்றாலும் அதன் உட்கட்டுகளுக்கு அவன் அதிகமாகச் சென்றதில்லை. அரசகுமாரன் என்ற முறையில் ரதத்தில் வருவான். உள்ளே மூன்றாம் கட்டில் ஆசார்யரிடம் பாடம் கேட்பான். போய் விடுவான். அவ்வளவுதானே தவிர அந்த மாளிகை அமைப்புக்களை அவன் அன்றுவரை கண்டதில்லை. ஆகவே அன்று அவன் மாளிகையின் முன்னிரண்டு கட்டுக்களையும், பின்னாலிருந்த கட்டுக்களையும், எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தான். அவனை யாரும் தடை செய்யவில்லை. வாயிலின் அருகிலிருந்த முதல் கட்டிலிருந்து அவன் ராஜ வீதியை நோக்கியபோது அங்க காவல் புரிந்த வீரர்கள்கூட அவனைக் கண்டும் காணாததுபோலவே நடந்து கொண்டார்கள். பின் கட்டுக்களில் இருந்த பணிப்பெண்களும் பணியாட்களும் அவனுக்கு வணங்கி வழிவிட்டார்களே யொழிய யாரும் எந்தத் தடையும் செய்யவில்லை.

ஆசார்யரின் மாளிகையை ஆராய்ந்து அவன் தனது அறைக்குத் திரும்பியபோது நடுப்பகல் தாண்டிவிட்டது. அவன் அறைக்கு வந்தபோது உட்புறத்தில் கதவு தாளிடப்பட்டிருந்தது. இருவருடைய பேச்சுக் குரல் அறைக்குள் கேட்டது. பண்பாட்டையும் நீக்கிக்கொண்டு ஒட்டுக் கேட்டான் பல்லவ இளவல்.

அறைக்குள் மைவிழியுடன் ரங்கபதாகா தேவி பேசிக் கொண்டிருந்தாள். ரகசியமாக இருப்பினும் உரையாடல் ஓரளவு தெளிவாகக் கேட்டது அவர்கள் உரையாடலைக் கேட்ட பல்லவ இளவல் பிரமித்துப் போனான்.

ரங்கபதாகா தேவி சொன்னாள். ''அவரை இன்றிரவு என் அறைக்கு அனுப்பி விடு'' என்று.

''அனுப்பி வைக்கிறேன். அதற்குத்தானே?''

''ஆம் ஆம், வேறெதற்கு?''

இதற்குப் பிறகு இரு மங்கையரும் நகைத்தனர்.

# 34. தர்ம சங்கடம்.

நங்கையர் இருவரிடமிருந்தும் ஸ்வர ஜாலங்களைப் போல உதிர்ந்த நகைப்பொலி இந்திர போகமாயிருந்தது இளவரசனான ராஜசிம்மன் இதயத்துக்கு. சுமார் அரைஜாம நேரத்துக்கு முன்பு பொறாமையை அள்ளிக் கொட்டிய அந்தப் புண்ணியவதிகளிருவரும் திடீரென அத்தனை அந்நியோன்யத்துக்கு வந்து விட்டது பெரும் வியப்பாகவும் இருந்து பல்லவ இளவலின் உள்ளத்துக்கு. ஆசார்யரின் மாளிகை பூராவையும் தான் சுற்றி வர அரைஜாமத்துக்கு மேல் ஆகியிருக்காதென்று கணக்குப் போட்ட ராஜசிம்மன், அந்த அரைஜாமத்துக்குள் அந்த மங்கையரிருவரும் எப்படி ஒன்று சேர்ந்தார்கள், ஏன் ஒன்று சேர்ந்தார்கள், இருவரும் மகிழ்ந்து குலாவக் கூடிய நிலைக்கு எப்படி வந்தார்கள் என்று ஏதுமே விளங்காததால் சிறிது சிந்தனையில் இறங்கினாலும் அந்தச் சிந்தனையை உள்ளிருந்த இருவரும் நீடிக்க விடவில்லை. மைவிழியின் குரல் மீண்டும் உள்ளிருந்து ஒலிக்கத் துவங்கியதால் மீண்டும் காதைத் தீட்டிக் கொண்டான் பல்லவ இளவல்.

இரு விநாடிகள் கலந்து நகைத்த பின்பு மைவிழி பொய்க் கோபத்துடன் சொன்னாள் ''தேவி! நீ ஆனாலும் பொல்லாதவள்'' என்று.

ரங்கபதாகா தேவி மீண்டும் மெல்ல நகைத்தாள். ''என்ன பொல்லாத்தனம் செய்துவிட்டேன்?'' என்று கேட்டாள் நகைப்பைத் தொடர்ந்து.

மைவிழியின் கண்கள் அவளை அரை வெட்கத்துடனும் அரை நகைப்புடனும் நோக்கின. ''வேறெதற்கு என்று கேட்டாயே அது என்னவாம்?'' என்று வினவிய மைவிழியின் இன்பக் குரலில் வெட்கமும் தெரிந்தது நகைப்பும் தெரிந்தது.

''மைவிழி! எதற்கும் உனக்கு ஒரே அர்த்தம்தானா?'' என்று கேட்டாள் ரங்கபதாகாதேவி விஷமமாக.

''வேறு என்ன பொருள் கொண்டு கேட்டாய் வேறெதற்கு என்று?'' என்று வினவினாள் மைவிழி.

''நான் அவரிடம் என்ன பயில முயலுகிறேன்?'' என்று வினவினாள் ரங்கபதாகாதேவி.

''அதுதான் தெரியுமே எனக்கு?'' மைவிழியின் பதிலில் இடக்கு இருந்தது.

''சே! சே! மைவிழி, மறுபடியும் ஆரம்பிக்கிறாயே அதை?''



''எதை?''

''உன் பயிற்சியை.''

''தேவி! நீ மிகவும் கெட்டிக்காரி பேசுவதில்.''

''நான் பேச்சோடு நிற்கிறேன். நீ காரியத்தில் காட்டுகிறாய்.''

''என் ஜபமெல்லாம் உன்னிடம் பலிக்காதென்பதைப் புரிந்து கொண்டு விட்டேன் தேவி.''

''உண்மை. முக்காலும் உண்மை.''

''என்ன உண்மை?''

''உன் ஜபம் வேறு. என் ஜபம் வேறு.''

''என்ன வித்தியாசமோ?''

''நான் ஆசார்யரிடம் காவ்யாதர்சம் படிக்கிறேன். அம்பிகையை ஜபம் செய்கிறேன்.''

''நான்?''

''நான் ஆசார்யரிடம் ஏட்டில் படிப்பதை நீ அனுபவத்தில் படிக்கிறாய் இளவலிடம். நான் அம்பிகையை ஜபம் செய்தால் நீ அவரை ஜபம் செய்கிறாய்.''

பிறகு இருவரும் மௌனம் சாதித்தனர். இருவர் விழிகளும் கலந்தன. திடீரென இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டனர். இருவரிடமிருந்தும் பெருமூச்சு கிளம்பியது.

அறைக்குள்ளே அவர்களிருவருக்கும் நடந்த ஊடல் நாடகம் வெளியே இருந்த இளவரசனுக்குத் தெரியவில்லையென்றாலும் அவர்கள் உரையாடல் மட்டும் மிகத் தெளிவாகக் கேட்டது. உரையாடல் மட்டுமல்ல, இறுதியில் இருவரும் சேர்ந்து வெளியிட்ட இன்பமும் சோகமும் கலந்த பெருமூச்சும் அவன் காதில் விழுந்தது. அந்தப் பெருமூச்சுக்குக் காரணம் அவனுக்குத் தெரியவில்லையா னாலும், அந்தப் பெரு மூச்சு அந்த இரு மங்கையரின் உள்ளங்களும் இணைந்து விட்டதற்கு அறிகுறியென்பதை மட்டும் சந்தேகமறப் புரிந்து கொண்டான் பல்லவ இளவல்.

மைவிழியிடமிருந்த பரிச்சயங்கூட அவனுக்கு ரங்கபதாகா தேவியிட மில்லையாகையால் அவள் எப்படித் திடீரெனத் தன்னிடம் உரிமை கொண்டாட முற்பட்டாள், அதை எப்படி மைவிழி ஒப்புக் கொண்டாள் என்பது பெரும் விந்தையாயிருந்ததால் ஏற்கனவே குழம்பிய அவன் சித்தம் அதிகமாகக் குழம்பியது. அதன் விளைவாகக் கதவை ஒட்டி நின்ற நிலையிருந்து விலகாமலிருந்து விட்ட

பல்லவ இளவல் திடீரென அறைக் கதவு திறக்கப்பட்ட போது உள்ளுக்குள் விழ இருந்தான். நல்லவேளையாகக் கதவைத் திறந்த ரங்கபதாகாதேவியும் அவளை அடுத்து நின்ற மைவிழியும் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள்.

இரு மங்கையரின் கரங்களும் இரு வழிகளில் தன் உடலுக்குக் குறுக்கே ஓடித்தன்னை தாங்கிவிட்டதன் விளைவாகப் பெரும் சங்கடத்துக்குள்ளான பல்லவ இளவல் ஆடு திருடிய கள்ளன்போல் விழித்தான். அதுமட்டுமல்ல, அந்த மங்கயைரிருவரும் தாங்கிப் பிடித்ததால் மார்பின் மேலும் இடைப் புறத்திலும் பதிந்துவிட்ட அந்த இரு அழகிகளின் சரீர லாவண்யங்கள் அவனுக்கு இல்லாத அவஸ்தையையெல்லாம் விளைவித்தன. மனிதனுக்கு மின்னல் ஒரு புறத்தில் பாய்ந்தாலே அவன் உயிர் நிலை தட்டிப் பார்க்கப்படும். இருபுறத்திலும் பாய்ந்தால் அதை விவரிப்பதற்குச் சொற்கள் இன்னும் மனித அகராதியில் பிறக்கவில்லை. அந்த நிலைக்கு உண்டான அகராதி மௌனம், திண்டாட்டம், சங்கடம். இந்த மூன்றும் கௌவ அம்மூவரும் சில விநாடிகளே நின்றனர். பெண்கள் இருவரின் மோகன உடல்கள் உடலெழுச்சிகள் தன்மீது பதிந்து விட்ட காரணத்தாலேயே முதல் சொன்ன மூன்று நிலைகளுக்கும் இலக்கான ராஜசிம்மன் மற்ற இரு மங்கையரையும் தலைகுனிந்து ஒரு முறை நோக்கினான். அந்த இருவர் தலைகளும் குனிந்துகிடந்தன,அவன் மார்பின் குறுக்கே சற்று மேலும் கீழுமாக. தலைகளைத் தான் அவன் பார்க்க முடிந்தது. அந்த நிலையில் அந்த இரு பெண்களின் நயனங்களையோ, நயனங்கள் பேசிக் கொண்ட ரகசிய மொழிகளையோ அவன்காண முடியவில்லை.

ஆனால் அவன் தங்களை நோக்குகிறானென்பதை அறிந்த மங்கையர் இருவரும் மெள்ள அவன் குறுக்கே பாய்ந்த தங்கள் கைகளை விலக்கிச் சற்று விலகி நின்றனர். அதற்குப் பிறகும் மௌனமே நிலவியது அவர்கள் மூவரிடமும். அந்த மௌனம் பெரிய உபத்திரவமாயிருந்ததால் அதை இளவரசனே கிழிக்கத் தொடங்கி, ''நல்லவேளை நீங்களிருவரும் என்னைப் பிடித்துக் கொண்டீர்கள்'' என்று கூறிச் சற்று அசட்டுப் புன்முறுவல் செய்தான்.

அந்தப் புன்முறுவலை இரு மங்கையரும் கவனிக்கவே செய்தனர். அந்த இருவரில் காவியம் படித்தவளான ரங்கபதாகாதேவி, 'எத்தனை வீரனானாலும் பெண்கள் முன்னிலையில் அவன் அசடுதான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். அதைத் தவிர அவன் திடீரென்று விழுந்ததற்குக் காரணம் கதவோரம் ஒட்டுக் கேட்டுக் கொண்டு நின்றதுதான் என்பதும் அவளுக்குப் புரிந்தது. அத்தனை தூரம்



ஆராய்ச்சியிலிறங்காத மைவிழி, ''நாங்களா உங்களைப் பிடித்துக் கொண்டோம்?'' என்று வினவினாள் விஷமத்துடன்.

''பின் யார் பிடித்துக் கொண்டது?'' என்று கேட்டான் இளவரசன் வியப்புடன்.

''நீங்கள் தான்...''

''நான்தானா?''

''ஆம்.''

''நான்தான்... என்ன?''

''நீங்கள் தான் எங்களைப் பிடித்துக் கொண்டீர்கள்.''

''என்ன சொல்கிறாய் நீ?'' என்று சற்றுக் கோபத்துடன் கேட்டான் பல்லவ இளவல்.

''விழ இருந்தீர்கள் பிடித்துக் கொண்டோம். உடனே நீங்கள் எங்களைவிட்டு விலகியிருக்க வேண்டும்'' என்று சொன்ன மைவிழி ரங்கபதாகாதேவியை நோக்கினாள்.

இளவரசனுக்கு அப்போதுதான் புரிந்தது. தன்னை அவர்கள் பிடித்து விழாமல் தடுத்த பிறகும் அவர்களிருவரையும் தன் கைகள் அளவுக்கு அதிகமாகச் சுற்றி நின்று விட்டதை. அதைப் பற்றி அவன் சமாதானம் கூறவும் முற்பட்டான். அதை ரங்கபதாகா தேவி தடுத்தாள். தன் கார்மேகக் கண்களால் அவனை நன்றாக ஏறெடுத்து நோக்கி, ''ஒழுக்கம் மாறும்போது இப்படிச் சில விபத்துக்கள் சகஜம்'' என்று சொன்னாள்.

''நான் என்ன ஒழுக்கம் மாறிவிட்டேன்?'' என்று கேட்டான், பல்லவ இளவல் அவள் அழகிய கண்களைச் சந்திக்க இயலாமல் அவற்றை நிலத்தில் தாழ்த்தி.

ரங்கபதாகாதேவியின் அடுத்த கேள்வி மைவிழியை நோக்கி விரைந்தது. ''ஒட்டுக் கேட்பது நல்லொழுக்கமா மைவிழி?'' என்று.

''இல்லை, இல்லை. அதுவும் பெண்கள் பேசுவதை ஒட்டுக் கேட்பது அத்தனை நல்ல பழக்கமல்ல'' என்றாள் மைவிழி.

''இளவரசன் பாடு திண்டாட்டமாகிக் கொண்டிருந்தது. ''நான் ஒட்டுக் கேட்டதாக யார் சொன்னது?'' என்று வினவினான் மைவிழியை நோக்கி.

''அப்படியானால் ஒட்டுக் கேட்கவில்லையா?'' என்று கேட்டாள் தேவி.

''இல்லை'' என்று பொய் சொன்னான் இளவரசன் திடமான குரலில்.

குரலிலிருந்த அளவுக்கு மீறிய திடமே அவனைக் காட்டிக் கொடுத்தது. ''அவர் ஒட்டுக் கேட்கவில்லை தேவி'' என்றாள் மைவிழி.

''உனக்கெப்படித் தெரியும்?'' என்றாள் தேவி.

''அவர்தான் சொல்கிறாரே?''

''அப்படியானால் எப்படி விழுந்தார் நான் கதவைத் திறந்தவுடன்.''

''கதவோரமாக நின்றிருப்பார்.''

''சும்மா நின்றிருப்பார்.''

''ஆம். ஆம். சும்மா.''

''மிகவும் சாது இவர்.''

''பரம சாது.''

''வாயில் விரலை வைத்தால்...''

''கடிக்கத் தெரியாது.''

மீண்டும் இருவரும் நகைத்தனர். இதற்குமேல் அங்கு நிற்க இஷ்டப்படாத பல்லவ இளவல் அங்கிருந்து விடுவிடு என்று அடுத்த அறையை நோக்கி நடந்தான். அங்கிருந்த மஞ்சத்தில் மல்லாந்து விழுந்தான். அவன் சிந்தனையில் அந்த மங்கையரின் பரிகாசப் பேச்சுகள் வலம் வந்தன. தவிர ரங்கபதாகாதேவி அன்றிரவு தன்னை அவள் அறைக்கு அனுப்பச் சொன்னதும் அதற்கு மைவிழி ஒப்புக் கொண்டதும் அவன் நினைப்பில் எழுந்தது. அவர்கள் பரிகாசத்துக்கு அர்த்தம் புரிந்தது அவனுக்கு.

ஆனால் ஒரு புருஷனைக் காதலிக்கும் இரு மங்கையருக்குள் பொறாமையும் பூசலுமிருக்குமே யொழிய காதலனை இன்னொருத்தியிடம் அனுப்பும் அளவுக்கு ஒற்றுமையிருப்பது சாத்தியமல்ல வென்று எண்ணியதால் அந்த ஒரு விஷயத்தில் பெரிதும் குழம்பினான் இளவரசன். அவன் குழம்பிய நிலையையும் திடீரென அவன் அறைக்கு வந்து மஞ்சத்தில் விழுந்ததையும் பார்த்துக் கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்த சீனன் மட்டும் சற்றுக் கவலை கொண்டான். அதன் விளைவாக எழுந்து மஞ்சத்தருகில் வந்து இளவரசனை நோக்கி, ''உங்களை யாராவது துன்புறுத்துகிறார்களா எசமான்?'' என்று கேட்டான்.

இளவரசன் வெறுப்பு மண்டிய விழிகளைச் சீனன் மீது திருப்பினான். ''ஆம் ஆம்'' என்று வெறுப்புடன் பதிலும் சொன்னான்.



''யாரது எசமான்?''

''இரண்டு பேர்.''

''பத்துப் பேராயிருந்தாலும் பாதகமில்லை. சொல்லுங்கள் கத்தியிருக்கிறது'' என்றான் யாங்சின்.

''உன் கத்தியின் ஜபம் அங்கு செல்லாது.''

''அப்படியொருவர்கிடையாது எசமான்.''

''இருக்கிறார்கள் இருக்கிறார்கள்.''

''உத்தரவு கொடுத்தப் பாருங்கள்.''

''அப்படியானல் போ., ரங்கபதாகாதேவியும் மைவிழியும் என் பிராணனை வாங்குகிறார்கள்.''

இதைக் கேட்ட சீனன் பிரமித்து நின்றான். ''பெண்களா?'' என்று கேட்டான்.

''ஆம்.''

''பெண்களென்றால் பெரிய உபத்திரவம், எசமான்.''

''அதை நீயும் புரிந்து, கொண்டதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம்.''

''அதல்ல எசமான். அவர்கள் மேல் உங்களுக்கு ஏன் கோபம்? இப்பொழுதுதானே உங்களை இருவரும் பிடித்துக் கொண்டிருந் தார்கள்'' என்று சீனன் மெள்ளக் கேட்டான்.

இதைக் கேட்டதும் மஞ்சத்திலிருந்து துள்ளியெழுந்து உட்கார்ந்தான் பல்லவ இளவல். ''அட சனியனே! நீயும் பார்த்தாயா அந்தக் கோலத்தை?'' என்று கேட்டான்.

''ஆம்'' என்றான் சீனன்.

''உன்னை யார் பார்க்கச் சொன்னது?''

''நீங்கள் அறைப் பக்கம் போனதும் நான் இந்த அறைப் பக்கம் வந்தேன். நீங்கள் உடனே உள்ளே நுழையாமல் நின்றீர்கள். நானும் இங்கு நின்றேன். பிறகு நீங்கள் காதை...''

''டேய் யாங்சின்.''

''எசமான்.''

''காதைப்பற்றி என்ன சொன்னாய்?''

''சொல்லவில்லை. காதைக் கதவுடன் சேர்த்து வைத்துக் கொண்டீர்கள் என்று சொல்ல வந்தேன்.''

பல்லவ இளவல் சிறிது சிந்தனையிலும் கவலையிலும் இறங்கினான். பிறகு கேட்டான், ''அதை வேறு யாராவது பார்த்தார்களா?'' என்று.

சீனன் சொன்ன பதில் இளவலுக்குப் பெரும் சாந்தியளித்தது. ''யாரும் கூடத்திற்குள் வரவில்லை. ஆகவே யாரும் பார்க்கவில்லை. அது மட்டுமல்ல அவர்கள் உங்களைப் பிடித்துக் கொண்டதைக் கூட யாரும் பார்க்கவில்லை'' என்றான் சீனன்.

அதனால் ஓரளவு திருப்தியடைந்த பல்லவ இளவல் மஞ்சத்தில் நிம்மதியாகப் படுத்தான் மீண்டும். அன்று பகல் பூராவும் அவன் அந்த அறையைவிட்டு வெளியே செல்லவில்லை. உணவைக்கூட அந்த அறையிலேயே அருந்தினான். அவனை நாடி யாரும் வரவுமில்லை. பக்கத்தறையிலிருந்த மைவிழிகூட வரவில்லை. அழைப்பு மாலை யில் வந்தது. அதுவும் பூஜை அறைக்கு வரும்படியாக ஆசார்யரிட மிருந்து உத்தரவு வந்தது. பூஜைக்குத் தகுந்த ஆடையணிந்து பூஜை அறைக்குச் சென்றான் இளவரசன். அங்கு மகாகவி தண்டி அம்பிகை சந்நிதி குத்துவிளக்குத் திரிகளைத் தூண்டிக் கொண்டிருந்தார். ராஜசிம்மன் வந்ததும் அவனை நோக்கினார் சில விநாடிகள். பிறகு விளக்குத் திரிகளை நன்றாகத் தூண்டிச்சுடர்கள் கொழுந்து விட்டெரியச்செய்தார். அந்த நிலையில் கேட்டார், ''ரங்கபதாகாதேவி இன்றிரவு உன்னை அவள் அறைக்குச் வரச் சொல்லியிருக்கிறாளா?'' என்று.

அந்த கேள்வி பல்லவ இளவலுக்கு அதிர்ச்சியாக மட்டுமல்ல, தர்மசங்கடமாகவுமிருந்தது.

## 35. தண்டியின் எச்சரிக்கை

**வி**ல்லம்பினும் சொல்லம்பு கூர் என்ற தமிழ்ப் பழமொழிக்குச் சான்று காட்டவே எழுந்தனபோல் தண்டி மகாகவியின் உதடுகளி லிருந்து உதிர்ந்த சொற்களைக் காதில் வாங்கியதும், பெரும் அதிர்ச்சிக்கும், வியப்புக்கும், தர்ம சங்கடத்துக்கும் ஆளான பல்லவ இளவல் பல விநாடிகள் பதிலேதும் சொல்லாமலும் ஆசார்யரை ஏறெடுத்துப் பார்க்காமலும் நிலத்தில் கண்களை ஓட்டிய வண்ணம் நின்றான்.

ஆசார்யர் கேட்ட ஒரு கேள்வி அவன் மனத்தில் பல கேள்விகளை எழச் செய்ததால் அந்தக் கேள்விகளில் சிக்கி அவன் சித்தம் தத்தளிக்கலாயிற்று. 'ரங்கபதாகாதேவி என்னை அவள் அறைக்கு இரவில் வரச்சொன்னது ஆசார்யருக்கு எப்படித் தெரிந்தது? ஆசார்யரும் என்னை வேவு பார்க்கிறாரா?'' என்று தனக்குள் கேட்டு கொண்டான் ராஜசிம்மன். 'ரங்கபதாகாதேவி என்னை எங்கு அழைத்தாள்? என்னை அனுப்பும்படி மைவிழியிடம் சொன்னாள், அவ்வளவுதானே? ஆகவே ரங்கபதாகாதேவி வரச்சொன்னாள் என்பது ஆசார்யரின் ஊகமா?'' என்று இன்னொரு கேள்வியையும் உள்ளத்தே எழுப்பிக் கொண்டான் இளவரசன். ஊகமாயிருந்தாலும் விஷயம் அதுதானே. இரவில் என்னை தேவி அவள் அறையில் ரகசியமாகச் சந்திக்க ஏற்பாடு செய்திருக்கிறாள் என்பதில் தவறில்லையே அதை ஆசார்யர் ஊகிக்க முடியுமானால் அந்த ஊகத்துக்கு ஆதாரம் ஏதாவது இருக்கவேண்டுமே. அது என்ன ஆதாரம்?'' என்ற மற்றொரு கேள்வியும் எழுந்தது அவன் மனத்தில். ஆனால் இது எதற்குமே விடை கிடைக்காததால் அவன் நிலத்திலிருந்த கண்களை அம்பிகையின் திருமுக மண்டலத்தை நோக்கி உயர்த்தினான்.



அதுவரை வாளாவிருந்த ஆசார்யர், ''ராஜசிம்மா! உன் நாடு விடுதலை அடைய அம்பிகையைப் பிரார்த்தித்துக் கொள்'' என்று கூறினார் சாந்தமான குரலில்.

ராஜசிம்ம பல்லவன் சற்றுத் திரும்பி ஆசார்யரை நோக்கினான். ''சுவாமி! அம்பிகையின் உருவம் சதா என் மனத்திலிருக்கிறது. அதை என் இதயத்தில் நிரந்தரமாகச் செதுக்கியிருப்பது தாங்கள் எனக்களித்த கல்வியறிவல்லவா?'' என்று மெல்லத் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு சாந்தமாகவே பேசினான் அவன். ஒரு விநாடி கழித்து, ''இந்த நாடு விடுதலை யடைவது அத்தனை கடினமா ஆசார்யரே?'' என்றும் வினவினான்.

தண்டியின் மின்னல் விழிகள் அவன் விழிகளைச் சந்தித்தன. ''ஆம். மிகக் கடினம்'' என்றார் ஆசார்யர் கவலை ஒலித்த குரலில்.

இளவரசன் முகத்தில் கவலை படரவில்லை. அதற்குப் பதில் வீரக்களை ஒன்று திடீரெனச் சுடர் விட்டது. ''ஆசார்யர் கருத்திலிருந்து நான் மாறுபடுகின்றேன்'' என்று பதில் கூறினான் அவன்.

''மாறுபடுவதற்குத் தகுந்த காரணங்கள் இருக்குமென்று நினைக்கின்றேன்'' என்றார் ஆசார்யர்.

''ஆம்.''

''அந்தக் காரணங்களை நான் அறியலாமா?'' என்று வினவினார் தண்டி மகாகவி சற்று இகழ்ச்சி ஒலித்த குரலில்.

''சுவாமி! காஞ்சிப் போர் இன்னும் முடியவில்லை.''

''காஞ்சி இப்பொழுது விக்கிரமாதித்தன் கையிலிருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினார் தண்டி.

''பல்லவர்களின் முழுபலத்தை எதிர்த்து வெற்றி பெற்றுக் கைப்பற்றவில்லை காஞ்சியை விக்கிரமாதித்தன். இங்குள்ள இலக்கியப் பொக்கிஷங்களை முன்னிட்டு என் தந்தை அவராக எதிரிக்குக் கொடுத்துவிட்ட பரிசு காஞ்சி. ஆனால் தந்தை மீண்டும் போர் துவங்கப் போவதாக ஸ்ரீராமபுண்ய வல்லபரே சொல்லவில்லையா?'' என்று கேட்டான் பல்லவ இளவல் உணர்ச்சி வேகத்துடன்.

''ஆம். சொன்னார் ராஜசிம்மா! அத்துடன் அதன் முடிவையும் சொன்னார். அந்தப் போரில் உன் தந்தை முறியடிக்கப்படுவார்'' என்றார் தண்டி.

இளவரசன் கண்களில் ஒரு விநாடி கனல் பறந்து மறைந்தது. ஆனால் அவன் பதில் சொன்னபோது குரலில் அந்தக் கனல் தெறிக்கவே செய்தது. ''என் தந்தையைக் கோழை என்று கூறுகிறீர்களா?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

''பரமேசுவரவர்மனைக் கோழையென்று காஞ்சியை அவன் விட்டுச் சென்றபோதே யாரும் சொல்லவில்லையே ராஜசிம்மன்? இனிமேலா சொல்லுவார்கள்? இல்லை, இல்லை. பரமேசுவரவர்மன் ஒருநாளும் கோழையல்ல. போரிலும் இணையற்றவன் சந்தேகமேயில்லை'' என்ற ஆசார்ய தண்டியின் குரலில் பல்லவனைப் பற்றிய அன்பு சந்தேகமின்றி ஒலித்தது.

''அப்படியானால் அவர் தோல்வியடைவாரென்று எப்படி நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?''

''இப்பொழுது உன் தந்தையை எதிர்ப்பது விக்கிரமாதித்தனின் வாளல்ல.''

''வேறு எது?''

''வாளைவிட, வேலைவிட, அம்பைவிட மிகக் கூர்மையான ஸ்ரீராமபுண்யவல்லபரின் அறிவு.''

''அதனால்?''

''அதனால் உன் தந்தையின் தோல்வி நிச்சயம். உன் தந்தை நேர்மையாகப் போராடுபவர். ஸ்ரீராமபுண்யவல்லபரின் திட்டத்தில் நேர்மை கால்வாசி, தந்திரம் முக்கால்வாசி, அந்தத் தந்திரத்தை இதுவரை உங்களால் எதிர்க்க முடியவில்லை.''

''இனியும் முடியாதென்பது உங்கள் அபிப்பிராயமா ஆசார்யரே?''

''அல்ல ராஜசிம்மா, தந்திரத்துக்குப் பதில் தந்திரம் நாமும் செய்ய முடியும். ஆனால் அதற்கு அவகாசம் இப்பொழுது கிடையாது. போர் தொடுத்துத் தலைநகரத்தைப் பிடித்துவிட்ட விக்கிரமாதித்தன், பல்லவனைவிடத் தான் நல்ல அரசை மக்களுக்குக் கொடுக்க முடியும் என்ற வித்தை மக்கள் மனத்தில் விதைக்க முயன்று வருகிறான். காஞ்சியைப் பிடித்த இந்த ஒரு வாரத்திற்குள் அவனைப் பற்றி மக்கள் மிகச் சிறப்பாகப் பேசுகிறார்கள். அவன் படைப் பிரிவை இங்கு கொண்டு வந்து காஞ்சிப் பட்டணத்தை ஆக்கிரமிக்காமல் திரையனேரியில் வைத்திருப்பதைப் பாராட்டுகிறார்கள். பிரதி தினம் காவல் ஏதுமின்றி அவனே புரவியில் பவனி வருகிறான். அதனால் அவன் அச்சமற்ற தன்மை பேசப்படுகிறது. நேற்றோ முன் தினமோ திடீரெனப் புரவியிலேறிச் சென்று காஞ்சி எல்லையிலுள்ள ஏழைகள் விடுதியிலிருப்பவரிடம் பேசிவிட்டு வந்திருக்கிறான். இவற்றையெல்லாம் கண்டு மக்கள் மெய் சிலிர்க்கிறார்கள். இத்தகைய மன்னனை நீ சமாளிக்க வேண்டும். அதைவிட இத்தனையையும் மன்னனுக்குச் சொல்லிக் கொடுக்கும் ஸ்ரீராமபுண்ய வல்லபரை நீ சமாளிக்க வேண்டும். வீரனான விக்கிரமாத்தனைச் சமாளிப்பது எளிது. ராஜ தந்திரியான ஸ்ரீராமபுண்ய வல்லபரைச் சமாளிப்பது கஷ்டம். இன்னும் ஒரு வாரத்தில் இந்தக் காஞ்சி மாநகர் விக்கிரமாதித்தனைத் தெய்வமெனத் தொழும். அவன் படைகளோ அல்லது அவன் உதவிப் படைகளோ உன் தந்தையைச் சந்திக்கும்'' இதைச் சொன்ன தண்டி பெருமூச்செறிந்தார்.

ராஜசிம்மன் அவர் துயரத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டான். விக்கிரமாதித்தன் உதவிப் படைகள் வேறெங்காவ திருந்தால், இருந்து தாக்கினால், அதன் பலம், தொகை இவற்றைத் தந்தை அறிவதில் கஷ்டங்களிருப்பதை உணர்ந்தான் ராஜசிம்மன். ஆகவே கேட்டான் கவலையுடன், ''உதவிப் படைகளா'' என்று.

''ஆம்'' என்றார் தண்டி.

''யாருடைய உதவிப் படைகள்?''

''கங்க மன்னன் உதவிப் படைகள்.''

''கங்க மன்னன் படைகளா?''

''ஆம், கங்க மன்னனை உன் தந்தை சில தினங்களில் தாக்கப் போவதாகவும், அங்கு தோல்வியே கிடைக்குமென்றும் இன்று காலையில் ஸ்ரீராமபுண்ய வல்லபர் கூறவில்லையா?''

''அது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''ஸ்ரீராமபுண்யவல்லபரின் ஒற்றர்களுக்கு என் சீடர்கள் சளைத்தவர்களல்ல'' என்று கூறிய தண்டி, ''ராஜசிம்மா! நீயும் உன் தந்தையும் தற்சமயம் தலைந்து போவது நல்லது.''

''தளைழந்து போக வேண்டுமென்றால்?''

''கங்கனுடன் போர் தொடுக்கவேண்டாமென்று ஸ்ரீராமபுண்ய வல்லபர் கேட்டது போல் ஓர் ஓலை எழுதிக் கொடுத்துவிடு.''

அதுவரை பணிவுடனிருந்த ராஜசிம்மன் தனது சிங்கக் கண்களை ஆசார்யர் மீது நாட்டினான். ''ஓலை எழுதிக் கொடுக்கா விட்டால்?'' என்று சீறவும் செய்தான்.

''தோல்வியின் அவமானத்தை ஏற்க நேரிடும்'' என்றார் தண்டி.

''என் தந்தை போரில் மாண்டு போவார் ஆசார்யரே. தோற்று உயிருடனிருக்க மாட்டார்'' என்று மீண்டும் சீறினான் இளவரசன்.

தண்டியின் கவலை தோய்ந்த கண்கள் ராஜசிம்மனை அனுதாபத்துடன் ஏறெடுத்து நோக்கின. 'ராஜசிம்மா! உன் தந்தை இந்தப் போரில் இறக்க மாட்டார்'' என்று திட்டமான சொற்களும் அவர் உதடுகளிலிருந்து உதிர்ந்தன.

இதைக் கேட்ட ராஜசிம்ம பல்லவன் வியப்பின் எல்லையை எய்தினான் ''எப்படி அத்தனை திட்டமாகச் சொல்கிறீர்கள்?'' என்று வினவினான் வியப்பு விழிகளில் படர, சொற்களில் உதிர.

மகாகவி தண்டியின் அடுத்த பதில் அவன் வியப்பை ஆயிரம் பங்கு அதிகப்படுத்தியது. ''இன்று பிற்பகல் ஸ்ரீராமபுண்ய வல்லபரைச் சந்தித்தேன். அவர் சொன்னார்'' என்றார் தண்டி.

''என்ன சொன்னார் சாளுக்கியர் போர் அமைதி மந்திரி?''

''உன் தந்தை உயிருக்கு எந்த ஆபத்தும் நேரிடாது என்று.''

''அவருக்கு என்ன சோதிடம் தெரியுமா?''

''தெரியும். ஆனால் சோதிடம் சொல்லவில்லை அவர். திட்டமாகச் சொன்னார். கங்க மன்னனுக்கு அப்படி உத்தர விட்டிருக்கிறாராம்.''

இதைக் கேட்ட பல்லவ இளவல் நகைத்தான் இகழ்ச்சியாக. ''உத்தரவிட்டிருக்கிறாரா?'' என்று இகழ்ச்சியாகப் பேசவும் தொடங்கிய ராஜசிம்மன், ''ஆசார்யரே! போர்க்களத்தில் எது எப்படி நடக்குமென்று யாராலும் சொல்லமுடியாது. எங்கிருந்தோ வரும் ஒரு வேல், ஒரு அம்பு, ஒரு கோடரி — ஏதாவது ஒன்று போரிடும் யார் உயிரையும் மாய்க்கும். இந்த விதிக்குக் களத்தில் மன்னனும் விலக்கல்ல. ஸ்ரீராமபுண்ய வல்லபர் கங்கனுக்கு ஆணையிட முடியாது'' என்று கூறினான் ஆவேசத்துடன்.

தண்டி சில விநாடிகள் மௌனம் சாதித்தார் பிறகு கூறினார், ''ராஜசிம்மா! இந்தக் காஞ்சியை நான் நேசிக்கிறேன். பல்லவ வம்சத்தை



நேசிக்கிறேன். பல்லவர்களின் வீரபராக்கிரமத்தை நான் அறிவேன். ஆனால் இப்பொழுது உங்களை நோக்கியிருப்பது ஸ்ரீராமபுண்ய வல்லபரின் தந்திரம். அதை உடைக்கலாம் காலக் கிரமத்தில். ஆனால் இப்பொழுதுமுடியாது. ஸ்ரீராமபுண்யவல்லபர், 'உன் தந்தை கங்கனுடன் இடும் போரில் இறக்கமாட்டார்' என்று சொன்னால் இறக்க மாட்டார் என்பது நிச்சயம். எப்படியென்று என்னைக் கேட்காதே. தற்சமயம் இந்தப் போரில் ஈடுபடாதிருப்பது நல்லது. பிறகு உன்னிஷ்டம். உன் தந்தையின் இஷ்டம்.''

ராஜசிம்மன் அவரை நோக்கித் தலைவணங்கினான் ''இந்த ஒரு விஷயத்தில் நான் தந்தைக்கு ஓலை ஒழுத முடியாது. ஆனால் ஒன்று செய்ய முடியும். தங்கள் உதவியிருந்தால் நானும் போய்ப் போரில் தந்தையுடன் கலந்து கொள்ள முடியும்'' என்று கூறினான்.

''என் உதவி உனக்கு எப்பொழுதுமிருக்கும் ராஜசிம்மா. அதைவிடப் பலமான உதவி உனக்கு இப்பொழுது கிடைத்திருக்கிறது'' என்றார் ஆசார்யர்.

''எந்த உதவி?''

''ரங்கபதாகாதேவியின் உதவி.

''உதவி செய்யத் தான் தேவி இரவில் என்னை அறைக்கு வரச் சொல்லியிருக்கிறாளா?''

''ஆம்.''

''தங்களுக்கு எப்படித் தெரியும் அது?''

இந்தக் கேள்விக்கு ஆசார்யர் நேரிடையாகப் பதில் சொல்ல வில்லை. அந்தப் பூஜாக்கிரகத்தின் ஒரு மூலையைத் தன் கையால் சுட்டிக் காட்டினார் தண்டி. அன்று காலையில் அங்கு அடுக்கி வைக்கப் பட்டிருந்த ஓலைச் சுவடிகள் கலைந்து கிடந்தன. அதைப் பார்த்ததும் பல்லவ இளவல் உண்மையை ஓரளவு ஊகித்துக் கொண்டான். இவற்றில் சிலவற்றை எடுத்தே தன் பஞ்சணை அடியில் யாரோ போட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டான்.

''இவற்றில் சில சுவடிக் கட்டுக்களைக் காணோம்'' என்றார் ஆசார்யர்.

''அப்படியா?''

''அம்பிகையின் பாதத்தினடியில் ஒரு முக்கியச் சுவடி வைத்திருந்தேன். அதையும் காணவில்லை.''

ராஜசிம்மனின் கண்களும் ஆசார்யர் கண்களும் சந்தித்தன. ஆசார்யர் மேலும் சொன்னார், ''அந்தச் சுவடியைக் கங்கன் மகள்தான் எடுத்திருக்கிறாள்'' என்று

''ஏன்?''

''உனக்கு உதவ.''

''ஓலைச்சுவடி எனக்கு எப்படி உதவ முடியும்?''

''அதை இன்றிரவில் புரிந்து கொள்வாய்'' என்ற தண்டி ''ரங்கபதாகாதேவியையும் அதிகமாக நம்பிவிடாதே எதற்கும் எச்சரிக்கையாயிரு'' என்றும் எச்சரித்தார். அத்துடன் அந்த அறையை விட்டுக் கிளம்பிச் சென்றுவிட்டார்.

## 36. ஆசார்யரின் அறையில்...

தண்டி மகாகவி வெளியிட்ட பல விவரங்களாலும் அவர் சொன்ன யோசனைகளாலும் தீவிர சிந்தனையுடன் தனது அறைக்குத் திரும்பிய பல்லவ இளவல், அறையில் மைவிழி கூட இல்லாத திருந்ததையும் கட்டிலுக்கு அடியில் இருந்த ஓலைச் சுவடிகளும் அப்புறப்படுத்தப்பட்டு அறை சூன்யமாயிருந்ததையும் கண்டான். அப்படி அறை சூன்யமாகக் காணப்பட்டதற்கு ஓலைச் சுவடிகளின் மறைவு காரணமல்லவென்பதையும், அங்கு மைவிழியெனும் மல்லைக் கடல் விளக்கு இல்லாதிருந்ததே காரணமென்பதையும் புரிந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல், 'அடா! இவள்தானில்லை. தேவியாவது இருக்கக் கூடாதா?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

பணிப் பெண்ணொருத்தி வந்து அறை விளக்கைச் சரிபார்த்துவிட்டு அவனை நோக்கி, ''தேவியார் சிறிது நேரத்தில் வந்து விடுவதாகக் கூறினார்கள்'' என்றாள்.

பல்லவ இளவலுக்கிருந்த மனநிலையில் அவன் அவளைச் சிறிது கடிந்து கொள்ள முற்பட்டு, எந்தத் தேவியார்?'' என்று வினவினான்.

''மைவிழித் தேவியார்.'' பணிப்பெண்ணின் பதில் பட்டென்று வெளிவந்தது.

''இப்பொழுது எங்கே இருக்கிறார்களோ?''

''இன்னொரு தேவியாருடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.''

''முக்கியமான பேச்சுப் போலிருக்கிறது?''

''ஆம்.''

''உனக்கெப்படித் தெரியும்?''



''அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டு பேசுகிறார்கள்.'' இதைச் சொன்ன பிறகு பணிப்பெண் மேற்கொண்டு பேச்சை வளர்த்த இஷ்டப்படாமல் தலை வணங்கி அறையை விட்டுச் சென்றாள்.

பல்லவ இளவலின் புத்தி வெகு துரிதமாகக் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தது 'இன்றைய காலையில் வைரிகளாய்ச் சந்தித்த இந்த இருவரும் திடீரென எப்படி நட்புக் கொண்டார்கள்? நட்புதான் கொண்டார்கள், அது இத்தனை அந்தரங்க நட்பாக எப்படி அரைநாளில் முதிர முடிந்தது? தவிர, இருவரும் அடிக்கடி கதவைத் தாழிட்டுக் கொண்டு பேச என்ன தானிருக்கும்?' என்று பலவாறாகக் கேள்விகளை எழுப்பிக் கொண்ட பல்லவ இளவல், அவர்களின் ரகசியப் பேச்சுக்கும் தண்டி மகாகவி சுட்டிக் காட்டிய ஓலைச் சுவடிகளுக்கும் சம்பந்தமிருக்குமென்பதை உணர்ந்து கொண்டாலும், அது எத்தகைய சம்பந்தமாயிருக்க முடியும் என்பதை ஊகிக்க அவனால் முடியவில்லை. 'அம்பிகையின் பாதத்திலிருந்த ஓலைச் சுவடி பற்றி ஆசார்யர் முக்கியமாகச் காட்டிச் சொன்னாரே அதில்தான் ஏதாவது மர்மமாயிருக்க வேண்டும்' என்று முடிவு கட்டிக் கொண்டான் இளவரசன். அந்த ஓலைச் சுவடிகளில் விடிமோட்சமிருப்பதாக மைவிழி ஏற்கனவே கூறியதை ஒப்பிட்டுப் பார்த்து, அந்த ஓலைச் சுவடியிலிருந்த கோடுகளுக்கும் மகாகவியின் மாளிகைக்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தமிருக்கு மென்றும் ஊகித்துக் கொண்ட பல்லவ இளவல், 'அப்படியானால் இந்த மாளிகையிலிருந்து செல்லும் சுரங்கப் பாதை எதையோ அந்தக் கோடுகள் குறிக்க வேண்டும்' என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

இரண்டு நாழிகை நேரம் கழித்து மைவிழி உணவுத் தட்டுடன் அந்த அறைக்கு வந்து சேர்ந்தாள். அவள் அலங்காரம் பிரமிக்கும் படியாயிருந்தது. புதிதாக வெண்பட்டு ஒன்று உடுத்தி நெற்றியில் சூரியன் கதிர்கள் போல விசித்திரத் திலக மிட்டிருந்தாள். அவள் ஜடையும் கடல் மல்லைப் பாணியிலிராமல் சற்று வடநாட்டுப் பாணியில் எடுத்துக் கட்டிக் கொண்டை போடப்பட்டிருந்தது. கொண்டையில் ஒரு வைர மாலையும் சுற்றிக் கிடந்தது. கழுத்திலாடிய ஒரு புது ஆபரணமும் விலை உயர்ந்த கற்களுடன் பளபளத்தது. இந்தப் புது அலங்காரத்துடன் வந்த மைவிழி மோகனாகரமாக விளங்கினாள். எழில்கள் பூத்துக் குலுங்க அவனை நோக்கி நடந்து வந்தாள். இத்தனை யிலும் அவள் மனத்தில் சந்துஷ்டி யிருந்ததாகத் தெரியவில்லை. என்றும் மலர்ந்து சிரிக்கும் மதிவதனம் அன்று கூம்பிக்கிடந்தது. ஆனால் அவளைப் பஞ்சணையிலிருந்து எழுந்து அவனும் எதிர்கொண்டு அவள் அழகிய இடையைச் சுற்றித் தன் கைகளை இறுக்கித் தன்னை நோக்கி இழுத்தான்.

''கதவு திறந்திருக்கிறது'' என்று எச்சரிக்கை செய்தாள் மைவிழி.

அவளைப் பிடித்த கைகளை நீக்கிக் கதவை நோக்கிச் சென்று அதைத் தாழிட்டு வந்த பல்லவ இளவல், ''சாக்கு நீங்கிவிட்டது. வா இப்படி'' என்று அவளை மீண்டும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு பஞ்சணையண்டை அழைத்துச் சென்றான்.

மைவிழியின் பெருவிழிகளில் காதல் பொங்கி வழிந்தாலும் அதில் சற்று அச்சமும் கலந்து நின்றது. வெட்கத்தால் சிவந்த கன்னத்தில் சற்றுத் துக்கத்தின் அசைவும் காணப்பட்டது. திறந்த பவள உதடுகள் என்ன காரணத்தாலோ எதை எதிர் பார்த்தோ உட்புறம் மடிந்தன. ''ஆண் பிள்ளை என்பதைக் காட்டி விட்டீர்கள்'' என்று மெள்ள அவள் உதடுகள் மீண்டும் விரிந்து சொற்களை ரகசியத் துடனும் வெட்கத்துடனும் உதிர்த்தன.

''எப்படி?'' என்று கேட்டவண்ணம் அவள் முகத்தில் தன் கண்களை ஓட விட்டான் பல்லவ இளவல்.

''ஆத்திரப்படுகிறீர்கள்'' என்றாள் மைவிழி மெல்லிய குரலில்.

''ஆத்திரப்பட்டாலென்ன மைவிழி?'' என்றான் இளவரசன் அவள் உதடுகளை நோக்கிக் குனிந்து.

''அவகாசமில்லை.'' மைவிழியின் குரல் குழைந்தது, அதில் வேதனை தெரிந்தது.

''எதற்கு?'' என்று கேட்ட பல்லவ இளவல் சற்று விலகி நகைத்தான்.

''இப்படியெல்லாம் பேசாதீர்கள். எனக்குப் பிடிக்கவில்லை.''

''எனக்குப் பிடிக்கிறது.''

''எதற்கும் காலம் உண்டு.''

''இதற்குக் காலம் கிடையாது.''

''எதற்கு?''

''காதலுக்கு.''

இதைச் சொன்ன பல்லவ இளவலின் இடது கை அவள் முதுகைத் தடவிக் கொண்டு இடையிலிறங்கியது. வலது கை? அதைச் சொல்வது ரசக் குறைவு.

ஆனால் இளவரசனின் சேஷ்டையைத் தனது கைகளைக் கொண்டு தடுத்துவிட்ட மைவிழி திடீரெனப் பஞ்சணையை விட்டு எழுந்தாள். அவள் போக்கு விசித்திரமாயிருக்கவே கேட்டான் இளவரசன், ''ஏன் எழுந்து விட்டாய் மைவிழி?'' என்று.



மைவிழியின் கரிய பெரும் விழிகள் இளவரசனை நோக்கி வெட்கமும் வருத்தமும் கலந்த பார்வையொன்றை வெளியிட்டன. அவள் குரலும் திட்டவட்டமாக ஒலித்தது. ''பல்லவ இளவரசரே! என் உடல் பொருள் ஆவி அனைத்தும் உங்களுடையதுதான். ஆனால் இன்று உங்களிடம் நான் உரிமை கொண்டாட முடியாது'' என்று கண்டிப்பான குரலில் கூறினாள் மைவிழி.

''ஏனோ?'' இளவரசன் குரலில் சற்றுக் கோபம் தெரிந்தது.

''இன்று நீங்கள் என் வசத்தில் இல்லை'' என்றாள் மைவிழி.

''வேறு யார் வசத்திலிருக்கிறேன்?'' இளவரசன் குரலில் கோபம் முன்னைவிட அதிகமாக ஒலித்தது.

''ரங்கபதாகாதேவியின் வசத்தில்'' என்றாள் மைவிழி.

''யார் சொன்னது அப்படி?''

''யாரும் சொல்லவில்லை நாங்களே தீர்மானித்து விட்டோம்.''

''என்னைப் பங்கு போட்டுக் கொண்டு விட்டீர்களா?''

''ஆம்.''

''நான் என்ன பழமா, காயா துண்டாடுவதற்கு?''

இளவரசன் குரலில் சீற்றம் அதிகமிருந்ததைக் கவனித்த மைவிழி, அதைப்பற்றிக் கவலைப்படாமல் உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு வந்து, ''சீக்கிரம் உணவருந்துங்கள்'' என்றாள். அவள் குரலிலிருந்த கண்டிப்பைக் கண்டு வெகுண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் அரை குறையாக உணவை முடித்துக் கொண்டான் பல்லவ இளவல். அவன் உணவருந்தியதும் தட்டை ஒரு மூலையில் வைத்து விட்டு அவன் கை கழுவ நீர் ஊற்றினாள் மைவிழி. அவன் கை கழுவி நீர் அருந்திப் பஞ்சணையில் சாய்ந்ததும் அவனருகில் வந்த மைவிழி, ''பல்லவஇளவரசரே! உமக்குப் பெண்களின் மனநிலை பற்றி என்ன தெரியும்?'' என்று கேட்டாள்.

''பைத்தியத்துக்கும் அதில் ஒரு பங்கு உண்டென்று தெரியும்'' என்றான் இளவரசன் இகழ்ச்சியுடன்.

''சரி, என்னைப் பாருங்கள்'' என்றாள் மைவிழி.

''பார்த்தேன். உள்ளே நுழையும்போதே பார்த்தேன்.''

''எப்படியிருக்கிறது எனது உடை, அணிமணிகள் எல்லாம்?''

''வேஷம் போட்ட மாதிரி இருக்கிறது.''

''யாரைப் போலிருக்கிறது?''

''ரங்கபதாகா தேவியைப் போலிருக்கிறது. போலிருக்கிறது தானே தவிர அவளல்ல நீ. இது உனக்குப் பொருந்தவில்லை''

''அதைக் கேட்கவில்லை இளவரசரே, இந்த வேடத்தில் தலையிலும் ஒரு மெல்லிய பட்டுப் போர்த்தி இரவில் வந்தால்...''

''ரங்கபதாகா தேவிக்கும் உனக்கும் வித்தியாசம் தெரியாது.''

இதை இளவரசன் சொன்னதும் மைவிழி சொன்னாள், ''அப்படி வாருங்கள் வழிக்கு. அதைத்தான் ரங்கபதாகாதேவியும் சொன்னாள்'' என்று.

இளவரசன் ஓரளவு உண்மையை ஊகித்துக் கொண்டான். 'ரங்கபதாகாதேவி என்ன காரணத்தாலோ தன் வேடத்தை மைவிழிக்குப் போட்டிருக்கிறாள். என் விடுதலைக்காக ஏதோ திட்டம் போட்டிருக்கிறாள். சந்தேகமில்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆனால் அத்திட்டம் என்னவென்று புரியாததால் மஞ்சத்தை விட்டு எழுந்து மைவிழியின் கைகளைப் பற்றிக் கொண்டு கேட்டான், ''திட்டம் என்ன?'' என்று.

அவன் கேள்வியை மைவிழி நன்றாகப் புரிந்து கொள்ளவே செய்தாள். அவளும் திட்டமாகவே பதில் சொன்னாள், ''திட்டம் தேவிக்குத்தான் தெரியும்'' என்று.

''உன்னிடம் சொல்லவில்லையா அவள்?'' என்று வினவினான் இளவரசன்.

''இல்லை'' என்றாள் மைவிழி.

''என்ன அத்தனை ரகசியம் அவளுக்கு?''

''காரணமில்லாமல் தேவி எதையும் மறைக்க மாட்டாள்.''

''அவளை உனக்கு ரொம்ப நாளாகத் தெரியும் போலிருக்கிறது?''

''ஒருவரைப் புரிந்துகொள்ள அதிகநாள் தேவையில்லை'' என்று சொன்னாள் மைவிழி. அதைச் சொல்லி நகைக்கவும் செய்தாள் லேசாக.

''எதற்காக நகைக்கிறாய்?'' என்று சீறினான் இளவரசன்.

.''ஒருவரைப் புரிந்து கொள்ள அதிக நாள் வேண்டுமென்று நினைக்கிறீர்களே, அதை எண்ணி நகைத்தேன்'' என்றாள்.

இளவரசன் பொறுமையை அறவே இழந்தான். மைவிழியை நொறுக்கி விடுபவன்போல் பிடித்தான். ''அதை எண்ணி நகைப்பானேன்?'' என்றும் கேட்டான் ஆத்திரத்துடன்.

மைவிழி தன் கண்களை அவன் கண்களுடன் கலந்தாள் ''ஏன் இளவரசே! முன்பின் அறியாத தேவியிடமிருந்த ஒரே நாளில் நீங்கள் இலக்கணம் கற்றுக் கொண்டீர்களே! நான் ஏன் ராஜதந்திரம் கற்கக்கூடாது?'' என்று கேட்டாள் விஷமத்துடன்.



இளவரசன் கண்களில் லேசாக அசடு வழிந்தது. மைவிழி சொல்வதில் தவறேதுமில்லையென்பதை உணர்ந்தான். இருப்பினும் ஆண் மகனாயிருப்பவன் பெண்களைப் பார்த்துப் பல்லிளிப்பதற்கும், ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் அந்தரங்கமாகப் பழகுவதற்கும் வித்தியாசமிருக்கிறது என்று நினைத்தான். அதனால் அந்த இரு பெண்களுக்குமிடையே திடீரென ஏற்பட்ட விசித்திர ஒற்றுமையைக் கண்டு அவன் மனம் வியப்பின் எல்லையை அடைந்தது. அதை மேலும் அதிகப்படுத்த மைவிழி சொன்னாள். ''இளவரசே! ரங்கபதாகாதேவி உங்களுக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறாள். அப்படிப்பட்ட யாருக்கும் என் உயிரைக் கொடுப்பேன். ஆனால் என் உயிரை விட எதை நான் அதிகமாக நேசிக்கிறேனோ அதிலும் அவள் பங்கு பெற விரும்புகிறாள். முதலில் அது மிகவும் கஷ்டமாகத் தானிருந்தது எனக்கு. பிறகு உங்களை நினைத்தேன். பல்லவ சாம்ராஜ்யத்தை நினைத்தேன். நீங்கள் நிறுவ இருக்கும் மல்லைக் கடல்கோவில், கைலாசநாதர் கோவில், சீனர் புத்தர் கோவில், இவற்றையும் நினைத்தேன். இத்தகைய பெரும்பணியில், உங்கள் நலத்தில், உங்கள் சாம்ராஜ்ய நலத்தில் கைகொடுக்கவரும் ரங்கபதாகாதேவிக்கு எதையும் மறுக்க என்னால் முடியவில்லை... என்னால் முடியவில்லை...'' இந்த இடத்தில் மைவிழியின் குரல் தழுதழுத்தது. உடல் சிறிது ஆடியது.'

அவள் நிலையை உணர்ந்த பல்லவ இளவல் அவளை அணைத்தான் இறுக. ''மைவிழி, கலங்காதே! யார் எப்படி இருந்தாலும் என் பட்ட மகிஷி நீதான். என் உள்ளத்தில் உனக்குத்தான் முதலிடம்'' என்று அணைத்த நிலையில் கூறினான். அவள் பதிலேதும் சொல்லவில்லை. கதவை நோக்கிச் சென்று தாழைத் திறந்துவிட்டு மீண்டும் திரும்பி வந்தாள், ''இளவரசே! சீனனையும் தயாராயிருக்கச் சொல்லுங்கள். இன்று நள்ளிரவில் நீங்களிருவரும் தண்டி மகாகவியின் அறைக்குச் செல்கிறீர்கள்'' என்று கூறினாள்:

''ஆசார்யர் அறைக்கா!'' என்று கேட்டான் இளவரசன்.

ரங்கபதாகாதேவியின் திட்டத்தை அன்று நள்ளிரவில்தான் புரிந்து கொண்டான் பல்லவ இளவல், ஆசார்யர் அறையை அவன் அடைந்தபோது ரங்கபதாகாதேவி அங்கு தயாராய் நின்றிருந்தாள். ஆசார்யர் கட்டிலில் படுத்திருந்தார்.

அதைக் கண்டு பெரும் சங்கடத்துக்குள்ளான இளவரசன், ''தேவி! ஆசார்யரை எழுப்பட்டுமா?'' என்று மெல்லக் கேட்டான்.

''ஆசார்யர் எழுந்திருக்க மாட்டார்'' என்றாள் தேவி அவள் குரலில் ஒரு புதிய ஒலி இருந்தது.

''ஏன்?'' இளவரசன் கேட்டான்.

ரங்கபதாகாதேவியின் பதில் அவன் திகிலை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தியது. ''ஆசார்யர் உறங்கவில்லை. மயக்கமடைந்திருக்கிறார்'' என்றாள் தேவி சர்வ சகஜமாக.

இளவரசன் கண்களில் கனல் பறந்தது. ''இதைச் செய்தது?'' என்று சீறி மேலும் ஏதோ சொல்ல முற்பட்டான்.

ரங்கபதாகாதேவியின் கை அசைவு ஒன்று அவனை மேலும் பேசவிடாமல் செய்துவிட்டது. ''இதைச் செய்தது நான்தான்'' என்று சற்றும் சலனமற்று அவள் பவன இதழ்களிலிருந்து ஒலித்த சொற்கள் அந்த அறையின் நிம்மதியைக் கலைத்தன.

## 37. தந்திரச் சுவடி! தாழிட்ட கதவு!

நள்ளிரவின் நிசப்தம் மகாகவியின் மாளிகையெங்கும் நிரவிக் கிடந்தாலும், அந்த நிசப்தம் அமைதியையும் சிருஷ்டித்திருந்தாலும், கங்கன் மகளான ரங்கபதாகாதேவியின் மனத்தில் மட்டும் அமைதிக்குப் பதில் அச்சம் புகுந்திருந்ததை அவள் முகம் லேசாகக் காட்டியது. மாளிகையின் அமைதியைக் கிழித்த புழக்கடைக் கொட்டிலிலிருந்த காவலர் புரவிகளின் கனைப்பும், வீதியில் சதா சஞ்சரித்துக் கொண்டிருந்த காவலர் பாதக் குறடுகளின் ஒலிகளும், மாளிகையின் ஏதோ ஓர் இடத்தில் ஆனைச்சாத்தன் விளைவித்த சிறு சப்தமும், இன்னும் இரவின் பலப்பல சிறு ஒலிகளும்கூட, ரங்கபதாகாதேவியின் செவியில் சிறிதும் விழவில்லை என்பதையும், அத்தனை சிறு ஒலிகளையும் உள்ளத்தே ஊர்ந்திருந்த அச்சம் விழுங்கி விட்டதென்பதையும் அவள் முகத்தின் உணர்ச்சியற்ற தன்மை நிரூபித்தது. மகிதலம் வணங்கும் மகாகவி தண்டியை மயக்கமுறச் செய்தது தான் தானென்று அவள் ஒப்புக் கொண்ட நிலையிலும் உள்ளிருந்த அச்சத்தின் காரணமாகக் குரல் வறண்டே ஒலித்தது. இத்தனை உணர்ச்சியற்ற நிலைமையிலும் அவள் முகத்தின் அழகு இணையற்ற பொலிவுற்றுத் திகழ்ந்தது ஆசார்யரின் அறை விளக்கில்.

மகாகவியை மயக்கமுறச் செய்தது தானேயென்று அவள் கூறியதும் பெரும் திகைப்பை அடைந்து பல்லவ இளவல், அவள் முகத்திலிருந்த வறட்சியைக் கவனித்ததும் அந்த அபசாரத்தை அவள் பிரியத்துடன் செய்யவில்லையென்பதைப் புரிந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் சொன்னான், ''இதைச் செய்ய உனக்குப் பெரும் துணிவிருக்க வேண்டும்'' என்று.



ரங்கபதாகாதேவி தன் அழகிய விழிகளால் அவனை ஏறெடுத்து நோக்கினாள். சற்றுப் பெருமூச்செறிந்தாள். பிறகு சொன்னாள்: ''மன்னர் குலத்தில் பிறந்து விட்டால் துணிவுக்குக் குறைவிருக்காது. எந்தக் குற்றத்தைச் செய்வதற்கும் அச்சமிருக்காது. தவிர அத்தகைய செய்கையில் தான் விரும்பும் புருஷனின் நலனும் சம்பந்தப்படும் போது எந்தப் பெண்ணும் எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று சிந்திக்கும் சக்தியையும் இழந்துவிடுகிறாள்'' என்றவள், மேலும் வார்த்தையை வளர்த்த இஷ்டப்படாமல், ''ஆசார்யர் எழுந்திருக்க இன்னும் ஒரு ஜாமம் பிடிக்கும். அதற்குள் நீங்கள் இங்கிருந்து தப்பிவிடவேண்டும்'' என்றும் கூறினாள்.

ரங்கபதாகாதேவி தன்னைத் தப்புவிக்கத் திட்டம் தயாரித்து விட்டாளென்பதை உணர்ந்து கொண்ட பல்லவ இளவல் உள்ளூர மகிழ்ச்சி கொண்டாலும், ஆசார்யர் நிலைமையைப் பற்றிக் கவலைப் பட்டவனாய், ''தேவி! இவருக்கு மயக்க மருந்தை எப்படிப் புகட்டினாய்?'' என்று வினவினான்.

பதிலுக்கு ரங்கபதாகாதேவி அறை மூலையிலிருந்த சிறு கிண்ணமொன்றைக் காட்டினாள். ''அதோ இருக்கிறது உங்களுக்குப் பதில்'' என்றும் தெரிவித்தாள்.

பல்லவ இளவலுக்கு அப்பொழுதும் விஷயம் புரியாததால், ''அதில் என்ன, பால் கொடுத்தாயா ஆசார்யருக்கு? பாலில் ஏதாவது கலந்துவிட்டாயா?'' என்று வினவினான் அவன் அச்சத்துடன்.

''ஆசார்யாருக்கு தினம் பசும் பால் நான்தான் கொடுக்கிறேன். அதையே அவர் உடனே அருந்தமாட்டார். அப்படியிருக்க இன்று மட்டும் அருந்த ஆசார்யர் குழந்தையல்ல, அதுவும் பாலில் மருந்து கலந்தால் பாலின் நிறம் லேசாகவாவது மாறும். ஆசார்யரின் தீட்சண்யமான கண்கள் அதைக் கண்டு பிடித்து விடும். அப்படிச் செய்யவில்லை நான்'' என்று கூறினாள் ரங்கபதாகாதேவி.

''வேறு என்ன செய்தாய்?''

''ஆசார்யர் படுக்கு முன்பு அவர் அறைக்கு அகிற் புகை போடுவது வழக்கம்.''

''ஆமாம்.''

''இன்று அதை நானே போட்டேன். ஆனால் தணலில் அகில் மட்டுமல்ல சேர்ந்தது, இன்னொரு பொடியும் சேர்ந்தது. அது மகாசுகந்தம். சுகந்தத்திலும் கெடுதலிருக்க முடியுமென்பதற்கு அந்தப் பொடி ஓர் எடுத்துக் காட்டு.''

''அது ஏது உனக்கு?''

ரங்கபதாகாதேவி தனது கண்களால் அவனைச் சிறிதும் கலக்கமின்றி நோக்கி, ''நான் எங்கு போனாலும் கையில் அந்தச் சிமிழ் இருக்கும்'' என்று சொன்னாள்.

''நல்ல பழக்கம்'' என்று வியப்பும் வெறுப்பும் குரலில் ஒன்றுபட்டு ஒலிக்கக் கூறினான் இளவரசன்.

ரங்கபதாகாதேவி அவனைச் சற்று நெருங்கி வந்தாள். ''இளவரசே! கங்கர் குலத்திலும்சரி நாகர் குலத்திலும் சரி, ராஜ கன்னிகைகள் வெளிநாடுகளுக்குச் சர்வ சாதாரணமாக அனுப்பப்படு கிறார்கள். அந்த நாடுகளில் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையா னாலும், மானத்துக்கு பங்கம் ஏற்படும் நிலை உண்டாகுமானாலும் தங்களைக் காத்துக் கொள்ள அந்த சிமிழை அவர்கள் வைத்திருப் பார்கள். இதோ பாருங்கள்'' என்று கூறிய ரங்கபதாகாதேவி தன் மடியிலிருந்து சிறு வெள்ளிச் சிமிழ் ஒன்றை எடுத்துக் காட்டினாள். அதைத் திறந்து உள்ளே நோக்கிய பல்லவ இளவல் அதில் சிறிதளவே பொடியிருப்பதைப் பார்த்து, ''இவ்வளவு வலிமையா இந்தப் பொடிக்கு?'' என்று வினவினான் அச்சம் துளிர்த்த குரலில்.

''ஆம், இளவரசே! இது எங்கள் நாட்டு மருத்துவரால் தயாரிக்கப்படுகிறது. உங்கள் நாட்டுச் சிற்பிகள் வர்ணம் கூட்டுவதை எத்தனை ரகசியமாக வைத்திருக்கிறார்களோ அத்தனை ரகசியமாக இந்தப் பொடி எந்த வேரிலிருந்து தயாரிக்கப்படுகிற தென்பதை எங்கள் நாட்டு மருத்துவர் வைத்திருக்கிறார்கள். இதன் மூலவேரைப் பற்றி எனக்குக் கூட அரச மருத்துவர் சொல்லவில்லை'' என்று கூறிய ரங்கபதாகாதேவி, ''சற்று உங்கள் சீனனை வெளியிலிருக்கச் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டாள்.

அவளைத் தவறாகப் பொருள் கொண்ட ராஜசிம்மன் இதயத்திலிருந்து அச்சம் அகன்று சற்று இன்பம் புகுந்தது. அதனால் இதழ்களில் லேசாகப் புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்ட இளவரசன் சீனனை அறைக்கு வெளியிலிருக்கும்படி கை காட்டவே சீனன் வெளியே சென்றான். அவன் வெளியே சென்றதும் கதவைத் தாழிட்ட ரங்கபதாகாதேவி, தன்னை நோக்கி வந்து தன் இடையில் கைகளைப் படரவிட்ட இளரவசனுக்குச் சிறிதும் இடங்கொடுக்கா மல், ''இளவரசே! இதற்குக் காலமில்லை இப்பொழுது'' என்று கூறி இடையிலிருந்த அவன் கைகளை நீக்கி அவனை அறை மூலை யிலிருந்த விளக்குக்கு அழைத்துச் சென்று தன் மடியிலிருந்து சிறு ஓலைச் சுவடியை எடுத்துக் கொடுத்து, ''இது அம்பிகையின் திருவடியி லிருந்தது'' என்று கூறினாள்.



ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் பல்லவ இளவல். ''ஆசார்யர் சொன்னார்'' என்றும் கூறினான்.

ரங்கபதாகாதேவியின் கண்களில் வியப்பு துளிர்த்தது. ''ஆசார்யர் அறிவாரா?'' என்று வியப்பு ஒலித்த குரலில் கேட்டாள்.

''ஆம், அறிவார். இந்தச் சுவடியை நீ எடுத்தது பற்றி என்னிடம் சொல்லவும் செய்தார்.''

ரங்கபதாகாதேவியின் முகத்தில் வியப்புடன் பயமும் கலந்த சாயை ஒன்று படர்ந்தது. ''அப்படியானால் மற்ற ஓலைச் சுவடிகளுடன் இதைக் கலந்து உங்கள் அறையில் நான் போடச் சொன்னதும் அவருக்குத் தெரிந்திருக்கும்?''

''தெரிந்திருக்குமென்றுதான் நினைக்கிறேன். பூஜை அறை மூலையில் கலைந்து கிடந்த சுவடிகளையும் எனக்குக் காட்டினார்.''

''எப்பொழுது?''

''மாலையில் விளக்கு ஏற்றும் நேரத்தில்.''

''அப்படியானால் என்னை ஏதும் கேட்கவில்லையே?''

''கேட்க வேண்டாமென்று இருந்திருப்பார்.''

''ரங்கபதாகாதேவியின் முகத்தில் குழப்பம் தெரிந்தது. அந்தக் குழப்பத்துடன் இளவரசனை நோக்கிய அவள், ''இந்த ஓலைச் சுவடியின் மேல் சுதர்சன சக்கரம் தீட்டப்பட்டிருப்பதை இங்கு வந்த நாள் முதல் கவனித்தேன். ஆசார்யர் இந்த ஓலைச் சுவடியை அன்றாடம் எடுத்துத் தட்டி மீண்டும் பத்திரமாக அம்பிகையின் திருவடியில் வைப்பதையும் பார்த்தேன். அம்பிகையின் பாதத்தில் ஸ்ரீசக்கரத்தையோ சக்தி சக்கரத்தையோ வைப்பது பிரமாணமாயிருக்க, சுதர்சன சக்கரத்தை வைத்திருப்பது பற்றி வியந்தேன். ஒரு நாள் ஆசார்யருக்குத் தெரியாமல் சுவடியை எடுத்து அவிழ்த்து மற்ற ஓலைகளையும் பார்த்தேன். உள்ளும் பல சக்கரங்களும் கோடுகளும் இருக்கின்றன. ஆனால் அவை பீஜாக்ஷரங்கள் கொண்டவையல்ல...'' என்று கூறினாள். ''நீங்கள் சிற்பிதானே! நீங்களே ஓலையை அவிழ்த்துப் பாருங்கள்'' என்றும் சொன்னாள்.

சுவடியை அவிழ்த்து ஓலைகளைப் புரட்டிய ராஜசிம்மன் கண்களில் வியப்பு மெல்ல மெல்லப் படர்ந்தது. கடைசியில் முகம் பூராவையும் வியப்பு ஆக்கிரமித்துக் கொண்டதால், ''இந்த நாட்டு இளவரசன் நான். எனக்கே இது தெரியாதே!'' என்றான் பிரமிப்புடன் தேவியை நோக்கி.

''நாடாளும் இளவரசனறியாத ஒரு பெரும் மர்மம் நாவாளும் மகா கவியின் கையில் சிக்கிவிட்டது எனக்கே பிரமிப்பாயிருக்கிறது'' என்றாள் ரங்கபதாகாதேவி.

இளவரசன் பதில் சொல்லவில்லை சில விநாடிகள். பிறகு கேட்டான், ''சீனனை ஏன் வெளியில் அனுப்பி விட்டாய்?'' என்று.

''இது உங்கள் நாட்டு ரகசியம். சீனன் வெளி நாட்டவன்'' என்று சுட்டிக் காட்டினாள் தேவி.

''நீயும் வெளி நாட்டவள். உனக்குத் தெரிந்து விட்டது. ஆசார்யர் வெளி நாட்டவர். அவருக்கு தெரிந்திருக்கிறது. எனது இணைபிரியா நண்பன் அவனுக்குத் தெரிந்தாலென்ன?'' என்று கேட்டான் இளவரசன்.

ரங்கபதாகாதேவி நிலத்தில் கண்களை ஒரு விநாடி தாழ்த்தினாள். நிலத்தை நோக்கிய வண்ணம் சொல்லவும் செய்தாள். ''இதோ நான் நோக்கும் நிலம் பாரத புண்ய பூமி. இங்கு அரசுகள் ஆயிரமிருக்கலாம், மக்கள் பலவிதம் இருக்கலாம். ஆனால் இந்தப் பூமி ஒரே பூமி. இதன் கலாசாரம் ஒரே கலாசாரம். என்ன இருந்தாலும் சீனன் அயல் நாட்டவன். அவன் இந்த ரகசியத்தை அறிவதை நான் விரும்பவில்லை.'' இதைச் சொன்ன அவள் குரலில் உணர்ச்சி வெள்ளமிட்டு ஓடியது.

இளவரசன் அதற்கு மேல் பேசவில்லை சுவடிகளில் மீண்டும் கண்களைச் செலுத்தி மனத்துக்குள் ஏதோ கணக்குகளைப் போட்டான். ''இந்த ஓலைச் சுவடியில் ஒவ்வோர் ஓலையும் இந்த மாளிகையின் ஒவ்வொரு பகுதியைக் குறிக்கிறது...'' என்று சொன்னான் கடைசியில்.

''ஆம்'' என்றாள் தேவி.

''ஏழாவது ஓலை இந்த அறையைக் குறிக்கிறது.''

''ஆம்.''

''ஏழாவது ஓலைக் கோடுகளின் மத்தியில் இரண்டு கோடுகள் குறுக்கே தனிப்பட்டு இருக்கின்றன அந்த இடம்தான் சுரங்கப் பாதை இருக்குமிடம்.''

''எட்டாவதுகோடு கீழிருக்கும் பறையை அகற்றும் சூத்திரக் கல்லைக் குறிக்கிறது.''

இளவரசன் ஆச்சரியம் ததும்பும் விழிகளை ரங்கபதாகா தேவியின் மீது திருப்பினான். ''தேவி! சிற்ப சாத்திரத்தை நீ கரை கண்டிருக்கிறாய்'' என்று பாராட்டவும் சொய்தான்.

''சரி, வாருங்கள். சூத்திரத்தைத் திருப்புவோம்'' என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு கட்டிலுக்கடியில் உட்கார்ந்தாள் ரங்கபதாகா தேவி. பிறகு கட்டிலின் கடைசிக் காலைச் சற்றுத் தூக்கும்படி இளவரசனிடம் கூறவே. மெல்ல அந்தக் காலைத் தூக்கினான் இளவரசன். ரங்கபதாகாதேவி அந்தக் காலுக்கு அடியிலிருந்து ஒரு தனிக் கல்லை மெல்ல மெல்லத் திருப்பினாள். அங்கிருந்தது சிறு பாறாங்கல்லாயிருந்தாலும், கட்டிலைத் தூக்கி நிறுத்த



ஏற்பட்ட சதுரக் கல்லாயிருந்தாலும், மிகுந்த சிரமப்பட்டே அதைத் திருப்ப வேண்டியதாயிற்று. மிகுந்த கஷ்டப்பட்டு அந்தக் கல்லை அவள் திருப்பியதும் கடகடவென்று ஏதோ சத்தம் கட்டிலுக்குக் கீழ் ஏற்பட்டு, பெரும் பாறை அகன்றது. அதன் கீழே படிகள் ஓடின.

அந்தப் படிகளைக் கண்டு பிரமித்து நின்ற இளவரசனைத் தேவி துரிதப்படுத்தினாள். ''இப்பொழுது சீனனைக் கூப்பிடுங்கள். சூத்திரக் கல்லைப் பழையபடி பதித்துவிட்டேன். அதன் சூட்சுமம் இனி தெரியாது'' என்று அவள் கூறவே, வெளியில் சென்று சீனனை அழைத்து வந்தான் இளவசரன் மீண்டும். இளவரசன் உள்ளே வந்ததும் அறைக் கதவைத் தாழிட்ட ரங்கபதாகாதேவி அவனிடம் ஒரு சிறு விளக்கை ஏற்றிக் கொடுத்து, ''இதை எடுத்துக் கொண்டு நிலவறைப் பாதையில் செல்லுங்கள். இது நேரே கடிகைக்குச் செல்கிறது'' என்றாள்.

விளக்கைச் சீனனிடம் கொடுத்த இளவரசன், ''மைவிழியை என்ன செய்ய உத்தேசம்?'' என்று கேட்டான்.

''நாளைக்கு உங்களிடம் அனுப்பிவிடுகிறேன்'' என்றாள் தேவி. அவள் குரலில் சற்றுக் கடுமையிருந்தது அதைச் சொன்ன போது.

''நாளை அனுப்பிவிடுவாயா?''

''ஆம்.''

''நான் நாளை எங்கிருப்பேன்?''

''இருக்குமிடம் எனக்குத் தெரியும்'' என்று திட்டமாகச் சொன்ன ரங்கபதாகாதேவி, ''சீக்கிரம் செல்லுங்கள்'' என்றாள்.

சீனன் விளக்கு காட்டி முன் செல்ல, இளவரசன் அவனைப் பின் தொடர்ந்து படிகளில் இறங்கிச் சென்றான். அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டே நின்றாள் ரங்கபதாகாதேவி பெருமூச்செறிந்த வண்ணம். சிறிது நேரத்தில் நிலவறையில் விளக்கு மறைந்து மேலிருந்த படிகளை இருள் சூழ்ந்து கொண்டது.

நிலவறையைப் பழையபடி மூட இன்னொருவர் உதவி தேவை யாகையால் தேவி ஆசார்யரின் அறையை மூடிக் கொண்டு சென்று மைவிழியை அழைத்து வந்தாள். இருவரும் அறைக் கதவை அடைந்ததும், ''மைவிழி! ஓசைப்படாமல் வா'' என்று கூறிய ரங்கபதாகா தேவி அதிஜாக்கிரதையுடன் கதவைத் திறக்க முற்பட்டாள். கதவைத் திறக்க முடியவில்லை. கதவு அசையவில்லை சற்று அழுத்தித் திறந்தாள். அடுத்த விநாடி அவள் முகத்தில் கலவரம் தாண்டவமாடத் தொடங்கியது. கதவு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது.

# 38. சுரங்கப் பாதையின் கோடியில்

தண்டி மகாகவி அறை உட்புறம் தாழிடப்பட்டிருப்பதைக் கண்ட கங்கன் மகள் ரங்கபதாகாதேவி மிதமிஞ்சிய திகைப்புக் குள்ளானவளாய், தன் அழகிய கார்மேகக் கண்களில் அச்சம் விரிந்து விளையாட பக்கத்திலிருந்த மைவிழியை நோக்கினாள். மைவிழியின் கரியபெருவிழிகளும் தேவியின் அச்சத்தை முழுதும் பகிர்ந்து கொண்டதற்கு அடையாளமாகப் பெரிதும் சலனப் பட்டன. ஆனால் எதிர்பாராத திருப்பத்தின் விளைவாக இருவர் வாயிலிருந்தும் சொற்கள் வரவில்லை. முடிவில் நிலைமையைச் சிறிது சமாளித்துக் கொண்ட ரங்கபதாகா தேவி தன் எண்ணங்களை வெளியிட முற்பட்டு, ''மைவிழி! உன் அறைக்கு வந்து உன்னை அழைத்து வரச் சில விநாடிகள் கூடப் பிடித்திருக்காதே. அதற்குள் இந்தக் கதவை யார் உட்புறம் தாழிட்டிருப்பார்கள்?'' என்று வினவினாள்.

மைவிழி ரங்கபதாகாதேவியை நோக்கி, ''அக்கா! நீங்கள் என் அறையில் சொன்ன திட்டத்தில் பழுது ஏதுமில்லையே? உங்கள் திட்டத்தை நம்மிருவரைத் தவிர வேறு யாரும் அறிவதற்கும் நியாயமில்லையே'' என்றாள் அச்சம் தொனித்தகுரலில்.

''அப்படித்தான் நானும் நினைத்தேன் மைவிழி. ஆனால் நடந்திருப்பதைப் பார்த்தால் வேறு யாரோ நம்மைக் கண்காணித் திருப்பாகத் தெரிகிறது'' என்று ரங்கபதாகாதேவி கூறி அவளை அழைத்துக் கொண்டு கட்டிலுக்கடியில் உட்கார்ந்தாள். ரங்கபதாகா தேவியின் சொற்களில் சந்தேகம் பெரிதும் ஒலித்தது.

''மதாசார்யரும் மன்னர்கள் அனைவராலும் வணங்கப் பெற்றவருமான மகாகவியின் மாளிகையில் வேவு பார்க்க யாருக்குத் தைரியம் வரும்?'' என்று கேட்டாள் மைவிழி.

''நீ சொல்வதெல்லாம் சரி மைவிழி. ஆனால் நானே அம்பிகை யின் திருவடியிலிருந்த ஓலைச் சுவடியை எடுத்துச் சுரங்கப் பாதையின் மர்மத்தை அறியவில்லையா?''

''அறிந்தீர்கள் அக்கா! ஆனால் அது ஆசார்யரின் மீது வேவு பார்க்க அல்லவே! நம்மவரை விடுவிக்கத்தானே அதன் மர்மத்தை அறிந்தீர்கள்? அதெப்படிக் குற்றமாகும்!''

ரங்கபதாகாதேவியின் கண்களில் சற்று வெட்கத்தின் சாயை படர்ந்தது. ''அடி மைவிழி! நீயோ நானோ அவருக்காக எதைத் தான் செய்ய மாட்டோம்?'' என்று சொல்லிச் சற்றுப் புன்முறுவலும் கோட்டினாள்.



காதலனை நினைத்த மாத்திரத்தில் காரிகையரிருவரும் தாழிட்ட கதவை மறந்தனர். ஏன், அந்த மாளிகையைக் கூட மறந்தனர். அந்த நிலையில் அவ்விருவருவர் மனமும் உணர்ச்சிகளும் ராஜசிம்ம பல்லவன் வடிவழகையும் வீர முகத்தையுமே நினைத்து நினைத்துத் திளைத்து விட்டதால் சில விநாடிகள் ஒருவரை யொருவர் பார்த்த வண்ணம் நின்றிருந்தனர். பிறகு ரங்கபதாகா தேவி மைவிழிச் செல்வி யின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு விரல்களோடு விரல்கள் பின்ன, விழிகளோடு விழிகள் கலக்க, பவள வாய் திறந்து வினவினாள், ''ஆமாம் மைவிழி! என்னைத் திடீரென அக்கா என்றழைத் தாயே, உன்னை விட நான் வயதில் பெரியவளா என்ன?'' என்று.

மைவிழிச் செல்வி அதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. சற்றுச் சிந்தனைக்கப் பிறகு, ''அக்கா! வயது மட்டும் ஒருவருக்கு உயர் பதவி அளிப்பதில்லை'' என்று கூறினாள்.

''வேறு எது அளிக்கிறதாம்?''

''அந்தஸ்து.''

''அப்படி என்ன அந்தஸ்து வந்து விட்டது எனக்கு?''

''நீங்கள் அரச மகள். நான் கேவலம் ஓர் ஒற்றன் மகள்.''

''அதனால்?''

''நாளை இளவரசர் அரியணை ஏறினால் நீங்கள் தான் பட்டமகிஷியாக முடியும்.''

''மைவிழி! அன்பு என்ற பிணைப்பு ஏற்படும்போது குலம் அந்தஸ்து அத்தனையும் அர்த்தமற்றதாகிறது. உள்ளுணர்ச்சிகளே உயர்ந்து நிற்கின்றன. இளவரசரை எனக்குமுன்பு நீண்ட நாட்களாக நீதான் அறிவாய். இந்த மாளிகைக்கு வந்த பின்புதானே அவரை எனக்குத் தெரியும்? அப்படியிருக்க, அவர் என்னை எப்படிப் பட்டமகிஷியாக ஒப்புக் கொள்வார்?'' என்றாள் ரங்கபதாகாதேவி.

மைவிழி சற்றுச் சிந்தித்துவிட்டுச் சொன்னாள், ''அக்கா! என்னைப் பட்டமகிஷியாக்கப் போவதாக அவரே சற்று முன்பு என்னிடம் சொன்னார். ஆனால் அதை நான் ஒரு நாளும் ஒப்புக் கொள்ள மாட்டேன். பல்லவ சாம்ராஜ்யாதிபதியின் பட்டமகிஷி ஓர் ஒற்றன் மகள் என்ற அபக்கியாதி அவருக்கு ஏற்பட நான் சம்மதித்தால் என் காதலுக்கு அர்த்தமிருக்க முடியுமா? என் நேசத்தின் அளவு ஒரு வித்தியாசத்தைக் கூடப் பொறுக்க முடியவில்லையென்றால் அது ஒரு நேசமா அல்லது பாசமா? இல்லை அக்கா. நீங்கள் தான் பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டமகிஷி! நான் உங்களுக்கு இரண்டாம வளாகத்தான் இருப்பேன் என்று.

இதைக் கேட்ட ரங்கபதாகாதேவி மைவிழியை அப்படியே இறுகத் தழுவிக் கொண்டாள் ''அடி மைவிழி! உன் தியாகம் எத்தனை மகத்தானது! உனது எண்ணங்கள் எத்தனை உயர்ந்தவை. எந்த அரச மகளும் உனக்கு ஈடல்ல'' என்று கூறினாள்.

மைவிழி தன் கரிய பெருவிழிகளால் ரங்கபதாகாதேவியை நோக்கினாள். ''அக்கா! உங்கள் தியாகம் மட்டும் சாமான்யமானதா? நீங்கள் பல்லவர்களின் எதிரி மகள். உங்கள் தந்தையின் விரோதியையே சுரங்கப் பாதை வழியாகத் தப்ப வைத்திருக் கிறீர்களே!'' என்றாள்.

மைவிழி இந்த விஷயத்தைச் சொன்ன பிறகு தான் ரங்கபதாகாதேவி விழித்துக் கொண்டாள். ''மைவிழி, நாம் ஏதோ பேசிக் கொண்டிருந்து விட்டோமே? அவர் இத்தனை நேரம் சுரங்கப் பாதையைக் கடந்திருப்பாரா? அல்லது இந்தக்கதவைத் தாழிட்ட ஒற்றன் அவருக்கு ஏதாவது தீங்கிழைத்திருப்பானோ?'' என்று பதட்டத்துடன் வினவினாள்.

அந்தச் சமயத்தில் ஒரு குரல் அவர்கள் உரையாடலுக்குக் குறுக்கே புகுந்தது. ''கதவைத் தாழிட்டவன் இளரவசனுக்கு எந்தத் தீங்கையும் செய்யவில்லை. சுரங்கப் பாதையையும் அவனே மூடிவிட்டான்'' என்ற குரலைக் கேட்ட இருமங்கையரும் திகைப்புற்றுத் திரும்பினர். தாழிட்ட கதவைத் திறந்து கொண்டு அவர்கள் முன்பு ஆசார்ய தண்டி நின்றுகொண்டிருந்தார்.

ஆசார்யரைக் கண்டதும் இருமடந்தையர் முகத்திலும் மித மிஞ்சிய கலவரமும் திகிலும் உண்டாகவே இருவரும் ஒருவரை யொருவர் பார்த்து விழித்தனர். அவ்விரு மடந்தையரின் மருண்ட பார்வையைக் கண்ட ஆசார்ய தண்டியின் முகத்தில் புன்முறுவல் அரும்பியது. காவ்ய லக்ஷணங்களை எழுதிய ஆசார்யர் அந்த இரு பெண்களின் கலவரப் பார்வையிலும் குற்றம் சொட்டும் விழிகளிலும் அள்ளித் தெளித்த அழகைக்கண்டு. 'பல்லவ இளவல் எத்தனை அதிர்ஷ்டசாலி, இத்தகைய அழகிகளின் மனத்தைக் கொள்ளை கொள்ள? என்னிடம் காவ்யம் படிக்க வந்த கங்கன் மகளையே ஒரே நாளில் அவள் தகப்பனுக்கு விரோதியாக்கி,குருவான எனக்கும் தெரியாமல் அம்பிகை பாதச்சுவடியை எடுத்து, சுரங்க மர்மமறிந்து அவனைத் தப்ப வைக்க வைத்து விட்டானே!'' என்று உள்ளூர எண்ணி மகிழ்ந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''தேவி! குருவின் அனுமதியின்றிச் சுவடியை நீ எடுக்கலாமா?'' என்று வினவினார் வெளிப்படையாக.

தேவி மௌனம் சாதித்தாள் ஒரு விநாடி. பிறகு, ''குற்றம் தான் சுவாமி! இருப்பினும் ஆபத்துக்கால தர்மம் என்று ஒன்று உண்டு. அது



சில பிழைகளை மன்னிக்கும் என நீங்களே சொல்லியிருக் கிறீர்களே?'' என்று மிகத் தீனமான குரலில் கூறினாள்.

தண்டி மகாகவி மெல்ல நகைத்தார். ''தேவி! என்னிடம் கற்றதை என்னிடமே திருப்புகிறாய். நல்லது நல்லது'' என்று சிலாகித்துவிட்டு மைவிழியைச் சுட்டிக்காட்டி ''இவளுக்கு எதற்காக உன் வேடத்தை போட்டிருக்கிறாய்?'' என்று வினவினார்.

ரங்கபதாகாதேவி என்னபதில் சொல்வதென்று அறியாமல் திகைத்தாள். ''சுவாமி இவளுக்கு என் வேடத்தைப் போட்டால் எப்படியிருப்பாளென்று பார்த்தேன். இவள் அரசகுமாரிக்கு மேற்பட்ட கம்பீரத்தைப் பெற்றிருக்கிறாள் இல்லையா குருநாதரே?'' என்று பசப்பினாள்.

தண்டியின் முகத்தில் சற்றே கவலை தெரிந்தது. ''தேவி! உன் திட்டத்தை என்னால் ஊகிக்க முடியாதென்று நினைக்காதே பல்லவ இளவலைச் சுரங்க மூலம் கடிகைக்கு அனுப்பிவிட்டு விடியற் காலையில் அங்கிருந்து இருவரும் தப்பிச் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறாய். கங்கன் மகள் சிவிகையைத் திறந்து சோதிக்கக் காஞ்சியில் யாருக்கும் அதிகாரமில்லை. அந்தத் துணிவில் இந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறாய். உன் திட்டம் நிறைவேறாது. ஆகவே மைவிழியைக் காலையில் அனுப்பாதே. தவிர என்னைக் கேட்காமல் இனி எந்தக் குருட்டுத் திட்டத்திலும் இறங்காதே. ராஜசிம்மன் என் சீடன். உங்களைவிட அவனிடம் எனக்கு அக்கறை உண்டு. போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்'' என்று உபதேசித்து விட்டுத் திரும்ப முயன்றார்.

''சுவாமி? ஒரு சந்தேகம்'' என்றாள் ரங்கபதாகாதேவி.

''என்ன''

''நீங்கள் மயக்கமுற்ற பிறகுதானே நான் சுரங்கப் பாதையைத் திறந்தேன். அப்படியிருக்க அவரை நான் அனுப்பியது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

தண்டியின் இதழ்களில் இளநகை அரும்பியது. ''தேவி! பல தலைமுறைகளாக நாங்கள் யோகிகள். பிராணாயாமச் சித்தி பெற்றவர்கள். நாழிகைக் கணக்கில் மூச்சை ஸ்தம்பனம் செய்யும் சக்தி வாய்ந்தவர்கள். நீ அகிற்புகை போட்டபின்பு இடுப்பிலிருந்து சிறு சிமிழ் ஒன்றை எடுத்ததைப் பார்த்தேன். உன் திட்டத்தை ஊகித்துக் கொண்டேன். ஆகவே பிராணாயாம சித்தியில் படுத்து விட்டேன். அந்த மயக்கம் தரும் விஷப்புகை என் நாசிக்குள் செல்லவில்லை. நீ

சென்றதும் அகிற் புகைப்படிமத்தை நானே அணைத்து விட்டேன்'' என்று கூறிவிட்டு, ''சரி. போங்கள், நாளை சந்திப்போம்'' என்று கூறிக் கதவைத் தாழிட்டுச் சென்றுவிட்டார்.

இருவரும் தாழிடப்பட்ட கதவண்டை நீண்டநேரம் நின்றனர். பிறகு தேவி அழைத்தாள், ''மைவிழி ஆசார்யர் எனது திட்டத்தை அணு அணுவாக ஆராய்ந்து விட்டார் வா போவோம்'' என்று.

''எங்கு?'' என்று வினவினாள் மைவிழி.

''என் அறைக்கே வா'' என்றாள் தேவி.

இரு மங்கையரும் ரங்கபதாகாதேவியின் அறையை அடைந்து ஒரே பஞ்சணையில் அக்கம் பக்கத்தில் படுத்தனர். இருவர் நினைப்பும் பல்லவ இளவல் மீதே இருந்தது. 'அவர் சுரங்கப் பாதையின் முடிவை அடைந்திருப்பாரா? அடைந்து சுவடிக்கோட்டில் காணப்பட்ட இருப்புப் பலகையைவிசையால் நகர்த்திக் கடிகையின் பிரதான அறையை அடைந்திருப்பாரா?'' என்று யோசித்தாள் தேவி.

பல்லவ இளவல் சீனனுடன் சுரங்கப் பாதை முழுவதையும் கடந்து கடைசியில் மேலோடியபடிகளில் ஏறி சூட்சும விசையையும் திருப்பினான். சுரங்கப் பாதையை மூடியிருந்த இரும்புக் கதவு திறந்தது. மேலே அறைக்குள் ஏறி சீனனையும் வரச் சொல்லி மீண்டும் இரும்புப் பலகையை மூடிட விசையைத் தேடினான் பல்லவ இளவல்.

''விசை இடது சுவரின் அடிப்பகுதியில் இருக்கிறது'' என்று ஒரு குரல் ஒலித்தது அந்த அறையின் கோடியிலிருந்து. அந்தக் குரலைக் கேட்ட பல்லவ இளவல் பிரமித்து நின்றான்.

அந்தக் குரல் ஸ்ரீராமபுண்ய வல்லபருடையது. அந்த அறையின் கோடியில் ஒரு சிறு விளக்கை வைத்துக் கொண்டு ஸ்ரீராமபுண்ய வல்லபர் நறுக்கு ஓலைகளில் எழுத்தாணி கொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்.

## 39. ராஜ தந்திரம்

நேரங்கெட்ட நேரத்தில் நள்ளிரவு தாண்டிவிட்ட சமயத்தில் எந்தச் சுவடிக் கோடுகளின் துணைகொண்டு தான் சுரங்கப்பாதையின் முடிவை அடைந்தானோ, அதே இடத்தில் சாளுக்கிய விக்கிரமாத்த னின் போர்அமைதி மந்திரியான ஸ்ரீராமபுண்யவல்லபர் உட்கார்ந்து கொண்டு ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எதையோ பொறித்துத் தள்ளிக் கொண்டிருந்ததைக் கண்ட பல்லவ இளவல் முதலில் வியப்படைந்தா னென்றால், சுரங்கப்பாதை மூடும் விசை இடது பக்கத்தில் இருப்பதாக



அவர் குறிப்பிட்டதும் பேரதிர்ச்சியும் அடைந்தான். காஞ்சியின் இளவரசனான தனக்கே இத்தனை நாள் தெரியாத சூட்சுமத்தை ஸ்ரீராமபுண்யவல்லபர் எப்படி அறிந்தார் என்பது அவனுக்கு அடியோடு விளங்காவிட்டாலும் அதைப் பற்றிச் சிந்திப்பதில் பயனேதுமில்லை யென்ற காரணத்தால் இடது புறச் சுவரிலிருந்த மர உருளையைப் பலமாக இருமுறை திருப்பவே பாதையின் இரும்புத்தகடு மூடிக் கொண்டு தரையோடு தரையாகி விட்டது. அது இரும்புக் கதவு என்று தெரியாதிருப்பதற்காக அதன் மேல் படிய ஒட்டப்பட்டிருந்த வெண்கலவைச் சாந்து அந்த அறையின் தரையோடு தரையாகக் கலந்து அதன் இரும்புத் தன்மையை அடியோடு மறைத்து விட்டதைக் கண்ட பல்லவ இளவல் பிரமிப்பின் உச்சியை அடைந்தான். இந்த விந்தையை, இந்தச் சுரங்கப் பாதை மர்மத்தை, தனது குருநாதரான தண்டி மகாகவி ஏன் தனக்குச் சொல்லவில்லையென்றும் தன்னைத்தானே வினவிக் கொண்டான். காஞ்சியின் இளவரசன் அறிய முடியாத மர்மத்தைக் காஞ்சியின் எதிரிகளான கங்கன் மகளும் விக்கிரமாதித்தன் போர் மந்திரியும் அறிய முடிந்தது பெரு விசித்திரமாயிருந்தது ராஜசிம்மனுக்கு. அதன் விளைவாகப் பிரமித்து நின்ற இளவரசனை ஸ்ரீராமபுண்யவல்லபரே அழைத்து, ''ராஜசிம்மா! வா இப்படி வந்து மஞ்சத்தில் உட்கார்ந்து கொள். சீனனைக் கையில் இருக்கும் விளக்கை அணைத்துவிடச் சொல். இந்த அறைக்கு இரண்டு விளக்குகள் எதற்கு?'' என்றார் சர்வ சாதாரணமாக.

இளவரசன் சில விநாடிகள் பதிலேதும் கூறாமல்மௌனமாக நின்றான். பிறகு சீனனை விளக்கை அணைக்க உத்தரவிட்டு ஸ்ரீராமபுண்யவல்லபர் அமர்ந்திருந்த மஞ்சத்தை நோக்கிச் சென்றான். சென்றதும் மஞ்சத்தில் உட்காராமலே அவரை நோக்கி வினவினான், ''இந்தச் சுரங்கப் பாதை இருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று.

ஸ்ரீராமபுண்யவல்லபர் லேசாக ஓலைச்சுவடியிலிருந்து தலையை நிமிர்த்தி, ''இன்று இரவு வரை தெரியாது. கடிகையின் இந்த அறை வேதாந்திகள், பெரிய வித்வான்கள், தங்குவதற்காக ஏற்பட்டது என்று கேள்விபட்டேன். ஆகையால் இதை என் அலுவல்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று இங்கு வந்தேன். அறையின் மற்ற சுவர்களில் வேதரிஷிகளின் படங்களும் தண்டமிழ் மறையவர் சித்திரங்களும் தீட்டப்பட்டிருந்ததைக் கண்டேன். இத்தகைய புனிதமான இடம் கிடைத்தைப்பற்றி மகிழ்ச்சியும் அடைந்தேன். ஆனால்...'' என்று வாசகத்தை முடிக்காமல் விட்டார்.

''ஆனால்?'' அரசகுமாரன் கேட்டான் ஆவலுடன்.

''ஆனால் வாதாபியை அழித்தவரும், பரஞ்சோதி எனும் படைத்தலைவராக இருந்து பிறகு சிறுத்தொண்டை நாயானாராக ஆனவருமான அவர் வண்ணப் படம் இடது புறச்சுவரில் தீட்டப் பட்டிருந்ததைப் பார்த்தேன். நாயனார் முகத்தில் சிவ பக்திக்களை சொட்டிக் கொண்டிருந்தது. அதில் ஒரு விசித்திரமும் இருந்தது!'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

''என்ன விசித்திரமோ?'' பல்லவ இளவல் வினவினான் வியப்புடன்.

''நீயே பார் பரஞ்சோதியின் உருவத்தை'' என்றார் சாளுக்கியர் போர் அமைதி மந்திரி.

இளவரசன் உற்றுப் பார்த்தானானாலும் ஏதும் விளங்க வில்லை அவனுக்கு. ''ஏதும் விளங்கவில்லை'' என்று பகிரங்கமாக ஒப்புக் கொள்ளவும் செய்தான்.

''நன்றாகக் கவனி ராஜசிம்மா! நாயனார் திருவடிகளுக்கு அடியில் பீடம் அமைப்பதுண்டு. ஆனால் சூரிய வடிவத்தில் மர உருளை ஏன் அமைத்திருக்கிறார்கள்?''

''ஆம், ஆம். அது விசித்திரந்தான். இயற்கைக்கு விரோதந் தான்.''

காஞ்சி மாநகர் சிற்பிகளுக்கும் வண்ணப் பூச்சுக்களுக்கும் பெயர் போனது. கடிகையோ உலகப் பிரசித்தி பெற்றது. அப்படிப் பட்ட கடிகையின் முக்கிய அறையில் இந்த உருளை எதற்கென்று நினைத்தேன். பிறகு உருளையைச் சுற்றிப் பார்த்தேன். சுரங்கம் தெரிந்தது.

இதைக் கேட்ட ராஜசிம்ம பல்லவன் பிரமித்துப் போனான். ஸ்ரீராமபுண்யவல்லவரின் ஆராய்ச்சிக் கண்களிலிருந்தது. எதுவும் தப்ப முடியாதென்பதை உணர்ந்து கொண்டதால் அவரிடம் அவனுக்கு ஏற்கனவே இருந்த மதிப்பு பெரிதும் உயர்ந்தது. அதனால் இன்னொரு கேள்வியும் கேட்டான், ''சுவாமி, சுரங்கமிருப்பது தெரிந்தும் அது எங்கு செல்கிறதென்பதைத் தாங்கள் ஏன் அறிய முயலவில்லை?'' என்று

ஸ்ரீராமபுண்யவல்லபரின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. ''தேவையில்லை ஆகையால் அறிய முயலவில்லை'' என்று கூறினார் புன்முறுவலின் ஊடே.

''ஏன் தேவையில்லை?'' சற்று உஷ்ணத்துடன் எழுந்தது இளவலின் கேள்வி:



ஸ்ரீராமபுண்யவல்லபர், ''நான் யாருக்குப் பயந்து சுரங்க வழியில் போகவேண்டும்? பகிரங்கமாகக் காஞ்சியில் உலாவ சுதந்திரமிருக்கிறதே எனக்கு'' என்று கூறியதன்றி, ''ராஜசிம்மாவீரனான உன்னை அவதூறு கூறுவதாக நினைக்காதே அளவுக்கு மேல் எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் எனக்கு எப்பொழுதும் கிடையாது'' என்று சமாதானமாக மிகச் சாந்தமான குரலில் அவனை ஆசுவாசமும் படுத்தினார். அவரே மேலும் சொன்னார்: ''ராஜசிம்மா! இதைப்பற்றி அதிக ஆராய்ச்சியும் தேவையில்லை. நீ தண்டி மகாகவியின் மாளிகையிலிருந்திருக்கிறாய். இப்பொழுது இங்கு வந்திருக்கிறாய். ஆகையால் இந்தச் சுரங்கவழி தண்டி மகாகவியின் மாளிகைக்குத்தான் செல்லும். ஆனால் ஒன்று நிச்சயம். தண்டி மகாகவி உன்னை இங்கு அனுப்பவில்லை.''

பல்லவ இளவலுக்குப் பதில் என்ன சொல்வதென்பது தெரியாமற் போகவே அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு கேட்டான், ''ஏன் ஆசார்யர் என்னை இங்கு அனுப்பியிருக்க மாட்டார்?'' என்று.

ஸ்ரீராமபுண்ய வல்லபரின் பதில் தங்கு தடையின்றி வந்தது. ''அவர் அனுப்புவதாயிருந்தால் இந்த இரவுவரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. நீ அவர் மாளிகைக்கு வந்த இரவே அனுப்பி யிருக்கலாம். நீயும் இந்திரவர்மனும் பலபத்ரவர்மனும் கடிகைக்கு வரத்தான் திட்டமிட்டீர்களென்று எங்களுக்கே தெரியம், அப்படியிருக்க அவருக்குத் தெரியாதா?'' என்று வினவினார் விக்கிரமாதித்தன் போர் அமைதி மந்திரி.

ஆனால் அவர் சொன்ன இந்தப் பதிலால் எந்த வியப்பும் ஏற்படவில்லை பல்லவ இளவலுக்கு. உபதளபதி வீரபாகு அதைத் தெரிவித்திருக்கக்கூடும் என்று தீர்மானித்துக் கொண்டான். மேற்கொண்டு பேசவும் அவன் பிரியப்படாததால், ''எங்களை என்ன செய்ய உத்தேசம் அமைச்சரவர்களே?'' என்று வினவினான்.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''பல்லவ இளவரசனுக்கு என்ன சௌகரியங்கள் தேவையோ அத்தனையும் கொடுக்க உத்தேசம். வேறு என்ன எதிர்பார்த்தாய் ராஜசிம்மா! இந்தக் கடிகை சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. பல பேருக்கு வித்யாபீடம். இது காஞ்சியிலிருந்தாலும் பாரதம் முழுவதற்கும் சொந்தமானது. இந்தக் கடிகையின் எல்லைக்குள் அனைவரும் சுதந்திரமாக நடமாடலாம் என்பது பல்லவர் விதித்துள்ள சட்டம். அதைச் சாளுக்கியர் மீறுவானேன்? கடிகையில் இருக்கும்வரை நீயும்

யாங்சின்னும் சுதந்திர புருஷர்கள்?'' என்று புன்முறுவலின் ஊடே கூறிவிட்டு அறையின் வாசற்படிக்குச் சென்று, ''யாரங்கே'' என்று குரல் கொடுத்தார். அக்குரலைக் கேட்டதும் ஓடி, வந்த இரு பணியாட்களிடம், ''இன்னும் இரு மஞ்சங்களை எடுத்து வாருங்கள், ஒரு மஞ்சத்தில் உயர்ந்த பஞ்சணையும் இருக்கட்டும்'' என்று உத்தரவும் இட்டார்.

அடுத்த சில விநாடிகளில் இரு மஞ்சங்கள் அறைக்குள் வந்தன. அவற்றில் ஒன்றில் பெரும் பஞ்சணையும் விரிக்கப் பட்ட து. தலையணைகளும் போடப்பட்டன. அந்த அலுவலை முடித்ததும் பணியாட்கள் மந்திரிக்கும் இளவரசனுக்கும் தலை தாழ்த்தி வெளிச் செல்ல, ஸ்ரீராமபுண்யவல்லபர், ''ராஜசிம்மா! எனக்கு இன்னும் சிறிது எழுத்து வேலை இருக்கிறது. நான் முடித்துவிட்டுப் படுத்துக் கொள்கிறேன். நீங்கள் சயனித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு மீண்டும் தனது மஞ்சத்திலமர்ந்து ஓலை நறுக்குகளில் எழுத்தாணியை ஓட்டலானார்.

ராஜசிம்ம பல்லவன் அவர் மீண்டும் நிதானமாக வேலை துவங்கிவிட்டதைக் கண்டு வியந்த வண்ணம் பஞ்சணையில் படுத்துக் கொண்டான். சீனன் மட்டும் பக்கத்து மஞ்சத்தில் படுக்காமல் தரையில் படுத்துக் கொண்டு மோட்டுவளையை நோக்கிக் கொண்டு தீவிர சிந்தனையில் ஈடுபட்டிருந்தான். அவ்வப்பொழுது அவன் கை மடியில் இருந்த பூநாகக்கத்தியைத் தடவிக் கொண்டிருந்தது. பஞ்சணையில் படுத்த இளவரசன் அவன் கையைச் சற்று அழுத்தி, ''விபரீத சிந்தனை எதிலும் இறங்கவேண்டாம்'' என்று சைகை மூலம் தெரிவிக்கவே சீனன் கண்களை மூடினான். பஞ்சணையில் படுத்தும் மனத்திலிருந்த பல போராட்டங்களால் இளவரசன் உறக்கம் பிடிக்காமல் ஏதேதோ யோசனையில் திளைத்தான். தனது தந்தை காஞ்சியைத் துறந்து வெளியில் படை திரட்டி கங்க மன்னனை எதிர்க்க முயன்று கொண்டிருந்த அந்தச் சமயத்தில், தான் அனாதையாக அவருக்கு உதவச் சக்தியின்றிக் கடிகையின் அறையில் படுத்திருப்பது எத்தனை பேடித்தனம் என்று எண்ணினான். தவிர, தன் தந்தை கங்கனுடன் செய்யும் போரில் தோல்வியடைவது திண்ணம் என்று ஆசார்ய தண்டி சொன்னதும் அவன்நெஞ்சில் உதயமாகவே ஆசார்ய ருக்கும் அந்தப் போர் விஷயமாக ஏதோ தெரிந்திருக்கிறதென்ற முடிவுக்கும் வந்தான். இத்தகைய நிலையிலிருந்து தந்தையைக் காக்க வழியென்னவென்று சிந்தனையில் இறங்கியும் வழியேதும் காணாததால் துன்பப் பெருமூச்சும் விட்டான்.



இத்தனைக்கும் ஸ்ரீராமபுண்யவல்லபர் எதையும் கவனிக்காமல் ஓலை நறுக்குகளை எழுதி முடித்தார். பிறகு பஞ்சணையில் தலைமாட்டிலிருந்த தலையணையின் அடியிலிருந்து ஒரு வெள்ளிக் குழலை எடுத்து ஓலை நறுக்குகளைச் சுவடியாக மஞ்சள் நூலால் கட்டி, குழலுக்குள் திணித்து, குழலை மூடவும் செய்தார். பிறகு இரண்டு இலச்சினைகளை எடுத்து தமது முத்திரைகளையும் குழல் மூடியிருந்த இடத்தில் பொறித்தார். இத்தனையும் செய்து முடித்த பிறகு, 'நீ இனி வரலாம்'' என்று குரல் கொடுத்தார்.

அந்த இரண்டாம் ஜாமத்தில் யாரை அழைக்கிறார் ஸ்ரீராமபுண்ய வல்லபர் என்பதை அறியக் கண்களை விழித்தான் பல்லவ இளவல். ஆனால் சீனனோ கண்களை விழித்ததன்றித் துள்ளியும் உட்கார்ந் தான். மந்திரியின் குரலைக்கேட்டு உள்ளே நுழைந்தவனைக் கண்டதும் பல்லவ இளவல், யாங்சின் இருவருக்குமே பேரதிர்ச்சி ஏற்பட்டது.

மந்திரியின் அழைப்பை ஏற்று உள்ளே நுழைந்தவன் சாளுக்கிய உபதளபதி வீரபாகுதான்.

அவனைக் கண்டதும் பேரதிர்ச்சி ஏற்பட்டது அவர்களுக்கு மட்டுமல்ல. வீரபாகுவும் உள்ளிருந்தவர்களைக் கண்டதும் கல்லாய்ச் சமைந்து நின்றான். அவன் பெருமீசை அடுத்த வினாடி பயங்கரமாக அசைத்தது. ''இவர்கள்...இவர்கள்...'' என்று ஏதோ உளறவும் செய்தான் அமைச்சரை நோக்கி.

ஸ்ரீராமபுண்யவல்லபவர் புன்முறுவல் கொண்டார். ''உன் நண்பர்கள்'' என்று இகழ்ச்சியுடன் கூறவும் செய்தார் வீரபாகுவை நோக்கி.

இல்லை இல்லை. இவர்கள் என் நண்பர்களல்ல. இவர்கள் என்னை...'' இதற்கு மேல் பேச முடியாமல் திணறினான் வீரபாகு.

அவன் வாசகத்தை ஸ்ரீராமபுண்யவல்லபரே பூர்த்தி செய்தார், ''உன்னை வலையில் கட்டிப் போட்டார்கள். பிறகு கடலில் இழுத்துவந்தார்கள். உன் உதவியால் காஞ்சி மாநகருக்குள்ளும் நுழைந்தார்கள்'' என்று.

இதைக் கேட்ட யாங்சின் பழையபடி சங்சங் என்று ஒலி கிளப்பினான். அதனால் வெகுண்ட வீரபாகு, ''சுவாமி! இவர்களிரு வரையும் சிறை செய்ய அனுமதியளிக்க வேண்டும்'' என்று ஆத்திரத்துடன் விண்ணப்பித்துக் கொண்டான்.

''உளறாதே வீரபாகு. நீ எப்பொழுதும் வாயால் கெட்டவன். கடிகைக்குள் யாரையும் சிறை பிடிக்கும் வழக்கம் கிடையாது உன்னை நான் அழைத்ததும் அதற்காக அல்ல''. என்று கடிந்து கொண் ஸ்ரீராமபுண்யவல்லபர் தன் கையிலிருந்த குழலை வீரபாகுவிடம் நீட்டி, ''உபதளபதி! இந்தக் குழலில் முக்கிய செய்தி அடங்கி யிருக்கிறது. இதை எடுத்துக் கொண்டு இப்பொழுதே கங்க நாடுக்குக் கிளம்பு. கங்க மன்னன் பூவிக்ரமனிடம் இதைப் பத்திரமாகச் சேர்த்துவிடு'' என்று உத்தரவிட்டு அவன் வெளியே செல்லா மென்பதற்கு அறிகுறியாகக் கையையும் கதவை நோக்கிச் சுட்டிக் காட்டினார். வீரபாகு அமைச்சருக்குத் தலைவணங்கிவிட்டு இளவரசனையும் சீனனையும் ஒரு முறை சீற்றத்துடன் நோக்கிவிட்டு வெளியேறினான்.

வீரபாகு சீற்றத்துடன் நோக்கிவிட்டுச் சென்றதும் ஸ்ரீராமபுண்யவல்லபர், ''இனி நாம் மூவரும் உறங்கலாம். உறங்கு முன்பு உனக்கு ஆறுதல் தரக்கூடிய விஷயமொன்றும் சொல்கிறேன். கேட்டுக்கொள்'' என்று ராஜசிம்மனை நோக்கிக் கூறினார்.

''என்ன அது?'' ராஜசிம்மன் மந்திரியின் அடுத்த சொல்லம்பு எப்படியிருக்குமோ என்ற அச்சத்தில் வினவினான்.

''நீ நினைக்கிறபடி உன் தந்தை இப்பொழுது நிராதரவாயில்லை'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

''யார் ஆதரவோ?'' என்று கேட்டான் ராஜசிம்மன்.

''இன்று பல்லவர் படைத்தலைவன் பலபத்ரவர்மனும் ஒற்றன் இந்திரவர்மனும் சிறையிலிருந்து தப்பிவிட்டார்கள்'' என்றார்.

இதைக் கேட்ட ராஜசிம்ம பல்லவன் பஞ்சணையில் துள்ளி உட்கார்ந்தான். ''உண்மையாகவா?'' என்றும் வினவினான்.

''ஸ்ரீராமபுண்யவல்லபரின் வாயில் இதுவரை பெய் வந்ததில்லை'' என்றார் போர் அமைதி மந்திரி.

இதைக் கேட்டதும் சற்று ஆசுவாசத்துடன் பஞ்சணையில் படுத்து நிம்மதியாகக் கண்களை மூடினான் பல்லவ இளவல். ஆனால் இத்தனையிலும் தன் தந்தையை முறியடிக்க ஸ்ரீராம புண்யவல்லபர் மிகத் தந்திரமான திட்டத்தைத் தயாரித்து விட்டார் என்பதை அவன் உணரவில்லை. பலபத்ரவர்மனையும் இந்திரவர்மனையம் சிறையி லிருந்த தப்பவிட்டதே ஸ்ரீராமபுண்யவல்லபர் தானென்பதையும் அவன் உணரப் பிரமேயமில்லாது போயிற்று. ஆகவே அவன் மனம் நிம்மதியுற்றது. நிம்மதியுற்ற மனத்தில் மைவிழியும் ரங்கபதாகா தேவியும் மெள்ளத் தலை நீட்டலாயினர்.

# 40. பஞ்சணைப் பைங்கிளிகள்

கடிகையின் மாபெரும் அறையில் பஞ்சணையில் படுத்து நிம்மதியடைந்த நேரத்தில் பல்லவ இளவலின் இதயத்தில் தலை நீட்டிய பெருவிழி மைவிழிச் செல்வியும், கார்மேகக் கண்ணழகி ரங்கபதாகாதேவியும் அவன் நிம்மதியை அரை விநாடியில் அழித்து விட்டதால், அவன் அவர்கள் அழகுகளில் திளைத்து உறக்கத்தை அறவே இழந்தான். அந்த இருபெண்மணிகளுடன் சில தினங்களுக் குள்ளாகத் தனக்கு ஏற்பட்டுவிட்ட பாச பந்தங்களை எண்ணி வியந்தான் அவன் பல விநாடிகள். அவர்களுடைய இருவகைப்பட்ட அங்கலாவண்யங்களும் அவன் மனத்தைச் சுற்றியே வந்து கொண்டிருந்தபடியால் அவன் உறக்கமிழந்து பஞ்சணையில் கிடந்து அவர்களைப் பற்றிய நினைப்பிலேயே திளைத்துக் கிடந்தான்.

அவன் மட்டுமா உறங்கவில்லை? அவன் மட்டுமா சிந்தனை அலைகளில் புரண்டு கிடந்தான்? தண்டி மகாகவியின் மாளிகையில் அதே சுரங்கத்தின் மற்றொரு கோடியில் ரங்கபதாகாதேவியின் ஒரே பஞ்சணையில் அக்கம்பக்கத்தில் படுத்துக் கிடந்த இரு பைங்கிளிகளும் உறக்கம் பிடிக்காமலேயே திணறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இருபெண்கள் சேர்ந்துவிட்டதால் பல்லவ இளவலுக்கு இல்லாத ஒரு தனி சௌகரியம் அவர்களுக்கிருந்தது. கடிகையின் அறையில் இளவரசனுடன் படுத்திருந்தவர்களுடன் பேச அவனுக்கு எந்தச் சந்தர்ப்பமுமில்லாமல் போயிற்று. ஆகவே அவன் தன்னந்தனியே எண்ணச்சுழல்களில் திண்டாடித் தத்தளித்துக் கொண்டிருந்தான். ஆனால் சித்திரங்களும் சிற்பங்களும் நிரம்பிய ஒரு வெண்கலப் பாவையின் மங்கலான விளக்கொளி அந்த அறையைச் சொர்க்க லோகமாக அடிக்க, அந்தச் சொர்க்கத்தில் அப்சரப் பெண்கள் போல் அக்கம் பக்கத்தில் படுத்திருந்த இரு பெண்களும் நீண்ட மௌனத்திற்குப் பிறகே பேச ஆரம்பித்தனர். பேச்சை மெள்ள மைவிழியே ஆரம்பித்தாள். 'அக்கா'' என்று.

இதைக் கேட்ட ரங்கபதாகாதேவி லேசாக நகைத்தாள். ''ஏன் மைவிழி? இரண்டாம் ஜாமம் பாதியாகிவிட்டது. உனக்கு இன்னும் உறக்கம் பிடிக்கவில்லையா?'' என்று வினவினாள் நகைப்பின் ஊடே.

மைவிழி காது கேட்கச் சிரிக்கவில்லை. புன்முறுவல் மட்டும் கொண்டாள். ''ஆமாம் அக்கா! உங்களுக்கு மட்டும் உறக்கம் பிடித்து விட்டதா?'' என்று கேட்டாள். அவள் குரலில் கேலி சொட்டியது.

அந்தக் கேலியைக் கவனிக்கவே செய்தாள் ரங்கபதாகாதேவி. இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல், ''மைவிழி! நீ உன் பேச்சு முறையைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும்'' என்று சற்றுக் கடிந்த குரலில் கூறினாள்.

மைவிழியின் மனத்தில் அச்சம் உதயமாயிற்று. ''நான் அப்படி என்ன சொல்லிவிட்டேன்? மரியாதைக் குறைவாகப் பேசி விட்டேனா?'' என்று வினவினாள் அச்சம் குரலில் தொனிக்க.

பதிலுக்கு ரங்கபதாகாதேவி தன் ஒரு கையை எடுத்து மைவிழியின் உடலுக்குக் குறுக்கே போட்டு, ''அதல்ல மைவிழி! நீ எனக்கு அதிக மரியாதை காட்டுகிறாய். நீங்கள் போங்கள் இதெல்லாம் இனி கூடாது. தெரிகிறதா'' என்று சொன்னாள்.

தேவியின் மனநிலையைப் புரிந்து கொண்ட மைவிழி ''அக்கா! நீங்கள்...'' என்று ஏதோ துவங்கவே ரங்கபதாகாதேவியின் குரல், ''ஊம்'' என்று சற்று அதட்டலாகக் குறுக்கே பாய்ந்தது.

''அக்கா. நீ!...'' சற்று மாற்றிப் பேசினாள் மைவிழி.

''அப்படி வா வழிக்கு.'' இம்முறை தேவியின் பதிலில் மகிழ்ச்சி ஒலித்தது.

''சரி அக்கா! எனக்கு மட்டும் உறக்கம் பிடிக்கவில்லையா என்று கேட்டாயே. இரண்டாம் ஜாமம் தாண்டி விட்டதாகக் கூறினாயே. உனக்கு மட்டும் இரண்டாம் ஜாமம் தாண்ட வில்லையா?'' என்று கேட்ட மைவிழி களுக்கென்று நகைத்தாள்.

''எனக்கும்தான் தாண்டிவிட்டது.''

''பின் ஏன் உறங்கவில்லை?''

''எதைப் பற்றியோ யோசித்துக் கொண்டிருந்தேன்.''

''எதைப்பற்றியோ என்று சொல்லாதே. யாரைப் பற்றியோ என்று சொல்.''

''யாரைப் பற்றியாம்?''

''இளவரசரைப் பற்றித்தான்.''

''மைவிழி! நீ ஆனாலும் பொல்லாதவள்.''

''நாம் இருவருமே பொல்லாதவர்கள்தான்.''

''எப்படி?''

''இருவரும் ஒருவரைப் பற்றித்தானே யோசித்துக் கொண்டிருக்கிறோம்.''



மைவிழியின் இந்தப் பதிலைக் கேட்டதும் ரங்கபதாகாதேவி தன் அழகிய இடது காலைத் தூக்கி மெள்ள மைவிழியின் காலின் மேல் போட்டாள். அந்தக் காலின் கட்டைவிரலைக் கமலப்பாத விரல்கள் கௌவிக் கொண்டன. அந்த நிலையில் கேட்டாள் மைவிழி, ''அக்கா! நான் அவரல்லவே'' என்று.

''நீ அவரென்று யார் சொன்னது?'' சர்வ சாதாரணமாகத்தான் கேட்டாள் ரங்கபதாகாதேவி.

''இல்லாவிட்டால் உன் காலை என்மீது எதற்காகப் போடுகிறாய்?'' என்றாள் மைவிழி.

''அப்படியானால் மைவிழி! நானும் அவரல்லவே.''

''அவரென்று யார் சொன்னது?''

''சொல்லவில்லை. செய்கிறாய்.''

''என்ன செய்து விட்டேனாம்?''

''என் கட்டை விரலை எதற்காக அப்படி நொறுங்க நெறிக்கிறாய்?''

இதைக் கேட்டதும் மைவிழி ரங்கபதாகாதேவியின் உடலுடன் சற்று உராய்ந்தே படுத்தாள்.

''புரிகிறது, புரிகிறது'' என்றாள் தேவி.

''என்ன புரிகிறதோ?''

''நீ அவரை நினைத்துக் கொண்டு விட்டாய்.''

''நீ மட்டும்!''

''நினைத்துக் கொண்டிருக்கிறேன் மைவிழி. ஆனால்...'' என்று இழுத்தாள் ரங்கபதாகாதேவி.

''ஆனால்? ஏன் நிறுத்திவிட்டாய் அக்கா? முழுவதையுந்தான் சொல்லேன்''

''ஒன்றுமில்லை மைவிழி. அவரிடம் உனக்குள்ள தொடர்பு நீண்ட காலமுடையது. ஆகையால் உங்கள் உறவு சற்று அதிகமாகத் தானே இருக்கும்.

''இல்லை அக்கா! உன் சமர்த்தில் தூசி அளவுகூட எனக்குக் கிடையாது.

''ஏன்?''

''நான் ஓராண்டு காலம் மல்லைக் கடற்கரைக்கு அவரைப் பார்ப்பதற்காகவே நடந்தேன். அவர் என்னைத் திரும்பிக்கூடப்

பார்க்கவில்லை. சாளுக்கியர் படை வந்ததும் என்னைக் காக்க ஓடி வந்தார். ஆனால் நீ அவரை ஒரே நாளில் வளைத்துவிட்டாய்.''

இதற்கு ரங்கபதாகாதேவி உடனடியாகப் பதில் ஏதும் சொல்லவில்லை. சற்று சிந்தனைக்குப் பிறகு கேட்டாள், ''மைவிழி! திரும்பிக்கூட ஓராண்டு உன்னைப் பார்க்காதவர் உன்னை எப்படி அடையாளம் கண்டு பிடித்தார்? உன்னைக் காக்க எப்படி ஓடி வந்தார்?'' என்று.

மைவிழி சிந்தனையில் இறங்கினாள். ''அப்படியானால் அவர் என்னை ஓராண்டு காலம் கவனித்திருப்பாரா?'' என்று வினவினாள் மகிழ்ச்சி ததும்பிய குரலில்.

''ஆமாம். சந்தேகம் என்ன?''

''எப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்கிறாய்?''

''நாம் பார்க்காதபோது ஆண்பிள்ளைகள் நம்மைப் பார்ப்பார்கள். நாம் பார்க்கிறோமென்று தெரிந்தால் பாராதது போல் பாசாங்கு செய்வார்கள். நாம் மட்டும் என்ன செய்கிறோம். அதேதானே?''

''ஆண்கள் மிகவும் கெட்டவர்கள்.''

''ஆமாம், அதற்காக அவர்களை விட்டுவிடுகிறோமா?''

''அவர்கள் மட்டும் நம்மை விட்டுவிடுகிறார்களா?''

இதைக் கேட்ட ரங்கபதாகாதேவி மீண்டும் நகைத்தாள். ''அதனால்தான் உன்னை விடவில்லை அவர். எதிரிகளிடமிருந்து காப்பாற்ற உன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடினார் பாறை மறைவுக்கு. அங்கு...'' என்று விஷமமாக வாசகத்தை முடிக்காமல் விட்டாள் ரங்கபதாகாதேவி.

மைவிழியின் வியப்பு மிதமிஞ்சியது. ''அங்கு என்று நிறுத்தி விட்டாயே?'' என்று வினவினாள்.

''அங்கு உன்னை எதிரிகளிடம் காட்டிக் கொடுக்காதிருக்க அணைத்து உட்கார்ந்திருப்பார்'' என்றாள் ரங்கபதாகாதேவி. ''இப்படித்தானே?'' என்றும் கூறித் தன் கையொன்றை மைவிழியின் இடையில் சுழல விட்டாள்.

மைவிழிக்கு அந்தப் பழைய கட்டம் நினைவுக்கு வரவே அவள் நாணத்தின் வசப்பட்டாள். ''அக்கா! நீ ரொம்ப மோசம்'' என்றும் சொன்னாள் நாணத்தின் ஊடே.

ரங்கபதாகாதேவி மேலும் விடவில்லை ''ஆமாம், நீயும் அவரும் கடல் வழியாகத் தப்பினீர்களாமே?'' என்று வினவினாள்.



''ஆம் அக்கா! வேறு வழியில்லை. எங்கும் சாளுக்கிய வீரர்கள் பாதுகாப்பு இருந்தது.''

''அதுசரி காவலர் கண்ணில் படாதிருக்க என்ன செய்தீர்கள்?''

''கடல் நீரில் மூழ்கி நீந்தினோம்.''

ரங்கபதாகாதேவி சற்றுப் பெரிதாகவே நகைத்தாள். அதைக் கண்ட மைவிழி, ''ஏன் நகைக்கிறாய் அக்கா?'' என்று வினவினாள் ஏதும் புரியாமல்.

''கடலில் மூழ்கியிருந்தபோது சாமான்யமாகவா நீந்தியிருப் பீர்கள்?'' என்று வினவினாள் ரங்கபதாகாதேவி.

''வேறு எப்படி நீந்தியிருப்போம்?'' ஏதும் புரியாதது போல் பாசாங்கு செய்தாள் மைவிழி.

''கடலாடு காதை நடந்திருக்கும்'' என்று மெல்லக் காதல் கனிந்த குரலில் சொன்னாள் ரங்கபதாகாதேவி.

பிரமித்துப் போனாள் மைவிழி. கங்கன் மகள் வடமொழிக் காவியம் படித்தவள் என்பது தெரியும் அவளுக்கு. ஆனால் சிலப்பதிகாரத்தைத் தொடுமளவுக்குத் தமிழில் பரிச்சயமிருந்ததைக் கண்டு பெருவியப்படைந்தாள். அந்த வியப்புடன் கேட்டாள், ''அக்கா, உனக்குத் தமிழ்க் காப்பியங்களிலும் பரிச்சயமுண்டா?'' என்று.

''அதிகப் பரிச்சயமில்லை. சுமாராக உண்டு. ஆனால் ஊகம் அதிகமுண்டு.''

''எதைப் பற்றி?''

''கடல் நீரடியில் நீங்கள் எப்படி நீந்தியிருப்பீர்களென்பதைப் பற்றி.''

''எப்படியாம்?''

சில வேளைகளில் நெருங்கி நீந்தியிருப்பீர்கள். சில வேளை களில் உன்னைக் காக்க இடையைப் பிடித்துக் கொண்டு நீந்தி யிருப்பார். சில வேளைகளில் வேண்டாத இடங்களிலும் கைபடும். கால் படும். பெண்களை வளைக்க ஆண் மகனுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்?''

இதைக் கேட்ட மைவிழியின் முகம் வெட்கத்தால் பெரிதும் சிவந்தது. ''அக்கா! ஊகம் ஆனாலும் அதிகம்'' என்று தேவியைத் ன் கையால் சற்றுப் பிடித்துத் தள்ளினாள்.

ரங்கபதாகா தேவி வேண்டுமென்றே நன்றாக மைவிழியுடன் நெருங்கிப் படுத்தாள். ''மைவிழி! என்னைப் பிடித்துத் தள்ளுகிறாயே.

அவராயிருந்தால் தள்ளுவாயா?'' என்று வினவவும் செய்தாள் அவளை அணைத்த வண்ணம்.

மைவிழி அந்த அன்பு அணைப்பை ஏற்றுக் கொள்ளவே செய்தாள். ''இருந்தாலும் அக்கா உனக்கிருக்கிற சாமர்த்தியம் எனக்கில்லை'' என்று கூறிப் புன்முறுவல் கோட்டினாள்.

மங்கலான பாவை விளக்கு வெளிச்சத்தில் அந்தப் புன்முறுவல் ரங்கபதாகாதேவிக்குத் தெரியவில்லையானாலும் மைவிழி தன்னைப் பற்றி உள்ளூர நகைக்கிறாளென்பதைப் புரிந்து கொண்டதால், ''எனக்கென்னடி அப்படி அதிகப்படி சாமர்த்தியம்?'' என்று வினவினாள் மைவிழியின் காதுக்கருகில் உதடுகளை வைத்து.

''அக்கா...''

''என்னடி?''

''சொல்லட்டுமா?''

''சொல்லேன்.''

''எனக்காவது அவருடன் விளையாட...''

''விளையாட?''

''கடல் வேண்டியிருந்தது. நீச்சல் தெரிய வேண்டியிருந்தது உனக்கு அந்தக் கஷ்டமெல்லாம் இல்லையே?''

''வேறு என்ன இருக்கிறது எனக்கு?''

''கடலலைகளைவிட வேகமானது இருக்கிறது.''

''எதுவாம்?''

''உணர்ச்சிகளைத் தூண்டும் சாதனம்.''

''என்ன சாதனமோ?''

''காவ்ய சாதனம். நீதான் அவருக்கு இலக்கணம் சொல்லிக் கொடுத்தாயே!''

இதைக் கேட்ட ரங்கபதாகாதேவி உள்ளூர விஷயத்தைப் புரிந்துகொண்டாலும் புரியாதது போல், ''என்ன, அவருக்கு நான் இலக்கணம் கற்றுக் கொடுத்தேனா? அவருக்குத் தெரியாத இலக்கணம் எனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்,

''அவருக்குத் தெரிந்த இலக்கணம் வேறு. உனக்குத் தெரிந்த இலக்கணம் வேறு'' என்றாள் மைவிழி.

''புதிர் போடுகிறாய் மைவிழி.''



''புதிர் ஒன்றுமில்லை. நான்தான் அவர் அறையில் உங்கள் இருவர் நிலையையும் நேரில் கண்டேனே?''

''அதுவா?''

''ஆமாம், அதுதான். உன் இடையை அவர் பிடித்து இலக்கணத் திற்கு அளவெடுத்துக் கொண்டிருந்தாரே?''

ரங்கபதாகாதேவியின் முகம் வெட்கத்தால் மிக அதிகமாகச் சிவந்தது. அந்த நிகழ்ச்சியை அப்பொழுது நினைத்துபோதுகூட அவள் உணர்ச்சிகள் பெரிதும் இரைந்து உள்ளூர சப்தித்தன. ''அது ஏதோ சந்தர்ப்பத்தால் ஏற்பட்டது. ஆனால் மைவிழி, உன் இடையின் அழகு எனக்கு எங்கிருக்கிறது?'' என்று கூறி அவள் இடைச்சேலையை நெகிழ்த்தி இடையைப் பிடித்துக் காட்டினாள், ''அது மட்டுமல்லடி! உன் அழகெல்லாம் அளவோடு அமைந்திருக்கிறது. பார்ப்பதற்கு முல்லைக் கொடிபோல் இருக்கிறாய், வேண்டிய இடங்கள் தேவைக்கு மேல்படாமல் அமைந்திருக்கின்றன. நானோ உன்னை விடப் பருமன்...'' என்று சுட்டிக் காட்டினாள் ரங்கபதாகாதேவி.

''அக்கா! என்னை ஏமாற்ற முயலாதே, உன் அழகு ஒரே நாளில் அவரைக் கவர்ந்த அழகு. அதுவும் நான் முல்லைக்கொடியென்றால் நீ செழித்த செந்தாமரை. அது மட்டும் பிடிக்காதோ ஆண் மகனுக்கு? அவர் அந்த அறையில் உன்னை உற்றுப் பார்த்த பார்வை இன்னும் என் கண் முன்னால் நிற்கிறது அக்கா!'' என்று குறிப்பிட்டாள் மைவிழி,

''அப்படியானால் நீ வாயிற்படியில் தோன்றியதும் ஏன் அப்படி என்னைச் சட்டென்று உதறினார்? ஆந்தை போல் உன்னைப் பார்த்து விழித்தார்?''

''அக்கா! இப்பொழுதே சண்டைக்கு வருகிறாயே. நாம் சக்களத்திகளானால் என்ன செய்வாய்?''

''இப்பொழுதே சக்களத்திகள் தானே?''

''எப்படி இன்னும் திருமணமாகவில்லையே?''

''மனத்தால் வரித்து விட்டால் திருமணம் ஆன மாதிரி தானே?''

''அதுதான் சண்டைக்கு வருகிறாயா?''

ரங்கபதாகாதேவி அவளை இறுக அணைத்துக் கெண்டாள். அரச மகள் என்பதைக் காண்பிக்கவும் செய்தாள். ''மைவிழி! நாமிருவரும் அவரை நேசிக்கிறோம். அந்த நேசம் நமக்குள் பொறாமையை வளர்ப்பதைவிடப் பாசத்தை வளர்க்கும். நம்மிருவர் பாசமும் காதலும் இளவரசன் பேரரசனாகத் திகழக் கை கொடுக்கும். நாம் இருவருமே அவரிடம் சிற்பம் கற்போம். வண்ணங்கள் குழைக்கக் கற்றுக்

கொள்வோம். அவர் கற்பனையில் முழுவதும் உருவெடுத்திருக்கும் கைலாசநாதர் கோவிலும் கடல் மல்லையின் அரங்கநாதன் கோயிலும் நம் இருவர் துணையாலும் எழுந்து வரலாற்றில் நிரந்தர இடம் பெறும் பயப்படாதே. நாம் இருவரும் அவரைச் சரியாகப் பங்கு போட்டுக் கொள்வோம். காஞ்சிக்குப் பெரிய பிற்காலமிருக்கிறது என்று நாம் நம்புகிறேன். விக்கிரமாதித்த மகாராஜாவின் ஆட்சி இங்கு நீடிக்காதென்று என் மனத்தில் ஏதோ சொல்கிறது'' என்று கனவில் பேசுவதுபோல் பேசினாள் ரங்கபதாகாதேவி.

பிறகு இரு பெண்களும் ஒருவரையொருவர் இறுகத்தழுவிப் படுத்துக் கொண்டனர். உதயகாலம் நெருங்க நெருங்க அவர்கள் பங்கயக் கண்களும் மூடின.

அன்று அவ்விருவரும் வைகறைத் துயிலெழவில்லை. பஞ்சணைப் பைங்கிளிகளாகவே படுத்துக் கிடந்தனர்.

மறுநாட் காலையில் அம்பிகையின் பூஜைக்குச் சென்ற மகாகவி, தேவியின் அறை மூடிக்கிடப்பதைக் கண்டார். அதைக் கண்டு சற்றுப் புன்முறுவலுடனும் தீர்க்காலோசனையுடனும் பூஜை அறைக்குச் சென்றார். பூஜை அறையில் சீடர்கள் சகலத்தையும் தயார் செய்து வைத்திருந்தார்கள். காவ்யாதர்சம் மாத்திரம் சிக்குப் பலகையில் இருந்தது. அதைப் படிக்கவேண்டிய கங்கன் மகள் மட்டும் அதன் எதிரில் இல்லை. அந்த இடத்தை மகாகவி தண்டி ஒரு விநாடி பார்த்தார். பிறகு அம்பிகையின் பூஜையில் இறங்கி, கண்களை மூடி தியான சுலோகங்களை முணுமுணுக்கலானார். ''பல்லவனை எப்படியும் நீ காக்கவேண்டு தேவி'' என்று ஒரு பிரார்த்தனையும் செய்து கொண்டார். அதே சமயத்தில் பல்லவனை முறியடிக்கும் பெரிய திட்டம் கடிகையில் தயாராகிவிட்டதைத் தண்டி மகாகவியால் அறிய முடியவில்லை. கடிகைக்குச் சென்ற பின் அதை அறிந்து கொண்டார். அறிந்ததும் பேரதிர்ச்சிக்குள்ளானார். 'ஸ்ரீராம புண்யவல்லபரே! உமக்குத்தான் ராஜதந்திரம் தெரியுமா? இந்தத் தண்டிக்கும் சிறிது தெரியும். பொறுத்துப்பாரும்' என்று உள்ளூரக் கறுவிக் கொண்டார் மகாகவி. அதற்கான முயற்சிகளை வெகு துரிதமாகவும் லாவகமாகவும் எடுக்கவும் தொடங்கினார்.

இதை எதையுமே அறியாத பஞ்சணைப் பைங்கிளிகள் சூரியோதயத்துக்குப் பிறகு எழுந்தன. ஒன்றை ஒன்று நோக்கித் திருட்டு விழி விழித்தன. பிறகு அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நீராடித் திலகமிட்டுப் பூஜை அறைக்குள் சென்றன.



பூஜை முடிந்துவிட்டதைக் கண்டு இருவரும் பிரமை பிடித்துச் சிலவிநாடிகள் நின்றனர். அன்று தேவி காவ்யாதர்சம் படிக்கவில்லை. மைவிழியுடன் அம்பிகையைத் தெண்டனிட்டு அவள் பாத மலர் இரண்டை எடுத்து மைவிழி தலையிலும் தன் தலையிலும் செருகிக் கொண்டாள். பிறகு, ''புறப்படு மைவிழி'' என்றும் அழைத்தாள்.

''எங்கு அக்கா?'' என்று வினவினாள் மைவிழி.

''கடிகைக்குத்தான் கிளம்பு'' என்று உத்தரவிட்ட ரங்கபதாகாதேவி ஆசார்யரின் சீடர்களை அழைத்துச் சிவிகையைச் சித்தப்படுத்தும்படி கட்டளையிட்டாள். அடுத்த சில நிமிடங்களில் மைவிழியையும் கங்கன் மகளையும் தாங்கிய சிவிகை கடிகையை நோக்கிக் கடுகிச் சென்றது.

# 41. மேதைகளின் மோதல்

**ப**ல்லவர்களின் பல்கலைக் கழகமான காஞ்சியின் கடிகா என்ற கடிகை பஞ்ச உஷத் காலத்தில் விழித்து விட்டதன் விளைவாக மகாகவி தண்டியின் பல்லக்கு அங்கு வந்து சேருவதற்கு முன்பே வேத கோஷங்கள் வானைப் பிளந்து கொண்டிருந்தன. சுமார் கால்காத அகலமும் நீளமும் கொண்ட கடிகையின் பெரும்பிரதேசத்தில் ரிக், யஜுர், ஸாம, அதர்வண வேதங்களுக்காகத் தனித் தனியாக நிர்மாணிக்கப்பட்ட பெரும் ஸ்தூபிகள் கொண்ட மண்டபங்கள் கூடியவரையில் தூர தூரமாகவே அமைக்கப்பட்டிருந்தாலும், அந்த நான்கு வேத அத்யயன சீடர்களின் குழாம் எழுப்பிய வேத கோஷங்களில் ஏதோ ஓர் ஒற்றுமை ஏற்பட்டு விண்ணை ஊடுருவிச் சென்ற ஒரு ஒலி பிரணவமாகவே சப்தித்தது, 'ஓங்காரப் பிரணவோ வேதா': ஓங்காரத்திலிருந்து வேதங்கள் பிறந்தன என்ற தத்துவத்துக்குச் சான்று கூறியது. வேதாத்யயனங்களுக்கு மட்டுமின்றி, பல்லவர்களின் தமிழ்ப் பற்றின் விளைவாக அதுவரை தோன்றிய தமிழ்மறைகளுக் கான மண்டபங்களிலிருந்தும் தீஞ்சுவைத்தமிழ் மதுர ஓசை கிளம்பி இன்னிசைக்கும் தீந்தமிழுக்கும் மாறுபாடு அதிகமில்லையென்பதை நிரூபித்ததால், கடிகை முழுதும் வேதநாதமும் தமிழின்பமும் பரவி, சொர்க்கபோகத்துக்கும் மேலான பேரின்பத்தைச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தது கடிகையின் நடுவிலிருந்த சர்வ தீர்த்தம் என்ற அலைமோதும் பெருங்குளமொன்று அங்குபயிலும் மாணவர்ஸ்நான பானாதிகளுக்கும் நித்தியக்கடன்களுக்கும் உபயோகப்பட்டு வந்தாலும், சூரிய கிரணங்களில் அதன் அலைகள் மின்னியது, வேத ஒலிகளுக்கு ஒளியும் உண்டென்பதை நிரூபித்து, ஆண்டவன் ஒளிமயம்

ஒலிமயம் அனைத்தும் தான் என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது.

கடிகையின் நாற்பெரு வாயில்களில் கிழக்குப் புறவாயிலில் மட்டுமே வித்யார்த்திகளும், மன்னனும், மகாகவிகளும் நுழைய அனுமதியிருந்ததால் அதைக் காவல் புரிந்து நின்ற புரவி வீரர்கள் கைகளில் வேல்களையும் வாட்களையும் தாங்கி நின்றனர்.

தண்டி மகாகவி நுழைந்த சமயத்தில் மாணவர்கள் கும்பல் அதிகமில்லாதிருந்ததால் அவரது பல்லக்கு அதிகத் தடங்கலேது மின்றி உள்ளே நுழைந்தாலும் கடிகையின் தலைவரும் பல்லவ மகாராஜாவின் ஆசார்யருமான அவர் நுழைந்ததும் காவல் வீரர்கள் வாட்களையும் வேல்களையும் தாழ்த்தி மரியாதை செலுத்தினர். அவர் பல்லக்கு முன்மண்டபத்தில் இறக்கப்படுவதற்கு முன்பாகவே ஆசார்யர் வரவைக் குறிக்கத் தாரை வாத்தியங்கள் முழங்கின. கழுத்தில் மகர கண்டியுடனும், கையில் அரசனளித்த பெரு வைடூரிய கண்டியுடனும் பெரும் பட்டாடை தோளில் தவழ அரச தோரணை யில் இறங்கிய மகாகவியை இரு வீரர்கள் ஓடிவந்து கைலாகு கொடுத்து இறக்கினர். அவர் பாதக்குறடுகள் தரையில் படு முன்பாக ஒரு பட்டுத் தலையணை மரியாதைக்காக வைக்கப்பட்டது.

சாதாரண நாளாயிருந்தால் அத்தனை ராஜோபசாரத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடிய மகாகவி அன்று கைலாகை லேசாக ஏற்று விலக்கினார், தலையணையில் கால் வைக்காமலும் இறங்கித் தமது கையிலிருந்த நவரத்னப் பிடியுள்ள தடியை ஊன்றிக் கொண்டு கடிகையின் பிரதான மண்டபத்தை நோக்கி நடக்கலானார். சிறிது தூரம் அவர் நடப்பதற்குள்ளாகவே அவர் எதிரே வந்துவிட்ட ராஜசிம்ம பல்லவனும் சீனனும் தரையில் மண்டியிட்டு அவர் பாதங்களைத் தலையால் தொட்டு வணங்கினர்.

தண்டி மகாகவி ராஜசிம்மன் தலையில் கை வைத்து ஆசீர் வதித்தார். ''வெற்றிவாகை நீ சீக்கிரம் சூடவேண்டும்'' என்றும் சொன்னார் குழையும் குரலில். பிறகு, ''வா என்னுடன்'', என்று ஆணையிட்டு முன்னால் நடந்தார். அப்பொழுது நேரம் போதிய அளவு ஏறிவிட்டதன் விளைவாக ஆங்காங்கு வேதபாடங்களை முடித்தக் கொண்டு வேறு வகுப்புகளுக்குச் சென்று கொண்டிருந்த மாணவர்கள் கூட்டம் பலமாக வந்து மகாகவியைக் கண்டு கைக்கூப்பியும் தலை வணங்கியும் பயத்தால் ஒதுங்கியும் சென்று கொண்டிருந்தது. தண்டி அவர்களுக்கெல்லாம் சிரக்கம்பத்திலேயே பதில் கூறியும் ஆசீர்வதித்தும் தீர்க்கா லோசனையுடன் தமது ஆஸ்தான அறையை



நோக்கிச் சென்றார், பல்லவனும் சீனனும் பின்தொடர கடிகையின் பிரதான கட்டிடத்திலிருந்த அவர் அறையே காவியமா யிருந்தது. அங்கு சுவரில் தீட்டப்பட்டிருந்த அம்பாளின் வர்ணச் சித்திரத்தின் கீழ் மகாகவியின் பெரு மஞ்சம், பெரும் சித்திர வேலைப்பாடுகளுடனும் உயரிய காச்மீரப் பட்டுக்களாலும், மிக நுண்ணிய தமிழக வெண் துணிகளாலும், தயாரிக்கப்பட்ட திண்டு திவாசுகளுடனும் காட்சி யளித்தது. நான்கு சுவர்களிலும் இராமாயண மகாபாரத காவியக் காட்சிகளும், 'சாகுந்தலம்' 'மேகசந்தேசம்' 'குமார சம்பவம்' போன்ற காவியரசங்களை எடுத்துக் காட்டும் சித்திரங்களும் ஏராளமாக இருந்தன. அவரது மஞ்சத்துக்கு அக்கம் பக்கத்தில் இருந்த சிறு மஞ்சங்களில் ஓலைச் சுவடிகள் ஏராளமாக இருந்தன.

தண்டி மகாகவி அந்த அறையைப் பெரிதும் விரும்புபவர். வந்தவுடன் அம்பிகைக்குக் கைகூப்பிச் சிரம் தாழ்த்தி அறை முழுவதையும் ஒருமுறை சுற்றிப் பார்த்துப் பெருமிதம் கொள்ளுவார். ஆனால் அன்று அவர் அம்பிகையை வணங்கியதைத் தவிர வேறெதையும்நோக்காமல் வெளியிலிருந்த காவலனை அழைத்து யாரையும் உள்ளே விடவேண்டாமென்று ஆணையிட்டு, அவன் சென்றதும் ராஜசிம்மனை நோக்கி, ''நேற்று என்ன நடந்தது?'' என்று கவலை ததும்பிய குரலில் கேட்டார்.

ராஜசிம்மன் சிறிது விழித்தான். ''தங்கள் அறையிலிருந்த சுரங்கப்பாதை மூலம் கடிகைக்கு வந்தேன்'' என்று தட்டுத் தடுமாறிச் சொன்னான்.

''அப்படி ஒரு வழி இருப்பது எனக்குத் தெரியாதென்பது உனது அபிப்பிராயமா?'' என்ற தண்டியின் குரலில் சீற்றம் நிரம்பி நின்றது.

ராஜசிம்ம பல்லவன் தலைகவிழ்ந்தான். தண்டி மேலும் சீற்றத்துடனேயே கேட்டார், ''பல்லவ இளவல் ரங்கபதாகாதேவியின் பவள வாய் கண்டு பல்லிளித்து விட்டான் என்ற அவப்பெயருக்கு நீ ஆளாகலாமா? பெண்களின் திட்டத்தால் யோசனையால் உருப்படி யான காரியங்கள் உலகத்தில் இதுவரை ஏதாவது நடந்திருக்கிறதா?'' என்று.

ராஜசிம்மன் மௌனம் சாதித்தான். ''சரி சரி. இங்கு வந்ததும் ஏதாவது விசேஷமுண்டா?'' என்று மீண்டும் கேட்டார் தண்டி.

''உண்டு'' ராஜசிம்மன் குரலில் வெட்கம் தொனித்தது.

''என்ன?''

''நான் நுழைந்த அறையில் ஸ்ரீராமபுண்யவல்லபர் ஏற்கனவே அமர்ந்திருந்தார்.''

இந்தப் பதில் தண்டி மகாகவியைத் தூக்கிவாரிப் போடுமென்று நினைத்திருந்ததால் ராஜசிம்மன் ஏமாந்தே போனான். ''சரி, அப்புறம் என்ன நடந்தது?'' என்று கேட்டார் தண்டி.

நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னாள் பல்லவ இளவல். அதைக் கேட்ட தண்டியின் முகத்திலே பேரதிர்ச்சி விளைந்தது. கவலையும் அதிர்ச்சியும் நிறைந்த கண்களை ராஜசிம்மன் முகத்தை நோக்கி நிமிர்த்தினார். பிறகு சொன்னார் மெதுவும் உறுதியும் நிரம்பிய குரலில், ''ராஜசிம்மா, நாம் துரிதமாக நடவடிக்கை எடுக்காவிட்டால் பெரிய அனர்த்தம் ஏற்பட்டு விடும்'' என்று.

''என்ன அனர்த்தம் ஆசார்யரே?''

''ஏற்கனவே நான் சொன்னது தான். ஸ்ரீராமபுண்ய வல்லபர் சொன்னது தான். கங்கன் போரில் உன் தந்தையின் தோல்வி, மானபங்கம்.''

''என் தந்தை போர்த் திறமையற்றவரா?''

''இல்லை. ஆனால் ஸ்ரீராமபுண்யவல்லபரின் திட்டம் உன் தந்தையின் போர்த் திறமையை முறியடித்து விடும்.''

''எப்படி ஆசார்யரே? புரியவில்லையே?''

தண்டி மகாகவி சிறிது சிந்தனைக்குப் பிறகு கூறினார்: ''ராஜசிம்மா! ஒரு போர் மந்திரி ஒரு முக்கியச் செய்தியை ஓர் உபதளபதியிடம் அனுப்பும்போது அவன் நேர் எதிரியை எதிரில் வைத்துக் கொண்டு அனுப்புவதாகக் கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்று.

அப்பொழுதுதான் விழித்துக் கொண்டே ராஜசிம்மன் 'ஆமாம், எனக்கே விந்தையாயிருந்தது. என் எதிரிலேயே ஓலையை எழுதினார். வீரபாகுவிடம் அனுப்பினார்'' என்றான்.

'யாரிடம் குழலைக் கொடுக்க வேண்டுமென்பதையும் சொல்லியிருப்பார்.'' என்றார் தண்டி.

''சொன்னார், கங்க மன்னன் பூவிக்கிரமனிடம் கொடுக்கும் படி.''

''உன் முன்பாக?''

''ஆம்.''

''பிறகு?''

''ஒரு நல்ல சேதியும் சொன்னார்.''

''நமது படைத்தலைவர் பலபத்ரவர்மனும் ஒற்றன் இந்திரவர்மனும் சிறையிலிருந்து தப்பிவிட்டார்களாம்.''



தண்டி மகாகவிக்கு இது எல்லாவற்றையும்விட பேரதிர்ச்சியாயிருந்தது. ''என்ன! சாளுக்கியர் சிறையிலிருந்து தப்புவதாவது? எப்படித் தப்பினார்களாம்'' என்று கேட்டார் அதிர்ச்சியின் ஊடே.

''அவர் சொல்லவில்லை.''

''எப்படிச் சொல்லுவார்? தப்ப விட்டதே அவர்தானே?''

''அவரா?''

''ஆம், ராஜசிம்மா! பெரிய சதித்திட்டம் இது. இதன் மர்மம் உனக்கும் புரியவில்லையா?'' என்று கேட்ட தண்டிஅங்கு மிங்கும் உலாவிக் கொண்டே பேசினார்: ''ராஜசிம்மா, வீரபாகு கொண்டு சென்றிருக்கும் ஓலை நறுக்குகளில் ஒரு போர்த்திட்டம் சொல்லப் பட்டிருக்கிறது. அது உண்மைத் திட்டமல்ல. உன் தந்தையை ஏமாற்றுவதற்காக, கங்கன் போர் செய்ய வேண்டிய இடம், வகை, இவற்றைப் பற்றிய புரட்டுத் திட்டம் அது. அதை எப்படியாவது உன் தந்தையின் கையில் சிக்க வைக்க பலபத்ரவர்மனையும் இந்திரவர் மனையும் போர் மந்திரியே தப்பவிட்டிருக்கிறார். வீரபாகு ஓலை கொண்டு செல்லும் விஷயம் பராபரியாக அவர்கள் காதிலும் விழ ஏற்பாடு செய்திருப்பார் ஸ்ரீராமபுண்யவல்லவர். உண்மை வீரபாகு வுக்கும் தெரியாது. அவனைத் துரத்திச் செல்லும் பலபத்ரவர்மனுக்கும் தெரியாது. வீரபாகுவை அவர்கள் சிறைப் படுத்தி உன் தந்தையிடம் அவனையும் போர்த் திட்டத்தையும் சேர்ப்பிப்பார்கள், உன் தந்தை அத்திட்டத்தின்படி போருக்குச் செல்வார். ஆனால் அங்கு நடக்காது போர். அவர் முற்றும் எதிர்பாராத இடத்தில் நடக்கும். பெருநாசம் ஏற்படும். இதை முதலில் நாம் தவிர்க்க வேண்டும்.'' இப்படிச்சொன்ன ஆசார்யர் உணர்ச்சிப் பெருமூச்சுவிட்டார். பிறகு மேற்கொண்டும் தொடர்ந்து, வீரபாகு புறப்பட்டு ஓர் இரவுக்கு மேல் ஆகிவிட்டது. ஆகையால் நீ உடனடியாகக் காஞ்சியிலிருந்து கிளம்ப வேண்டும்'' என்று திட்டமாக அறிவிக்கவும் செய்தார்.

அசந்து போனான் பல்லவ இளவல். ஆகையால் அந்த உணர்ச்சிக்கு அவனும் வசப்பட்டு, ''உத்தரவிடுங்கள் ஆசார்யரே!'' என்று மட்டும் கூறினான்.

''இந்தக் கடிகைக்கு வாயில் நான்கு'' என்று சுட்டிக் காட்டினார் ஆசார்யர்.

''ஆம்.''

''அதில் தெற்கு வாசலில் பெரிய வித்வான்களும் முக்கிய சீடர்களும் செல்லத் திட்டி வாசல் ஒன்றிருக்கிறது. அதன் வழியில் அந்தணர் செல்லத் தடையில்லை.''

''ஆம்.''

''அந்த வழியில் இன்றிரவு அந்தணச் சீடர்கள் கோலத்தில் என்னுடன் நீயும் சீனனும் வருவீர்கள்.''

''உத்தரவு.''

''வெளியில் வந்ததும் காஞ்சியின் பெரிய கொல்லன் சத்துகன் வீட்டிற்குச் செல்வீர்கள். அங்கு இரு புரவிகள் தயாராயிருக்கும்.''

புரிந்து கொண்டான் இளவரசன். இருப்பினும் சந்தேகம் ஒன்று கேட்டான்: 'இதில் தந்தையின் ஆணை குறுக்கிடுகிறதே'' என்று.

''என்ன ஆணை அது?'' சீற்றத்துடன் வினவினார் தண்டி.

''என்னைக் கோயில் கட்டும்படி பணித்த ஆணை

கோப நகை நகைத்தார் தண்டி. ''அரசு இருந்தாலல்லவா நீ கோயில் கட்ட? சிற்பக் கருவிகளைத் தூர எறிந்துவிடு. வாளை ஏந்து ராஜசிம்மா. இப்பொழுது அதுதான் தேவை. இதே கடிகையின் முன்பு நானூறு ஆண்டுகளுக்கு முன்பு மயூரசர்மன் என்ற ஓர் அந்தணச் சிறுவன் வேதம்படிக்க வந்தான். அவனைப் பல்லவ வீரர்கள் உள்ளே அனுமதிக்கவில்லை வேலால் அவனை பிடித்து வெளியே தள்ளினார் கள். ''இனி வேதாந்தம் வேண்டாம். வாளைப் பிடிக்கிறேன் கையில் பல்லவர்களை என்ன செய்கிறேன் பார்' என்று சீறிச் சென்றான் ஹரீதி வம்சத்தவனும் மானவய கோத்திரத்தைச் சேர்ந்தவனுமான மயூரசர்மன் வாளை ஏந்தினான். படை திரட்டினான். பல்லவர்கள் எல்லைகளைக் கவர்ந்தான், கடம்ப குலத்தை ஸ்தாபித்தான். அந்தணன் வேதத்தைக் கைவிட்டு வாளேந்தியபோது அரச குலத்தவனான நீ சிற்பக் கருவிகளை எறிய என்ன தடை? அந்தணன் சாதித்ததை அரச குலத்தவனான உன்னால் ஏன் சாதிக்க முடியாது? போ, உன் தந்தையின் உதவிக்கு இந்த கங்க நாட்டுப் போர் நடக்கக்கூடாது உன் தந்தையைப் படைகளுடன் பின்வாங்கச் செய்'' என்று திட்டவட்டமாக உத்தரவிட்டார்.

''தந்தை பின்வாங்குவது...'' என்று இழுத்தான் ராஜசிம்மன்.

''போர் முறைக்கு இழுக்கல்ல. புலி பின்வாங்குவது பாய்வதற்காக'' என்றார் தண்டி.

''சித்தம்''

அத்துடன் தண்டி மகாகவி கிளம்பினார்.

அவர் பல்லக்கு வாயிலை அடையுமுன்பு கங்கன் மகள் சிவிகை உள்ளே புகுந்தது. அதை நிறுத்திய தண்டி, கங்கன் மகளிடம் இரண்டொரு சொற்களை ரகசியமாகச் சொல்லி விட்டு பல்லக்கில் வேகமாகச் சென்று விட்டார்.



பெண்களிருவரும் சிவிகையிலிருந்து இறங்கி, சிரித்த வண்ணம் பரந்த வெளியில் நடந்தனர். அவர்களை நோக்கிச் சிறிது தூரத்தில் ராஜசிம்ம பல்லவன் வந்து கொண்டிருந்தான். அவர்கள் சந்திப்பை மாடியிலிருந்த கடிகை அறையிலிருந்து ஸ்ரீராமபுண்ய வல்லபர் கவனித்தார். அவர் முகத்தில் என்றுமில்லாக் குழப்பம் சூழ்ந்து கிடந்தது.

# 42. கடிகையில் சரசம், கவியின் குதூகலம்

**கா**ஞ்சியின் கடிகையில் அன்று நடந்தது என்றுமில்லாத, யாரும் எதிர்பாராத பெரும் புரட்சியென்றுதான் சொல்ல வேண்டும். வேதம் பயிலும் சீடர்களும் அவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர் களுமின்றி வேறு யாரும் அதிகமாக உட்புக அனுமதியில்லாதிருந்த கடிகையில், பெண்கள் கண்டிப்பாக வரக்கூடாதென்று ஆதிகால முதலிருந்த திட்டம் அன்று சுக்கு நூறாக வெடித்து, காஞ்சன மேனிக் கட்டழகியர் இருவர் கடிகையின் பரப்பில் அழகுகள் குலுங்கவும், நெளியவும் நடந்து செல்லவே ஆங்காங்கு போய்க்கொண்டிருந்த மாணவப் பிரம்மசாரிகள் வெட்கப்பட்டும் அச்சப்பட்டும் கள்ளப்பார்வைகளை வீசிக் கொண்டும் துரிதமாக நடையைக் கட்டலானார்கள். இன்னும் சில பிரம்மசாரிகள் ஏதோ காணாததைக் கண்டுவிட்டவர்கள்போல் அசைவற்று அந்த மோகனாங்கிகளைப் பார்த்து நின்றதும் அவர்களுடைய ஆசிரியர்கள் ஓடிவந்து, ''உம், போங்கள். ஏன் நிற்கிறீர்கள்?'' என்று விரட்டலாயினர். அப்படி வயோதிக வித்வான்கள் சீடர்களைத்தான் விரட்டினார்களே யொழிய, தாங்கள் மட்டும் சிறிது நின்று அந்தஅழகிகளைக் கவனிக்கவே செய்தனர்.

அந்தச் சூழ்நிலையில் வாயிலைக் காத்து நின்ற காவலர் பாடு பரம தர்ம சங்கடமாயிருந்தது. பெண்களை அனுமதிக்கக் கூடாதென்று அவர்களுக்குத் திட்டமாக உத்தரவிருந்தாலும். விக்கிரமாதித்த மகாராஜவின் உத்தம நண்பரான கங்க மன்னன் மகள் சிவிகையைத் தடுத்து நிறுத்தத் திராணியில்லாததால் என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று காவலர் விதிமேல் பழியைப் போட்டு வாளாவிருந்து விட்டனர். இத்தனை கட்டுப்பாடுகளையும் மீறிச் சிவிகை உட்புகுந்த சமயத்தில் தண்டி மகாகவி சிவிகையை நிறுத்தி மிக இரகசியமாக, ''தேவி! ஏதும் நடக்காதது போல் நடந்து கொள். பல்லவ இளவலிடம் சகஜமாகச் சிரித்துப் பேசு'' என்று கூறிவிட்டுச் சென்றதும் ரங்கபதாகாதேவி

மட்டுமின்றி மைவிழியும் பிரமித்துப் போய், ''ஏன் அக்கா! ஆசார்யர் என்ன சொல்கிறார்?'' என்று வினவினாள்.

''சொன்னதை நீதான் கேட்டாயே மைவிழி'' என்றாள் பதிலுக்கு ரங்கபதாகாதேவி.

''பகிரங்கமாகச் சரசமாடச் சொல்கிறாரே?'' என்று மைவிழி குத்திக் காட்டினாள்.

''சே! அப்படிச் சொல்லவில்லை.''

''கிட்டத்தட்ட அதுதான்.''

''போடி மைவிழி.''

''நான் இனிமேல் போகவேண்டியதுதான்.''

''ஏனாம்?''

''என்னைச் சிரித்துப் பேசும்படி ஆசார்யர் சொல்ல வில்லையே?''

''மைவிழி, இளவரசர் மீது உனக்கிருக்கும் காதல் யாருக்கும் தெரியாததல்ல, தவிர ஆசார்யர் எது சொன்னாலும் அதற்குக் காரணமிருக்கும்'' என்ற ரங்கபதாகாதேவி, ''சரிதான் வாடி. சிவிகையை வைத்து விட்டார்கள். இறங்கு. முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளாதே. சிரி'' என்று ஊக்கி இருவரும் சிவிகையை விட்டிறங்கி, கடிகையின் பரந்த புல்வெளியில் சிரித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் நடந்தனர்.

தூரத்திலிருந்தே அவர்கள் வருகையைக் கவனித்த ராஜசிம்ம பல்லவன் பிரமித்தான், இவர்கள் எதற்காக இங்கு வந்தார்கள் என்று. பிறகு அந்தப் பிரமிப்பு மாறி அவர்கள் அலங்காரத்திலும் எழிலிலும் அவன் மனம் சிக்கிவிடவே இருவரையும் அணு அணுவாகக் கவனிக்கலானான். அன்று அந்த இருவரும் இருவகை அலங்காரம் செய்து கொண்டிருந்தனர். முல்லைக் கொடி போன்ற மைவிழிச் செல்வி மாமல்லபுரத்தில் அணிந்திருந்த அலங்காரத்திலிருந்தாள். அவள் தலைக் குழல் ஓரளவு எடுத்துப் பின்னப்பட்டும் ஓரளவு மயிரிழைகள் தொங்கியுமிருந்ததால் ஏதோ அவசரப்பட்டு அப்சரஸ் ஒருத்தி உலகத்தில் குதித்து விட்ட நிலையை நினைவுப்படுத்தினாள். அவள் தலையிலிருந்து முகத்தில் தொங்கிய ஓர் ஒற்றை முத்து சரமும் இரட்டை மல்லிகைச் சரமும் அவள் அழகிய நுதலை முத்தமிட்டுக் கொண்டிருந்தன. அதிகப்படியில்லாமல் அளவோடிருந்த தாமரை மொட்டுக்கள் மேலாடைக்குள் லேசாக அசைந்தனவானாலும் அவற்றைக் கூடத் தாங்கச் சக்தியில்லாத துளிர் இடை அசைந்து இம்சைப்பட்டது. நல்லவேளை, அதற்குக் கீழே சற்றுச் செழித்த பாதுகாப்பிரண்டை ஆண்டவன் படைத்திருந்தான். அவள் மெல்லிய



நீண்ட பாதங்களில் தீட்டப்பட்டிருந்த மருதாணிச் சிவப்பு ஏற்கனவே சிவந்த பாதத்தை அதிகச் சிவப்பாக அடித்திருந்தது. கால்களிலிருந்த தண்டைகளின் முத்துப் பரல்கள் அவள் நடையில் கலீர் கலீரெனச் சப்தித்தன. அவள் என்ன காரணத்தாலோ அன்று தமிழகத்தின் மெல்லிய வெண்பட்டாடையைத் தரித்திருந்தாள். வழக்கத்துக்கு விரோதமான அந்த ஓர் ஆடை அலங்காரம் மட்டும் அவளை சாட்சாத் சரஸ்வதியாக அடித்திருந்தது. அந்த நிலையில் அவள் பெரிய கருவிழிகள் ராஜசிம்மனைப் பார்த்து நகைத்தன.

மைவிழிக்கு முற்றும் மாறாக, ஆனால் எழிலில் எந்த விதத்திலும் சளைக்காத செழித்த செந்தாமரையென உடன் நடந்தாள் ரங்கபதாகாதேவி. அன்று அவள் நல்ல காச்மீரச் செம்பட்டுச் சேலை கட்டியிருந்தாலும், அதைச் சற்று இறுகவே கட்டியிருந்தாலும், நன்றாக எழுந்த அவள் அங்கலாவண்யங்களை அது அடக்கச் சக்தியற்றதாயிற்று. தான் அரச மகள் என்பதை அறிவுறுத்த வழக்கப்படி எடுத்துப் போட்டிருந்த கொண்டையில் வைடூரிய மாலையொன்று சுற்றியிருந்தாள். ஏற்கனவே மிகக் கரியதாயிருந்த குழலை அது இன்னும் அதிகக் கறுப்பாகக் காட்டியதால் கார் மேகத்தில் வளைந்து தோன்றும் மின்னலைப் போல வைடூரிய மாலை காட்சியளித்தது. கழுத்தில் அவள் அணிந்திருந்த ஒரு மரகத மாலை அவள் கழுத்திலிருந்து வெள்ளை வெளேரென்று அடுத்த பிரதேசத்திலிருந்த வட்ட விளிம்புகள் மீது விளையாடியது அவளுடைய செழித்த மார்பகம், விளிம்பு மீது மாலை புரண்ட காரணத்தாலோ என்னமோ சிறிது எழுந்து தாழ்ந்து தூரத்திலிருந்து பார்த்த ராஜசிம்மனைப் பைத்தியமாக அடித்தது. மைவிழியைவிடச் சற்று அதிகப் பருமனுள்ள ரங்கபதாகாதேவியின் இடையும் சிறிதேயானாலும் பிடியில் அடங்காததால் அதன் சதைப் பிடிப்புச் சிறிது வெளிப்பட்டு அதன் திண்மையையும் அழகையும் காட்டி உன் மத்தம் கொள்ளச் செய்தது. இடைக்குக் கீழ் பின்புறம் அசைந்த அழகு வர்ணிப்புக்கு அப்பாற்பட்டது. அன்று தேவியும் பாதங்களுக்கு மருதாணிச் சிவப்பையே தீட்டியிருந்தாள். அவள் கார்மேகக் கண்களும் ராஜசிம்மனைப் பார்த்து நகைத்தன.

அவ்விருவரையும் அணுகிய ராஜசிம்மன் முதலில் புன்முறுவல் கொண்டானானாலும் பிறகு முகத்தில் சினத்தையே வரவழைத்துக் கொண்டு, ''உங்களை இங்கு யார் வரச் சொன்னது?'' என்று வினவினான், கோபம் குரலில் ஒலிக்க.

ரங்கபதாகா தேவி அவனை ஏறெடுத்து நோக்கிவிட்டு மைவிழியைத் திரும்பிப் பார்த்து, ''ஆமாம் மைவிழி! நம்மை இங்கு யார் வரச் சொன்னது?'' என்று வினவினாள்.

''அதுதான் எனக்கும் புரியவில்லை'' என்று கூறிய மைவிழி இளவரசனையும் நோக்கி ரங்கபதாகாதேவியையும் நோக்கினாள்.

பல்லவ இளவலின் பாடு மிகத் திண்டாட்டமாகிவிடவே அவன் சுற்றுமுற்றும் கண்களைச் செலுத்தினான். மாணவர் பலரும் ஆசிரியர்கள் சிலரும் தங்களை வேடிக்கை பார்ப்பதையும் உணர்ந்ததால் சங்கடத்தில் பெரிதும் சிக்கி, ''கடிகையில் பெண்கள்வர உத்தரவில்லை தெரியுமா உங்களுக்கு?'' என்று கடிந்து கொண்டான்.

''யாருடைய உத்தரவில்லை?'' என்று கேட்டாள் ரங்கபதாகாதேவி.

''பல்லவர் உத்தரவு அப்படி'' என்றான் இளவரசன்.

''சாளுக்கியர் உத்தரவை மாற்றி விட்டார்கள்'' என்றாள் தேவி புன்முறுவலுடன்.

''எப்படித் தெரியும் உனக்கு?''

''இதோ வந்திருக்கிறோம். யாரும் தடை செய்யவில்லை. தவிர..''

''தவிர?''

''ஆசார்ய தண்டி கூடத் தடை செய்யவில்லை.''

இதற்கு என்ன பதில் கூறுவதென்று இளவலுக்கு புரியாததால் அவன் விழித்தான். ஆசார்ய தண்டி வெளியே செல்லும் போது அவர்களது சிவிகையை நிறுத்தி ஏதோ சொல்லிவிட்டுப் போனதை அவனே கவனித்திருந்ததால் ஏதோ பெரிய நாடகம் நடக்கிற தென்பதை மட்டும் புரிந்துகொண்டு, ''சரி! சரி! வாருங்கள். நட்ட நடுவில் இங்கு பேச வேண்டாம்'' என்று கூறி மீண்டும் ஆசார்யரின் ஆஸ்தான அறையிருந்த மண்டபத்தை நோக்கி நடக்கலானான்.

ஆனால் அக்கம் பக்கம் எதையுமே பார்க்காத ராஜசிம்மன் அவர்களை அழைத்துக் கொண்டு ஆசார்யர் அறையை அடைந்ததும் சீனனை வெளியில் நிற்க வைத்து அறையின் பெருங்கதவைச் சாத்தும்படி தேவிக்குக் கட்டளையிட்டான்.

''ஐயையோ!'' என்றாள் தேவி குரலில் பொய்க் கோபம் காட்டி.

''அழகாயிருக்கிறது'' என்று வெட்கப் புன்முறுவல் கோட்டினாள் மைவிழி.

''சாத்து என்றால் சாத்து'' இளவரசன் குரலில் அதிகாரமிருந்தது.

''எதற்காகச் சாத்த வேண்டும்?'' என்று கேட்டாள் தேவி.

''காரியமாகத்தான்.'' இளவரசன் குரல் கடுமையாயிருந்தது.



''மைவிழி, கேட்டாயா?'' என்றாள் ரங்கபதாகாதேவி.

''கேட்டேன் அக்கா!''

''காரியமாமே?''

''அக்கா!''

''ஏன் மைவிழி?''

''தெரியாமல் வந்து இவரிடம் சிக்கிக் கொண்டோமே!''

''என்ன செய்வாரோ?''

அந்த இரு பெண்களின் இடக்கான உரையாடலில் மிகவும் வெகுண்ட இளவரசன், ''செய்கிறதைக் காட்டுகிறேன், பாருங்கள்'' என்று சீறி அவனே சென்று கதவைச் சாத்தி, இருவர் கைகளையும் பலவந்தமாகப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் ஒரு மஞ்சத்தில் தள்ளிவிட்டுத் தான் மட்டும் எதிரே நின்று கொண்டான். அவன் மஞ்சத்தில் தள்ளிய வேகத்தில் அவ்விரு அழகிகளின் ஆடைகள் சிறிது கலைந்து அழகுகள் சிற்சில வெளிப்பட்டதால் அவர்களிருவரும் சற்றுச் சரிப்படுத்திக்கொண்டு, ''நல்ல பண்பாடு இது!'' என்று ஏககாலத்தில் கூவினார்கள் இளவரசனை நோக்கி.

''உஸ்! கூச்சல் போடாதீர்கள்'' என்று சீறினான் இளவரசன்.

''ஏன் போடக் கூடாது?'' என்று கேட்டாள் ரங்கபதாகாதேவி.

''ஆம். கேள் அக்கா.'' மைவிழி ஒத்துப் பாடினாள்.

''கூச்சல் போட்டால் வெளியில் கேட்கும்' என்றான் இளவரசன்.

''இங்கு நீங்கள் எங்களை அழைத்து வந்திருப்பது மிகவும் ரகசியமோ?'' என்று கேட்ட ரங்கபதாகாதேவியின் கார்மேகக் கண்கள் அவனை நோக்கி நகையாடின.

''கதவைச் சாத்தினது அதைவிடப் பெரிய ரகசியம்'' என்று கூறிய மைவிழியின் பெருவிழிகள் ஆனந்த நர்த்தனம் செய்தன.

அவர்கள் சொல்வதிலிருந்த உண்மையைப் புரிந்து கொண்டாலும் அதைப்பற்றி இளவரசன் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவன் உள்ளத்தில் அவர்களிருவருரிடமும் காதல் ததும்பி வழிந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் சீறிய முகத்துடன் அவர்களை நோக்கிச் சொன்னான்; ''தேவி! மைவிழி! உங்களிரு வரையும் பிரியவேண்டிய காலம் வந்துவிட்டது. உங்களை எப்படிப் பார்ப்பதென்று நான் யோசித்த சமயத்தில் நீங்களே வந்து விட்டீர்கள். ஏன் வந்தீர்களோ, யார் சொல்லி வந்தீர்களோ எனக்கு தெரியாது. ஆனால் வந்தவரையில் மகிழச்சி. இனி நாம் சில மாதங்களுக்குச் சந்திக்க முடியாது. இதைச்

சொல்லத்தான் உங்களை இங்கு அழைத்து வந்தேன்.'' இதைச் சொன்னதும் அவன் உணர்ச்சிப் பெருமூச்சு விட்டான்.

இதைக் கேட்ட நங்கையர் இருவர் பங்கய முகங்களும் கூம்பின. ''எங்களை விட்டுப் பிரியப் போகிறீர்களா?'' என்றாள் மைவிழி திக்பிரமை பிடித்து.

''மாதக் கணக்கிலா!'' என்ற ரங்கபதாகாதேவியின் பெருமார்பு ஒரு முறை விம்மி இறங்கியது.

''ஆம்'' என்ற இளவரசன் மேலும் சொன்னான்; ''நீங்கள் என்னைச் சுரங்க வழியில் அனுப்பிய பிறகு பல விஷயங்கள் நடந்து விட்டன. உங்களிடம் முழுவதையும் விவரிப்பதிற்கில்லை. ஆனால் சுரங்கப் பாதையின் கோடி அறையை அடைந்தபோது அங்கு ஸ்ரீராமபுண்யவல்லபர் உட்கார்ந்திருந்தார். மேற் கொண்டு என் நிலை எப்படியிருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம். உங்களையும் என்னையும் மீறிய சில விவகாரங்கள் அரசியல் மோதல்கள் நடக்கப் போகின்றன. அவற்றில் நானும் நீங்களும் கருவிகள். நடத்துபவர்கள்...'' இந்த இடத்தில் சிறிது தாமதித்தான் இளவரசன்.

''நடத்துபவர்கள்?'' தேவி வினவினாள்.

''இரு மேதைகள்?'' என்றான் இளவரசன்.

''அவர்கள்?'' மைவிழியின் கேள்வியில் கவலை இருந்தது.

''ஆசார்ய தண்டி, ஸ்ரீராமபுண்யவல்லபர்'' என்று பதில் கூறிய இளவரசன், அந்த இருமங்கையரையும் இருகைகளாலும் மஞ்சத்தி லிருந்து எழுப்பி இருபுறமும் நிற்கவைத்து அணைத்துக் கொண்டான். இருவர் இடைகளிலும் அவன் கைகள் சுற்றி வளைந்து இந்திர ஜாலங்களைப் புரிந்ததன்றி, இடைக்குக் கீழும் சென்று சொர்க்க போக உணர்ச்சிகளை அளித்தன. அவன் அணைத்த வேகத்தில் அந்த இரு மங்கையரின் ஒவ்வொரு மார்பின் பகுதி அவன் பக்கங்களில் உராய்ந்து அவனையும் அவர்களையும் காஞ்சியையும். கடிகையையும், உலகையும் மறக்கச் செய்தன. அந்த நிலையில் அவன் சொன்னான், ''எனக்கு இப்பொழுது ஆறு கண்கள்'' என்று.

இரு மங்கையரும் உணர்ச்சி வேகத்தில் குழைந்து கிடந்ததால் பதிலேதும் சொல்லவில்லை. அவனே சொன்னான், ''என்புறக் கண்கள் இரண்டு. இதயத்துக்குள்ளே இனி சதா விளையாடும் உங்கள் கண்கள் நான்கு'' என்று இரு மங்கையரும் அவன் பக்கத்தைவிட்டு எதிர்புறம் நெருங்கவே அவர்களை அப்படியே அணைத்துக் கொண்டான்



இளவரசன். மூன்று உடல்களும் இழைந்தன, நெகிழ்ந்தன, குழைந்தன. அந்த நிலையில் அரச குமாரன் சொன்னான் குழைந்த குரலில், ''பொறுங்கள், காலம் நம்மைச் சேர்க்கும்'' என்று. பிறகு அவர்களை விட்டுக் கஷ்டப்பட்டு விலகிக் கதவைத் திறந்து சீனனை அழைத்து, ''இவர்களைச் சிவிகையில் கொண்டு போய் விடு'' என்று ஆணையிட்டான். மங்கையர் இருவர் கண்களிலும் நீர் முத்துக்கள் திரண்டன.

ரங்கபதாகாதேவியும் மைவிழிச் செல்வியும் உகுத்த அந்த நீர் முத்துக்கள் தன் இதயத்தையும் நெகிழ்த்தவே, ''என்னைப் பலவீனனாக்காதீர்கள். செல்லுங்கள். ஆசார்யர் சொல்லுகிறபடி நடந்து கொள்ளுங்கள்'' என்று கூறி ராஜசிம்மன் அவர்களை அனுப்பினான்.

திரும்பவும் கடிகையின் பரந்த வெளிக்கு வந்த மங்கையர் இருவர் முகத்திலும் வந்த போதிருந்த நகைப்பில்லை. உற்சாக மில்லை, உணர்ச்சியில்லை. பதுமைகள் போல் நடந்து சென்றனர் சிவிகையிலும் பதுமைகள் போல் உட்கார்ந்தனர், தண்டி மகாகவி மாளிகைக்கு வந்ததும் ஆசார்ய தண்டி அவர்களை உடனடியாகக் கூப்பிட்டனுப்பி, ''நான் சொன்னபடி நடந்து கொண்டீர்களா?'' என்று வினவினார்.

''நடந்து கொண்டோம்'' என்றாள் தேவி.

''ராஜசிம்மனுடன் சிரித்துப் பேசினீர்களா?''

''பேசினோம் என்றாள் மைவிழி.

''பிறகு?'' என்று கேட்டார் தண்டி.

''எங்களை உங்கள் அறைக்கு அழைத்துச் சென்றார்'' என்றாள் தேவி.

''நல்லது நல்லது'' என்று குதூகலப்பட்டார் தண்டி அத்துடன் மெல்லக் கேட்டார். ''அவனுடன் அறையில் தனியாக இருந்தீர்களா?'' என்று.

''ஆம்.'' இதை இருமங்கையரும் சொல்லித் தலை கவிழ்ந்தனர்.

காவ்யாதர்சம் எழுதிய மகாகவி தண்டி, ''வெகு சுகம்! நான் எதிர்ப்பார்த்ததற்கு மேலேயே நடந்துவட்டது'' என்று குதூகலம் தாங்க முடியாமல் இரு மங்கையர் முதுகிலும் தட்டிக் கொடுத்தார்.

அத்தனை உற்சாகத்துக்குக் காரணம் அந்த இரு அழகிகளுக்கும் புரியவில்லை. ஆனால் தண்டி தனது திட்டம் ஈடேறி விட்ட தென்ற நினைப்பில், ஆனந்தத்தில், பெரிதாக நகைத்தார். அத்தகைய ஆசார்யரை அதுவரை கண்டிராத இரு பெண்களும் பெரும் பிரமிப்படைந்தனர். எப்பொழுதும் சீரிய நோக்குள்ளவரும், சாந்த சுபாவம் படைத்தவரும்,

விரசம் எதிலும் மருந்துக்குக் கூடப் பட்டுக் கொள்ளாதவருமான ஆசார்யரின் நகைப்பும் பேச்சும் பரம விபரீதமாகத் தோன்றினாலும் அதை வெளிக்குக் காட்டாத நங்கையரிருவரும் அவருக்குத் தலைதாழ்த்தி வணங்கித் தங்கள் அறைக்குச் சென்றனர்.

அன்று முழுவதும் ஆசார்யர் நல்ல உற்சாகத்துடனிருந்தார். சதா அலுவல்கள் பலவற்றிலும் ஈடுப்பட்டிருந்தார். தமது சீடர்களை அழைத்து ஏதேதோ கட்டளைகள் இட்டுப் பல இடங்களுக்கு அனுப்பியிருந்தார். சந்தியா காலம் வந்ததும் அவசரமாகப் புறப் பட்டுக் கடிகையை நோக்கிச் செல்லமுற்பட்டு ரங்கபதாகாதேவியை அழைத்து, ''தேவி! நான் கடிகைக்குச் செல்கிறேன். இரவு வந்தாலும் வருவேன், வராவிட்டாலும் இல்லை. கவலைப்படாதே'' என்று கூறிவிட்டு மீண்டும் பல்லக்கில் ஏறிக் கடிகையை அடைந்தார்.

கடிகையில் நுழைந்ததும் அவர்மேற்கொண்ட நடவடிக்கைகள் கடிகையை ஓர் உலுக்கு உலுக்கியது. கடிகையை மட்டுமென்ன, எதற்கும் அசராத ஸ்ரீராமபுண்யவல்லபரைக் கூட அது அசைத்தது.

# 43. வரவேற்பு

தண்டி மகாகவி சந்தியா காலத்தில் கடிகைக்குள் நுழைந்த மாத்திரத்தில் அவரைக் கண்ட மாணாக்கர்களும் ஆசிரியர்களும், காலையில் நுழைந்த தண்டி வேறு, அப்பொழுது வந்துள்ள தண்டி வேறு என்பதை அவர் முகபாவத்திலிருந்தும் நடை வேகத்திலிருந்தும் புரிந்து கொண்டதால் அவரை விட்டுச் சற்று அச்சப்பட்டு விலகியே நடந்தனர். முன் மண்டபத்தில் பல்லக்கிலிருந்து இறங்கிய மகாகவியின் முகத்தில் காலையிலிருந்த மந்தகாசத்துக்குப் பதில் மகாகோபம் மண்டிக் கிடந்ததால், அந்தச் சூரியன் வீசிய சிவப்பு அவர் முகத்திலும் ஏற்பட்டிருந்ததால், இன்னொரு கதிரவன் கடிகைக்குள் முளைத்து விட்டானோ என்று பலரும் பிரமித்து அவரைப் பார்த்துப் பார்த்து வில்கிச் சென்று கொண்டிருந்தனர். அவரைவிட வயதில் அதிகப்பட்ட ஓரிரு பெரிய வித்வான்கள் மட்டும் அவரை அணுகி, ''ஆசார்யரிடம் என்ன அபசாரப்பட்டோம்?'' என்று கேட்டும் அவர் ஏதோ தலையை மட்டும் ஆட்டிவிட்டுச் சர்வ தீர்த்தத்தை நோக்கிச் சென்று அங்கு அந்திக் கடன்களை முடித்துக் கொண்டிருந்த மாணவர் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டார். குளத்தின் படிகளில் தமது தண்டத்தை வைத்துவிட்டு அலைமோதும் நீரில் இறங்கி இடுப்பில் மேல் தகடியை வரிந்து கட்டிக் கொண்டு முழங்காலளவு நீரில் இறங்கிச் சந்தியாவந்தனம் செய்து கையில் நீரைவாரி, அர்க்கியத்தை அந்திச் சூர்யனை நோக்கி இறைத்தார்.



பிறகு படிகளில் உட்கார்ந்து ஜபத்தில் ஆழ்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டார். நீண்ட நேரம் ஜபத்தில் லயித்து, கடைசி ஆசமனம் செய்து அந்திக்கடனை முடித்துக் கொள்வதற்கும் சூரியாஸ்தமனத்திற்கும் நேரம் சரியாக இருந்ததால் கடிகையில் அந்த வேளை மணி டணார் டணார் என்று பெரிதாகச் சப்தித்தது. அதைக் கேட்ட மாணவர்கள் மாலைவேளை வித்தியாப் பியாசத்திற்கு அந்தந்த மண்டபங்களை நோக்கிவிரையவே, மகாகவி காவ்ய மண்டபத்திற்குச் சென்று காவ்ய பாடங்களைச் சுமார் இரண்டு நாழிகை மட்டும் சொன்னார். பிறகு அங்கிருந்து புறப்பட்டுக் கடிகைக் நிர்வாக அதிகாரியின் அறைக்குச் சென்று, ''அதிகாரி! இன்று விசாரணை சபையைக் கூட்டும்'' என்று உத்தரவிட்டுத் தமது ஆஸ்தான அறைக்குச் செல்லத் திரும்பிய அவரை, ''சுவாமி!'' என்ற அதிகாரியின் குரல் சற்றே தடுத்து நிறுத்தியது.

''என்ன அதிகாரி!'' அரைவாசி தலையைத் திருப்பிக் கேட்டார் தண்டி.

அதிகாரி கை கட்டி வாய் புதைத்து நின்றார். ''ஏதாவது அபசாரம் நேர்ந்துவிட்டதா?'' என்று அச்சம் ஒலித்த குரலில் கேட்கவும் செய்தார்.

''எனக்கேதும் அபசாரம் இல்லை'' என்றார் தண்டி.

''அப்படியானால்...?'' தயங்கிக் கேட்டார் அதிகாரி.

''அனாதி காலமாக இருந்த கடிகையின் கட்டுப்பாடு உடைந்து விட்டது'' என்ற தண்டி அதற்குமேல் பேச விரும்பாமல், ''விசாரணை சபையில் பேசிக் கொள்வோம். ஸ்ரீராமபுண்யவல்லபருக்கும் அழைப்பு அனுப்பும்'' என்ற கூறிவிட்டு வெளியே நடந்தார்.

அதிகாரி வெலவெலத்துப் போய்ச்சிறிது நேரம் ஏதோ சிந்தித்துக் கொண்டு நடுங்கிக் கொண்டு நின்றார். பிறகு சபை கூட்டுவதற்கான அலுவலில் முனைந்து காலவனொருவனை அழைத்து உத்தரவு பிறப்பித்தார்.

மாணவர்கள் அத்யயனத்துக்குப் பின் கடிகையின் விசாரணை சபை நடந்தது. விசாரணை நடக்குமென்பதை அறிவிக்கத் தனிச் செய்தி தேவையில்லை கடிகையில். அதற்குத் தனி ஆலாட்சி மணி வைத்திருந்தபடியால் அது மும்முறை அடிக்கப்பட்டதும் வேறு எந்த அழைப்புமில்லாமலே மாணவர்களும் ஆசிரியர்களும் கடிகை நிர்வாகிகளும் விசாரணை மண்டபத்தில் பெருங் கூட்டமாகக் கூடிவிட்டார்கள்.

தண்டி மகாகவிக்குச் சபை கூடிவிட்ட விஷயம் அறிவிக்கப் படுவதற்கு முன்பாகவே ஸ்ரீராமபுண்யவல்லபரும் அங்கு வந்து

அவருக்குப் போடப்பட்ட தனி ஆசனத்தில் அமர்ந்தார். கடைசியாகக் கடிகைத் தலைவரான தண்டி உள்ளே நுழைந்ததும் ஸ்ரீராமபுண்ய வல்லபர் உட்பட அனைவரும் எழுந்து அவருக்குத் தலை வணங்கினர். தண்டி மகாகவி மிக மெதுவாகவும் கம்பீரமாகவும் அனைவரையும் ஆசீர்வதித்த வண்ணம் மண்டபத்தின் கோடியி லிருந்த மேடையில் போட்டிருந்த வியாக்கிராசனத்தில் அமர்ந்தார். பிறகு ஓம்' என்ற பிரார்த்தனை துவங்கினார். அந்த ஓமைத் தொடர்ந்து மற்றவர் களிடமிருந்து எழுந்த பிரணவ ஒலி அந்த மண்டபத்தையே பிரணவாகாரமாகவும் நாத மயமாகவும் அடித்தது. பிறகு அம்பிகா ஸ்தோத்திரத்தைச் சொல்லி முடித்துக் கொண்ட மகாகவி சபையை நோக்கி மிக மெதுவாகவும் உணர்ச்சி ததும்பிய குரலிலும் பேசலானார்:

''இந்தக் கடிகை ஏற்பட்டுப் பல தலைமுறைகள் ஆகின்றன. இது வித்யா பீடமாகவும் சரஸ்வதி பீடமாகவும் கருதப்பட்டு வந்தது. இதில் பயின்ற பல்லவ குல இளவரசர்களும், ஏன் பல்லவ மன்னர்களுங்கூட இதில் பிரவேசிக்க வேண்டுமென்றால் அனுமதி கேட்டுத்தான் வருவார்கள். இதற்கும் ராஜாங்கத்துக்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால் இன்று அந்தச் சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இங்கு பெண்கள அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் இரண்டு பெண்கள் இன்று நுழைந்துவிட்டார்கள். சாளுக்கியக் காவலர்கள் அவர்களை அனுமதித்திருக்கிறார்கள். அவர்கள் சிவிகை நுழைந்த பின்புதான் நான் பார்த்தேன். சிவிகையை நிறுத்திப் பெண்களை எச்சரித்துச் சென்றேன். அவர்கள் கேட்கவில்லை. நடக்காத, நடக்கக் கூடாத காரியங்கள் இன்று கடிகையில் நடந்து விட்டன.'' இந்த இடத்தில் சற்றுப் பேச்சை நிறுத்திப் பெருமூச்செறிந்தார் தண்டி மகாகவி.

மேலும் சொன்னார் தண்டி: ''இந்தக் குற்றத்தில் எனக்கும் பங்கு உண்டு. இதோ அமர்ந்திருக்கும் மகா பண்டிதர் ஸ்ரீராமபுண்யவல்ல பருக்கும் பங்கு உண்டு. என் பங்கு நான் அறியாமல் நடந்தது. இவர் பங்கு இவர் அறிந்து நடந்தது. இந்தக் கடிகையின் வித்வத் அறையை அரசாங்க அலுவலுக்கு நேற்றிரவு போர் மந்திரி உபயோகப்படுத்தி யதை இளரவசன் மூலம் அறிந்தேன். சாளுக்கியர் ஆதிக்கத்திலிருக்கும் இந்தக் காஞ்சியில் நாம் அவர்களை மீறி எதையும் செய்ய முடியாது. ஆனால் கடிகை காஞ்சிக்கு மட்டும் சொந்தமல்ல. ஆகவே, ஸ்ரீராமபுண்ய வல்லபர் மேற்கொண்டு இந்தக் கடிகையை அரசாங்க அலுவலுக்கு உபயோகப்படுத்துக் கூடாதென்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன். இங்கு வந்த பெண்களை நான் மாளிகையில் கண்டித்து விட்டேன். இன்னொரு ரகசியமும் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். நான்



அம்பிகை பாதத்தில் வைத்திருந்த சுவடியை எடுத்து, எனது அறையில் மயக்க கந்தம் எழுப்பி நான் மூர்ச்சையாயிருந்த சமயத்தில் கங்கன் மகள் சுரங்கப் பாதை மூலம் இளவரசனைக் கடிகைக்கு அனுப்பிவிட்டாள். இதற்கு நான் நேர்ப்படப் பொறுப்பாளி யில்லாவிட்டாலும் அபசாரம் என் மாளிகையில் துவங்கியதால் நானும் பொறுப்பாளிதான். இதையெல்லாம் ஏன் பட்டவர்த்தனமாகச் சொல்லுகிறேன்? இந்த மண்டபம் அம்பிகையின் சாந்நித்யம் பெற்றது வேத சாந்நித்தியம் பெற்றது, இங்கு எந்த ரகசியத்துக்கும் இடமில்லை...'' இந்த இடத்தில் மீண்டும் நிறுத்தினார் தண்டி.

தண்டி மறுபடியும் உணர்ச்சிப் பெருமூச்செறிந்தார். ''வித்தியார்த்திகளே! நீங்களெல்லோரும் பிரும்மசாரிகள். பெண்களை நீங்கள் பிரமித்தும், வெறித்தும் பார்த்ததை இன்று காலையில் நான் கண்டேன். வயதின் கிரமத்துக்கு அது சகஜம். வித்தையின் கிரமத்துக்கும் இங்கு நீங்கள் செய்திருக்கும் பிரும்ம சரியப் பிரமாணத்துக்கும் அது பாபம். அந்தப் பாபத்துக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளுங்கள். பிராயச்சித்தம் தெரியு மல்லவா?'' என்று வினவினார்.

''உபவாசம்'' என்று ஒரு முகமாகச் சொன்னார்கள் வித்யார்த்திகள்.

''ஒரு நாள் உபவாசம். உங்களுடன் நானுமிருப்பேன். அதற்காக இங்கேயே தங்குகிறேன்'' என்று தண்டி மங்கள சுலோகம் சொன்னார்.

சபை அத்துடன் கலைந்தது கடைசியில் ஸ்ரீராமபுண்ய வல்லபரும் தண்டியும் மட்டுமே அந்தக் கூட்டத்தில் இருந்தனர். ஸ்ரீராமபுண்யவல்லபர் ஏதுமே பேசவில்லை. தமது கூரிய கண்களைத் தண்டி மீது நாட்டினார். ''ஆசார்யரே! இது என்ன நாடகம்?'' என்று மட்டும் வினவினார். அவர் குரலில் எந்தவித உணர்ச்சியுமில்லை.

தண்டி மகாகவிஅருள்பொழிந்த தமது கண்களை அவருடைய விழிகளுடன் ஒரு விநாடி கலந்தார். ''இது அம்பிகையின் விசாரணை சபை. இங்கு நாடகத்துக்கு இடமில்லை'' என்றார் திடமாக.

ஸ்ரீராமபுண்ய வல்லபரின் விழிகள் அவரை மேலும் ஆராய்ந்தன. ''நடந்ததையெல்லாம் அப்படியே ஒப்புவித்தீர்கள்'' என்றார் போர் மந்திரி.

''இந்த மண்டபத்தில் சத்தியத்தை மறைப்பதற்கில்லை அப்படி மறைத்தால் வித்யா தேவி இங்கிருந்து மறைந்து விடுவாள் என்று நீண்ட காலமாக வழக்கு இருக்கிறது''

''எனக்கு என்ன கட்டளையோ?'' போர் மந்திரி வினவினார் இம்முறை சற்று அடக்கத்துடன்.

''போர் மந்திரிக்குக் கட்டளைவிட நான் யார்?''

''இங்கு தங்கக்கூடாதென்று மறைமுகமாகச் சொன்னீர்களே.''

''தங்கக்கூடாதென்று சொல்லவில்லை. இங்கிருந்து கொண்டு அரசியல் நடவடிக்கை கூடாதென்று சொன்னேன். இது நீண்ட நாள் சம்பிரதாயம்.''

''அந்தச் சம்பிரதாயத்தை முன்னிட்டுத்தான் அரசகுமாரன் சுரங்க வழி வந்தானோ?''

''அந்தச் சுரங்கவழி நேற்றுவரை என்னையும் எனக்கு முன்னிருந்த கடிகைத் தலைவர்களையும் தவிர யாருக்கும் தெரியாது. ஆனால் கங்கன் மகள் தெரிந்து கொண்டாள். பல்லவ ராஜகுமாரன் இளங்காளை. கங்கன் மகளும் அழகி. பாசம் அவளை அந்தப் பாபத்திற்கு ஏவிவிட்டது.''

ஸ்ரீராமபுண்யவல்லபர் சிறிது சிந்தித்தார். ''மகாகவி! இனி இவ்வித அபசாரம் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன். இப்போது என் மாளிகைக்குப் புறப்பட்டுப் போகிறேன். சாளுக்கியக் காவலர்களையும் எச்சரிக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார். சொன்னபடியே அடுத்த நாழிகைக்குள் கடிகையை, அறையைவிட்டு வெளியேறினார் போர் மந்திரி. ஆனால் உள்ளுக்குள் மட்டும் எண்ணமிட்டார்; ''கவி! நீர் கவியாக மட்டும் இருப்பது நல்லது. இல்லையேல் அரசகுமாரன் சுதந்திரம் அதிக நாள் நீடிக்காது.''

ஸ்ரீராமபுண்யவல்லபர் அத்தனை சுலபமாகச் சென்று விட்டதில் தண்டி மகாகவியும் ஏமாறவில்லை. தமது ஆஸ்தான அறைக்குச் சென்றதும் தீர்க்காலோசனையில் இறங்கினார். அவரைத் தொடர்ந்து வந்த ராஜசிம்மனிடம் சொன்னார் ''ராஜசிம்மா! ஸ்ரீராமபுண்ய வல்லபரின் போக்கு எனக்குப் புரியவில்லை. எதற்கும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இன்று நள்ளிரவு நீயும் சீனனும் கிளம்புகிறீர்கள்'' என்றார்.

''ஏற்பாடுகள் முடிந்துவிட்டனவா?'' என்றான் ராஜசிம்மன்.

''முடிந்துவிட்டன'' என்றார் தண்டி. அத்துடன் சொன்னார். ''இந்த அறைக் கோடியில் பெரிய மரப்பெட்டியில் உனக்கும் சீனனுக்கும் வேண்டிய மாறுவேடத் துணிகள் இருக்கின்றன. வடக்கே யிருந்து வந்திருக்கும் கோஸாயிச் சீடர்கள் போல் மாறிவிடுங்கள். நான் மறுபடியும் வருகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.



நாழிகைகள் ஓடின. தண்டி மகாகவி வித்யார்த்திகள் தங்கியிருந்த இடங்களுக்கெல்லாம் சென்று அவர்களைக் கவனித்தார், மாலைக் கோபத்தை விட்டுச் சாந்தத்துடனும் சகஜத்துடனும் பேசினார்: ''ஒரு நாள் உபவாசம் அதிகமில்லை, சாதாரணப் பரிகாரம். படுத்து உறங்குங்கள்'' என்று சிலரைச் சமாதானப்படுத்தினார். ''இதெல்லாம் உங்களுக்குப் பிற்காலத்தில் கீர்த்தியளிக்கும்'' என்று சிலருக்கு உற்சாக மூட்டினார். இப்படிக் கட்டிடம் கட்டிடமாகப் பார்த்து மாணவர் களுக்குத் தமது சீற்றம் அடங்கி விட்டதை நிருபித்துக் கொண்டே யாகசாலைக்கு வந்தார்.

அன்று யாகசாலை அடுப்பு உறங்கிக் கிடந்தது. உணவு தயாரிப்போர் வேலையின்மையால் உறங்க முற்பட்டிருந்தனர். அங்கிருந்து மெதுவாகக் கிளம்பிய தண்டி மகாகவி மனத்துக்குள் அம்பிகையைப் பிரார்த்தித்துக்கு கொண்டார். ''அம்பிகே நான் இதுவரை சத்தியத்தைத் தவிர வேறெதுவும் உன் சந்நிதானத்தில் சொன்னதில்லை. ஆனால் இன்று விசாரணை மண்டபத்தில், என் அறையில் நான் மயக்கமுற்று இருந்ததாகவும் கங்கன் மகள் போட்ட விஷப் பொடியில் நான் நினைவு இழந்துவிட்டதாகவும் அசத்தியம் பேசினேன். இதை மன்னிக்க வேண்டும் ஐந்துவித சமயங்களில் பொய் சொல்லச் சாஸ்திரம் அனுமதிக்கிறது. அசோக வனத்தில் உறைகையில் அனுமான் யாரென்று தனக்குத் தெரியாதென்று சீதையே சொல்லவில்லையா? மன்னித்துக் கொள்தாயே! காஞ்சியின் கதி அதோ கதியாகிவிடும் போலிருக்கிறது. கோயில் கட்டும் பல்லவ குலம் அழிந்து விடும் போலிருக்கிறது. அதனால்தான் சொன்னேன்'' என்று தனக்குள் மனமுருகிப் பேசிக் கொண்டே தனது ஆஸ்தான அறைக்கு வந்தார். அங்கிருந்த நிலை அவரை அயர வைத்தது.

அரசகுமாரன் கோஸாயிகளைப்போல் உடல் தெரியாமல் உடையணிந்து வாயையும் துணியால் மூடிக் கொண்டிருந்தான் அந்த உடைக்குள் நீள வாளொன்று மறைந்து கிடந்தாலும் வெளிக்குத் தெரியவில்லை. ஆனால் சீனன் மட்டும் விபரீதமாகக் காட்சியளித் தான. அவன் தனது உடையை மாற்ற இஷ்டப்படாமல் பிடிவாதம் பிடித்து, 'போதிசத்வரைப் பின்பற்றுபவர்கள் மட்டும் இந்த உடையை அணிய மாட்டார்கள்'' என்று கூறித் தரையில் உட்கார்ந்து விட்டான்.

''சீனச் சக்ரவர்த்தி என்ன உத்தரவிட்டிருக்கிறார் உனக்கு?'' என்று சீறினான் இளவரசன்.

''உங்களிடம் அடிமையாயிருக்கும்படி.''

''அடிமை எசமான் சொல்வதைக் கேட்க வேண்டும். இல்லையேல்...''

''இல்லையேல்...?''

''புத்தர் கோயில் கட்டமாட்டேன் இங்கு.''

அதற்குப் பின் மசிந்த சீனனைப் பழைய உடைகளை நீக்கச் சொல்லி மாறுவேடத்தை இளவரசனே போட்டுவிட்டான். பிறகு பழைய உடைகளை இருவரும் மூட்டை கட்டித் தோளில் மாட்டிக் கொள்ளவே, தண்டி மகாகவி புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அரசகுமாரன் வாயிற்படியை நோக்கிச் செல்வதைக் கண்ட தண்டி, ''ராஜசிம்மா! வழி அதுவல்ல, இப்படி வா'' என்று மீண்டும் சுரங்கப் பாதையைத் திறந்தார். ''இந்தச் சுரங்கப் பாதையில் மூன்று வழிகள் இருக்கின்றன. ஒன்று கடிகைத் தலைவரின் மாளிகைக்குச் செல்கிறது. இன்னொன்று தெற்கு வாயில் முன்பண்டபத்திற்குச் செல்கிறது. இன்னொன்று மகாராஜாவின் அரண்மனைக்குச் செல்கிறது. மூன்றும் காரணமாகப் பல தலைமுறைகளுக்கு முன்பு சிருஷ்டிக்கப் பட்டது'' என்று கூறி அறைக் கதவைத் தாளிடச் சீனனைப் பணித்தார். பிறகு ஒரு சிறு விளக்கை ஏற்றிக் கையில் ஏந்திய வண்ணம் நிலவறைப் பாதையில் மற்ற இருவரும் பின் தொடர இறங்கினார். பாதை விசாலமாகவே இருந்தது. பத்தடி தூரம் சென்றதும் வெறும் சுவர் போலிருந்த ஓர் இடத்தில் சிறிது அசைத்ததும் தெற்குப் புறத்தில் ஓடிய வழி ஒன்று தெரிந்தது. அதில் நுழைந்த தண்டி மகாகவி மறுபடியும் அந்த மர்மக் கதவை மூடினார் நீண்ட நேரம் தெற்கு நிலவறைப் பாதையில் நடந்த பிறகு தெற்கு வாசல் மண்டபத்தை அடைந்ததும் விளக்கை அணைத்து விட்ட மகாகவி மற்ற இருவரும் வந்ததும் மண்டபத்தின் ரகசியக் கதவை மூடிவிட்டு, தெற்கு வாசற் பெருங்கதவை நோக்கி நடந்தார்.

எங்கும் நிசப்தம் நிலவிக்கிடந்தது. வாயிலை முன்னும் பின்னும் காத்து நின்ற காவலரின் நடமாட்டமும் எச்சரிக்கைக் கூச்சலும் மட்டும் அந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டிருந்தன. மகாகவி ஒரு காவலனைத் தமது தண்டத்தால் சுட்டி அழைத்து, திட்டி வாசலைத் திறக்க உத்தரவிட அவன் இரும்புச் சாவியை எடுத்து மிக மெதுவாகத் திறந்தான். காடுவெட்டிகள் என்று பிரசித்தி பெற்ற பழைய பல்லவர்கள் பெரும் கனமான மரங்களைக் கொண்டு அந்த வானளாவிய சுவருக்குச் சரியாக அமைந்திருந்த அந்தப் பெரும் கதவுகளில் ஒன்றின் திட்டி வாசலே தனி வாசல் போலிருந்ததால் அந்த மூவரும் அதைத் தாண்டி நுழைவது அத்தனை பிரமாதமாயில்லை யாகையால், வாயிலைத்



தாண்டி சகஜமாகவே வெளியே சென்றனர். வெளியே காவல் புரிந்தோரும் தண்டி மகாகவியைப் பார்த்தவுடன் தலை தாழ்த்திப் போகவிட, மகாகவி தமது சீடர்களுடன் தமது இல்ல மிருந்த திசையில் சிறிது தூரம் சென்று பக்கத்துத் தெருவொன்றில் திரும்பியதும் சற்று நின்றார். ''ராஜசிம்மா! இனி இங்கிருந்து சந்துகன் வீட்டுக்குப் போ. மிகுந்த எச்சரிக்கையுடன் செல். அங்கு புரவிகள் சித்தமாயிருக்கின்றன உனக்குத் தேவையான மற்ற வசதிகளும் இருக்கும். நீ போக வேண்டிய இடம் கங்கவாடிச் சாலை. கடம்பர்களின் மேலை நாட்டுக்கும் பல்லவ ராஜ்யத்துக்குமிடையே இருக்கும் சுங்கவாடிக்குச் செல்லாதே. வடமேற்கில் இரண்டு காதம் சென்றதும் அங்கு பல்லவர்களின் பெரும் சத்திரம் இருக்கிறது. அங்கும் உனக்கு உதவி கிடைக்கும். ஜாக்கிரதையாகப் போ. அம்பாள் உனக்கு அருள் புரிவாள்'' என்று கூறினார்.

தலை வணங்கினான் இளவரசன். பிறகு சிறிது சந்தேகப்பட்டு, ''தாங்கள்?'' என்று விசாரித்தான்.

''மாளிகை சென்று மீண்டும் சுரங்கப் பாதை வழியாக ஆஸ்தான அறைக்குத் திரும்பிவிடுவேன்'' என்று அவனைச் சமாதானப்படுத்தி விட்டு வேகமாகத் தமது இல்லம் நோக்கி விரைந்தார்.

அவர் சென்ற திக்கை நோக்கித் தலை வணங்கிக் கைகூப்பிய ராஜசிம்ம பல்லவன் ஒருமுறை நன்றிப் பெருமூச்சு விட்டான். பிறகு சீனனை அழைத்துக் கொண்டு சந்துகன் வீட்டை நோக்கி நடந்தான். காஞ்சியின் பெரிய கொல்லனான சந்துகன் வீடு அம்மாநகருக்குக் கோடியிலிருந்தபடியால் அதை அடைய காஞ்சியின் பல பெருவீதி களைக் கடந்து செல்ல வேண்டியதாயிற்று பல்லவ இளவலுக்கு. கூடியவரை பெரிய வீதிகளைத் துறந்தும் சிறு சந்துகளில் நுழைந்தும் இரண்டாவது ஜாமம் முடியுந் தருவாயில் சந்துகன் வீட்டை அடைந்த ராஜசிம்மன், அந்த வீட்டில் நிசப்தம் நிலவுவதைக் கண்டான். உள்ளேயும் விளக்கு எதையும் காணோம். மெல்லச் சீனனைப் பின்வரப் பணித்து வாயிற் கதவைத் தட்டி, ''சந்துகா! சந்துகா!'' என்று மெல்ல அழைத்தும் பதிலில்லாததால் சந்தேகப்பட்டுக் கதவை மெல்லத் திறந்தான். கதவு திறந்தே இருந்தது. அடிமேலடி எடுத்து வைத்து இரண்டி உள்ளே நுழைந்ததும் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நடந்தது. ''நில்! அசையாதே!'' என்று ஒரு குரல் ஒரு மூலையிலிருந்து எழுந்தது: திடீரென்று நீண்ட வாளொன்று பல்லவ இளவலின் கழுத்தைத் தடவியது அதன் முனை சற்று லேசாக இளவரசன் ஊட்டியிலும் அழுந்த முற்பட்டது.

# 44. புதிய ஆபத்து

காஞ்சியின் பெரிய கொல்லன் சந்துகன் வீட்டை அடைந்ததுமே உட்புறத்தில் விபரீத அமைதி நிலவிக் கிடந்ததையும், விடி விளக்கேதுங்கூட வெளிப்புறத்தில் தெரியாததையும் கண்டவுடனேயே பெரிதும் சந்தேகத்தின் வசப்பட்ட பல்லவ இளவல் மிகுந்த எச்சரிக்கையுடனே கதவைத் திறந்தானானாலும், மிக மெதுவாகவே சந்துகன் பெயரை உச்சரித்தானானாலும், உள்ளே காலடி வைத்தபோது கூட அதிக ஜாக்கிரதையுடன் வாயிற்படியைத் தாண்டினானாலும், அத்தனை எச்சரிக்கையும் பயனற்றுப் போகும் முறையில் போர்வீரன் ஒருவனின் வாள் தன் கழுத்தைத் தடவுவதைக் கண்டதும், தண்டி மகாகவி நினைத்ததுபோல் ஸ்ரீராமபுண்யவல்லபர் கண்களில் மண்ணையாரும் தூவிவிடவில்லையென்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் எந்த அபாய நிலையையும் பொருட்படுத்திப் பழக்கமில்லாத காரணத்தால், ''யார் நீ? சாதுக்கள் மீது வாள் நீட்ட யார் கொடுத்தது அனுமதி?'' என்று சற்று உஷ்ணத்துடனும் அலட்சியத் துடனும் கேட்டான் பல்லவ இளவல்.

இந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பாராத காரணத்தாலோ என்னவோ வாளைப் பிடித்த வீரன் கூடத்திலிருந்த வேறொருவனை விளித்து, ''சரி, விளக்கை ஏற்று. இவன் யாரென்று பார்ப்போம்'' என்று உத்தரவிட்டானானாலும் தனது எச்சரிக்கையை மட்டும் சிறிதும் தளர்த்தாமலும், வாளின் நுனியைச் சிறிதும் இளவரசன் கழுத்தை விட்டு அகற்றாமலும் நின்றபடியே நின்றான் உள்ளிருந்தவன் கூடத்து விளக்கை ஏற்றியதும் அதன் வெளிச்சம் பல்லவ இளவலின் முகத்தில் விழவே வாள் பிடித்த வீரன் சிறிது குழம்பவே செய்தான். தன் வாள் வடக்கத்திக் கோஸாயி ஒருவன் கழுத்தைத் தடவி நிற்பதைக் கண்டதும் அவன் குழப்பமும் பிரமையும் பன்மடங்கு அதிகமாகவே, ''நீ யார்? உண்மையைச் சொல்'' என்று கடுமையுடன் கேட்கவும் செய்தான்.

''ஹரே ராம்! மகாதேவ்! இதென்ன கேள்வி?'' என்று முகத்தில் இகழ்ச்சியைக் காட்டிய இளவரசன் அதே சமயத்தில் தன் கூரிய கண்களைக் கூடத்துக்குள்ளும் செலுத்தினான். கூடத்தின் நடுத் தூணொன்றில் சந்துகன் கயிறு கொண்டு பிணைக்கப்பட்டிருந்தான். அவன் வாயிலும் துணி திணிக்கப்பட்டிருந்தது. அவனைச் சுற்றி வாள் தாங்கிய மூன்று சாளுக்கிய வீரர்கள் காத்து நின்றனர். அதைக் கண்டதும் உள்ளே சீற்றம் கொண்டாலும் வெளிக்குச் சற்று இரைந்தே நகைத்தான் இளவரசன்.



''ஏன் நகைக்கிறாய்?'' என்று சீறினான் வாளைப் பிடித்திருந்தவன்.

''மகாதேவ்! ஆயுதமற்ற ஒருவனைப் பிடிக்க நாலு வீரர்கள் தேவையா?'' என்று பேச்சுக் கொடுத்தான் பல்லவ இளவல்.

''இவனைப் பிடிக்க நாங்கள் வரவில்லை'' என்று சீறினான் வாள் பிடித்த வீரன்.

''அப்படியானால் கோஸாயியைப் பிடிக்க வந்தீர்களா?''

''இல்லை காஞ்சியின் இளவரசனைப் பிடிக்க வந்தோம்.''

''காஞ்சியின் இளவரசன் இந்தக் கொல்லன் வீட்டுக்குத் தான் வருவானா!''

''ஆம்; அவனும் அவனுடன் இன்னொருவனும் வருவான்.''

''யாரவன்?''

''ஒரு சீனன்.''

''சீனனா?''

''ஆம்.''

''அப்படியானால் அவன் எங்கே?'' என்று கேட்டான் இளவரசன்.

இந்தக் கேள்வியால் இன்னும் சற்றுக் குழப்பமடைந்த வீரன் இளவரசன் கழுத்தில் கத்தியை நாட்டிய வண்ணம் வெளிப்புறத்தில் கண்களை ஓட்டியும் அங்கு யாரும் காணாது போகவே, 'வேறு யாரையும் காணோமே' என்று தனக்குள் சந்தேகப்பட்டாலும், எச்சரிக்கை தவறாதவனாய், ''சரி! நீ உள்ளே செல்'' என்று இளவரசனுக்கு உத்தரவிட்டு, ''நீ வெளியே சென்று இவனுடன் யாராவது வந்திருக் கிறார்களா என்று கவனி'' என்று உத்திரவிட்டான் கூடத்திலிருந்த வீரனுக்கு

உத்தரவை நிறைவேற்ற அந்த வீரன் வெளியே சென்றதும் எந்தவிதத் துடிப்பையோ எதிர்ப்பையோ காட்டாத இளவரசன் மெல்ல, இடைவாயிற்படியைத் தாண்டிக் கூடத்துக்குள் நுழைந்தான். உள்ளிருந்த இரு வீரர்கள் வாட்களைக் கொண்டு அவனிரு புறமும் காவல் புரிந்தனர். இளவரசன் அவர்கள் வாட்களை லட்சியம் செய்யாமல் நேராகச் சந்துகன் கட்டப்பட்டிருந்த தூணிடம் சென்று அவன் விழிகளுடன் தன் விழிகளை ஒரு விநாடி கலந்து அந்தப் பார்வையிலேயே அவனை எச்சரித்துவிட, சந்துகன் கண்கள் சிறிதே பளிச்சிட்டன.

நாலைந்து விநாடிகளுக்குள் வெளியே சென்ற வீரன் திரும்பி வந்து, ''வெளியில் வேறு யாரையும் காணோம்'' என்று அறிவிக்கவே

முதலில் வாளை நீட்டி இளவலைத் தடுத்த வீரர்களின் தலைவன் சிறிது சிந்தித்துவிட்டு, ''அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. இங்கு வருபவர்களைப் பிடித்து வரத்தான் நமக்கு உத்தரவு. வந்ததற்கு இவனாவது கிடைத்தான். இவனைக் கொண்டு செல்வோம். சந்துகனையும் இழுத்து வாருங்கள். உண்மையைக் கக்கவைப்போம்'' என்று கூறவே, அந்த உரையாடலில் பல்லவ இளவல் புகுந்து, ''ஒரு வேளை, வரவேண்டிய இருவரும் நீங்கள் சென்ற பின் வந்தால் என்ன செய்வீர்கள்?'' என்றான்.

இதனால் வீரர்கள் குழப்பம் அதிகமாகவே, ''ஆம். ஆம். இவன் சொல்வதில் அர்த்தமிருக்கிறது. சற்றுப் பொறுத்துப் பார்ப்போம். இவனையும் பிடித்து எதற்கும் அந்த இன்னொரு தூணில் கட்டுங்கள்'' என்று மற்றோர் உத்தரவைப் பிறப்பித்தான்.

இளவரசனின் முகத்தில் இகழ்ச்சி அதிகமாகப் படர்ந்தது ''கோஸாயியைத் தொட்டீர்களோ நாளைக்கு நீங்கள் சிறையிலிருப்பீர்கள். நாளைக்கு நேரே நானே சென்று அரண்மனை ஆலாட்சி மணியடித்து ஸ்ரீராமபுண்யவல்லபரிடம் முறையிடுவேன்'' என்று சற்று அதட்டியும் மிரட்டியும் கூறினான்.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் பெயரைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த வீரர்கள் தலைவன் ஒரு விநாடி திகைத்தானானாலும் மறு விநாடி சமாளித்துக் கொண்டு, ''அவர் உத்தரவைத்தான் நாங்கள் நிறைவேற்றுகிறோம்'' என்று கூறுகையில் அவன் கண்கள் திடீரெனப் பளிச்சிட்டன. இளவரசனை ஆராய்ந்த அவன் கண்கள் கோஸாயியின் உடைக்குள் ஏதோ தடிப்பாகத் தெரிவதைக் கண்டு, ''இதென்ன, உன் உடைக்குள்ளே?'' என்று வினவிக் கொண்டே இளவரசன் வாளிருந்த இடத்தில் கையை வைத்தான்.

அடுத்த விநாடி மின்னல் வேகத்தில் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. வாளைவிட்டு வீரன் கை விலகித் தன் வாளைச் சோதனை செய்ய முற்பட்ட விநாடி இளவரசனின் எஃகுபோன்ற வலது கரம் முஷ்டி பிடித்து வீரனின் முகவாய்க் கட்டையில் பாய்ந்தது. ஏதோ இரும்பு உலக்கை பாய்ந்து விட்டதுபோன்ற அடியால் தலை தவறிய அந்த வீரன் நிதானிப்பதற்குள் இளவரசன் வாள் கோஸாபி உடைக் குள்ளிருந்து வெளி வந்து அவன் மார்பைத் தடவிக் கொண்டிருந்தது. இதைக் கண்ட மற்ற மூன்று வீரர்களும் உருவிய வாட்களுடன் இளவரசனை நோக்கி வர, ''சற்றும் அசையாதீர்கள். அசைந்தால் உங்கள் தலைவன் உயிர் சிட்டுக் குருவிபோல் பறந்துவிடும்'' என்ற இளவரசன் குரல் இருப்புச் சலாகை உராயும் தொனியில் வெளி வந்தது.



உருவிய வாள் பிடித்த வீரர்கள் அசைவற்று நின்றனர் அந்தச் சமயத்தில் கொல்லைப்புற வாயிற்படியிலிருந்து சங் சங் என்ற ஒலியும் நகைப்பும் கேட்கவே, அந்தப் பகுதியில் கண்களைச் செலுத்திய வீரர்கள் மற்றுமொரு கோஸாயி கையில் ஒரு மெல்லிய சிறு கத்தியை ஏந்திக்கொண்டு நிற்பதைக் கண்டார்கள். தாங்கள் இளவரசனின் பேச்சிலும் வேடத்திலும் சாகசத்திலும் ஏமாந்து விட்டதை உணர்ந்த வீரர்கள் பிரமை பிடித்து நிற்கையில் இளவரசன் சீனனை நோக்கி, ''யாங்சின்! பூநாகத்தை வீசாதே. இவர்கள் பிழைத்துப் போகட்டும்'' என்று ஆணையிட்டான்.

அந்த ஆணை பரம விசித்திரமாயிருக்கவே வீரர்கள் தலைவன் கேட்டான்: ''பூநாகமா! அதென்ன!''

''அந்தச் சிறு கத்தியில் விஷம் தீட்டப்பட்டிருக்கிறது. அது யார் மீத பாய்ந்தாலும் அவன் ஆயுள் இந்த உலகில் மூன்று நாட்களுக்குத் தான் இருக்கும்'' என்று விவரித்துவிட்டு மற்ற வீரர்களை நோக்கி, ''வாட்களைக் கீழே எறிந்து விடுங்கள்'' என்று உத்தரவிட்டான் பல்லவ இளவல்.

வேறு வழியின்றியும் தங்கள் தலைவன் உயிர் இளவரசன் கையிலிருந்ததையும் கண்ட வீரர்கள் வாட்களைக் கீழே எறிந்தனர். அந்த வாட்களைப் பொறுக்கி ஒரு மூலையில் போடும்படிக்கும், வீரர்களை ஒரு புறமாக ஒதுங்க நிற்க வைக்கவும் இளவரசன் உத்திரவிட, ஆணையை வெகு சீக்கிரமாகச் செய்து முடித்தான் யாங்சின். பிறகு தூணிலிருந்த சந்துகனும் விடுவிக்கப்படவே, இளவரசன் மேற்கொண்டு விடுவிடுவென்று உத்திரவிட்டான்: ''இவர்கள் புரவிகள் வாயிலில் இல்லாததால் பின்புறமிருக்கும். நமக்குப் புரவிகளிருந்தால் சரி, இல்லையேல் இவர்கள் புரவிகளில் மூன்றை எடுத்துக் கொள்வோம். ஒரு புரவியை அவிழ்த்து விரட்டிவிடு.''

இளவரசன் ஆணையை நிறைவேற்றச் சென்ற சீனன் வெகுதுரிதத்தில் திரும்பி வந்து விட்டான்.

''யாங்சின்! இவர்கள் உடைகளைக் களைந்துவிடு'' என்று இன்னோர் உத்தரவையும் பிறப்பித்தான் ராஜசிம்மன்.

''இது அநீதி!'' என்று கூவினான் வீரர்கள் தலைவன்.

''கவலைப்படாதே! வேறு உடை தருகிறோம்'' என்று இளவரசன் தைரியம் கூறினான்.

''வேறு உடை ஏது இங்கே?'' சீற்றத்துடன் வினவினான் சாளுக்கிய வீரர் தலைவன்.

இளவரசன் அவனுக்கு நேரிடையாகப்பதில் சொல்லாமல் சீனனை நோக்கி, ''யாங்சின்! இவர்களுக்கு வேறு எந்த உடையைக் கொடுக்கலாம்?'' என்று கேட்டு, ''சந்துகா! உன்னிடம் உள்ளே வேறு உடைகள் ஏதாவது இருந்தால் எடுத்து வா'' என்று உத்தரவிட்டான்.

உள்ளே செல்ல முயன்ற சந்துகனை 'சங் சங்' என்ற ஒலி கிளப்பியும், வேண்டாமென்று கைகாட்டித் தடுத்தும் சீனன் பல்லவ இளவலை நோக்கி, ''எசமான்! வேறு உடை எதற்கு? இவர்களைப் பாருங்கள். சற்று முன்பு இருந்ததற்கு எத்தனை சாதுக்களாகி விட்டார்கள்?'' என்று கூறி விஷமப் புன்முறுவல் செய்தான்.

''அப்படியானால்?'' என்று இளவரசன் துவங்கியதும், ''வீரர்கள் சாதுக்கள் உடையணிவது சகஜமாகிவிட்டது. இளவரசரான தாங்களே சாது உடை தரித்திருக்கும்போது இவர்களுக்கு நமது உடைகளைக் கொடுத்துவிடலாமே! கோஸாயிஉடை இவர்களுக்கு வெகு நேர்த்தியாயிருக்கும்'' என்று யோசனை சொன்னதோடு நில்லாமல் தான் அதுவரை மிகவும் கஷ்டப்பட்டுச் சகித்துக் கொண்டிருந்த நீண்ட கோஸாயி உடையையும் தலைக்குல்லாயையும் கழற்றினான். அடுத்த சில விநாடிகள் சாளுக்கிய வீரர்கள் இருவர் உடையைக் கழற்றித் தனது உடையையும் இளவரசன் உடையையும் வீரர் தலைவனுக்கும் இன்னொருவனுக்கும் அணிவித்துச் சற்று எட்ட நின்று பார்த்து மகிழ்ச்சிப் புன்முறுவல் செய்தான். பிறகு இளவரசனும் மற்ற இருவரும் சாளுக்கியவீரர்களின் உடையை அணிந்து கொண்டதும் சாளுக்கிய வீரர்களின் கை கால்களைச் சந்துகன் கயிறுகொண்டு பிணைத்தான். கடைசியாக அவர்களை நோக்கி இளவரசன் கூறினான்: ''உங்கள் வாயில் துணிகளை அடைக்க வில்லை. நாங்கள் சென்றதும் யாரையாவது உதவிக்கு அழைத்துக் கொள்ளுங்கள். உங்கள் போர் மந்திரிக்கு எனது வணக்கத்தைச் சொல்லுங்கள்'' என்று. அத்துடன் யாங்சின்னும் சந்துகனும் பின் தொடரப் புழக்கடை வழியாக வெளியே சென்றான். அடுத்த விநாடி மூன்று புரவிகள் வெகு துரிதமாகக் காஞ்சியின் கிழக்குத் திசையை நோக்கி விரைந்தன.

இளவரசன் கிழக்கு நோக்கிப் புரவியைச் செலுத்தியதைக் கண்ட யாங்சின் கேட்டான், ''எசமான்! ஆசார்யர் நம்மைக் கங்கவாடிச் சாலைக்கல்லவா செல்லச் சொன்னார்?'' என்று

''ஆம்.'' இளவரசன் ஏதோ யோசனையில் பதில் கூறினான்.

''அது வடமேற்கிலல்லவா இருக்கிறது?''

''ஆம்.''

''இந்த வழி?''



''சற்றுத் திரும்பி வடகிழக்கில் திரும்பினால் திரையனேரிக்குச் செல்லும்.''

இதைக் கேட்ட சீனன் மட்டுமுமின்றிச் சந்துகனும் திகைப் படைந்து, ''பிரபு! அங்குதானே சாளுக்கியரின் படைத்தளம் இருக்கிறது!'' என்று வினவினார்கள் ஒரே சமயத்தில்.

''ஆமாம்'' என்ற இளவரசன். ''சந்துகா! நாம் தப்பியது தெரிய அதிக நேரம் ஆகாது. காஞ்சியும் கங்கவாடிச் சாலையும் வெகு சீக்கிரம் சல்லடை போட்டுச்சலிக்கப்படும், நம்மைப் பிடிக்க. அவர்கள் நம்மை முற்றும் எதிர்பாராத இடம் சாளுக்கிய வீரர்கள் தளம். ஆகையால்தான் அங்கு செல்கிறோம்'' என்று விளக்கினான்.

''அங்கு நம்மை யாராவது அடையாளம் கண்டுகொண்டால்?'' என்று வினவினான் யாங்சின்.

''யாங்சின்! சாளுக்கிய வீரர்படை சுமார் ஒரு லட்சம் கொண்டது. பல பகுதிகளாகப் பிரிந்து கூடாரங்களில் தங்கியிருப் பார்கள். ஆகையால் அந்த லட்சம் பேர்களில் யார் இன்னாரென்பது தெரியாது. தவிர என்னை எந்தச் சாளுக்கிய வீரன் பார்த்திருக்கிறான்? உன்னை அடையாளம் கண்டு கொண்டால் தான் அபாயம். நீ எப்பொழுதும் என் பின்னால் வா. தலையை மட்டும் தூக்காதே'' என்று கூறினான்.

பிறகு பேச்சு ஏதுமில்லை மூவரிடமும். புரவிகள் வெகு துரிதமாகச் சென்றபடியால் மூன்றாம் ஜாம இறுதியில் ஒரு காத தூரத்தைக் கடந்து திரையனேரிக்கு இளவரசன் வந்ததும் புரவியைச் சற்று நிதானமாக நடத்தினான். திரையனேரி அலைபாய்ந்து கடல்போல் சப்தித்துக் கொண்டிருந்தது. அதன் நீண்ட அகன்ற கரையெங்கணும் கூடாரங்களும் ஓலை வீடுகளும் கண் கண்ட தூரத்துக்குக் காணப் பட்டன. கரைக்குக் கீழிருந்த நெடுஞ்சாலையை அடுத்திருந்த பல இடங்களிலிருந்த வீடுகளில் படைத் தலைவர்கள் இருந்தார்கள். எங்கும் பந்தங்கள் எரிந்து கொண்டிருந்ததன்றி எங்கும் பலமான காவலும் இருந்தது. வாளேந்திய சாளுக்கிய வீரர்கள் அந்த நெடுஞ்சாலையில் குறுக்கும் நெடுக்கும் போய்கொண்டிருந்தார்கள். இளவரசனும் மற்ற இருவரும் சாளுக்கியர் உடையில் இருந்ததாலும் அவர்களும் வாட்களை உருவிச் சென்றதாலும் அவர்களை யாரும் தடை செய்யவில்லை. கூடிய விரைவில் திரையனேரிப் பாதை முழுவதையும் கடந்து அது சாளுக்கிய நாடு செல்லும் நெடுஞ் சாலைக்கு வந்தது எதிரே வந்த மூன்று சாளுக்கிய வீரர்கள் அவர்களை நிறுத்தி, ''எங்கே செல்கிறீர்கள்? இந்தப் பக்கம் காவல் புரிய உத்தரவில்லையே?' என்று வினவினார்கள்,

''உத்திரவிருக்கிறது?'' என்றான் இளவரசன்.

''எங்களுக்கு உத்தரவில்லையே'' என்ற அந்தச் சாளுக்கிய வீரன், ''வாருங்கள்! எதற்கும் மூன்றாம் பிரிவின் படைத் தலைவரைக் கேட்போம்'' என்று அழைத்தான்.

அபாயம் நெருங்கிவிட்டதை சீனனும் சந்துகனும் உணர்ந்தார்கள். ஆனால் இளவரசன் மட்டும் எந்தவிதப் பதற்றத்தையும் காட்டவில்லை. ''நாங்கள் வருவதற்கில்லை. எங்களுக்கு மூன்றாம் பிரிவிலோ எந்தப் பிரிவிலோ அலுவலில்லை'' என்றான் நிதானமாக.

''அப்படியானால் யார் உத்தரவின் மேல் செல்கிறீர்கள்?'' என்று சீற்றத்துடன் வினவிய வீரன் வாளைக் குறுக்கே நீட்டி இளவரசனை மறித்தான்.

இளவரசனின் இதழ்களில் இகழ்ச்சிப் புன்முறுவல் அரும்பியது. ''அகற்று உன் வாளை. இல்லையேல் உன்னை இப்பொழுதே சிறையில் தள்ள ஏற்பாடு செய்வேன். ஸ்ரீராமபுண்ய வல்லபர் ஆணையில் செல்லும் வீரர்களைத் தடுக்க இங்கு யாருக்கு அதிகாரம்!'' என்றதும் அந்த வீரன் வாளை அகற்றி, ''இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?'' என்று வினவினான் குரலில் அச்சத்தைக் காட்டி.

''சொல்ல அவகாசமில்லை'' என்று அவன் சீறிக் கொண்டிருக்கும்போது இன்னொரு பெருத்த அபாயம் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. அதை முற்றும் எதிர்பாராத இளவரசன் இதயத்திலும் ஒரு விநாடி அச்சம் புகுந்தாலும் அதை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் திடமாகவும் அலட்சியமாகவும் புரவியில் அமர்ந்திருந்தான் அந்த அபாயமும் வெகு துரிதமாக அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. 'இதிலிருந்து தப்புவது அத்தனை சுலபமல்லவென்பதையும் திரும்பவும் தான் தண்டி மகாகவி வீட்டிற்கோ சாளுக்கியர் சிறைக்கோ செல்வது நிச்சயம்' என்பதையும் இளவரசன் சந்தேகமறப் புரிந்து கொண்டான்.

# 45. சத்யாச்ரயன் சொல்

அத்தகைய ஒரு புதிய ஆபத்து அந்த மூன்றாம் ஜாமத்தில் தன்னை எதிர்நோக்கி வருமென்றோ, அதுவும் காஞ்சிக்கு ஒருகாத தூரத்துக்கு அப்புறமுள்ள திரையனேரிப் பகுதியில் வருமென்றோ பல்லவ இளவல் சொப்பனத்திலும் நினைக்காததால் அவன் சற்று நேரம் புரவியில் சிந்தித்த வண்ணமே உட்கார்ந்து விட்டானானாலும் இரண்டு வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டே சற்றுத் தூரத்தில் எதிரே வந்த பவனியை நோக்கினான். தூரத்தே ஒரு புரவி வீரன் முன்னே பந்தமொன்றை ஏந்தி வர, அக்கம் பக்கத்தில் இரு புரவி வீரர்கள் வேல்களைத் தாங்கி வர விக்கிரமாதித்த சத்யாச்ரயன் சித்ரகாந்தத்தின கடிவாளக் கயிறுகளைக் கையிலேந்தி அனாயாசமாக வந்து கொண்டிருந்தான். முதன் முதலாகக் கடல் மல்லையின் ஆதிவராகன் கோயிலில் எந்த நிலையில் எந்த உடையில் காட்சி யளித்தானோ அதே உடையில், அதே நிலையில், அதே கம்பீரத்தில் அன்றும் காட்சியளித்தான் முதலாம் விக்கிரமாதித்தன். தூரத்தே வந்து, கொண்டிருந்தபோதும் பந்தத்தின் வெளிச்சத்தில் அவன் கண்கள் ஈட்டி முனைகளைப் போல் ஜொலித்துக் கொண்டிருந்தன. அவனது வெண் புரவியும் அவனது கம்பீரத்தை உணர்ந்தது போல அடிக்கடி சற்று தலையசைத்தும் மெல்லிய எஃகுக் கால்களை ஒரே சீராகத் தரையில் ஊன்றிப் படை வீரனைப் போல் நடைபோட்டும் வந்துகொண்டிருந்தது. அந்தப் பவனியைக் கண்ட பல்லவ இளவலின் இதயத்தில் பெரும் பொறாமை சூழ்ந்து கொண்டதால், ''இந்த மகாவீரன் பல்லவர்களுக்கு எதிரியாக முளைத்தானே!' என்று தனக்குள் பொருமிக் கொண்டான். 'அரண்மனை அம்சதூளிகா மஞ்சத்தில் உறங்காமல் அர்த்த ராத்திரியில் கிளம்பி மூன்றாம் ஜாமத்தில் திடீரென படைத்தளத்தை சோதனை பார்க்கும் அளவுக்கு விழிப்புள்ள வேந்தனை வெல்வது எத்தனை அசாத்தியம்?' என்றும் எண்ணிப் பெருமூச்சும் விட்டான்.

பல்லவ இளவல் இப்படிப் பலவாறாக எண்ணமிட்டுக் கொண்டேயிருக்கையில் எதிரே வந்த பவனியும் நெருங்கி விட்டதால் அவனை அதுவரை தடுத்து நின்ற சாளுக்கிய வீரர்கள் ஒருபுறமாக ஒதுங்கவே பல்லவ இளவலும் தனது சகாக்களுடன் ஒதுங்கி நின்றான். அவர்களிருந்த இடத்துக்கு வரும் வரையில் அப்புறமும், இப்புறமும் படைத்தளங்களைப்பார்த்து கொண்டு வந்த விக்கிரமாதித்தன் பல்லவ இளவல் ஒதுங்கி நின்ற இடத்தை அடைந்ததும் அங்கு முன்னும் பின்னுமாக நின்றிருந்தவர்களை ஒரே ஒரு விநாடி நோக்கினான். சித்ரகாந்தத்தை நிறுத்தி பிறகு வினவினான் ஒரு வீரனை நோக்கி; ''ஏன் இங்கு நிற்கிறீர்கள்?'' என்று.

சாளுக்கிய வீரன் மன்னனுக்குத் தலைவணங்கி, ''இவர்கள் மூவரும் சாளுக்கிய நாட்டுப் பொதுச்சாலைக்குச் செல்ல முயன்றார்கள். அங்கு போக உத்தரவில்லை. அதனால் தடுத்த நிறுத்தினோம்''என்று பணிவுடன் கூறினான்.

விக்கிரமாதித்தன் கூரிய விழிகள் ஒரு விநாடி ராஜசிம்மன் முகத்திலும் அவனது சகாக்கள் முகத்திலும் பதிந்தன. பிறகு அவன் முதலில் கேட்ட சாளுக்கிய வீரனையே திரும்பவும் கேட்டான். ''இவர்கள் என்ன சொல்கிறார்கள் அதற்கு?'' என்று.

''ஸ்ரீராமபுண்யவல்லபர் உத்திரவிருப்பதாகச் சொல்கிறார்கள்'' என்றான் வீரன் பதிலுக்கு.

''அப்படியானால் இவர்களை மறித்து நிறுத்துவானேன்?'' என்று வினவிய விக்கிரமாதித்தன், ''அவர்களைப் போக விடுங்கள். போர்மந்திரியின் உத்தரவை மறிக்க உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?'' என்று அதட்டி விட்டுத் தனது புரவியைத் தட்டிக் கொடுக்க, சித்ரகாந்தம் மீண்டும் ராஜநடை போட்டுச் சென்று விட்டது. சற்றுத் தூரம் சென்றதும் விக்கிரமாதித்தன் இதழ்களில் ஒரு புன்முறுவல் படர்ந்தது. அது அவன் முகத்திலும் பரவியதன்றிச் சற்று லேசாக நகைக்கவும் செய்தான் சத்யாச்ரயன்.

விக்கிரமாதித்தன் செய்கையால் பிரமித்துப் பல விநாடிகள் புரவயை நகர்த்தாமலும் அப்புறம் சென்றுவிட்ட மன்னனைப் பார்த்துக் கொண்டும் சிலையென உட்கார்ந்து விட்டான் பல்லவ இளவல்.

விக்கிரமாதித்தன் தன்னை இன்னாரென்று அடையாளம் கண்டு கொண்டானென்பதிலோ வேண்டுமென்றே தன்னை விட்டுச் சென்றிருக்கிறானென்பதிலோ சிறிதும் சந்தேகப்படாத பல்லவ இளவல், 'சத்யாச்ரயன் மனதில் என்னதானிருக்கும்?' என்று சிந்தித்து ஏதும் புரியாமல் விழித்தான் பல விநாடிகள். 'ஆதிவராகன் கோவிலில் ஒரே இரவில் பார்த்தது. அதுவும் இப்பொழுதுள்ள உடை சாளுக்கிய வீரர் உடை. அதனால் ஏமாந்திருப்பானோ எதிரி?'' என்ற சந்தேகம் ஒரு விநாடி மனத்தில் உதயமானாலும் அதை அடுத்த கணம் உதறிய பல்லவ இளவல். 'பரதவர் - உடையிலேயே என்னை அரை விநாடியில் புரிந்து கொண்ட சாளுக்கிய மன்னனுக்கு இந்த உடையில் ஒளிந்திருப்பவனைப் புரிந்துக் கொள்வதா ஒரு பிரமாதம்? இல்லை, இல்லை வேண்டுமென்றே என்னைப் போக விட்டிருக்கிறாய் விக்கிரமாதித்தா! அவ்வளவு அலட்சியம் என் வீரத்தில் உனக்கு. காலம் வரும், நீயும் நானும் சந்திக்க.'

இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்துவிட்ட இளவரசனை, அவனை வழிமறித்த சாளுக்கிய வீரனே இவ்வுலகுக்கு கொண்டு வரமுற்பட்டு, ''அரசர் உத்தரவு கிடைத்த பிறகு ஏன் நிற்கிறீர்கள், புறப்படுங்கள்'' என்று கூறியதன்றி, ''தடை செய்ததற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று வணங்கி வழிவிட்டுத் தனது மற்ற வீரர்களுடன் சென்றுவிட, யாங்சின் இளவரசனை நோக்கி, ''இனிப் புறப்படலாமே'' என்று ஊக்கினான். இளவரசன் கடிவாளத்தை இழுத்துப் புரவியை இயக்கினான் மெல்ல. மற்ற இருவரும் பின் தொடர்ந்தனர். திரையனேரிச் சாலையும் பொது நெடுஞ்சாலையும் கூடுமிடத்துக்கு வந்த பின்பும் புரவியை இளவரசன்



துரிதப்படுத்தினானில்லை. ''எசமான்! இனித் தாமதமாக செல்வதில் அர்த்தமுமில்லை. இந்தக் கண்டத்தில் தப்பியதால் வேறு கண்டம் இல்லையென்றும் சொல்ல முடியாது'' என்று பெரிய கொல்லன் சந்துகன் கூறியதையும் பல்லவ இளவல் காதில் வாங்கவில்லை. ''இத்தகைய விடுதலையை விட விக்ரமாதித்தன் என்னைச் சிறை செய்திருந்தால் எத்தனை மகிழ்ச்சியா யிருக்கும்' என்று நினைத்த வண்ணம் சாளுக்கிய நாடு செல்லும் பொது நெடுஞ்சாலைக்கு மெதுவாகவே வந்து வடமேற்கில் திருப்பினான் அவன் மனத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. விக்கிரமாதித்தன் காட்டிய அலட்சியம் அவன் மனத்தைச் சுக்குநூறாக உடைத்துக் கொண் டிருந்தது. இந்த நிலையில் அவன் மறுநாள் காலை நேரம் வரையில் பயணம் செய்தான். காஞ்சி மாநகர் அவனுக்குப் பின்னால் நகர்ந்து ஒரு காத தூரம் ஓடிவிட்டது.

மறுநாள் காலைகாஞ்சி மாநகரில் ராஜசிம்மனைவிட அவதிப் பட்டுக் கொண்டிருந்தார் ஸ்ரீராமபுண்யவல்லபர். அவரெதிரிலே கோஸாயிகளின் வேடத்தில் நின்றிருந்த இருவீரர்களையும் பார்த்து முகத்தில் பெரும் இகழ்ச்சியைப் படரவிட்டுக் கொண்டார் போர் மந்திரி. என்றும் எந்த உணர்ச்சியையும் காட்டாத அவர் முகம் உணர்ச்சி பிம்பமாகத் திகழ்ந்தது. ''நேற்ற ஏதாவது நாடகம் ஆடினீர்களா?'' என்று விசாரித்தார் அவர் இகழ்ச்சியும் சீற்றமும் தாண்டவமாடிய குரலில்.

வீரர்கள் தலைவன் முதலில் பதில் சொல்லவில்லை. ''எல்லாம் தாங்கள் சொன்னபடிதான் செய்தோம் சந்துகனைக் கட்டிப் போட்டோம். விளக்கை அணைத்திருந்தோம். ஆனால் தாங்கள் கூறியபடி இருவர் வரவில்லை. ஒருவர்தான் வந்தார். ஆதுவும்...'' என்று மென்று விழுங்கினான்.

''இந்த வேடத்தில் வந்தான்'' என்றார் போர் மந்திரி.

''ஆம். ஆனால் முதலில் அவன் வேடத்தைப் பார்க்கவில்லை. வாளை ஊட்டியில் அழுத்தினேன். வாளாவிருந்தான். வீரனா யிருந்தால் சண்டையிடுவானென்று நினைத்தேன். எந்த எதிர்ப்பையும் காட்ட வில்லை. விளக்கேற்றியபின், ''மகாதேவ்!'' என்று கோஸாயி போல் பேசினான்'' என்று கூறி நடந்ததை நடந்தபடி விவரித்தான்.

ஸ்ரீராமபுண்யவல்லபர் அதற்குமேல் பேசவில்லை. ''சரி சரி. போய் வாருங்கள்'' என்று எரிச்சலுடன் கூறிவிட்டு, ராஜசிம்மனின் சாகசத்தையும் சமயத்தில் எதையும் சாதிக்கும் சமயோசித புத்தியையும் உள்ளூர வியந்து கொண்டார். அத்துடன் தண்டி மகாகவியைப் பற்றி நினைத்துச் சற்று வித்வத் காய்ச்சலும் அவர் மனத்தைப் பீடிக்கவே,

'மகாகவி! தாங்களும் அரசியலில் புகுந்து விட்டீர்களா? இரும் இரும். கங்க நாட்டுப் போர் முடியட்டும், உமது ராஜ தந்திரம் எத்தனை தூரம் பல்லவர்களைக் காப்பாற்றும் பார்க்கிறேன்'' என்று உள்ளூரக் கறுவிக் கொண்டார். சற்றுச் சிந்தனைக்குப் பிறகு வெளியிலிருந்த காவல னொருவனை அழைத்து, ''சீக்கிரம் தூதுவனொருவனை இங்கு அனுப்பச் சொல். காஞ்சிப் படைத் தலைவனிடம்'' என்று உத்தர விட்டார். தூதுவன் வந்ததும், ''இருபது வீரர்களை அழைத்துக் கொள். வடமேற்குத் திக்கில் சென்று ஆங்காங்குள்ள சத்திரங்களில் புதிதாக யாராவது வந்திருக்கிறார்களா என்று கண்காணி. மாறுவேடம் தரித்தவர்களாயிருந்தாலும் சந்தேகப்பட்டாலும் அவர்களைச் சிறை செய்து அழைத்துவா. ஆங்காங்குள்ள நமது படைப் பிரிவுகளையும் எச்சரிக்க ஏற்பாடு செய்'' என்று விடுவிடுவென்று ஆணை பிறப்பித்தார். அத்துடன் தப்பிச் சென்றவர்களின் அங்க அடையாளங்களையும் விவரித்தார். அதைக் கேட்ட தூதன் பிரமித்தான். ''மந்திரியார் சொல்லும் மூவரில் இந்நகர் இளவரசன் அடையாளமும் இருக்கிறதே?'' என்று வினவினான் பிரமிப்பின் ஊடே.

''புலியைப் பிடிக்கத்தான் உன்னை அனுப்புகிறேன், பூனையைப் பிடிக்க அல்ல'' என்று சீறிய ஸ்ரீராமபுண்யவல்லபர் அவனை அனுப்பிவிட்டு மாளிகையைவிட்டு வெளியே வந்து ஒரு விநாடி எதிரேயிருந்த தண்டி மகாகவியின் மாளிகையை நோக்கினார். பிறகு ஒரு புரவியைக் கொண்டுவரச் சொல்லி ஆரோகணித்து விக்கிரமாதித்த மகாராஜா தங்கியிருந்த அரண்மனையை நோக்கி விரைந்தார்.

காஞ்சியின் மேலை ராஜ வீதியில் மதில்களுக்கிடையிலிருந்த அரண்மனையை அடைந்ததும் சிறு பிள்ளைபோல் புரவியிலிருந்து குதித்த ஸ்ரீராமபுண்யவல்லபர் அரண்மனையின் பல வாயில்களையும் கடந்து உள்ளே சென்று அரசரை உடனடியாகப் பேட்டி காண வேண்டுமென்று சொல்லியனுப்பினார். விக்கிரமாதித்தனும் போர் மந்திரியை அதிக நேரம் காக்க வைக்காமல் துரிதமாகவே தனது அந்தரங்க அறைக்கு வரவழைத்தான். அங்கிருந்த அரியாசனமொன்றில் அனாயாசமாகச் சாய்ந்து கொண்டிருந்த மன்னனுக்குத் தலை வணங்கிய போர் மந்திரி சற்று நேரம் அவன் முன்பு நின்றுகொண்டு சங்கடத்தால் கால்களைத் தரையில் அசைக்கவும் செய்தார்.

''உட்காருங்கள் அமைச்சரே'' என்று ஓர் ஆசனத்தை மன்னன் சுட்டிக் காட்டியும் உட்காரவில்லை ஸ்ரீராம புண்ய வல்லபர்.

''போர் மந்திரியின் முகத்தில் என்றுமில்லாத கவலை தெரிகிறது'' என்றான் விக்கிரமாதித்தன் குரலில் சற்று அனு தாபத்தைக் காட்டி.



''கவலைப்படும்படியான நிகழ்ச்சி நேர்ந்திருக்கிறது'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

''தங்களுக்கே கவலை தரும்படியான நிகழ்ச்சியாயிருந்தால் அது மிக முக்கியமான நிகழ்ச்சியாகத் தானிருக்க வேண்டும்'' என்று மன்னன் ஒப்புக் கொண்டான். அவன் குரலில் ஏதோ வழக்கத்துக்கு விரோதமான ஒலியொன்று இருப்பதாகப் போர் மந்திரிக்குப் புரிந்தாலும் அவர் புரியாதது போலவே காட்டிக் கொண்டு, ''எனக்கு மட்டுமல்ல; தங்களுக்கும் கவலை தரக்கூடிய நிகழ்ச்சி'' என்றார்.

''அப்படியென்ன நிகழ்ச்சியோ?''

''ராஜசிம்ம பல்லவன் தப்பி விட்டான்.''

''அப்படியா?''

''அந்தச் சீனனும் போய் விட்டான்.''

''அது சகஜம். இருவரும் இணைபிரியாத தோழர்கள்.''

அரசனுடைய அலட்சியம் ஸ்ரீராம புண்யவல்லபரின் நிதானத்தை அடியோடு கலைத்து விட்டதால், ''மன்னவா! இதனால் விளையக்கூடிய விளைகள் பல. ராஜசிம்மன் தன் தந்தையிடம் செல்கிறான். அதுவும் என் முக்கிய திட்டமொன்றை உடைக்கச் செல்கிறான். அது உடைந்துவிட்டால் கங்கநாட்டுப் போர் என்ன ஆகுமென்று சொல்ல முடியாது'' என்று கூறித்தான் வீரபாகுவிடம் கொடுத்த ஓலை விவரங்களையும் விளக்கினார்.

விக்கிரமாதித்தன் சிறிது சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான்: ''போர் மந்திரியின் இந்தத் திட்டத்தின் மர்மத்தை யாரேனும் ஊகித்திருக்க முடியுமா?''

''ஒருவர் இருக்கிறார். அனுமதி கொடுத்தால் அவரைச் சிறை செய்கிறேன்'' என்றார் ஸ்ரீராம்ண்ய வல்லபர்.

விக்கிரமாதித்தனின் கண்கள் அவரை ஏறெடுத்து நோக்கின நன்றாக. ''யாரவர்?'' என்ற கேள்வியில் சந்தேகம் ஏதுமில்லை குரலில்.

''தண்டி மகாகவி'' என்று மிக மெதுவாகக் கூறினார் போர் அமைதி மந்திரி.

அதைக் கேட்டும் அதிர்ச்சியடையவில்லை மன்னன். ''ஆசார்யரையா? கடிகையின் தலைவரையா?'' என்று வினவினான்.

''ஆம்.''

''அது எப்படி முடியும்?''

''கவி அரசியலில் நுழையும்போது அவர் கவியல்ல. அதுவும் சாளுக்கியர்களுக்கு எதிராக இயங்கும்போது அவர் சாமான்ய எதிரி.''

விக்கிரமாதித்தன் தன் அரியணையிலிருந்து எழுந்திருந்து அறைக்குள் இருமுறை நடந்தான். ''அவர் தான் ராஜசிம்மனைத் தப்ப வைத்தாரென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான் சட்டென்று அறை நடுவில் நின்று.

தண்டி மகாகவி கூட்டிய விசாரணை சபையைப் பற்றிய விவரங்களையும் அவர் தன்னைக் கடிகையிலிருந்து வெளியேற்றிய முறையையும் கூறிய ஸ்ரீராமபுண்யவல்லபர் ''அதற்குப் பிறகு அவர் நடவடிக்கைகளைக் கவனித்தேன். அவர் சீடர்கள் அடிக்கடி அவர் மாளிகையைவிட்டு வெளியே சென்றார்கள். காஞ்சி பெரிய கொல்லன் வீட்டுக்குப் பல முறை சென்றார்கள். அந்த இடத்தில் இளவரசனைச் சிறை செய்ய ஏற்பாடு செய்தேன். தவறிவிட்டேன்'' என்று தமது தோல்வியின் காரணமாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்.

விக்கிரமாதித்தன் போர் மந்திரியை அணுகி அவர் தோள் மீது தனது கையொன்றை வைத்தான். ''ஸ்ரீ ராமபுண்ய வல்லபரே! நீர் எனது மந்திரி மட்டுமல்ல. என் குருநாதர். அம்பிகா பக்தரான மகாகவி தண்டியின் பெருமைகளை நீங்களே எடுத்து எனக்கு உபதேசித்திருக்கிறீர்கள். தவிர அவர் பல்லவர்களின் ஆஸ்தான வித்வான். நீர் எனது நலனைப் பாதுகாப்பது போல் அவரும் தனது சீடனான ராஜசிம்மன் நலனைப் பாதுகாப்பது எப்படிக் குற்றமாகும்? தவிர நீங்களே சொல்ல வில்லையா காஞ்சி மக்கள் நம்மைத் தெய்வமாக மதிக்கும்படி நடந்துகொள்ள வேண்டுமென்று?'' என்று வினவினான்.

அவன் சொற்கள் ஸ்ரீராம்புண்ய வல்லபர் மனத்தில் நன்றாக உறைத்ததால் அவர் சினம் சற்றுக் குறைந்தது. அந்த சமயத்தில் மன்னன் மற்றோர் அதிர்ச்சியையும் அளித்தான். ''மந்திரி ராஜசிம்ம பல்லவன் தப்பியதற்கு நீரும் பொறுப்பாளியல்ல தண்டி மகாகவியும் பொறுப்பாளியல்ல'' என்றான் விக்கிரமாதித்தன்.

''வேறு யார் சொல்லுங்கள். தண்டிக்கிறேன்'' என்றார் போர் மந்திரி வேகத்துடன்.

''அந்தக் குற்றத்தைப் புரிந்தவன் நான்தான்'' என்று சர்வ சகஜமாகக் கூறிய விக்கிரமாதித்தனின் இதழ்களில் இளநகை விரிந்தது.

அதைக் கேட்ட ஸ்ரீராமபுண்யவல்லபர் வாயடைத்து நின்றார். ''தாங்களா! மன்னரா!'' என்று தட்டுத் தடுமாறிக் கேட்டார்.

''ஆம் போர் மந்திரி! சாளுக்கியர் உடையில் சென்ற ராஜசிம்மனை மூன்றாம் ஜாமத்தில் திரையனேரிக்கருகில் சந்தித்தேன். ஆனால் அடையாளம் தெரியாதது போல வந்துவிட்டேன்'' என்ற மன்னன் நகைத்தான்.



'ஏன் மகாராஜா ஏன்?'' என்று வினவினார் போர்மந்திரி.

''பல்லவ இளவலை முன்பு மாமல்லபுரத்தில் சந்தித்தேன். அப்பொழுது சிறை செய்யவில்லை. போர்க்களத்தில்நேருக்கு நேர் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறேன். விக்கிரமாதித்த சத்யாச்ரயன், சொன்ன சொல் தவறமாட்டானென்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்ற மன்னன் மீண்டும் அரியணையில் அமர்ந்து லேசாகப் புன்முறுவல் செய்தான்.

ஏதும் பேச வழியின்றி அங்கிருந்து வெளியேறிய ஸ்ரீராம புண்யவல்லபர் மன்னன் நிலையை ஒப்புக் கொள்ளவில்லை 'மன்னன் எதிரி விஷயத்தில் தர்மசாஸ்திரம் பேசுகிறான். ஆனால் தர்ம சாஸ்திரம் வேறு; போர் வேறு. இனி நான் தனி நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான்' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டதன்றி அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் தொடங்கினார். யாரையும் நடுங்க வைக்கும் நடவடிக்கைகள் அவை. அந்த நடவடிக்கைகளின் பலனைப் பல்லவ இளவல் அடுத்த இரண்டாவது நாளே அனுபவித்தான்.

## 46. போர் மந்திரியின் திட்டம்

விக்கிரமாதித்த சத்யாச்ரயன் மாளிகையிலிருந்து திரும்பிய ஸ்ரீராமபுண்யவல்லபர் தமது மாளிகையில் அந்தரங்க அறையில் தீர்க்காலோசனையுடன் நெடுநேரம் உலாவினார். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டவர்போல் தாமே தலையை அசைத்துக் கொண்டு வெளியேயிருந்த காவலனொருவனை அழைத்து, ''சீக்கிரம் நமது தளபதியை அழைத்து வா'' என்று உத்தரவிட்டு அங்கிருந்த மஞ்சமொன்றில் அமர்ந்து ஒரு கரும் பலகையில் ஏதேதோ கோடுகளை வரைந்து சில இடங்களில் புள்ளிகளையும் வைத்தார். மேலும் அவர் யோசித்துச் சில திருத்தங்களையும் செய்து, ''இது அநேகமாகச் சரியாகத்தான் இருக்கும். எதற்கும் தளபதியையும் கலந்து கொள்வோம்'' என்று தமக்குள் சொல்லிக்கொண்டார். போர் அமைதி மந்திரியின் அழைப்புக் கிடைத்த மாத்திரத்தில் ராஜவீதியின் கோடி மாளிகையிலிருந்த சாளுக்கியத் தளபதி வெகு துரிதமாக அங்கு வந்து சேரவே, ஸ்ரீராமபுண்யவல்லபர் தமது முன்பு வணங்கி நின்ற தளபதியை எதிர் ஆசனத்தில் உட்காரச் சொல்லி, தமது கையிலிருந்த கரும்பலகையைத் தளபதியிடம் கொடுத்தார். நீண்டநேரம் அதில் கண்களை நாட்டிய தளபதி, ''காஞ்சியிலிருந்து கங்க நாடு வரை உள்ள சாலைகள் சத்திரங்கள் அனைத்தும் இருக்கின்றன'' என்று அறிவித்தான். அவன் சொன்னது சரியென்பதற்கு அடையாளமாகத் தலையசைத்த

போர் அமைதி மந்திரி ''இந்தக் காஞ்சியிலிருந்து செல்லும் நெடுஞ்சாலை இரண்டு காத தூரத்தில் மூன்றாகப் பிரிகிறது'' என்று சுட்டிக்காட்டினார்.

கரும்பலகையிலிருந்த கோடுகளில் மீண்டும் கண்களை ஓட்டிய சாளுக்கியத் தளபதி, ''ஆம். மூன்றும் வெவ்வேறு திக்கில் செல்கின்றன'' என்றான்.

''திக்கில் அதிக வேறுபாடில்லை. எல்லாம் வடமேற்கை நோக்கித்தான் செல்கின்றன. இடது கோடியிலிருக்கும் சாலை நமது தலைநகருக்குச் செல்கிறது. மத்தியிலிருப்பது கங்க நாட்டைச் சுற்றி வளைத்துச் செல்கிறது'' என்று விளக்கினார்.

இதையெல்லாம் போர் அமைதி மந்திரி தன்னிடம் எதற்காகச் சொல்கிறார் என்பதை அறியாத தளபதி அவர் கூறுவதை அப்படியே ஒப்புக் கொண்டான். அந்தச் சாலைகளில் படைகளைப் பலமுறை நடத்திச் சென்றிருக்கும் தளபதி, சாலைகளைப் பற்றிய விவரங்களை முழுக்க முழுக்க அறிந்திருந்தாலும் அந்த அறிவைப் போர் மந்திரி முன்பு காட்டுவது சரியல்லவென்ற காரணத்தால், ''ஆம். ஆம் மூன்று கிளைச் சாலைகளும் அப்படித்தான் ஓடுகின்றன'' என்று புதிதாக ஏதோ கற்றுக் கொண்டவனைப் போல் கூறினான்.

ஸ்ரீராமபுண்யவல்லபர் மேலும் கூறினார்: ''இந்த மூன்று சாலைகளிலும் உள்ள தர்ம சத்திரங்களையும் வீரர்கள் தங்கும் தள விடுதிகளையும் குறிக்கப் புள்ளிகள் வைத்திருக்கிறேன்'' என்று.

''ஆம் ஆம். சுமார் இருபது புள்ளிகள் இருக்கின்றன அவற்றில் இரண்டு சமண மடங்களும் காணப்படுகின்றன'' என்று சுட்டிக் காட்டினான் தளபதி.

''அவை சமண மடமா, சைவ மடமா, வேறு பொது தர்ம சத்திரமா என்பதைப் பற்றி அக்கறையில்லை தளபதி. இந்த இருபது இடங்களிலும் நமது வீரர்கள் சென்று கவனிக்கவேண்டும். அந்த இடங்களிலும் புதிதாக யார் வந்தாலும் விசாரிக்க வேண்டும். சந்தேகமிருந்தால் சிறை செய்ய வேண்டும்'' என்று திட்டவட்டமாக அறிவித்தார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

''இத்தனை இடங்களையும் கண்காணிக்கவும், விசாரிக்கவும் நானூறு வீரர்களாவது தேவை'' என்றான் தளபதி.

''நானூறு என்ன, ஐந்நூறு வீரர்களாயிருந்தாலும் பாதகமில்லை. உடனடியாகத் தனித் தனிப் பிரிவாக அனுப்பி வையுங்கள். இந்த இருபது இடங்களை நாம் வளைத்து விட்டால், காஞ்சியிலிருந்து



செல்லும் மூன்று சாலைகளும் நம் கைவசமிருக்கும். எதற்கும் நானே முன்னதாக இருபது வீரர்களை அனுப்பியிருக்கிறேன்'' என்று கூறினார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

தளபதி சிறிது சிந்தித்தான். பிறகு, துணிவை வர வழைத்துக் கொண்டு கேட்டான், ''யாரைச் சிறை செய்ய இத்தனை ஏற்பாடு? ஒரு வேளை பரமேசுரவர்மனின் ஒற்றர்கள் எல்லைகளில் நடமாடு கிறார்களா?'' என்று.

''இல்லை, இல்லை. ஒற்றர்களைப் பிடிக்க இத்தனை ராணுவ வீரர்கள் தேவையில்லை. மூன்று பேர்களைச் சிறை செய்ய வேண்டும். மூவரும் காஞ்சியிலிருந்து நேற்று தப்பிச் சென்று விட்டார்கள். அதுவும் ஸ்ரீராமபுண்யவல்லபர் வீசிய வலையிலிருந்து தப்பி விட்டார் களென்றால், அவர்கள் சாமர்த்தியத்தைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை'' என்ற போர் மந்திரி, ''அதிலும் ஒருவர் மிக முக்கியமானவர். அவர் தப்பி விட்டால் கங்க நாட்டுப் போர் நம் திட்டப்படி நடக்காது'' என்றும் குறிப்பிட்டார்.

அப்படிப்பட்ட ஒரு தனிப்பட்ட மனிதன் போரின் போக்கையே மாற்ற முடியுமென்று ஸ்ரீராமபுண்யவல்லபர் நினைப்பதை எண்ணிப் பெருவியப்படைந்தான் தளபதி. அந்த வியப்பை முகத்திலும் காட்டி, ''அப்படியும் ஒரு மனிதன் இருக்கிறானா?'' என்று வினவினான்.

''இருக்கிறான்.''

''யாரென்று நான் அறியலாமா?''

''அறியலாம். பல்லவ இளவல் ராஜசிம்மன்.''

இதைக் கேட்டதும் தளபதி அசைவற்றுச் சிலைபோல் நின்று விட்டான் பல விநாடிகள்.

தளபதி கேட்டான்: ''காஞ்சியைச் சுற்றியுள்ள நமது படைகளை மீறி எப்படி, எந்த வழியில், இளவரசர் தப்ப முடிந்தது?''

''அங்குதான் இளவரசன் சாமர்த்தியம் இருக்கிறது. சாளுக்கிய வீரர் உடையில் திரையனேரிப் பக்கம் சென்றான் தனது சகாக்களுடன். எங்கு நாம் அவர்களைத் தேடினாலும் நமது படைத் தளத்தில் தேடமாட்டோமென்று தெரியும் இளவரசனுக்கு'' என்று விளக்கிய போர் மந்திரி, ''தப்பியவர் மூவரும் பெரு வீரர்கள். சீனனும் காஞ்சியின் கொல்லனும். வாள் வீசுவதில் இணையற்றவர்கள். இளவரசன் வீரத்தைப் பற்றி நான் விவரிக்கத் தேவையில்லை'' என்றும் கூறினார்.

தளபதி நீண்டநேரம் சிந்தனையில் இறங்கினான். ''காஞ்சி எல்லைச் சாலைகளைத் தாங்கள் கூறியபடி அடைத்துவிடுகிறேன்

சத்திரங்களை மட்டுமின்றி சத்திரங்களை அடுத்துள்ள கிராமங் களையும் சல்லடை போட்டுச் சலிக்க ஏற்பாடு செய்கிறேன். யார் எந்த வேடத்தில் வந்தாலும் சோதனையிடக் கட்டளையிடுகிறேன்'' என்ற தளபதி, தன்னால் அது முடியும் என ஆவேசத்துடன் பேசினான்.

''நல்லது, நல்லது'' என்று கூறிச் சிரக் கம்பம் செய்த ஸ்ரீராமபுண்யவல்லபர், ''இந்த விஷயம் நமக்குள் இருக்கட்டும். வேறு ஒருவருக்கும் தெரியவேண்டாம்'' என்றும் சொன்னார்.

தளபதி சந்தேகத்துடன் தனது கண்களை உயர்த்திப் போர் அமைதி மந்திரியை நோக்கி, ''நானூறு வீரர்களை எப்படி ரகசியமாக அனுப்ப முடியும்?'' என்று வினவினான்.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் இதழ்களில் இகழ்ச்சி நகை படர்ந்தது. ''நான் ஏற்கனவே இருபது வீரர்களை அனுப்பியிருக் கிறேன். நான் சொல்லும் வரையில் அது தெரியுமா உனக்கு?'' என்று வினவினார் அந்த இகழ்ச்சி முறுவலின் ஊடே.

''தெரியாது.'' தளபதி ஒப்புக் கொண்டான்.

''ஆகவே, நானூறு வீரர்களையும் ஒன்றாக அனுப்பாதீர்கள். அதுவும் ஒரே படைப் பிரிவிலிருந்து அனுப்பாதீர்கள். ஒவ்வொரு படைப் பிரிவிலிருந்தும் தனித்தனியாக இருபது வீரர்களைப் பொறுக்கி அவர்கள் கடமையை உணர்த்தி அனுப்புங்கள். இதனால் யாருக்கும் எந்தச் சந்தேகமும் ஏற்படாது'' என்றார் போர் அமைதி மந்திரி.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் கூரிய அறிவையும் எதையும் திட்டமிட்டுச் செய்யும் திறமையையும் நினைத்துப் பெரிதும் வியந்தான் தளபதி. அத்துடன் அவரை வணங்கிப் புறப்படவும் செய்தான். ''தளபதி! சற்றுப் பொறும்'' என்று தடுத்த ஸ்ரீராமபுண்ய வல்லபர், ''இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாமென்று முன்னமே சொன்னேன்'' என்றார்.

இதை எதற்காகத் திரும்பவும் சொல்கிறார் என்பதை அறியாத தளபதி, ''ஆம், சொன்னீர்கள்'' என்றான்.

''யாருக்கும் என்பது மன்னரையும் குறிக்கும்'' என்ற ஸ்ரீராமபுண்யவல்லபர் தளபதியை உற்று நோக்கினார்.

''மன்னருக்குக்கூடத் தெரியக் கூடாதா?'' என்ற தளபதியின் முகத்தில் கிலி படர்ந்தது.

''இந்தச் சிறு விஷயத்தை மன்னர் காதில் போட வேண்டிய அவசியமில்லை.''



பல்லவ இளவரசனைச் சிறை செய்வது சிறு விஷயமல்லவே!''

''அல்ல. ஆனால் இப்பொழுது மன்னர் வேறுபெரும் போர்த் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார். அதில் இதைக் குறுக்கே விட்டுக் குழப்பக் கூடாது'' என்று போர் அமைதி மந்திரி திட்ட வட்டமாகக் கூறினார்.

இந்தப் பதில் கூடத் தளபதியின் மனத்துக்குச் சாந்தியை அளிக்கவில்லையென்பதை அவன் முகம் தெளிவாகக் காட்டியது. ஆனால் போர் அமைதி மந்திரியின் கட்டளையை மீறுவது பெரும் அபாயம் என்பதையும் உணர்ந்ததால் பரம சங்கடத்துக்கு உள்ளானான். ஆகவே முடிவில், ''நாளைக்கு ஏதாவது கேள்வி வந்தால் மன்னரிடம் தாங்கள் தான் சமாதானம் சொல்ல வேண்டும்'' என்று கூறினான்.

''அஞ்சாதே! என்னை மீறி உனக்கு எந்தச் சங்கடமும் வராது. வந்தால் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று தளபதிக்கு அபயம் கொடுத்த போர் அமைதி மந்திரி, ''தளபதி! பல்லவ இளவரசனை நாம் சிறைப்பிடிக்க முயல்வது நமது சொந்த நன்மைக்கல்ல. நமது மன்னர் நிறுவ நினைக்கும் சாளுக்கிய சாம்ராஜ்ய நன்மைக்காக. மன்னர் கனவை உடைக்கக் கூடியவன் ராஜசிம்மன் ஒருவன்தான். அவன் அடுத்த பதினைந்து நாட்களுக்குச் செயல்படாத முறையில் தடுக்க வேண்டும். கங்க நாட்டுப் போர் எந்தச் சமயத்திலும் துவங்கும் நிலையி லிருக்கிறது. பரமேசுவரவர்மன் பெரும் படை திரட்டியிருக்கிறான். பரமேசுவரவர்மன் மகாவீரன். போரில் இணையற்றவன். ஆனால் எதிர்பாராத சமயத்தில், இடத்தில், பெரும் போர் நிகழ்ந்தால் அதை சமாளிக்க அவனால் முடியாது. அவன் மகன் ராஜசிம்மனால் முடியும். ஆகவே தந்தையிடம் தனயனைப் போகவிடக்கூடாது புரிகிறதா?'' என்று மனம் திறந்து பேசினார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

''தந்தைக்கில்லாத அத்தனை வல்லமை தனயனுக்கு எங்கிருந்து வந்தது? எந்தப் போரிலும் இளவரசன் ஈடுபட்டதாகத் தெரிய வில்லையே!'' என்றான் தளபதி.

''நான் எந்தப் போரில் ஈடுபட்டேன்?'' என்று வினவினார் போர் அமைதி மந்திரி.

''ஈடுபடாவிட்டாலும் திட்டமிடுகிறீர்கள்.''

''அப்படி இளரவசனும் திட்டமிடக் கூடியவன். திட்டமிட்டுப் படைகளை நடத்தவும் வல்லவன். அவனைப்பற்றிய பெயர் சாளுக்கிய நாட்டிலேயே அடிபடுகிறது. நமக்கு முக்கிய எதிரி ராஜசிம்மன் தான், பரமேசுவரவர்மனல்ல.''

இதைக் கேட்ட தளபதி, ''மந்திரியவர்கள் சொற்படி இன்னும் இரண்டு நாட்களில் பல்லவ இளவலைச்சிறை செய்து இங்கே கொண்டு வருகிறேன்'' என்று உறுதி கூறி, தன் உறுதியைக் குறிக்கத் தனது இடையில் இருந்த வாளின் மேல் கையை வைத்தான்.

''சற்றுப் பொறு'' என்றார் போர் மந்திரி.

''வேறு ஏதாவது உத்தரவு உண்டா?'' என்று வினவினான் தளபதி.

''உண்டு.''

''உத்தரவிடுங்கள்.''

''காஞ்சிக்கு இளவரசனைக் கொண்டு வரவேண்டாம்.''

பெரு வியப்பு மீண்டும் படர்ந்தது தளபதியின் முகத்தில். ''வேறு எங்கு சிறை வைப்பது?'' என்று வினவினான்.

''சாளுக்கிய நாட்டுக்கும் கங்க நாட்டுக்கும் மேற்கில் சாளுக்கிய எல்லையில் மேற்கு மலைத் தொடர் இருக்கிறது.''

''ஆம்.''

''அதன் அடிவாரத்தில் அடர்ந்த காடு இருக்கிறது.''

''ஆம்.''

''அதில் சாளுக்கிய மன்னர்கள் வேட்டையாடுவதற்காக ஒரு மாளிகை கட்டியிருக்கிறார்கள்.''

''தெரியும். கோட்டை போன்றது.''

''அதில் அடைத்து வைக்க ஏற்பாடு செய்யுங்கள். அந்த இடத்தில் யாரும் இளவரசனைத் தேடமாட்டார்கள். கண்டு பிடித்தாலும் அந்த மாளிகைக்குள் யாரும் புக முடியாத ஏற்பாடுகள் இருக்கின்றன.''

தளபதி, ''சித்தம். உத்தரவை நிறைவேற்ற என்னாலானவரை முயலுகிறேன்'' என்று கூறினான்.

''அங்கு இளவரசனுக்கு எந்தக் குறையும் வைக்கக்கூடாது. சகல உபசாரங்களும் நடக்கட்டும். பதினைந்து நாட்களுக்குப் பிறகு இளவரசனை விடுதலை செய்து அனுப்பி விடுங்கள்'' என்று கூறி, தளபதி போகலாமென்று விடை கொடுத்தார். தீவிர சிந்தனையுடன் வெளியேறினான் தளபதி.

உள்ளேயிருந்த ஸ்ரீராமபுண்யவல்லபரும் தீவிர சிந்தனையில் தானிருந்தார். 'என்ன இருந்தாலும் ராஜசிம்மன் கூரிய அறிவுள்ளவனாயிற்றே. அந்தச் சீனனும் லேசுப்பட்டவனல்லவே. அவர்கள் அகப்பட்டால் கங்க நாடு பிழைக்கும். இல்லையேல் என் திட்டம் தூளாய்ப் பறந்து விடும்' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார். இப்பொழுது ராஜசிம்மன் எங்கிருப்பான்? எத்தனை தூரம் போயிருப்பான்?' என்றும் வினவிக் கொண்டார்.



அவர் நினைத்த அதே நேரத்தில் தண்டி மகாகவி தமது மாளிகையிலிருந்து, தளபதி போர் மந்திரியின் மாளிகையில் நுழைந்ததும் பிறகு கவலை படர்ந்த முகத்துடன் வெளிப் போந்ததையும் கவனித்தார். விஷயத்தை ஓரளவு ஊகித்தும் கொண்டார். பிறகு உள்ளே சென்று நறுக்கு ஓலை ஒன்றை அவசரமாக எழுதி. அதைத் தமது சீடனொருவன் கையில் கொடுத்து அவன் காதில் ரகசியமாக ஏதோ ஓதினார். ஓலையைப் பெற்றுக் கொண்ட சீடன் கடிகையை நோக்கி விரைந்தான்...

# 47. அதிசய ரக்ஷை

மூன்றாம் ஜாமத்தின் முடிவில் திரையனேரிக்கு அருகாமையில் விக்கிரமாதித்தனைச் சந்தித்துவிட்டு அவன் காட்டிய அலட்சியத்தின் காரணமாக மிகுந்த மனவேதனையுடன் பொது நெடுஞ்சாலையை அடைந்த பல்லவ இளவல் தனது புரவியைத் துரிதப்படுத்தாமல் வெகு நிதானமாகவே நடத்தினான்.

சற்றுத் துரிதமாகச் சென்றால் பொழுது புலருவதற்கு முன்பாக தண்டி மகாகவி குறிப்பிட்ட பல்லவர் சத்திரத்தை அடைந்து விடலாமென்றும், அப்படி அடைந்துவிட்டால் பல்லவ இளவலைச் சாலையில் சதா உலாவும் சாளுக்கிய வீரர்களோ மற்றவர்களோ அடையாளம் கண்டு கொள்வதைத் தவிர்க்கலாமென்றும், சீனனும் சந்துகனும் மாறி மாறிச் சொன்ன யோசனையை இளவரசன் காதில் வாங்கிக் கொண்டானில்லை அவன் நினைப்பெல்லாம் விக்கிரமாதித்தனையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. மிக நிதானமும் கம்பீரமும் தனது வாள் பலத்திலும் படை பலத்திலும் மிக நம்பிக்கையுமுள்ள ஒரு மகத்தான மன்னன் வசம் காஞ்சி மண்டலம் சிக்கி விட்டதை எண்ணியும், இத்தனை பெரிய எதிரியைத் தனது தந்தை எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்று நினைத்தும் ஏங்கிய இளவரசன், ''இந்த மாவீரனுடன் அந்த ஸ்ரீராமபுண்ய வல்லபரும் சேர்ந்திருக்கிறாரே. இவ்விருவரின் சேர்க்கையில் விளையும் ராஜதந்திரத்தை உடைப்பதும் எளிதல்லவே' என்று மனத்தில் நினைத்த வண்ணம் ''இருக்கட்டும். இந்த இருவர் பலத்தையும் நானும் ஒரு கை பார்க்கிறேன்'' என்று கறுவிக் கொண்டு புரவியின் கடிவாளத்தை இழுத்து, சற்று அதன் நடையை அரை ஓட்டமாக்கினான். அதிக நேரம்

மௌனம் சாதிக்க முடியாத சீனன் மட்டும் சம்பாஷணையைத் துவக்கி, 'பல்லவர் சத்திரம் காஞ்சியில் இருந்து இரண்டு காத தூரமிருப்பதாக ஆசார்யர் சொன்னாரே?'' என்றான் மெதுவாக, இளவரசன் புரவிக்குப் பக்கத்தில் தனது புரவியைச் செலுத்தி.

அந்தக் கேள்வி இளவரசனை இந்த உலகத்துக்குக் கொண்டு வரவே அவன் சற்றுத் திரும்பி சீனனை நோக்கை ''ஆம், சொன்னார் அந்தச் சத்திரமும் நான் அறியாததல்ல'' என்று பதில் கூறினான்.

''இரண்டு காதத்தைப் பொழுது விடிவதற்குள் அடைய வேண்டுமானால் இந்த வேகத்தில் பயணம் செய்தால் போதுமா?'' என்று வினவினான் சீனன்.

பதிலுக்கு இளவரசன் எதிரிலும் பக்கங்களிலும் வந்தும் போய்க் கொண்டுமிருந்த சாளுக்கிய வீரர்களைச் சுட்டிக் காட்டி, ''எதிரிகள் எந்த வேகத்தில் போகிறார்கள் கவனியுங்கள். அவர்களைவிட நாம் வேகமாகச் சென்றால் சந்தேகம் ஏற்படும். நிறுத்தி நம்மை விசாரித்தால் இம்முறை நம்மைத் தப்ப வைக்க மீண்டும் சாளுக்கிய மன்னன் வரமாட்டான்'' என்று கூறினான்.

இளவரசன் எத்தனையோ யோசனையிலும் எச்சரிக்கையை மட்டும் கைவிடவில்லை என்பதை உணர்ந்து கொண்ட சந்துகன் அதற்கு மேல் கேள்வி எதையும் கேட்கவில்லை. இளவரசனே மேற்கொண்டு சொன்னான்: ''யாங்சின்! சந்துகா! நாம் இப்பொழுது சாளுக்கியர் உடைகளில் இருக்கிறோம். ஆகவே நெடுஞ்சாலையைக் காப்பதிலும் கண்காணிப்பதிலும் நமக்கும் பங்கு உண்டு. அந்த நிலையில் நடந்து கொண்டால்தான் நாம் எந்தவிதத் தடங்கலுமின்றிப் பல்லவர் சத்திரத்தை அடைய முடியும்.''

''இத்தனை எச்சரிக்கையையும் மீறித் தங்களை யாராவது அடையாளம் கண்டு கொண்டால்? யாராவது சாதாரணப் பிரஜை அல்லது வழிப்போக்கன் பார்த்துத் தங்களுக்குத் தலை வணங்கினாலோ 'இளவரசர் வாழ்க' என்று கூறினாலோ என்ன செய்வது? தங்களை அறியாத குடிமகன் யாரும் காஞ்சி மண்டலத்தில் கிடையாதே?'' என்று சந்தேகம் கிளப்பினான் சந்துகன்.

சந்துகன் கூறியதில் மிகுந்த பொருள் இருப்பதை உணர்ந்த சீனனும், ''ஆம் எசமான்! அந்த ஆபத்து இருக்கிறதே'' என்று ஒத்துப் பாடினான்.

இளவரசன் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''நீங்கள் சொல்வது முற்றும் உண்மை. ஆனால் பின்னால் ஏதோ ஓர் ஆபத்து ஏற்படக் கூடும் என்பதற்காக முன்னாலேயே ஆபத்தைத் தேடிக் கொள்வது அறிவாளிகளுக்கு அழகல்ல. இப்பொழுது நமது புரவிகளை அசுர வேகத்தில் தட்டிவிட்டுச் சாளுக்கிய வீரர்களின் சந்தேகத்துக்கு இலக்காவதைவிட, பின்னால் ஏற்படக் கூடிய ஆபத்தை அப்பொழுது சமாளிக்க முயல்வதுதான் சரி'' என்று கூறிய இளவரசன் நெடுஞ்சாலையைக் காவல் புரியும் சாளுக்கியக் காவலர்களைப் போலவே அரை ஓட்டமும் அரை நடையுமாகப் புரவியை நடத்திச் சென்றான். இதன் விளைவாக அவர்கள் நன்றாகப் பொழுது புலர்ந்த பின்பே பல்லவர் சத்திரத்தை அடைய முடிந்தது.



பல்லவ மன்னர்கள் பரம்பரையாக ஒவ்வொருவர் ஆட்சிக் காலத்திலும் பல சத்திரங்களைப் பல சாலைகளில் கட்டியிருந்தாலும் காஞ்சியின் வடமேற்கில் சாளுக்கிய நாடு செல்லும் நெடுஞ்சாலை யில் இரண்டு காத தூரத்திலிருந்த அந்த ஒரு சத்திரமே பல்லவ சத்திரம் என்ற சிறப்புப் பெயருடன் விளங்கி வந்தது.

மற்றச் சத்திரங்களைப் போல் இந்தப் பல்லவர் சத்திரம் மட்டும் நெடுஞ்சாலை ஓரத்தில் கட்டப்படாமல் ஒரு பெரும் சோலைக்குள் கட்டப்பட்டிருந்தபடியால் அதை அடையப் பல சிறிய பாதைகள் நெடுஞ்சாலையிலிருந்து உள்ளே ஓடிக் கொண்டிருந்தன. அந்தச் சிறிய பாதைகளும் அதிகச் சிறியதாயில்லாமல் ரதங்களும் இரட்டை வரிசைப் புரவிகளும் செல்லும்படியாக அமைக்கப்பட்டிருந்த படியால், நெடுஞ்சாலையிலிருந்தே அந்தச் சத்திரத்தை யாரும் பார்க்க முடிந்தது. சத்திரமும் சத்திரமாக இல்லாமல் பெரும் அரண்மனை போல் காட்சியளித்தது. அதன் வாயிலில் ஒரு பெரிய வளைவுப் புகுமுகமிருந்ததன்றி உயரே இரண்டு மாடிகளும் பல அறைகளும் காணப்பட்டன. தவிர அக்கம் பக்கங்களில் புரவிகளைக் கட்டவும், ரதங்களை நிறுத்தவும் பெரும் சார்புகள் இறக்கப் பட்டிருந்ததன்றி அவற்றுக்கான வசதிகளும் செய்யப்பட்டிருந்ததால் அந்தப் பல்லவர் சத்திரம் மன்னர் வம்சத்தாரும் மற்றப் பெரும் படைத் தலைவர்களும் மட்டும் தங்குவதற்காக ஏற்பட்டதுபோல் தோன்றினாலும், அதன் முன் தாழ்வரைகளில் மூட்டை முடிச்சுகளுடன் உட்கார்ந்திருந்த புத்த பிக்ஷுக்களும் இந்து சந்நியாசிகள் கூட்டமும் அது யாருக்கு புகலிடமென்பதையும் அங்கு மன்னர் குலத்துக்கும் ஆண்டிகள் கூட்டத்துக்கும் எந்தவித வித்தியாசமும் கிடையாது என்பதும் புலனாயிற்று.

அத்தகைய பல்லவர் சத்திரத்துக்குள் புகுந்து வாயிலில் புரவிகளிலிருந்து குதித்த இளவரசனையும் அவன் சகாக்களையும் உள்ளிருந்தே கவனித்துவிட்ட சத்திரத்துத் தலைவன் ஓடோடியும் வந்து, ''புரவிகளைப் பக்கச்சார்புகளில் கட்டவேண்டாம், பின்புறம் கொண்டு

வாருங்கள்'' என்று கூறி, சத்திரத்தைச் சுற்றி வழிகாட்டிக் கொண்டு முன்னால் சென்றான். சத்திரத்தின் பின்புறத்தில் புரவிகளுக்காகப் பெரும் கொட்டடியொன்று இருந்ததைக் கண்ட இளவரசன், ''இதை நான் பார்த்ததில்லையே. இது எப்பொழுது கட்டப்பட்டது?'' என்று வினவினான்.

''சாளுக்கியர் ஆதிக்கம் ஏற்பட்ட பிறகு பக்கச் சார்புகளில் அவர்கள் புரவிகளே கட்டப்பட்டமையால், நம்வர்கள் வந்தால் ஒன்று இருக்கட்டுமென்பதற்காக நான்தான் இதைக் கட்டினேன் இதில் தங்கள் புரவிதான் முதல் கிருகப் பிரவேசம் செய்கிறது'' என்று கூறித் தலை வணங்கினான் சத்திரத் தலைவன்.

''இதுவும் சாளுக்கியர் புரவிதான்'' என்று கூறிய இளவரசன் இளநகை புரிந்தான்.

''இருப்பினும் தாங்கள் ஆரோகணித்த பிறகு அது தங்கள் புரவிதான். வாருங்கள்'' என்று கூறி இளவரசன் கையிலிருந்த கடிவாளத்தைத் தன் கையில் வாங்கிக் கொண்டு அதைத்தானே தளையில் பிணைத்தான். பிறகு, மற்ற இருவரையும் புரவிகளைப் பிணைக்கச் சொல்லவிட்டு இளவரசனையும் மற்ற இருவரையும் பின்புற வழியாகவே சத்திரத்துக்குள் அழைத்துச் சென்று, முதல் மாடியிலிருந்த ஓர் அறைக்குள் இளவரசனையும் அக்கம் பக்கத்து அறைகளில் சீனனையும், சந்துகனையும் தங்க வைத்த சத்திரத் தலைவன் இளவரசனை நோக்கி, ''இந்த அறைகளின் பக்கம் யாரும் வரமாட்டார்கள். உங்கள் நீராட்டம் முதலியவற்றுக்கும் ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிடைபெற்றுச் சென்றான்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அறையிலிருந்த வெளிப்போந்த இளவரசன், அங்கு கண்ட காட்சியைப் பார்த்துப் பிரமித்தான் அந்த மாடியின் மற்ற அறைகளின் வாயில்களில் சாதுக்கள் பலர் உட்கார்ந்து ஜபம் செய்துகொண்டிருந்தார்கள். சிலர், ஆசனங்கள் போட்டுக் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் சத்திரத்தின் இடை வெளியில் சூரியனை விழுந்து விழுந்து எழுந்து எழுந்து நமஸ்காரம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் சொன்ன ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரம் வானைப் பிளந்து கொண்டிருந்தது. அந்த அதிசயச் சூழ்நிலையைக் கண்டு பிரமித்து நின்ற இளவசரனோடு சீனனும் சந்துகனும் வந்து சேர்ந்து கொண்டார்கள். அவர்களும் இளவரசன் பிரமிப்பில் பங்கு கொண்டதால் சீனன் கேட்டான், ''எசமான். இந்தச் சத்திரம் சாமியார்களுக்காகக் கட்டப்பட்டதா?'' என்று!

''அவர்களும் இந்தச் சத்திரத்தில் தங்கலாம். அவர்களுக்குக் கீழ்த்தளத்தில் பெரும் கூடங்கள் ஒழித்துவிடப்பட்டிருக்கின்றன.



ஆனால் இந்த மாடியில் இளவரசர்களையும், மந்திரிகளையும் இதரநாட்டு ராணுவப் பிரமுகர்களையும் தான் தங்க அனுமதிப்பது வழக்கம்'' என்றான் இளவரசன்.

''இப்பொழுது அந்த வழக்கம் மாறிவிட்டதோ?'' என்று சந்துகன் வினவினான்.

அந்தச் சமயத்தில் இரண்டொரு சாதுக்கள் அவர்களை வெறுப்புடன் நோக்கவே, ''சரி, நமது அறைக்குச் செல்வோம். சத்திரத்துத் தலைவனைக் கேட்டால்தான் இதற்கு விளக்கம் கிடைக்கும்'' என்று கூறிய இளவரசன், மற்ற இருவரையும் அவரவர் அறைக்குச் செல்லவிட்டுத் தானும் தனது அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான். சுமார் இரண்டு நாழிகைக்குப் பிறகு சத்திரத்துத் தலைவன் வந்து இளவரசன் அறைக் கதவைத் தட்டினான். இளவரசன் கதவைத் திறந்தும் உள்ளே நுழைந்து கதவைத் சாத்திக்கொண்ட சத்திரத்துத் தலைவன் ஒரு சிறு மூட்டையை இளவரசன் முன்பு வைத்தான்.

''இது என்ன!'' என்று வினவினான் இளவரசன்.

''இதில் இரண்டு வித உடைகள் இருக்கின்றன'' என்றான் சத்திரத்துத் தலைவன்:

''இரண்டு வித உடைகளா?''

''ஆம். சாதுக்கள் அங்கி ஒன்று. உள்ளே கங்க நாட்டு வீரர் அணியும் உடை ஒன்று.''

''முன்னேற்பாடு பலமாயிருக்கிறதே.''

''முன்னேற்பாடு என்னுடையதல்ல.

''வேறு யாருடையது?''

''ஆசார்யரிடமிருந்து நேற்றிரவே ஒரு சீடன் வந்தான். சற்றுமுன்பு இன்னொருவன் வந்தான். இந்த இருவருக்குமிடையில் ஸ்ரீராமபுண்யவல்லபரால் அனுப்பப்பட்ட இருபது வீரர்கள் இங்கு வந்து சத்திரத்தைச் சோதனை போட்டார்கள்.''

இதைக் கேட்ட இளவரசன் சிறிது நேரம் சிந்தனையிலிறங் கினான். ''அந்த இருபது வீரர் எங்கே இப்பொழுது?'' என்று வினவவும் செய்தான்.

''நீங்கள் இங்கு இல்லையென்று தெரிந்ததும் வெகு துரிதமாகத் தங்களைத் தேடிச் சென்றுவிட்டார்கள்'' என்று அறிவித்தான் சத்திரத்துத் தலைவன்.

சற்று நிதானித்த இளவரசன். ''இந்த இடத்தில் சாதுக்களை அனுமதிப்பது உண்டா?'' என்று வினவினான்.

''சாதாரணமாகக் கிடையாது. ஆனால் ஆசார்யர் உத்தரவின் மேல் இது அனுமதிக்கப்பட்டது. சாதுக்களின் மத்தியில் தங்களை யாரும் தேட மாட்டார்கள். அப்படியே தேடினாலும் உயிருடன் வெளியே போக மாட்டார்கள்'' என்ற சத்திரத்துத் தலைவன் இளவரசனை நோக்கி விஷமப்புன்முறுவல் கொண்டான்.

இளவரசன் உண்மையைப் புரிந்து கொண்டாலும் புரியாதது போல், ''அப்படியானால் இவர்கள்...'' என்று ஏதோ கேட்க முற்பட்டான்.

பதில் சொல்ல முந்திக் கொண்ட சத்திரத்துத் தலைவன், ''எல்லாரும் சாதுக்களல்ல'' என்று சுட்டிக் காட்டினான். அத்துடன் சொன்னான், ''இந்த மூட்டைக்குள்ளிருக்கும் நீள அங்கிகளை நீங்களும் அணிந்து உங்கள் சகாக்களையும் அணிந்து கொள்ளச் சொல்லுங்கள். நீராட்ட அறைக்கு வரும் போது இந்த உடையில் வாருங்கள். நீராட்டத்துக்கு ஏற்பாடு செய்து விட்டேன்'' என்று கூறிச் சென்றான்.

அவன் சொற்படி சாதுக்கள் வேடத்தில் நீராட்ட அறைக்குச் சென்ற இளவரசனும் அவன் சகாக்களும் நீராடித் திரும்பிய பிறகு அந்த உடையிலேயே வெளித்தாழ்வரையில் பல்லவ இளவல் ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்தைச் சொல்லி சூரிய நமஸ்காரம் செய்தான். மற்ற இருவருக்கும் சுலோகத்தில் ஓர் அட்சரமும் தெரியாத காரணத்தால் ஏதோ முணுமுணுத்துக் கொண்டு இளவரசன் நமஸ்காரம் செய்தபோது தாங்களும் தரையில் விழுந்தும் எழுந்தபோது எழுந்தும் போலி ஜபம்செய்தார்கள். பிறகு அவர்கள் அவரவர் அறையை அடைந்ததும் அவர்களுக்குக் காலை உணவை அனுப்பிவைத்தான் சத்திரத்துத் தலைவன். அதே சமயத்தில் மற்ற சாதுக்களுக்கும் சத்திரக் கட்டளை வழங்கப்பட்டது.

பிறகு அன்று மாலைவரை சத்திரத்துத் தலைவன் அவர்கள் இருந்த அறைகளின் பக்கமே வரவில்லை. கால காலத்தில் அவர்களுக்கு ராஜாங்க உணவு படைக்கப்பட்டது. சகல உபசாரங்களும் செய்யப்பட்டன. பகலவன் மறைந்து இரவு ஏறிய பின்பே சத்திரத்துத் தலைவன் இளவரசன் அறைக்குள் வந்து, ''இளவரசே! இன்னும் ஒரு நாழிகைக்குள் நீங்கள் புறப்படுகிறீர்கள். கங்க நாட்டு வீரர் உடைகளை அணிந்து கொள்ளுங்கள். நீங்கள் கையாளும் பட்டாக்கத்தியையும் ஆசார்யர் அனுப்பியிருக்கிறார். அதையும் அணிந்து கொள்ளுங்கள். சமயத்தில் அதை எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிச் சென்றான்.



சரியாக முதல் ஜாமம் முடியும் தருவாயில் பட்டாக்கத்தியுடன் வந்த சத்திரத் தலைவன். இளவரசன் அணிந்திருந்த கங்கநாட்டு உடையைக் கண்டு ஆமோதித்து, ''இதோ உங்கள் கத்தி அணிந்துகொள்ளுங்கள்'' என்று அதை நீட்டினான். அதைக் கச்சையில் கட்டிக் கொண்ட இளவரசனைத் தன் பின்னால் வரச் சொன்ன சத்திரத் தலைவன் சீனனையும் சந்துகனையும் கங்க நாட்டு உடையில் இளவரசனைத் தொடர்ந்து வரக் கட்டளையிட்டான். அவன் சொற்படி நடந்த மூவரையும் சத்திரத்துப் பின்புறப் புரவிச் சாலைக்கு அழைத்துச் சென்றான் சத்திரத்துத் தலைவன். அங்கு இன்னும் பத்து கங்கநாட்டு வீரர்கள் தயாராகப் புரவிகளில் அமர்ந்திருந்ததைக் கண்ட இளவரசன், ''இவர்கள் யார்?'' என்று வினவினான்.

''சற்று முன்பு சாதுக்களாயிருந்தவர்கள். தங்கள் தந்தையின் படையைச் சேர்ந்து எதிரி ஆக்ரமிப்புக்குப் பிறகு இங்கு தலை மறைவாக இருந்தவர்கள். இப்பொழுது தங்கள் மெய்க்காலவர்'' என்று விளக்கினான் சத்திரத்துத் தலைவன். ''இதில் எதுவும் என் சாமர்த்தியமல்ல, எல்லாம் ஆசார்யர் ஏற்பாடு. இனி நீங்கள் கங்க நாட்டுச் சாலையில் சென்று உங்கள் தந்தையிடம் சேருங்கள். இது ஆசார்யரின் உத்தரவு'' என்று கூறி இளவரசனின் புரவியைக் கொட்டடியிலிருந்து அவிழ்த்து வந்தான். சீனனும் சந்துகனும் தங்கள் புரவியையும் அவிழ்த்து வந்ததும் அனைவரும் புரவிகளில் ஏறிக் கொண்டதும் இளவரசனும் ஏறப் போனான்.

அவனைத் தடுத்த தலைவன், ''ஒரு நிமிடம் இப்படி வாருங்கள்'' என்று இளவரசனைத் தனியாக அழைத்துச் சென்று தனது மடியிலிருந்த ஒரு சிறு பொருளை எடுத்து இளவரசன் கையில் கொடுத்தான். அதைக் கண்ட இளவரசன் ஸ்தம்பித்து, ''இதை யார் கொடுத்தது?'' என்று சீற்றத்துடன் கேட்டான்.

''சொல்ல அனுமதியில்லை. இருப்பினும் ஒன்று சொல்ல அனுமதி உண்டு'' என்றான் சத்திரத்துத் தலைவன்.

''என்ன அது?'' என்று கேட்டான் இளவரசன்.

''இது தங்களைக் காக்கும் ரக்ஷை'' என்று சர்வ சாதாரணமாகக் கூறினான் சத்திரத்துத் தலைவன்.

இளவரசன் மீண்டும் பையிலிருந்த அந்தப் பொருளை உற்று நோக்கினான். சத்திரத்துப் பின்புறப் பந்தத்தின் வெளிச்சத்தில் அது ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்தது. அதன் பிரகாசம் அவனுக்கு ஒரு புறம் ஆத்திரத்தையும் இன்னொரு புறம் ஆர்வத்தையும் அளிக்கவே எந்த உணர்வு தன்னை ஆட்கொள்கிறது என்பதை அறியாமல் திணறினான் பல்லவ இளவல். அப்பொருளோ அவன் திணறலைப் பார்த்து நகைத்தது.

# 48. சத்திரத்துப் போர்

நெருப்புத் துண்டம் போல் சிவந்த நெடுங்கதிர்களை வீசிய மாணிக்கக் கல் புதைத்த அந்த மோதிரத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்துத் திணறிய பல்லவ இளவலுக்கு அதை அனுப்பியது யாரென்பதில் சந்தேகம் சிறிதுமில்லையாயினும், சம்பிரதாயத்துக்காகவே, ''இதை யார் கொடுத்தது?'' என்று சீற்றத்துடன் வினவ, ''சொல்ல அனுமதியில்லை'' என்று சத்திரத் தலைவன் கூறிவிடவே, பல விநாடிகள் அந்த மோதிரத்தையே உற்றுக் கவனித்துக் கொண்டு நின்று விட்டான் இளவரசன். அது கங்க நாட்டு அரச குடும்பத்தின் முத்திரை மோதிரமென்பதும் அதை ரங்கபதாகாதேவி தன்னைக் காக்கும் ரக்ஷையாக அனுப்பியிருக்கிறாளென்பதையும் உணர்ந்த பல்லவ இளவல், கேவலம் ஒரு பெண்ணின் உதவியால் தான் காரியங்களைச் சாதிக்கவேண்டிய அவசியம் நேர்ந்ததைப் பற்றிப் பெரும் ஆத்திரம் கொண்டான். 'முதலில் தண்டி மகாகவியின் ஓலைச் சுவடியை எடுத்துச் சுரங்கவழியில் என்னைத் தப்புவித்து அனுப்பினாள் கடிகைக்கு. இப்பொழுது தனது முத்திரை மோதிரத்தை அனுப்பிக் கங்கர்களிடமிருந்து பாதுகாப்பளிக்கிறாள். பெண்ணின் முந்தானை மறைவில் மாமன்னன் பரமேசுவரவர்மன் புதல்வன் மறைந்து தப்பவேண்டும்?' என்ற ஆத்திரத்தில் அந்த மோதிரத்தைக் கை விரல்களால் ஒரு முறை புரட்டிப் பார்த்தான் பல்லவ இளவல்.

அதிலிருந்த சிவப்புக்கல் கங்க நாட்டு முத்திரை பாணியில் பல பட்டைகளாகத் தீட்டப்பட்டிருந்ததால் ஒவ்வொரு பட்டையிலும் ரங்கபதாகாதேவியின் சுந்தர முகம் அவனைப் பார்த்தது. ஒவ்வொரு முகத்திலும் அந்த மோகனாங்கியினுடைய ஒவ்வொரு பாவம் காட்சியளித்தது. 'உங்களுக்காக என் உயிரையே கொடுப்பேனே, இந்த முத்திரை மோதிரத்தைக் கொடுத்ததுதானா ஒரு பிரமாதம்?' என்று கூறியது ஒரு முகம். 'என்னிடம் காவ்யாதர்சத்தின் காதல் இலக்கணம் படிக்கலாம், மோதிரந்தான் உதவாதோ?' என்று கேட்டு இளமுறுவல் கூட்டியது இன்னொரு முகம். 'கடிகையில் அறையில் மைவிழியுடன் என்னையும் கட்டியணைத்து என்னைக் குழைய அடித்தீர்களே, அந்தச் சொந்தம் இந்த ரக்ஷையைப் பார்த்ததும் எங்கு போய்விட்டது?' என்று கேட்டு வெட்கநகை கோட்டியது இன்னொரு முகம். அந்த முத்திரை மோதிரத்திலிருந்து பல பட்டைகளில் ரங்கபதாகா தேவியின் பல முகங்கள் பல பாவங்களைக் காட்டின. சில பாவங்களில் சோகமிருந்தது, சிலவற்றில் காதல் சொட்டி வழிந்தது, சிலவற்றில் காதலும் நாணமும் கலந்த கேலி இருந்தது. அனைத்தும் இணைந்த



நகைப்பு இருந்தது மோதிரத்தில் பொதுவாக. மோதிரம் அந்த விரலுக்காகச் செய்யப்பட்டது போல் கச்சிதமாக இருக்கவே, 'தேவியின் விரலும் என் விரலும் ஒரே அளவா?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டு 'தேவி! உனக்கும் எனக்கும் பொருத்தம் பலமாகத் தானிருக்கிறது என்று பதிலும் சொல்லிக் கொண்டான். பிறகு சொன்னான் சத்திரத் தலைவனிடம், ''இந்த ரக்ஷை கங்கர்களிடமிருந்து மட்டுமல்ல, சாளுக்கியர்களிடமிருந்தும் எனக்குப் பாதுகாப் பளிக்கும்'' என்று.

சத்திரத் தலைவன் புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்துவிட்டு, ''அப்படித் திட்டமாக நம்பிவிட வேண்டாம். உங்களைப் பிடிக்க ஸ்ரீராமபுண்யவல்லபர் சாளுக்கிய நாடு, கங்க நாடு, மேற்கு மலைத் தொடர் ஆகிய மூன்றுக்குச் செல்லும் சாலைகளையும் அடைத்துவிட உத்தரவிட்டிருப்பதாக ஆசார்யர் செய்தியனுப்பியிருக்கிறார்'' என்றான்.

பல்லவ இளவலைச் சிறைபிடிக்க ஸ்ரீராமபுண்யவல்லபர் உத்தரவிட்டிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்ட சத்திரத் தலைவன் மேலும் எச்சரித்தான்.

''அந்த உத்தரவு தாங்கள் எந்த உடையிலிருந்தாலும், எந்த வேடத்தில் இருந்தாலும், எந்த ரக்ஷையை வைத்திருந்தாலும் தங்களை விட்டுவிடாது. ஆகவே மிகுந்த எச்சரிக்கையுடன் செல்லுங்கள். கூடிய வரையில் நெடுஞ்சாலைகளில் செல்லாமல் கிளைவழிகளில் செல்லுங்கள்'' என்று யோசனை கூறினான். அத்துடன், ''சத்திரத்தின் நோ வாயிலுக்காகச் செல்லவேண்டாம். இதோ, குறுக்கே செல்லும் இந்தப் பாதையில் செல்லுங்கள். இதன் முடிவில் காஞ்சிப் பொது நெடுஞ்சாலை வளைந்து வந்து கலந்து கொள்கிறது'' என்றும் சொல்லிக் குதிரைக் கொட்டடிக்கு நேரே சென்ற ஒரு குறுக்குப் பாதையையும் காட்டினான்.

இளவரசன் சத்திரத்துத் தலைவனிடம் விடை பெற்றுக் கொண்டு தனது புரவியில் தாவி ஏறி யாங்சின்னும் சந்துகனும் அக்கம் பக்கத்திலும், மற்றப் பல்லவ வீரர் பின்புறத்திலும் தொடர்ந்துவர அந்தக் குறுக்குப் பாதையில் சென்றான். குறுக்குப் பாதை பொது நெடுஞ்சாலையை அடைந்ததும் சுமார் ஒரு காதம் பயணம் செய்த பிறகு பிரிந்த மற்றொரு சாலையில் புரவியைத் திருப்பினான்.

அதைக் கண்ட சந்துகன், ''பிரபு! இந்தச் சாலை கங்க நாடு செல்கிறது'' என்று எச்சரித்தான்.

''ஆம்'' என்ற இளவரசன் மேலும் அந்தப் பாதையிலேயே முன்னேறவே சந்துகன் மீண்டும் கேட்டான், ''நாம் இப்பொழுது எங்கு செல்கிறோம்?'' என்று.

*''குவலாலாவுக்கு.''இளவரசன் பதில் தங்கு தடையின்றி வந்தது?

''குவலாலாவுக்கா! கங்கர்களின் பழைய தலைநகருக்கா?'' வியப்பும் அதிர்ச்சியும் கலந்த குரலில் கேட்டான் சந்துகன்.

''ஆம் அதுதான் இப்பொழுது கங்க நாட்டு வட எல்லையா யிருக்கிறது. இப்பொழுதுள்ள தலைநகரான தழைக்காடு காவிரிக்குக் கிழ்ப் புறத்திலிருக்கிறது. கங்க மன்னன் படைகள் காவிரியின் தெற்கு எல்லையில் என் தந்தையை எதிர்க்கத் தயாராயிருக்கின்றன. ஆகவே, நாம் இப்பொழுது அதிக இடைஞ்சலின்றிச் செல்லக் கூடிய இடம் குவலாலாதான். தவிர காஞ்சியிலிருந்து அதுதான் அருகிலிருக்கிறது'' என்று விளக்கிய இளவரசன் அந்தச் சாலை வழியிலேயே புரவியைச் செலுத்தினான்.

அந்தச் சாலையிலும் சாளுக்கிய வீரர் காவல் அதிகமிருந்தாலும் இளவரசன் கோஷ்டியை அவர்கள் அணிந்திருந்த உடையின் காரணமாக யாரும் தடை செய்யவில்லை. இதனால் சீனனும் சந்துகனும் சிறிது சந்துஷ்டியடைந்தாலும் இளவரசன் கண்கள் மட்டும் மிகுந்த எச்சரிக்கையுடன் சாலையின் முன்புறத்தையும் பக்கங்களை யும் கவனித்துக் கொண்டே வந்தன. ஆனால் எந்த விதத் தடங்கலு மின்றி அன்று பயணம் செய்த இளவரசன் இரவு மூண்டதும் சற்றுத் தூரத்தில் தெரிந்த சத்திரம் ஒன்றை நாடிச் சென்றான். இங்கு இரவு உணவை முடித்துக் கொண்டு மீண்டும் புறப்படுவோம்'' என்று தனது சகாக்களுக்குக் கூறி அந்தச் சத்திரத்தின் வாயிலுக்குச் சென்று இறங்கினான். அந்தச் சத்திரத் தலைவனும் அவனுக்கு உபசாரங் களைப் பலமாகச் செய்து புரவிகளைத் தேய்க்கவும் தீனி வைக்கவும் ஆட்களை விட்டு இளவரசனை உள்ளே அழைத்துச் சென்றான். அவனுடன் வந்த சீனனுக்கும் சந்துகனுக்கும் தனி அறைகளைக் காட்டிவிட்டு இளவரசனுக்குச் சகல வசதிகளுமுள்ள பெரிய அறையொன்றைக் காட்டினான். அவனது அதிக உபசாரம் இளவரசனுக்குச் சந்தேகத்தை உண்டாக்கவே, ''நான் சாதாரண வீரன் எனக்கெதற்கு இத்தனை பெரிய அறை?''என்று வினவினான்.

''பிரபு! என்னை அத்தனை அறிவு கெட்டவனென்று நினைக்க வேண்டாம். உங்கள் கையிலுள்ள முத்திரை மோதிரம் நீங்கள் கங்க அரசர் குலத்தைச் சேர்ந்தவர் என்பதை நிரூபித்து விட்டது. ஆகவே, இது

* *குவலாலா என்பது கோலாரின் பழைய பெயர்.*-A History Of South India - by K.A. Neelakanta Sastry-P.108



சாளுக்கியர் சத்திரமானாலும், தங்களுக்குச் சகல சௌகரியங் களையும் செய்து கொடுக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்று கூறித் தலை வணங்கிப் புன்முறுவலும் செய்தான்.

''சரி, சத்திரத் தலைவரே! சீக்கிரம் நான் புறப்பட வேண்டும். நீராட்டத்துக்கும் உணவுக்கும் ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான் இளவரசன்.

''இப்பொழுதே புறப்படப் போகிறீர்களா?'' என்ற சத்திரத் தலைவன் கேள்வியில் கவலை தொனித்தது.

''ஆம்.''

''இரவு தங்கிவிட்டுப் போகலாமே?''

''ஏன்?''

''இங்கு சாலைகளில் பல்லவ ஒற்றர் நடமாட்டம் அதிகமிருக் கிறது. தங்களுக்கு ஏதாவது...''

''ஓர் ஆபத்தும் நேரிடாது. சீக்கிரம் ஏற்பாடுகளைக் கவனியுங்கள்.''

இளவரசன் ஆணையைச் சிர மேற்கொண்ட சத்திரத் தலைவன் பணிமக்களைக் கூப்பிட்டு இளவரசருக்கும் அவரது வீரர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்ய உத்தரவிட்டுத் தான் மட்டும் சத்திரத்துக்கு வெளியே சென்றான். அங்கிருந்த ஒரு வீரனை விளித்து, ''சீக்கிரம் போய்ச் சொல். அவர்கள் வந்து விட்டார்கள்'' என்று ரகசியமாகச் சொல்ல, அந்த வீரன் பூனை போல் நடந்து பக்கத்திலிருந்த ஒரு தோப்பில் மறைந்தான். அதற்குப் பிறகு சத்திரத்துக்குள் மீண்டும் வந்த சத்திரத் தலைவன் இளவரசனுக்கு வேண்டிய வசதிகளைத் தானே நேரில் கவனிக்கலானான்.

சத்திரத் தலைவன் பேச்சில் தான் துரிதமிருந்ததே தவிர ஏற்பாடுகள் ஆமை வேகத்தில் நடந்தன. நீராட்ட வசதிக்கே ஒரு நாழிகை கடத்தப்பட்டது. இளவரசன் சந்தேகம் மெள்ள மெள்ள அதிகரிக்கவே, அவன் சீனனையும் சந்துகனையும் அழைத்து எச்சரித்த தன்றி மற்றக் கங்க நாட்டு வீரர்களையும் எச்சரிக்கை செய்தான். அத்துடன் சத்திரத்துத் தலைவனைத் தன் கண் பார்வையிலிருந்து அகலவிடாமலும் இருந்தான்.

உணவருந்தச் சென்றபோது முழு உடையணிந்து வாளையும் இடுப்பில் கட்டிக்கொண்ட இளவரசனை நோக்கிய சத்திரத் தலைவன், ''உணவருந்தும் போது இந்த உடை எதற்கு?'' என்று வினவினான்.

''உணவருந்தியவுடன் நான் புறப்பட வேண்டியதுதானே?'' என்றான் இளவரசன்.

''ஓரிரவு தாங்கள் இங்கு தங்க நாங்கள் கொடுத்து வைக்க வில்லை'' என்றான் சத்திரத் தலைவன்.

''திரும்பி வரும்போது இங்கு இரண்டு நாள் தங்குகிறேன். கவலை வேண்டாம்'' என்று உற்சாகப்படுத்தினான் இளவரசன்.

இதைக் கேட்டதும் சத்திரத் தலைவனுக்குச் சிறிது உயிர் வந்தது. இளவரசன் தன்மீது சந்தேகப்படவில்லையென்பதால் உள்ளூர மகிழ்ச்சியும் அடைந்தான். அந்த மகிழ்ச்சியின் விளைவாக அடிக்கடி சாளரத்தின் வழியாக வெளியே பார்த்து விட்டும் வந்தான். அவன் அப்படி எட்டிப் பார்ப்பதைப் பார்த்தும் பாராதவன் போலவே நடித்த பல்லவ இளவல் உணவருந்துவதில் எந்த வித அவசரத்தையும் காட்டாமல் மிக நிதானமாகவே அருந்துவதைக் கண்ட சத்திரத் தலைவனின் உற்சாகம் கரை புரண்டது. 'உணவை இப்படித்தான் ரசித்துச் சாப்பிட வேண்டும். அவரசமாகச் சாப்பிடுபவர்களைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை'' என்று பாராட்டவும் செய்தான் இளவரசனை நோக்கி.

''எதற்காக அவசரப்பட வேண்டும்? இது நமது சத்திரம். இங்கு யார் வந்து நம்மைப்பிடித்துக் கொள்ளப் போகிறார்கள்?'' என்று சர்வசாதாரணமாக வினவினான் இளவரசன்.

அந்தக் கேள்வி திடீரென சத்திரத் தலைவன் முகத்தில் அதிர்ச்சியைத் தோற்றுவித்தாலும் அதை நொடிப் பொழுதில் மறைத்துக் கொண்டதன்றி, ''தங்களைப் பிடிப்பதா? யாராலாவது முடியுமா? அப்புறம் கங்க நாட்டு மன்னனுக்கு யார் பதில் சொல்வது?'' என்று சமாளித்துக் கொண்டு இன்முகம் காட்டினான்.

இளவரசன் அதற்கு மேல் ஏதும் பேசாமல் உணவை முடித்துக் கொண்டு சத்திரத் தலைவன் தோளில் ஒரு கையைப் போட்டுக் கொண்டு, ''வாருங்கள் போவோம்'' என்றழைத்துக் கொண்டு உணவுச் சாலையிலிருந்து கிளம்பினான்.

''அரச குலத்தார் இந்த அடிமையைச் சமமாக நடத்துவது தகாது'' என்று இளவரசன் பிடியிலிருந்து விலகப் பார்த்தான் சத்திரத் தலைவன்.

ஆனால் இளவரசன் பிடி எமப்பிடியாயிருந்தது. பிடியைச் சிறிதும் தளர்த்தாமலே, ''குலத்தைவிட குணம் முக்கியம். தங்கள் குணத்தைக் கண்ட பின்னே தங்களை நடத்த வேண்டிய முறையில் நடத்தத் தீர்மானித்து விட்டேன். வாரும், நமது மற்ற நண்பர்களைப்



பார்ப்போம்'' என்று கூறிய இளவரசன், சீனனும் சந்துகனுமிருந்த அறைகளை நோக்கி அழைத்துச் சென்றான்.

அங்கு சந்துகன் இல்லை. சீனன் மட்டுமே இருந்தான் அவனைச் சத்திரத்துத் தலைவனுக்கு இளவரசன் அறிமுகப்படுத்தினான். ''இவன் பெயர் யாங்சின். சீன ராஜகுலத்தைச் சேர்ந்தவன்'' என்று.

சத்திரத்துத் தலைவனுக்கு அந்த அறிமுகத்துக்குக் காரணம் புரியாமலிருக்கவே, ''அப்படியா! மகிழ்ச்சி'' என்றான் குழப்பத்துக் கிடையே.

''இதில் மகிழ்ச்சிக்குக் காரணம் ஏதுமில்லை''என்று இளவரசன் குறிப்பிட்டு இதழ்களில் இளநகை காட்டினான்.

சத்திரத்துத் தலைவனுக்கு உள்ளூரச் சந்தேகமும் பயமும் ஏற்படவே, ''ஏன்?'' என்று மட்டும் கேட்டான் லேசாக நடுங்கும் குரலில்.

''இவன் சுத்தக் கொலைக்காரன்'' இளவரசன் இதைச் சாதாரணமாக அறிவித்தான்.

''அப்படியா!'' சத்திரத்துத் தலைவன் குரலில் பீதி அதிகமாகத் தெரிந்தது.

''ஆம். இவனிடம் பூநாகம் என்று ஒரு கத்தி இருக்கிறது.''

''பூநாகமா?''

''ஆம். மெல்லிய கத்தி. அது உடலில் பாய்ந்தால் அப்புறம் மூன்று நாட்களுக்குத்தான் ஆயுள் உண்டு.''

''ஐயே! அத்தனை கொடிய கத்தியா?''

''ஆம். அதன் நுனியில் விஷம் தீட்டப்பட்டிருக்கிறது.''

இதைக் கேட்டு நடுங்கிய சத்திரத் தலைவன், ''இதையெல்லாம் எனக்கு எதற்காகச் சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.

''இவன் உன் பின்னால் வருவான். பூநாகம் உன் கழுத்தைப் பின்புறம் தடவி நிற்கும். நான் அவனுக்குப் பின்னால் உருவிய வாளுடன் வருவேன். நான் சொல்கிறபடி நீ நடந்துகொள்ள வேண்டும் புரிகிறதா?'' என்று இளவரசன் கேட்ட அடுத்த வினாடி, சீனனின் கத்தி சத்திரத்துத் தலைவன் கழுத்தைத் தடவியது. அதே சமயத்தில் பல புரவிகள் வரும் சத்தம் சத்திரத்துக்கு வரும் சாலையில் கேட்டது. அதைக் காதில் வாங்கிக் கொண்டான் இளவரசன். ''உனது நண்பர்கள் வந்து விட்டார்கள். இனி சொல்கிறபடி நடந்துகொள். இம்மி பிசகினாலும் உன் உயிர் வானை நோக்கி வெகுவேகமாகப் பறந்து விடும்'' என்று

எச்சரித்த இளவரசன், ''சரி, மாடிப் படியில் மெல்ல இறங்கு'' என்று உத்தரவிட்டான்.

சத்திரத் தலைவன் முன்னாலும், அடுத்தபடி சீனனும், அவனுக்குப் பின்னால் உருவிய வாளுடன் இளவரசனும் மாடிப் படிகளில் மெல்ல இறங்க முற்பட்டதும் சாளுக்கிய வீரனொருவனின் குரல், ''எங்கே சத்திரத் தலைவன்?'' என்று பலமாகக் கேட்டது கீழிருந்து.

''பதில் குரல் கொடு. குரல் சாதாரணமாக இருக்கட்டும்'' என்றான் இளவரசன்.

''இங்கே இருக்கிறேன்'' என்றான் சத்திரத்துத் தலைவன்.

''பல்லவ இளவரசன் எங்கே?'' என்று வினவினான் சாளுக்கிய வீரன் படிகளில் ஏறிக் கொண்டே. அவனுடன் இன்னும் நால்வர் வருவது புரிந்தது இளவரசனுக்கு.

''என் அறையில் உறங்குவதாகத் தெரிவி'' என்று சொல்லிக் கொடுத்தான் இளவரசன். அத்துடன், ''சத்தம் போடாமல் இரண்டு வீரர்களை மட்டும் அழைத்து வரும்படி யோசனை சொல்'' என்றும் போதித்தான்.

அப்படியே அவன் அந்த வாசகத்தை ஒப்புவித்ததும் கீழேயிருந்து மேலே வந்து கொண்டிருந்த வீரர்கள் ஒரு விநாடி தேங்கி நின்றது தெரிந்தது. பிறகு சத்திரத்துத் தலைவன் சொற்படி அவர்கள் நடப்பதாகத் தெரியவில்லை. தடதடவென்று நாலைந்து வீரர் ஏறிவரும் ஒலி கேட்கவே, சீனன் காதில் ஏதோ ஓதிய இளவரசன் சட்டென்று சீனனைச் சற்று நகர்த்தி சத்திரத்துத் தலைவனைப் படிகளில் திடீரெனத் தள்ளிவிட்டான் அவ்வளவுதான். மறுகணம் மாடிப் படி அல்லோலகல்லோலப் பட்டது. இளவரசனின் வாள் முதலில் வந்த இருவர் தோள்களிலும் மின்னல் வேகத்தில் பாயவே, அவர்கள் செயலற்று நின்றுவிட்ட சமயத்தில் மற்ற இருவர்களைத் தாக்கிக் கொண்டு முன்னேறினான் பல்லவ இளவல். இதற்கிடையில் சீனன் இடையில் அணிந்திருந்த பெரு வாளும் கணவேகத்தில் சுழலவே அனைவரும் விலக, இருவரும் வெகு வேகமாக வாயிலை நோக்கி ஓடினர். ஆனால் வாயிலில் இருந்த நிலை மிகப் பயங்கரமாயிருந்தது. சாளுக்கியப் புரவி வீரர் சுமார் பதினைந்து பேர் புரவியில் அமர்ந்த வண்ணம் வாட்களையும் வேல்களையும் தாங்கி வழியை அடைத்து நின்றனர். இளவரசனையும் சீனனையும் கண்டதும் வேல்கள் பல அவர்களிருவரையும் நோக்கிப் பறந்தன. வாட்களை உருவிக் கொண்டு பத்து வீரர்கள் தரையில் குதித்து இருவரையும் சூழ்ந்துகொண்டனர். புரவியிலிருந்தவர் வீசிய ஒரு வேல் பல்லவ இளவலின் வலது தோளில்



பாய்ந்து விடவே அவன் வாள் சுழற்றும் கை பயனற்று விட்டது. அதைக் கண்ட சாளுக்கிய வீரர் வெற்றி கூச்சல் போட்டுச் சீனன் மீதும் பாய்ந்தார்கள். ஆனால் கதை அத்துடன் முடியவில்லை. இளவரசன் வலது கையில் தைத்த வேலை அரை விநாடியில் பிடுங்கி எறிந்தான். வலது கை வாளை இடது கைக்கு மாற்றிக் கொண்டி எதிரிகளைச் சமாளிக்க முற்பட்டான். வலது கைக்கு இடது கை சளைத்ததாகத் தெரியவில்லை கண் மூடிக் கண் திறப்பதற்குள் நாலைந்து வீரர்கள் அவன் வாளுக்கு இரை யானார்கள். சீனனும் பம்பரம் போல் சுழன்று புரவியில் இருந்த இரு வீரர்களைத் தரையில் உருட்டினான். காயமடைந்த சாளுக்கிய வீரர்கள் சளைக்காமல் அவ்விருவரையும் நோக்கி உருவிய வாட்களுடன் நெருங்கினர். அதே சமயத்தில் எதிர்பாராத இன்னொரு சம்பவமும் நிகழ்ந்தது.

## 49. தென்றல் தந்த செய்தி

புரவியிலிருந்து தரையில் குதித்துத் தங்களைச் சூழ்ந்து கொண்ட பத்து சாளுக்கிய வீரர்களைப் பல்லவ இளவலும் யாங்சின்னும் தனித் தனியே சமாளித்துப் பொருது கொண்டிருந்த சமயத்தில் பக்கத்திலிருந்த தோப்பு வழியாகப் பல புரவிகள் நிலம் அதிரப் பரமவேகத்தில் வரும் சத்தம் கேட்டது. எதிர்பாராத உதவி தங்களுக்கு ஏதோ கிடைத்துவிட்டதாகச் சாளுக்கிய வீரர்கள் நினைத்துத் திரும்பிப் பார்த்ததும், வந்தவர் யாரென்பதை உணர்ந்ததும், அவர்களில் சிலர் பதின் மடங்கு அதிகப் பீதியை அடைந்துவிடவே போரும் முடியும் நிலையை அடைந்தது. கங்கநாட்டு உடையிலிருந்த பத்துப் பல்லவ வீரர்களுடன் சந்துகன் உருவிய வாளுடன் தோப்பின் முகப்புக்கு வந்து சத்திரத்தின் வாசலிலிருந்து சாளுக்கிய வீரர்களைப் பின்புறம் தாக்கவே, சிலர் வாட்காயத்தால் அலறினர், சிலர் வாட்கள் ஆகாயத்தில் பறக்க நிராயுதபாணிகளாயினர்; மற்றும் சிலரை வாட்களைக் கீழே எறிந்துவிடும்படி சந்துகன் ஆணையிடவே, அவர்கள் அவன் உத்தரவை உடனடியாக நிறைவேற்றினார்கள். சத்திரத்தின் வாசல் ரணகளமாகக் காட்சியளித்தது. எங்கும் ரத்தம் சிதறிக் கிடந்தது. வேல்பாய்ந்த புரவிகள் சில தரையில் விழுந்து மல்லாந்து முதுகுகளைத் தரையில் தேய்த்துக் கால்களை உதறிக் கொண்டன. மற்றும் சில புரவிகள் வெறி பிடித்தன போல் நாற்புறமும் ஓடின. ஓடின வேகத்தில் காயமடைந்து கிடந்த வீரர்களைத் தங்கள் குளம்புகளால் இடறிச் சென்றதால் அவர்கள் முனகலும் வேதனைக் கூச்சலும் சூழ்நிலையைப் பயங்கரமாக அடித்தன.

போர் ஒரு வழியாக முடிந்தது இளவரசன் சீனனை நோக்கி ''கொட்டடிக்குப் போய் நமது இருவர் புரவிகளையும் கொண்டு வா புறப்படுவோம்'' என்று ஆணையிட்டான். பிறகு சந்துகனை விளித்து, ''மாடிப்படியருகில் சத்திரத் தலைவனிருக்கிறான். அவனைப் பிடித்துக் கொண்டு வா'' என்று கூறினான். சந்துகன் சத்திரத்துக்குள் சென்று சத்திரத்துத் தலைவனைப் பிடித்துக் கொண்டு வந்தான்.

இளவரசன் எதிரில் நடுங்கிக் கொண்டு நின்ற சத்திரத் தலைவனைநோக்கி, ''இங்கு காயடைந்திருக்கும் சாளுக்கிய வீரர் களுக்குச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யுங்கள். இறந்தவர்களை என்ன செய்வது வழக்கமோ அப்படிச் செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

சத்திரத்துத் தலைவன் பதிலேதும் சொல்லாமல் தலைகுனிந்து நின்ற சமயத்தில் சீனன் புரவிகளைக் கொண்டு வந்துவிடவே, தனது புரவிமேல் ஆரோகணித்த இளவரசன், ''சத்திரத்தலைவரே! ஸ்ரீராமபுண்யவல்லபரிடம் சொல்லுங்கள், பல்லவ இளவரசனைப் பிடிக்க இருபதுவீரர் போதாதென்று. அத்துடன் எனது அனுதாபத்தை யும் தெரிவியுங்கள்'' என்று கூறிவிட்டுப் புரவியைத் தட்டிவிட்டான் கங்க நாட்டுச் சாலையில். அவனைத் தொடர்ந்து சீனனும் சந்துகனும் மற்ற வீரர்களும் சென்ற காட்சியைச் சத்திரத்து முகப்பில் நின்று பார்த்துக் கொண்டிருந்தான் சத்திரத்துத் தலைவன். அவன் முகத்தில் பிரமை தட்டிக் கிடந்தது. கீழே காயமடைந்தும் மரணமடைந்தும் கிடந்த சாளுக்கிய வீரர்களை ஒரு முறை பார்த்த அவன் கண்களில் வெறுப்பு மண்டியது.

யாருடைய மன நிலையைப் பற்றியும் சிறிதும் கவலைப் படாமல் சென்றுகொண்டிருந்த இளவரசன் தனது வலது தோளிலிருந்த காயத்தையோ அதிலிருந்து வழிந்து கொண்டிருந்த ரத்தத்தையோ கவனிக்காமல் புரவியை வேகமாகச் செலுத்தியதைக் கண்ட சந்துகன், ''எசமான்! சிறிது இறங்கினால் காயத்துக்கு ஒரு கட்டுப் போட்டு விடுகிறேன்'' என்று சொன்னான்.

''இன்னும் சிறிது தூரத்தில் ஒரு சிறு வாய்க்கால் வரும். அதில் காயத்தைச் சுத்தமாகக் கழுவிப் பிறகு கட்டுப் போடலாம்'' என்று இளவரசன் கூற, அதற்குமேல் ஏதும் பேச இயலாத சந்துகன் மௌனமாகப் புரவியை நடத்தினான்.

இளவரசன் கூறிய கால்வாயும் அடுத்த கால் நாழிகைப் பயணத்துக்குள் வரவே, புரவியை நிறுத்திக் கீழே இறங்கிய இளவரசன் அந்த வாய்க்காலின் குளிர் நீரில் வலது தோள்காயத்தைக் கழுவினான். கொல்லன் வேலை மட்டுமின்றிச் சிறிது வைத்தியமும் அறிந்திருந்த



சந்துகன் இளவரசனின் காயத்தைப் பரிசோதித்து, ''வேல் ஆழமாகப் பதிந்திருக்கிறது. ஆனால் நல்ல வேளை எலும்பைத் தொடவில்லை'' என்று கூறி, சிறிது துணியைக் கிழித்துக் காயத்தில் திணித்து வேறு துணியால் கையைச் சுற்றியும் கட்டினான். அவன் சிகிச்சையால் ரத்தக் கசிவு நின்று விடவே மிக அலட்சியமாகப் புரவியில் தாவி ஏறிய பல்லவ இளவல், ''இதிலிருந்து கங்க நாட்டுக்குள் புகுகின்றோம் மிக்க எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள். என்னைத் தவிர யாரும் பேச வேண்டாம்'' என்று எச்சரித்துப் புரவியைத் தூண்டினான்.

''இங்கிருந்து நாம் நேரே...'' என்று வினவினான் சந்துகன்

''குவலாலாவுக்குச் செல்கிறோம்'' என்றான் இளவரசன்.

முன்னமே இளவரசன் சொன்ன தகவல்தான் அது. இருப்பினும் மீண்டும் அதைக் காரணமாகவே கேட்டான் சந்துகன். 'இங்கிருந்து குவலாலா மூன்று நாள் பயணத்திலிருக்கிறது'' என்று சுட்டியும் காட்டினான் அவன்.

''ஆம்'' என்றான் இளவரசன்.

''நடுவில் எங்கு தங்குவது?''

''கிடைக்குமிடத்தில்.''

''கிடைக்குமிடம் இந்தச் சத்திரம் போலிருந்தால்?''

''இருக்காது.'' இளவரசனின் இந்தப் பதில் திட்டவட்டமாக வந்தது.

அதைக் கேட்டுப் பிரமித்துச் சந்துகன் கேட்டான், ''என்ன அத்தனை திட்டமாகச் சொல்கிறீர்கள்?''என்று.

''ஸ்ரீராமபுண்யவல்லபர் காஞ்சியின் பொதுச் சாலையிலிருந்து பிரியும் மூன்று சாலைகளிலுள்ள சத்திரங்களையும் கிராமங்களையும் கண்காணிக்கத்தான் வீரர்களை அனுப்பியிருப்பார். ஒரு சாலையின் எல்லையை நாம் கடந்துவிட்டோம். இனி மேல் நம்மைக் கங்க நாட்டுக்குள் யாரும் தேடமாட்டார்கள். ஆகவே, எதிரியின் துணைவன் நாட்டுக்குள் நாம் புகுந்து செல்கிறோம். தவிர நான் ரங்கபதாகா தேவியின் தூதுவன். அவள் தந்தைக்குச் செய்தி கொண்டு செல்கிறேன். அடையாளம் இதோ என் விரலிலிருக்கிறது'' என்று கூறி, தனது கையிலுள்ள கங்க நாட்டு முத்திரை மோதிரத்தைக் காட்டினான்.

இளவரசன் அத்தனை சொல்லியும் சந்துகனுக்கு மனத்தில் சாந்தி ஏற்படவில்லை. ''இந்தச் சத்திரத்துத் தலைவன்போல் எல்லோரும் ஏமாறுவார்களென்று எதிர்பார்க்கிறீர்களா?'' என்று வினவினான்.

''அவர்கள் ஏமாறாவிட்டால் ஏமாற்றுவது நமது கடமை. இல்லாவிட்டால் சத்திரத்துத் தலைவனுக்குத் தெரியாமல் சாளரத்தின் வழியாகக் கீழே இறங்கி வீரர்களை அழைத்து வர உனக்கு யோசனை சொல்லியிருப்பேனா?'' என்று வினவினான் இளவரசன்.

இளவரசன் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி திட்டங்களை வகுக்கக் கூடியவனென்பதும், பல வீரர்களை ஏக காலத்தில் தன்னந்தனியாக சந்தித்துப் போரிடும் வல்லமை உள்ளவனென்பதும் சந்துகனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் எதிரியின் நாட்டுக்குள் பத்து வீரர்களுடன் புகுவது அத்தனை சரியான காரியமல்ல வென்பது அவன் கருத்து. அதைவிட மேற்கு மலைத் தொடர் சாலையில் சென்று சற்றுத் திரும்பினால் பரமேசுவர பல்லவர் பாசறையை அடைவது சுலபமென்று அவன் நம்பினான். ஆகையால், மூக்கைச் சுற்றிப் பிடிப்பது போல் கங்க நாட்டின் பழைய தலைநகரை அடைந்து, அங்கிருந்து சாளுக்கியர் தென் எல்லைக்குத் திரும்பி, பிறகு பல்லவர் பாசறையை அடைவதில் என்ன பொருளிருக்க முடியுமென்று அவனுக்குப் புரியவில்லை. அந்தச் சந்தேகத்தை வாய்விட்டும் கேட்டான்.

இளவரசன் சற்றே திரும்பிச் சந்துகனைத் தன் கூர்விழிகளால் நோக்கினான். ''தந்தை இப்பொழுது கங்க நாட்டுத் தெற்கு எல்லையில் இருக்கிறார். ஆகவே, கங்க மன்னன் படைகளும் அங்குதான் குவிந்திருக்கும். ஆகவே, கங்க நாட்டு வடக்கு எல்லையில் தான் அதிகக் கண்காணிப்பு இருக்காது. கங்கநாட்டு வடக்கு எல்லைக்கு அப்பாலிருப்பது சாளுக்கியர் நாடு. அங்கிருந்து கங்க மன்னன் எந்த எதிர்ப்பையும் எதிர்பார்க்க மாட்டான்'' என்று விளக்கம் செய்தான்.

இளவரசன் சொன்னது காரண காரிய நீதிக்குச் சரியாயிருந் தாலும் சந்துகன் சந்தேகத்துடனேயே பயணம் செய்தான். ஆகவே, அடுத்த மூன்று தினங்கள் தங்கிய இடங்களிலெல்லாம் மிகுந்த எச்சரிக்கையுட னிருந்து இளவரசனை இமைகள் கண்ணைக் காப்பதுபோல் காத்து வந்தான். சீனன் மட்டும் எந்தக் கவலையும் படவில்லை. இளவரசன் ஒரு தீர்மானத்துக்கு வந்தால் அது சரியாகத் தானிருக்குமென்ற மூட நம்பிக்கையில் வெகு அலட்சியமாக நடந்து கொண்டான்.

ஆனால் மூன்று நாட்களும் சந்துகன் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. இளவரசன் நுழைந்த பயண விடுதிகளிலிருந்த கங்க நாட்டவர் தங்கள் அரச குல முத்திரை மோதிரத்தைக் கண்டதும் அவனைத் தங்கள் அரசன் போலவே மதித்துப் பேருபசாரம்



செய்தனர். மூன்றாம் நாள் பிற்பகலில் அவர்கள் பாலாற்றைத் தாண்டி பாலாற்றுக்கும் பெண்ணையாற்றுக்கும் இடையிலிருந்த குவலாலாவை அடைந்ததும் இளவரசன் தனது புரவியை நேராக அந்த நாட்டின் பழைய ராஜ கிருகத்தை நோக்கிச் செலுத்தினான். தழைக்காடு தலைநகரமான பின்பு கங்கர் குலத்தில் அந்தப் பழைய அரண்மனையில் பணிமக்களையும் காரியஸ்தனையும் தவிர வேறு யாருமில்லை. அரண்மனைக் காரியஸ்தன் மட்டும் வந்து அவர்களை எதிர்கொண்டு யாரென்று வினவினான்.

பதிலுக்குத் தனது கையிலிருந்த முத்திரை மோதிரத்தை இளவரசன் காட்டியதும் காரியஸ்தன் தலை வணங்கி அவர்களை உள்ளே அழைத்துச் சென்றான். அன்று அவர்களுக்கு ராஜோபசாரம் நடந்தது. இருப்பினும் காரியஸ்தன் சொன்னான்' ''தலைநகர் மாறிய பின்பு மன்னர் ஏதாவது ஒருமுறைதான் இங்கு வருகிறார். ஆகையால் இங்கு தங்களைப் போன்றவர்களைப் பராமரிக்கப் போதிய வசதிகளில்லை. மன்னிக்கவேண்டும்'' என்று.

''இருக்கும் வசதி போதும். தவிர நாங்களும் முக்கிய அரசாங்க அலுவலாக நாளைக் காலையில் பயணமாகிறோம் சாளுக்கிய நாட்டுக்கு'' என்று இளவரசன் அவனைச் சமாதானப்படுத்தினான்.

இருப்பினும் காரியஸ்தன் மிகுந்த அதிருப்தியுடன் நடந்து கொண்டான். அத்தனைக்கும் போஜன வசதிக்கோ வேறு வசதிகளுக்கோ அங்கு குறை ஏதும் இல்லை. புரவிகளும் நன்றாகவே கவனிக்கப்பட்டன. அன்று இரவு போஜனம் முடித்ததும் சந்துகனையும் மற்றவர்களையும் உறங்குவதற்கு உத்தரவு கொடுத்த இளவரசன் மட்டும் நீண்ட நேரம் பஞ்சணையில் விழித்துக் கொண்டே படுத்துக் கிடந்தான். அவன் நெஞ்சத்திலே காஞ்சியி லிருந்த இரண்டு நேரிழைகளும் உருவமெடுத்து இளநகை கூட்டினர். காதல் விழி விழித்தனர். அவன் படுத்திருந்த அறைக்கு வெளியே யிருந்து தென்றல் மிகச் சுகமாக வந்து கொண்டிருந்தது. அதன் ஊடே அந்த அரண்மனைத் தோட்டத்திலிருந்த மலர்களின் நறுமணமும் மிதந்து வந்தது. அந்தச் சுகந்தத்தில் திளைத்த இளவரசன், ''மைவிழியும் ரங்கபதாகா தேவியும் அருகிலிருந்தால் இந்த நறுமணத்தின் சக்தி நூறுமடங்கு அதிகப் பட்டிருக்குமே' என்று எண்ணினான். அந்த எண்ணங்களால் உந்தப்பட்டு அறையை விட்டு வெளியே வந்து வாயிலையும் கடந்து பின்புறமிருந்த தோட்டத்தை நோக்கிச் சென்றான். தென்றல் அங்கு அறையில் வந்ததைவிட மிகச் சுகமாக வந்தது. அது நறுமணத்தை

மட்டும் கொண்டு வரவில்லை, சில சொற்களையும் தாங்கி வந்தது. அங்கிருந்த மரமல்லி மரத்தடியில் காரியஸ்தன் வேறொருவனோடு பேசிக் கொண்டு நின்றான்.

மற்றவன் கேட்டான், ''நிச்சயமாக உனக்குத் தெரியுமா?'' என்று.

''நிச்சயமாகத் தெரியும்'' என்றான் காரியஸ்தன்.

''பல்லவ இளவரசன் இங்கு எதற்காக வரப் போகிறான்?''

''அதுதான் எனக்குப் புரியவில்லை'' என்றான் காரியஸ்தன். ''அவர்கள் நன்றாக உறங்குகிறார்கள். விழிப்பதற்குள் பிடித்து விடுவது நல்லது. இன்னும் இரண்டு நாழிகை கழித்து வீரர்களை அழைத்து வா.''

''அத்தனை நேரம் எதற்கு?''

''விடியற்காலையில்தான் எல்லோருக்கும் உறக்கம் வரும். அப்பொழுது பிடிப்பது சுலபம்.''

''சரி, வருகிறேன்'' என்று சொல்லி நகர்ந்தான் மற்றவன்.

காரியஸ்தனும் ஓசைப்படாமல் மாளிகைக்குள் சென்றான் அவனுக்கு முன்பே மாளிகைக்குள் நுழைந்த இளவரசன் பஞ்சணையில் அயர்ந்து உறங்குவதுபோல் பாசாங்கு செய்தான். அந்த அறையை வந்து எட்டிப் பார்த்த காரியஸ்தன் மிகுந்த திருப்தியுடன் திரும்பினான்.

நாழிகைகள் நகர்ந்தன. நான்காம் ஜாமத்தில் புரவிகள் பல அம்மாளிகையைச் சுற்றிக் கொண்டன. ஆனால் முதல் ஜாமத்தில் வந்தவன் எதிர்பார்த்ததுபோல் காரியஸ்தன் வாயிலில் இல்லை. அவனுடைய அறையை நாடி அந்த இன்னொருவன் சென்றான். அங்கு அவன் கண்ட நிலை அவனுக்கு பேரதிர்ச்சியைத் தந்தது.

## 50. காட்டு மாளிகை

கங்க நாட்டு மன்னர்களின் பழைய ராஜக்கிருகத்தின் காரியஸ்தன் குறிப்பிட்டபடி நான்காவது ஜாமத்தின் ஆரம்பத்தில் சிறிய காவற்படையொன்றை அழைத்து வந்த குவலாலாவின் காவலர் தலைவன் அந்த அரண்மனையிலிருந்த நிலையைக் கண்டு சந்தேகித்துத் தனது புரவியிலிருந்து கீழே குதித்தானென்றால் அதற்குப் காரணம் இருக்கவே செய்தது. அந்தப் பெரிய மாளிகையின் வாயில் விளக்கில் மாளிகையின் பெரிய கதவுகள் திறந்து கிடந்ததை அவன் கவனித்ததன்றி அந்த வாயிலில் தன்னையும் வீரர்களையும் எதிர்கொள்ள காரியஸ்தனோ வேறு எந்தப் பணிமகனோ இல்லாததைப் பார்த்துச் சந்தேகத்துக்கும்



குழப்பத்துக்கும் உள்ளான காவலர் தலைவன், தன்னுடன் இரு காவலரையும் அழைத்துக் கொண்டு மிகுந்த எச்சரிக்கையுடன் மாளிகைக்குள் பிரவேசித்தான். மாளிகையின் கீழ்க்கட்டிலும் சரி, மேல் உப்பரிகையிலும் சரி, பெரும் அமைதி நிலவிக் கிடந்தது. ஆங்காங்கு படுத்துக் கிடந்த அரண்மனைப் பணிமக்கள் நன்றாக உறங்கிக் கொண்டிருக்கவே அதிக அசந்தர்ப்பம் ஏதும் ஏற்படவில்லை என்று நினைத்த காவலர் தலைவன் வீரர் இருவர் பின்தொடர்ந்து வர உப்பரிகைப் படிகளில் ஏறிச் சென்றான்.

முதல் மாடியின் முகப்புத் தாழ்வரையை அடைந்ததும் அங்கு விளக்கு ஏதுமே இல்லாததையும் இரண்டு மூன்று அறைக் கதவுகள் திறந்து கிடந்ததையும் கண்டு மூடிக் கிடந்த ஒரே ஓர் அறையின் கதவை நாடிச் சென்று தனது வாளை உருவிப் பிடித்துக் கொண்டு கதவைக் காலால் உதைத்துத் திறந்து உள்ளே புகுந்ததும் அங்கு கண் முன்னால் எழுந்த காட்சியைக் கண்டு பேரதிர்ச்சியடைந்து நின்றுவிட்டான் பல விநாடிகள். அந்த அறையின் மூலையில் பளிச்சென்று எரிந்து கொண்டிருந்த அலங்கார விளக்கின் வெளிச்சம் கட்டிலில் கிடந்த காரியஸ்தனின் அலங்கோல நிலையை வெட்ட வெளிச்சமாக்கியது. கை கால்கள் நன்றாகப் பிணைக்கப்பட்டு வாயிலும் துணியடைக்கப் பட்டுக் கிடந்த காரியஸ்தனை நெருங்கிய காவலர் தலைவன் காரியஸ்தன் மார்புமீது கண்ணுக்குத் தெளிவாகத் தெரியும்படி ஓர் ஓலை வைக்கப்பட்டிருந்ததைக் கவனித்து அதை எடுத்துப் படித்தான். ''பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே'' என்ற பழமொழி அதில் தீட்டப்பட்டிருந்ததைப் பார்த்ததும் அதிகச் சினத்துக்குள்ளான காவலர் தலைவன் அந்தச் சினத்தில் காரியஸ் தனின் வாயில் துணியடைக்கப் பட்டிருந்ததையும் நினைத்துப் பாராமல் ''நாம் நந்தவனத்தில் பேசியதை இவன் கேட்டுவிட்டான் போலிருக்கிறதே?'' என்று வினவினான் காரியஸ்தனை நோக்கி. காரியஸ்தன்பதில் சொல்ல வகையறியாமல் விழித்த பின்பே அவன் நிலையை மீண்டும் உணர்ந்த காவலர் தலைவன் அவன் வாயிலிருந்த துணியை எடுத்ததன்றிக் கை கால் கட்டுக்களையும் அவிழ்த் தெறிந்தான். அதனால் சிறிது சுரணை வரப்பெற்ற காரியஸ்தன் கால்களை உதறிக்கொண்டும் கை மணிக்கட்டுக்களைத் திருப்பிவிட்டுக் கொண்டும் இரு கைகளாலும் தனது முகவாய்க்கட்டையைத் திருப்பி சரி செய்து கொண்டும் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவன் செய்து கொண்ட சுய உபசரணைகளைப் பார்த்த காவலர் தலைவன் வெகுண்டு, ''தங்களை அப்புறம் சரிப்படுத்திக் கொள்ளலாம். நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்'' என்று சீறினான்.

அவனைவிட அதிகச்சீற்றத்தைக் காட்டிய காரியஸ்தன், ''அப்படி என்ன பிரமாதக் கேள்வி கேட்டு விட்டீர்கள்!'' என்று வினவினான் மீண்டும் மணிக்கட்டுக்களைத் திருகிக்கொண்டு.

''நந்தவனத்தில் நாம்பேசியதை இளவரசன் கேட்டிருக்க வேண்டும்'' என்றான் காவலர் தலைவன்.

''இதில் கேள்வி எங்கிருக்கிறது நான் பதில் சொல்ல? தவிர, குட்டிச் சுவரில் முட்டிக் கொள்ள வெள்ளெழுத்தா வேண்டும்?'' என்று வினவினான் காரியஸ்தன் இகழ்ச்சியுடன்.

''என்ன சொல்கிறீர் காரியஸ்தரே?'' என்று மீண்டும் சீறினான் காவலர் தலைவன்.

''என்னை அவர்கள் கட்டிப்போட்டுப் போயிருப்பதிலிருந்தே இளவரசன் நாம் நந்தவனத்தில் பேசியதைக் கேட்டிருக்கிறானென்று நீரே ஊகித்திருக்கலாம். போதாக்குறைக்கு ஓலையிலும் அதைக் குறிப்பிட்டிருக்கிறான். இத்தனைக்குப் பிறகும் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு இங்கேயே நிற்கிறீர்'' என்று அலுத்துக் கொண்டான் காரியஸ்தன்.

இதைக் கேட்ட காவலர் தலைவன் வெகுண்டானானாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் வினவினான், ''இப்பொழுது நான் என்ன செய்யவேண்டும்'' என்று.

காரியஸ்தன் இதழ்களில் இகழ்ச்சி நகை படர்ந்தது. ''உமது கடமையைச் செய்யவேண்டும். எதிரியைத் துரத்திச் சென்று பிடிக்கவேண்டும்'' என்றான் இகழ்ச்சி தொனித்தகுரலில்.

''எந்தப் பக்கம் போய் இருப்பார்கள்?'' என்று வினவினான் காவலர் தலைவன்.

காரியஸ்தன் இகழ்ச்சி அதிகப்பட்டது. ''அடுத்தபடி அவர்களைப் பிடித்துக் கொடுக்கும்படி என்னைக் கேட்பீர் போலிருக்கிறது?'' என்று காரியஸ்தன் மேலும் கூறினான்: ''மீண்டும் அவர்கள் திரும்பிக் கங்க நாட்டுக்குள் செல்லமாட்டார்கள். போவதானால் மேற்குப்புறம் சென்று பெண்ணையாற்றைத் தாண்டி மேற்குமலைத் தொடர் காட்டு வழிதான் செல்வார்கள். இங்கு நாம் அவர்களைப் பற்றி இன்னும் சிறிது நேரம் விவாதித்துக் கொண்டு நின்றால் அப்புறம் அவர்களைத் தேடிக் கொண்டு சாளுக்கிய நாட்டுக்குச் செல்லலாம்'' என்று.

காவலர் தலைவன் அதற்குமேல் அந்த இடத்தில் நிற்கவில்லை. தன்னுடன் வந்த வீரர் இருவருடன் மாடிப் படிகளில் இறங்கிக் கீழே வந்து வாயிலில் இருந்த தனது புரவி மீதுதாவி மற்றப் படை வீரரையும் உடன் வரச் சைகை செய்து வெகு வேகமாகக் குவலாலாவின் மேற்குப் பகுதியை நோக்கிச் சென்றான். குவலாலாவின் தெருக்களில் அவனுடன் சென்ற அந்தக் காவற்படை, வீதிகள் அதிர விரைந்து பெண்ணையாற்றுப் பாலத்தை நெருங்கி விட்ட சமயத்தில் காவலர் தலைவன் சட்டென்று கையை உயர்த்தித் தனது பின்னால் வந்த படைவீரரை நிறுத்திப் பெண்ணையாற்றுப் பாலத்தின் அக்கரையைச் சுட்டிக் காட்டினான். அதே சமயத்தில் பெண்ணையாற்றுப் பாலத்தைக் கடந்து விட்ட பல்லவ இளவல் தன்னைத் துரத்தி வந்தபடையைத் திரும்பி ஒரு முறை பார்த்துவிட்டுச் சந்துகனை அழைத்து, ''சந்துகா! கங்கர்களின் காவற் படையொன்று நம்மைத் துரத்தி வந்திருக்கிறது. சுமார் இருபத்தைந்து வீரர்களுக்குக் குறைவிருக்காதென்று நினைக்கிறேன்'' என்றான் தனது புரவியை நிறுத்தி.



சந்துகனும் தனது புரவியை நிறுத்தித் திரும்பி நோக்கி, ''ஆம். இருபத்தைந்து பேருக்குக் குறைவில்லை'' என்று கூறியதன்றி, ''அப்படியானால் நாம் விரைந்து செல்ல வேண்டும்'' என்று சொல்லிப் புரவியையும் திருப்ப முயன்றான்.

''அவசரப்படாதே சந்துகா! இன்னும் சாளுவ நாட்டு எல்லையும் மேலைமலைத் தொடர் அடவியும் இரண்டு காதமிருக்கிறது. நாம் என்ன வேகமாகச் சென்றாலும் அந்தப் படை பிரிவு நம்மைப் பிடித்துவிட முடியும்'' என்று சுட்டிக் காட்டினான் இளவரசன்.

''வேறு என்ன செய்வது?'' என்று வினவினான் சந்துகன்.

''ஏதாவது ஓர் இடத்தில் அவர்களுடன் நாம் போரிட்டுத் தான் ஆக வேண்டும்'' என்று குறிப்பிட்டான் இளவரசன்.

''ஆம்.''

''அப்படியானால் போரிட இதைவிடச் சிறந்த இடம் கிடையாது.''

''இருக்கலாம். ஆனால் நாம் இருப்பது பதின்மூன்று பேர். அவர்கள் இருபத்தைந்து பேர்.''

''பெண்ணையின் பாலம் அதிக அகலமில்லை. சேர்ந்தார் போல் நான்கு வீரர்களுக்கு மேல் அணிவகுத்துவர முடியாது.''

''ஆம்.''

''தவிர கோடைகாலமானதால் பெண்ணையாற்றில் தண்ணீருமில்லை. சிறு அருவியாகத்தான் ஓரங்களிலும் நடுவிலும் ஓடுகிறது.''

''ஆம்'' என்று சந்துகன் மேற்கொண்டு இளவரசன் உத்தரவை எதிர்பார்த்து நின்றான்.

இந்த உரையாடல் நிகழ்வதற்குள் எதிரிப்படையினர் பாலத்திற் குள் வரத்துவங்கிவிடவே இளவரசன் அவசரமாக உத்தரவுகளைப் பிறப்பித்தான். ''சந்துகா! நீ ஆறு வீரர்களை அழைத்துக் கொண்டு பாலத்தின் அடியில் மறைந்து அக்கரை சென்றுவிடு. வீரர்கள் இருபத்தைந்து பேரும் பாலத்தின் பாதிதூரம் வந்ததும் நீயும் பாலத்தில் புகுந்து அவர்களைப் பின் புறத்தில் தாக்கு. நானும் யாங்சின்னும் மற்ற நான்கு வீரர்களுடன் முன்புறம் தாக்குகிறோம். நமது இரு பிரிவுக்குமிடையில் எதிரிப் படை நொறுங்கிவிடும்'' என்று உத்தர விட்டுத் தனது வாளை உருவிக் கொண்டு சீனனுடனும் மற்ற வீரருடனும் பாலத்தின் மேற்கு முகப்பில் நுழைந்து விட்டான்.

இளவரசன் ஏற்பாடு சரியாகப் புரியாததாலும் எதிரிலே இளவரசன் உட்பட ஆறு வீரர்களே எதிர்த்து வந்ததாலும் குவலாலாவின் காவலர் தலைவன் தனது வீரர்களை நால்வர் நால்வராக அணிவகுத்துக் கொண்டு பாலத்தில் வெகுவேகமாக வந்தான். வந்த வேகத்தில் முதல் நால்வருடன் மோதிவிட்ட இளவரசன் வாள் வெகுவேகமாகச் சுழன்றது. அவனுடன், தனது புரவியை இணையவிட்ட சீனனும் மற்ற இருவரும் பெரும் சுவர்போல் எதிரியைத் தேக்கிவிடவே போர் மும்முரமாகத் துவங்கி விட்டது. நான்கு பேர்களே ஒரு சமயத்தில் போரிட முடிந்ததால் இளவரசனுக்குப் பின்னாலிருந்த இரு வீரர்கள் தங்கள் குறுவாள்களை எதிரிகளை நோக்கிக் குறிபார்த்து வீசவே முன்னணியிலிருந்த எதிரி வீரர்கள் இருவர் புரவிகளிலிருந்து கீழே சாய்ந்தனர். அவர்களுக்கு பின்னால்வந்த நான்கு புரவி வீரர்களின் வேகம் அதனால் தடைப்படவே அந்தத் தாமதத்தில் கிடைத்த நேரத்தை உபயோகப் படுத்திக் கொண்டு இளவரசனும் சீனனும் எதிரி வீரர் படையை வெகு வேகமாக ஊடுருவினர் இளவரசனின் நீண்ட வாள்அடிக்கடி தன் கண் முன்னால் தோன்றுவதையும் மின்னல் போல் சுழல்வதையும் அது தாக்கிய வீரர்கள் காயப்பட்டுச் செயலற்றுப் போவதையும் கண்ட கங்கர் தலைவன் மீதி வீரர்களை உற்சாகப் படுத்தி, ''இருவர் தான் முன்னால் வந்திருக்கிறார்கள். சூழ்ந்து கொள்ளுங்கள்'' என்று கட்டளையிட்டான். அவன் கட்டளை அவன் உதடுகளிலிருந்து வெளிவருவதற்குள் பின்புறத்தில் புரவிகள் சில பாலம் அதிர வரும் ஒலியைக் கேட்டதும் வாளைச் சுழற்றிக் கொண்டே பின்னால் நோக்கிய கங்கர் தலைவன் பெரும் பிரமிப்பை அடைந்தான். இளவரசனின் தந்திரம் அப்பொழுதுதான் புரிந்தது அவனுக்கு. பாதிவீரர்களை இளவரசன் பாலத்துக்கடியில்மறைவாக எதிர்ப்புறம் அனுப்பித் தங்களைப் பின்புறத்தில் தாக்க ஏற்பாடு செய்து விட்டானென்பதையும் பாலம் குறுகலாதலால் எந்தப் பக்கத்தில் பொருதினாலும் நான்கு



பேருக்கு மேல் போரிட முடியாதென்பதையும் புரிந்து கொண்ட அவன் எதற்கும் தன் கடமையைச் செய்யத் தீர்மானித்து, ''பாதிப்பேர் பின்னால் வரும் வீரர்களைக் கவனியுங்கள்'' என்று உத்தரவிட்டு இளவரசனையும் சீனனையும் தானே எதிர் நோக்கி வந்தான். வாட்களோடு வாட்கள் தாக்கின புரவிகளோடு புரவிகள் மோதின. அத்தனையிலும் இளவரசன் அலட்சியமாகப் போரிட்டான். அவன் வாள் காவலர் தலைவன் வலது தோளில் கண்ணிமைக்கும் நேரத்தில் பாய்ந்துவிட்டதால் அவன் வாள் சுழற்றும் கை பயனற்றுத் தொங்கியது. இஷ்டப்பட்டிருந்தால் இளவரசன் அவனைக் கொன்றிருக்கலாம். ஆனால் நிராயுத பாணியான அவனைவிட்டு அவனை அடுத்திருந்த வீரர்களைத் தாக்கி னான் இளவரசன். சீனன் அதற்கு முன்பே எதிரிகளின் இரண்டாவது வரிசைக்குள் புகுந்து இரண்டு மூன்று பேர்களை வீழ்த்திவிட்டான்.

தங்களைவிடப் போரில் மிக வல்லவர்களான எதிரிகளிடம் தாங்கள் சிக்கிவிட்டதையும், பாலத்துக்குள் ஒரே சமயத்தில் நான்கு பேருக்கு மேல் போரிட முடியாததாலும் எதிரிகள் பலமும் தங்கள் பலமும் எண்ணிக்கை சம்பந்தப்பட்ட வரையில் சரிசமம் தானென்பதையும் புரிந்துகொண்டாலும் கங்க வீரர்கள் மிகத் திறமையுடனே போரிட்டனர். இருப்பினும் பாலத்திற்குள் இருபுறமும் தாக்கிய எதிரியிடம் சிக்கிவிட்டதால் அந்தப் போர் வெகு விரைவில் முடிந்துவிட்டது. எதிரி வீரர்கள் பதின்மர் காயப்பட்டும் சிலர் மரணமுற்றும் விட்டதைக் கண்ட இளவரசன், எதிரி காவலர் தலைவனை நோக்கி, ''போரை நிறுத்த உத்தரவிடு. அனாவசியமாக வீரர்கள் சேதம் வேண்டாம்'' என்று கூறினான். காவலர் தலைவனும் நிலையைப் புரிந்துகொண்டு அவ்வாறே உத்திரவிட, சண்டை முடிந்தது இளவரசன் எதிரி வீரர்களை ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டுத் திரும்பிச் செல்லும்படி உத்தரவிட்டான். அவர்கள் திரும்பிச் செல்ல முற்பட்டதும் சந்துகனை அழைத்த இளவரசன், ''நமது வீரர்களின் நிலை என்ன?'' என்று வினவினான். ''நால்வர் அதிகமாகக் காயப்பட்டிருக் கிறார்கள், இருவர் இறந்திருக்கிறார்கள்'' என்று பதில் கூறினான் சந்துகன். இதைக் கேட்டதும் இளவரசன் மீண்டும் எதிரிகளின் தலைவனை விளித்து, ''வீரனே! உங்கள் வீரர்களைப் புதைக்கும்போது எங்கள் வீரர்கள் இருவரையும் புதைத்து வீரக்கல் நாட்டி விடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான். அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டு எதிரிகள் தலைவன் சென்றுவிட, பல்லவ இளவல் காயமடைந்த தனது வீரர்களைப் பாலத்தடிக்கு அழைத்துச் சென்று பெண்ணையாற்றின் குளிர் நீரில் அவர்கள் காயங்களைக் கழுவித் தன் கையாலேயே சிகிச்சை செய்தான். பிறகு அவர்களையும் புரவிகள் மீது ஏற்றிவிட்டு, ''இனி

ஆபத்து ஏதுமில்லை. இன்னும் ஒரே நாழிகையில் நாம் மேற்குத் தொடர் மலைக்காட்டை அடைந்துவிடுவோம். பிறகு சாளுக்கிய நாட்டு எல்லை வருகிறது. அங்கிருந்து காட்டு வழியாகத் தெற்கே சென்று கங்க நாட்டுத் தெற்கு எல்லையை அடைவோம். அங்கு எனது தந்தை இருக்கிறார்'' என்று அவர்களுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டே புரவியை நடத்தினான். அடுத்த ஒரு நாழிகையில் மேற்கு தொடர் காடும் வந்தது அந்தக் காட்டிலும் புகுந்த ஓடிய சாளுக்கியர் சாலையில் மெள்ள மெள்ளத் தனது வீரர்களை அழைத்துச் சென்ற இளவரசன் அன்றிரவு காட்டின் அடர்ந்த பகுதி ஒன்றுக்கு வந்து சேர்ந்தான். விடியற் காலையில் பொருதியதாலும் நாள் முழுதும் அன்ன ஆகாரமின்றிப் பயணம் செய்ததாலும் களைத்துப் போயிருந்த வீரர்களுக்கு உணவும், தங்கும் வசதியும் எங்கு கிடைக்குமென்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் காட்டுக்குள் சிறிது தூரத்தில் விளக்கொளியொன்று தெரியவே அதை நாடிச் சென்றான் இளவரசன். விளக்கொளி கிட்டே நெருங்க நெருங்கத்தான் ஒரு மாளிகையை நெருங்குவதை உணர்ந்தான். அதனால் மகிழ்ச்சி கொண்டு வீரர்களுடன் அதை அடைந்த இளவரசன் சீனனை விளித்து மாளிகைக் கதவைத் தட்டப் பணித்தான். சீனன் கதவைத் தட்டியதும் மூதாட்டியொருத்தி கதவைத் திறந்து, ''யார் நீ?'' என்று வினவினாள். அவன் பதில் சொல்லு முன்பு இளவரசன் முன்பு வந்து தன் கையிலிருந்த முத்திரை மோதிரத்தைக் காட்ட மூதாட்டி தலை தாழ்த்திப் பணித்தாள்'' வாருங்கள் உள்ளே!'' என்றும் அழைத்தாள்.

''என் வீரர்கள் சிலர் காயமடைந்திருக்கிறார்கள்.'' என்றான் இளவரசன்.

''கவனிக்கப் பணி மக்கள் இருக்கிறார்கள். புரவிகளை வாயிலிலேயே விட்டு வாருங்கள். அவற்றையும் கவனிக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறி இளவரசனை உள்ளே அழைத்துச் சென்றாள். மற்றவர்களும் உள்ளே வந்ததும் பணிமக்கள் இருவரை அழைத்துக் காயமடைந்த வீரர்களைக் கவனிக்கவும், இளவரசனும் நீராடச் சுடு நீர் தயாரிக்குமாறும் உத்தரவிட்டாள். சுமார் ஒரு நாழிகைக்குள் எல்லோரும் நீராடி உணவருந்தியதும் இளவரசனுக்கு ஒரு தனி அறையும் மற்றவர்களுக்கு ஒரு கூடத்தையும் காட்டிய மூதாட்டி, ''நன்றாக இளைப்பாறுங்கள், காலையில் பயணப்படலாம்'' என்று சொல்லிச் சென்றாள்.

மிகுந்த களைப்பால் இளவரசன் உட்பட அனைவரும் அன்று நன்றாக உறங்கினர். ஆனால் மூதாட்டியின் திட்டப்படி அவர்கள் காலையில் பயணப்பட முடியவில்லை. கதிரவன் முளைத்த பிறகே



எழுந்த இளவரசன் தன் முன் நின்ற பணி மகனை விளித்து, ''மூதாட்டி எங்கே?'' என்று வினவினான்.

''பக்கத்து நகரத்துக்குச் சென்றிருக்கிறார்கள், சாமான்கள் வாங்கிவர'' என்று அவன் பதில் கூறினான்.

''எதற்குச் சாமான்கள்?''

''தங்களைப் பத்து நாட்களுக்குப் பராமரிக்க.''

''பத்து நாட்கள் நான் இங்கிருக்கப் போவதாக யார் சொன்னது?''

பணிமகன் பதில் பல்லவ இளவலைத் தூக்கிவாரிப் போட்டது.

''ஸ்ரீராமபுண்யவல்லபர்'' என்று மிகுந்த மரியாதையுடன் பதில் கூறினான் பணிமகன்.

# 51. சிறைவீடு

**ப**ணிமகன் அளித்த பதில் எந்தச் சந்தர்ப்பத்திலும் எப்பேர்ப்பட்ட நெருக்கடியிலும் உணர்ச்சிகளைக் காட்டாத பல்லவ இளவலின் முகத்தில்கூட ஓரளவு திகைப்பை மட்டுமின்றி வியப்பையும் விளைவிக்கவே, அவன் உடனடியாகப் பணிமகனுடன் உரையாடல் ஏதும் தொடங்காமல் தானிருந்த அறையின் ஓரத்துக்குச் சென்று அங்கிருந்த சாளரத்தின் மூலம் வெளியே நோக்கினான் காலை நேரத்தில் கதிரவனின் கதிர்கள் காட்டு மரங்களின் இலைகளையும் ஊடுருவிச் சென்றதால் ஆங்காங்கு நீளப்பாளங்களாகவும் திட்டுக்களாகவும் விழுந்திருந்த வெயில் தடங்கள் மரங்களிலிருந்து உதிர்ந்து கிடந்த இலைப் பழுப்புக்களுக்கும் புஷ்பங்களுக்கும் இணையிலா அழகைக் கொடுத்திருந்தன. மனிதனுடைய முயற்சி சிறிதுமின்றி இயற்கையின் முயற்சியாலேயே அந்தக் காட்டு மரங்கள் முளைத்து எழுந்திருந்ததால், அவை வானளாவி நின்றதன்றி ஒரு சீராக இல்லாமல் தாறுமாறாக இருந்தாலும் அப்படித் தாறுமாறாக இருந்த காரணத்தாலேயே ஒரு தனி அழகையும் பெற்றிருந்தன. யாராலும் கூண்டிலிட்டுப் பராமரித்து வளர்க்காத காரணத்தினாலேயே நன்றாகச் செழித்திருந்த பல நிறக்கிளிகள் மரக்கிளைகளில் நின்று களிப்புக் கூச்சலிட்டன. இரண்டொரு மயில்களும் நாலைந்து மைனாக்களும் மரத்தடிகளில் சிங்கார நடை போட்டுக் கொண்டிருந்தன. இரண்டு மூன்று அணில்கள் மரக்கிளைகளில் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வெகு வேகமாக ஓடின. அவற்றை ஒரே இடத்தில் நின்று மூக்கை உயர்த்தி, தொண்டையை ஆடவிட்டுக் கொண்டிருந்த ஓணான் ஒன்று உன்னிப்பாகக் கவனித்தது. இப்படி இன்னும் எத்தனையோ

இயற்கையின் இந்திர ஜாலங்கள் கண்ணுக்குத் தெரிந்தாலும் பல்லவ இளவல் அவற்றை எதையும் ரசித்தானில்லை, மரத்திலிருந்து உதிர்ந்த பழுப்புக்களையும் அவன் விழிகள் பார்க்கவில்லை. மலர்களையும் ரசிக்கவில்லை. கிள்ளைகளின் வர்ண ஜாலங்களோ மூன்று வெண்மை வரிகள் கொண்ட அணில்களின் சேஷ்டைகளோ அவன் கண்களில் படவில்லை. மயில்களையோ மைனாக்களையோ அவன் கண்கள் காணவில்லை. அந்த மாளிகைக்குத்தான் வருவானென்பதை ஸ்ரீராமபுண்யவல்லபரால் எப்படி ஊகிக்க முடிந்தது என்று அவன் சிந்தையில் எழுந்த எண்ணம் இயற்கையின் அற்புதங்களைக் காணமுடியாமல் கண்களை மறைத்தது. இருப்பினும் காட்டின் பகுதியை அவன் நன்றாக ஊன்றிக் கவனித்தான். என்ன ஊன்றிக் கவனித்தும் சாளுக்கிய வீரன் ஒருவன்கூடக் கண்ணில் படாததால் எந்த விதத்தில் தன்னைச் சாளுக்கியர் போர் மந்திரி அந்த மாளிகையில் மடக்கி வைக்கமுடியும்?'' என்ற கேள்வியைத் தனக்குள் எழுப்பிக் கொண்டான் மாளிகையைச் சுற்றிக் காவல் ஏதுமில்லாததால் தான் உடனடியாகத் தனது வீரர்கள் அழைத்துக் கொண்டு வெளியேறினால் தன்னை யார் தடை செய்ய முடியும் என்றும் எண்ணியதன்றி அதைப் பற்றிப் பணி மகனைக் கேட்கவும் செய்தான், ''நாங்கள், உடனடியாக வெளியேறி னால் எங்களை யார் தடை செய்ய முடியும்?'' என்று.

பணிமகன், தலை தரையில் படும்படி வணங்கிவிட்டு, ''தங்களைத் தடை செய்யக்கூடியவர் ஒருவர்தான்'' என்று கூறினான்.

''அவர்?''

''ஸ்ரீராமபுண்யவல்லபர்தான்''

''அவர் காஞ்சியிலல்லவா இருக்கிறார்?''

''இல்லை.''

''இங்கேயோ இருக்கிறார்?''

''ஆம். பூஜை அறையில் இருக்கிறார். தாங்கள் நீராடி முடிந்ததும் தங்களைப் பூஜை அறைக்கு வரச் சொல்லியிருக்கிறார்கள்.''

பல்லவ இளவலின் பிரமிப்பு உச்ச நிலையை அடைந்தது. ஸ்ரீராம புண்யவல்லபர் தான் வருமிடத்தை ஊகித்து அதற்கு முன்னதாக அங்கு வந்திருக்கிறாரென்றால் தன்னைத் தடை செய்யத் தகுந்த ஏற்பாட்டுடன்தான் வந்திருப்பார் என்று தீர்மானித்துக் கொண்டதால் அதைப் பற்றியும் வினவினான், ''அவருடன் எத்தனை வீரர்கள் வந்திருக்கிறார்கள்?'' என்று.

''இருநூறு வீரர்கள் வந்திருக்கிறார்கள்'' என்று பணிமகன் பதில் கூறினான்.



இளவரசன் மேற்கொண்டு உடனடியாகக் கேள்வி ஏதும் கேட்காமல் சாளரத்தின் மூலம் காட்டுப் பகுதியைத் துருவி ஆராய்ந்தான். பிறகு கேட்டான், ''ஒரு வீரன்கூட என் கண்ணுக்குத் தெரியவில்லையே!'' என்று.

''கூடிய வரையில் தங்கள் கண்ணுக்குப்படாமல் மாளிகையைச் சுற்றியுள்ள காட்டின் அடர்ந்த பகுதிகளில் தங்கியிருக்க உத்தர விட்டிருக்கிறார் அமைச்சர்'' என்று பணிமகன் பதில் கூறினான்.

''இந்த ரகசியத்தையெல்லாம் என்னிடம் சொல்வது சரியா?''

''நானாகச் சொல்லவில்லை''

''யார் சொல்லச் சொன்னது?''

''நீங்கள் கேட்டால் ஒளிவு மறைவின்றிச் சொல்லும்படி அமைச்சர் உத்தரவு.''

இதைக் கேட்ட இளவரசன் புரிந்து கொண்டான் ஸ்ரீராம புண்யவல்லபர் தன்னை நோக்கி நகைக்கிறாரென்பதை. அதனால் எழுந்த சினத்தை உள்ளடக்கிக் கொண்டு நீராடச் சென்று, நீராடிப் புத்தாடை புனைந்து பணிமகன் காட்டிய பூஜை அறைக்குச் சென்றான் பல்லவ இளவல். சாளுக்கியர்களின் அந்தப் பூஜை அறை தனிக்கோயில் போலவே காட்சியளித்தது. நான்கு தூண்கள் எழுப்பப் பெற்று ஒவ்வொரு தூணையும் தாங்கி நின்ற சிங்கத்துடனும் மேலிருந்த வேலைப்பாட்டுடனும் விளங்கிய மணிமண்டபத்தின் நடுவில் மகிஷாசுரமர்த்தனியின் சிலை வெகு உக்கிரத்துடன் காட்சியளித்தாலும், அந்த உக்கிரத்திலும் மஹா மாயையின் விழிகளில் அருள் சொட்டியதைக் கண்ட பல்லவ இளவல் அந்தப் பிம்பத்தைப் பார்த்துப் பிரமித்த வண்ணம் பல விநாடிகள் சிலையென நின்றான். இயற்கையிலே கலையில் திளைக்கும் தன்மையுள்ள அந்த ராஜ சிற்பி அந்தச் சில விநாடிகளில் சாளுக்கிய நாடு, காஞ்சி மண்டலம், நடக்க விருக்கும் போர்கள் - அனைத்தையும் மறந்தான். மகிஷாசுர மர்த்தினியைச் சிருஷ்டித்த அந்தச் சிற்பியின் வேலைத் திறனில் மனத்தைப் பறி கொடுத்து நின்றான். பிறகு கண்களை அந்தப் பூஜை அறையின் மேல் கூரையிலும் பக்கப் பகுதிகளிலும் ஓட்டி, 'இந்தக் காட்டில் ஒரு மாளிகை இதில் ஒரு சிற்ப விலாசம், அப்பப்பா! என்ன விசித்திரம்!' என்று ஆனந்தப்பட்டுக் கொண்டான். அந்த ஆனந்தத்துடன் மஹாமாயையின் பிம்பத்தை நோக்கி நெடுஞ்சாண் கிடையாக விழுந்து தண்டனிட்டு எழுந்து சற்று எட்ட உட்கார்ந்து கொள்ளவும் செய்தான்.

நீண்ட நேரம் மகிஷாசுரமர்த்தினியை நோக்கிக் கண்மூடித் தியானத்திலிருந்த ஸ்ரீராமபுண்யவல்லபர் மெல்லக் கண்விழித்து எதிரே

தட்டிலிருந்த சிவந்த செம்பருத்திப் புஷ்பங்களை இருகை களாலும் எடுத்துத் தேவியின் பாதங்களில் போட்டார். பிறகு தூப தீப நைவேத்தியங்களை முடித்துக் கொண்டு இளவரசனை நோக்கித் திரும்பி அம்பிகையின் பாதங்களிலிருந்த இரண்டு மலரிதழ்களை அவனுக்கு எடுத்துக் கொடுத்து ''நீ தீர்க்காயுசுடனும் கீர்த்தி மானாகவும் இருக்கவேண்டும்'' என்று ஆசீர்வதிக்கவும் செய்தார்.

அவர் ஆசீர்வாதத்துக்கும் தன்னைச் சிறைப்பிடித்திருப்பதற்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லாதிருப்பதைக் கண்ட பல்லவ இளவல், ''சிறையில் இருப்பவன் எப்படிக் கீர்த்திமானாயிருக்க முடியும்?'' என்று வினவினான்.

ஸ்ரீராமபுண்யவல்லபர் தமது கூரிய விழிகளை அவன்மீது திருப்பி, ''ராஜசிம்மா, வஸுதேவன் சிறையிலிருந்தான், வாஸுதேவன் சிறையில் பிறந்தான், சீதை சிறையிலிருந்தாள். இவர்களின் கீர்த்திக்குக் குறைவுண்டா? மகான்களின் கீர்த்தி சிறை வாசத்தால் பாதிக்கப்படுவதில்லை'' என்று கூறினார். இதை அவர் கூறியபோது குரலில் பரிகாசத் தொனி சிறிதுமில்லை. உணர்ச்சி நிரம்பிக் கிடந்தது.

ஸ்ரீராமபுண்யவல்லபருக்குக்கூட உணர்ச்சி உண்டென்பதை அன்றுதான் உணர்ந்த ராஜசிம்ம பல்லவன் அதனால் சிறிது வியப்படைந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''நான் அப்படியொன்றும் மகானல்லவே?'' என்று பதில் கூறினான்.

''ராஜசிம்மா! உன் வாழ்க்கையின் லட்சியம் என்ன?'' என்று கேட்டார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

''தற்சமயம் என் தந்தையிடம் சென்று தங்கள் போர்த் திட்டத்தை உடைப்பது'' என்று கூறினான் ராஜசிம்மன்.

''இடைக்காலப் போர்கள், அவற்றின் தோல்விகள், வெற்றிகள், வாழ்க்கையின் லட்சியமாகமாட்டா. எந்தக் காரணத்தை முன்னிட்டு விக்கிரமாதித்தன் படையெடுப்பின் போது நீ உன் தந்தையுடனிருந்து போரிடாமல் மாமல்லபுரத்திலிருந்தாயோ அதுதான் உனது லட்சியம். லட்சியம் என்பது நிரந்தரமான நன்மைகளை விளைவிப்பது. போர் ஒரு லட்சியமே அல்ல'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர். மேலும் சொன்னார், ''ராஜசிம்மா! நீ ராஜ சிற்பி தேவாலயங்களைக் கட்டுவது உன் லட்சியம். அதற்காகத்தான் நீ பிறந்தவன். உன் உடலிலே தெய்வ காரியம் ஊறியிருக்கிறது. போர் ஓர் இடைக்கால நிகழ்ச்சி! அதை மறந்து விடு.''

ஸ்ரீராமபுண்யவல்லபரின் சொற்களைக் கேட்ட பல்லவ இளவல் நீண்ட நேரம் மௌனமாயிருந்தான். பிறகு கேட்டான், ''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியெனும் கடமை இருக்கிற தல்லவா?'' என்று.



''இருக்கிறது.'' ஸ்ரீராமபுண்யவல்லபரின் இந்தப் பதில் உணர்ச்சி ஏதுமற்ற குரலில் வந்தது.

''அப்படியானால் இந்த மாளிகையிலிருந்த நான் தப்பிச் செல்ல வேண்டும்'' என்றான் ராஜசிம்மன்.

''முடியாது ராஜசிம்மா! உன்னிடம் எனக்கு எத்தனையோ அன்பிருந்தாலும், உன்னை இங்கிருந்து அனுப்ப முடியாது. விக்கிரமாதித்தனின் போர் மந்திரியென்ற கடமையிலிருந்து நான் எப்படி விடுபட முடியும்?'' என்று வினவினார்.

''தங்களையும் மீறி நான் இந்த மாளிகையிலிருந்து வெளியேறி விட்டால்?'' ராஜசிம்மனின் கேள்வி உறுதியான குரலில் வெளி வந்தது.

''முடியாது ராஜசிம்மா! முதலில் இருமுறை ஏமாந்தேன், பல்லவர் சத்திரத்திலும் பிறகு கங்க நாட்டுச் சாலையின் ஆரம்பச் சத்திரத்திலும். ஆனால் இப்பொழுது ஏமாறமாட்டேன். இந்த மாளிகையைச் சுற்றி இருநூறு வீரர்கள் காவல் புரிகிறார்கள். இருபது பேர்களல்ல'' என்று விளக்கினார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த ராஜசிம்ம பல்லவன் கேட்டான், ''நான் இந்த மாளிகைக்கு வருவேனென்பது தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று.

''இதில் விந்தை ஏதுமில்லை ராஜசிம்மா. நடந்தைச் சொல்கிறேன் கேள்'' என்று ஆரம்பித்த ஸ்ரீராமபுண்யவல்லபர் விவரிக்கலானார்: ''நீ தப்பிச் சென்றதை விக்கிரமாதித்த மகாராஜாதான் முதலில் எனக்குக் கூறினார். உன்னைச் சிறை செய்வதில் அவருக்கு இஷ்டமில்லையென்பதையும் திட்டமாகத் தெரிவித்தார். ஆனால் அவர் பிரியப்படி நடந்தால் கங்க நாட்டுப் போர் விஷயமாக நான் போட்ட திட்டம் தவிடுபொடியாகி விடுமென்பதை உணர்ந்ததால் அவருக்குத் தெரியாமல் உன்னைச் சிறை செய்யத் தீர்மானித்தேன். அதற்காக இருபது இருபது வீரர்களாகச் சாளுக்கிய நாடு, கங்க நாடு செல்லும் மூன்று சாலைகளிலும் சத்திரங்களையும் ஆரம்ப கிராமங்களையும் கவனிக்க மொத்தம் நானூறு வீரர்களையும் அனுப்பத்தளபதிக்கு உத்தரவிட்டேன். ஆனால் மறுநாள்வரை நீ சிறைப்படவில்லை. இதில் தண்டிமகாகவியும் தலையிட்டிருப்பதால் உண்மை யறிய அவர் மாளிகைக்குச் சென்றேன். தண்டி மகாகவி அப்பொழுது பூஜையறையில் இருந்தார். நானும் பூஜை அறைக்குச் சென்று உட்கார்ந்து கொண்டேன். அங்கு உன் காதலிகள் இருவரும் அக்கம் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள். ரங்கபதாகாதேவி வழக்கம் போல்

காவ்யாதர்சத்தைச் சிக்குப் பலகையில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். பூஜை முடிந்ததும் காவ்யாதர்சத்தைப் படிக்கும் படி கங்கன் மகளுக்கு ஆக்ஞாபித்தார் மகாகவி. ரங்கபதாகா தேவிஏடுகளைத் தன் வலது கையால் புரட்டினாள். அதைக் கண்டதும் நான் திகைத்தேன், புரியாத பல விஷயங்கள் எனக்குப் புரிந்தன...'' இந்த இடத்தில் பேச்சை நிறுத்திய ஸ்ரீராமபுண்யவல்லபர் ராஜசிம்மனை உற்று நோக்கினார்.

''என்ன புரிந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டான் ராஜசிம்ம பல்லவன்.

''ஏடுகளைத் திருப்பினாள் ரங்கபதாகாதேவி'' என்று மீண்டும் சொன்னார் போர் மந்திரி.

''அதைத்தான் முன்பே சொன்னீர்களே!''

''அதைச் சொன்னேன். கண்டதைச் சொல்லவில்லை.''

''என்ன கண்டீர்கள்?''

''ஏடு புரட்டியபோது அவள் மோதிர விரலில் ஏதுமில்லை.''

''உம்?''

''அவள் எப்பொழுதுமே அணிந்துள்ள கங்கநாட்டு அரசகுல மோதிரம் இல்லை.''

''அது எங்கேயென்று கேட்டீர்களா?''

''கேட்க வேண்டிய அவசியமில்லை.''

''ஏன்?''

''அது இருக்குமிடத்தை ஊகித்துக் கொண்டேன். அடுத்த நாள் கிடைத்த செய்திகள் என் ஊகத்தை ஊர்ஜிதப்படுத்தின'' என்ற ஸ்ரீராமபுண்யவல்லபர் மேலும் சொன்னார்: ''பூஜைக்குப் பின்னர் தீர்க்காலோசனையுடன் நான் எனது மாளிகைக்குத் திரும்பினேன். நீ கங்க நாட்டு ஆரம்ப சத்திரத்தில் எனது வீரர்களை வென்று சென்றுவிட்ட செய்தி கிடைத்தது. கங்க நாட்டு அரசகுல மோதிரம் உன்னிட மிருந்ததால் கங்க நாட்டுக்குள் தான் நீ செல்வாயென்பதை ஊகித்தேன். அதுவும் கங்கநாட்டுப் பழைய தலைநகர் குவலாலா வுக்குச் சென்று அங்கிருந்து மேற்கில் சென்று தெற்கே திரும்புவது தான் அறிவாளியின் திட்டமாக இருக்க முடியுமென்பதையும் முடிவு செய்துகொண்டேன். இம்முறை தவறினால் உன்னைப் பிடிப்பது கஷ்டமாகையால் நானே புறப்பட்டேன் நேரிடையாக. உன் தந்தையின் பாசறையிருக்கும் வழி சாளுக்கியர்களின் தெற்குச் சாலை, அதைக் கண்காணிக்க ஏற்பாடு செய்து விட்டு இருநூறு வீரர்களுடன் இம்மாளிகைக்கு வந்தேன்.



குவலாலாவிலிருந்த பெண்ணை யாற்றைத் தாண்டி மலைக் காட்டுப் பகுதிக்கு வந்துவிட்டால் இந்த மாளிகையொன்று தான் யாருக்கும் புகலிடம். வேறு சத்திரங்களோ மாளிகைகளோ ஒரு காதத்துக்கு இங்கு எதுவும் கிடையாது. எப்படியும் அலுத்துச் சலித்து நீ இங்கு வருவாயென்று கணக்குப் போட்டேன். வீரர்கள் மாளிகையைச் சூழ்ந்திருப்பதைக் கண்டால் நீ இதை நெருங்க மாட்டாய் என்று வீரர்களை மாளிகைக்குச் சற்றுத் தூரத்தில் காடுகளில் பதுக்கி வைத்தேன்.

இங்கு சற்று நிதானித்த ஸ்ரீராமபுண்யவல்லபர் ராஜசிம்மனை உற்று நோக்கினார். ராஜசிம்மன் ஒரு சந்தேகம் கேட்டான். ''உங்கள் கணக்குத் தவறியிருந்தால்? நான் இங்கு வராதிருந்தால்?'' என்று.

''தெற்குச் சாலையில் உன்னை மடக்க இருநூறு வீரர்கள் கொண்டை படை இருக்கிறது. நீ இங்கு திரும்பாமல் தெற்கே சென்றால் உன்னைச் சிறை செய்து இங்கே கொண்டுவர உத்தர விட்டிருக்கிறேன்'' என்றார் போர் மந்திரி.

''இப்பொழுது என்னை என்ன செய்ய உத்தேசம்?'' என்று கேட்டான் ராஜசிம்மன்.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் முகத்தில் வருத்தத்தின் சாயை படர்ந்தது. ''இங்கு உன்னைப் பத்து நாட்களுக்குச் சிறை வைக்க உத்தேசித்திருக்கிறேன். இந்தக் காட்டு மாளிகை சாளுக்கிய மன்னர்கள் வேட்டையாடும்போது தங்குவதற்காகப் பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்டது. ஆகையால், உன்னை இங்கு சிறை வைக்கத்தான் ஆரம்பத்திலேயே திட்டமிட்டேன். அம்பாள் அருளால் அது இன்றுதான் சாத்தியமாயிற்று. இந்தப் பத்து நாட்களுக்குப் பிறகு, நீ எங்கு வேண்டுமானாலும் செல். அடுத்து வரும் நிகழ்ச்சிகளில் நான் தலையிடவில்லை'' என்றும் கூறினார் போர் மந்திரி.

ராஜசிம்ம பல்லவனின் இதழ்கள் சினத்தால் சற்றே மடிந்தன. ''இப்பொழுது உங்களை நான் சிறை செய்து இம்மாளிகையிலிருந்து கத்தி முனையில் அழைத்துச் சென்றால் உங்கள் வீரர்கள் என்ன செய்வார்கள்?'' என்று வினவவும் செய்தான்.

''என்னை நீகொன்றாலும் லட்சியம் செய்யவேண்டாமென்று வீரர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறேன். கங்க நாட்டுப் போரின் முடிவு சாளுக்கிய சாம்ராஜ்ய அஸ்திவாரத்துக்கு மிக முக்கியம். அந்த அஸ்திவாரத்துக்கு நான் பலியானால் அதைவிடச் சிறந்த பாக்கியம் வேறு எதுவுமிருக்க முடியாது'' என்று கூறிய ஸ்ரீராமபுண்யவல்லபர் புன்முறுவல் கோட்டினார். அதே சமயத்தில் உருவிய வாட்களைத்

தாங்கிய இரு வீரர்கள் ஓசைப்படாமல் பூஜை அறைக்குள் நுழைந்து இளவரசன் பின்னால் நின்று கொண்டனர். ''பல்லவ இளவலை அவரது அறைக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று உத்தரவிட்டார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

அந்தக் காட்டு மாளிகை அடுத்த பத்து நாட்களுக்குத் தனக்குச் சிறை வீடு என்பதை ராஜசிம்மன் சந்தேகமறப் புரிந்து கொண்டான்.

## 52. உக்ரோதயம்

**கா**ஞ்சி மாநகரத்துக்குத் தென்மேற்கில், காவிரியின் கரையிலிருந்த கங்க நாட்டுத் தலைநகரான தழைக்காட்டுக்கு நேர் கிழக்கில், *கங்கவாடியின் எல்லைக் காட்டில் பாசறை அமைத்துக் கொண்டிருந்த பல்லவ மன்னனான பரமேசுவரவர்மன், தன்னெதிரே நிறுத்தப்பட்டிருந்த சாளுக்கிய உபதளபதியான வீரபாகுவைப் பல விநாடிகள் கூர்ந்து நோக்கினான். சிறிது தற்பெருமையுடைய வனானாலும் கோழையில்லாத வீரபாகுவும் பல்லவ மன்னனைத் துணிவுடன் நிமிர்ந்து பார்க்கவே செய்தான். ஆஜானுபாகுவாக அகன்ற மார்புடனும் வதனத்துடனும், வயதான காலத்திலும் அதிக நரையில்லாத முடியுடனும், வீரக்களை சொட்டும் கண்களுடனும் காட்சியளித்த பரமேசுவரவர்மனை நோக்கிய வீரபாகுவின் கண்களில் வியப்பு மிதமிஞ்சித் தெரிந்தது. இத்தகைய பராக்கிரமசாலி எதற்காகப் போரிடாமல் காஞ்சியை விட்டு அகன்றான் என்று தனக்குள்ளேயே வினவிக்கொண்டான் வீரபாகு. பரமேசுவர வர்மனின் ஆராய்ச்சிக் கண்கள் தன் இதயத்தை ஊடுருவி விடுவதைப் போலிருந்ததைக் கவனித்த விக்கிரமாதித்தன் உப தளபதி, பல்லவ மன்னனிடம் தான் எதையும் ஒளிப்பதில் அர்த்தமில்லை யென்பதையும் புரிந்து கொண்டான் பல்லவ மன்னனின் மார்பிலிருந்த பொற்சங்கிலியின் நடுவில் மிகப் பெரியதாய் நெருப்புத் துண்டத்தைவிட அதிக ப்யங்கரமாய் ஜொலித்துக் கொண்டிருந்த ஒரு பெரிய மாணிக்கக் கல்லைக் கண்ட வீரபாகு அதுதான் உலகப் பிரசித்தி பெற்ற உக்ரோதயமாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்ததன்றி, 'இந்தக் கல் யாரிடமிருக்கிறதோ அவனுக்குத் தோல்வியில்லை என்று சொல்வார்களே, அப்படியிருக்க பல்லவ மன்னன் நம்மிடம் எப்படித் தோல்வியடைந்தான்?'' என்று உள்ளூரக் கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

வீரபாகுவின் உள்ளத்தில் ஓடிய சிந்தனைகளைப் புரிந்து கொண்ட பரமேசுவரவர்மன் உதடுகளில் சற்றே புன்னகை படர்ந்தது. ''சாளுக்கிய உபதளபதி! உங்களிடமிருந்து ஓலை கிடைத்துவிட்டது. அதைத் தவிர நீங்கள் சொல்லவேண்டியது ஏதாவது பாக்கி யிருக்கிறதா?'' என்று வினவினான்.

வீரபாகுவும் தனது இதழ்களில் இளநகையைப் படர விட்டுக் கொண்டான். ''அப்படி ஏதாவதிருந்தாலும் அதை நான் சொல்வே னென்று பல்லவ மன்னர் எதிர்பார்க்கிறாரா?'' என்று பதிலுக்கு வினவவும் செய்தான் அச்சம் சிறிதுமற்ற குரலில்.

''இல்லை. எதிர்பார்க்கவில்லை. நீங்கள் சொல்ல வேண்டியது எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. ஸ்ரீராமபுண்யவல்லபர் அனைத்தையும் ஓலைகளில் தெளிவாக எழுதியிருக்கிறார்'' என்று கூறிய பரமேசுவரவர்மன் பக்கத்தில் நின்றிருந்த இந்திரவர்மனை நோக்கி, ''சாளுக்கிய நாட்டு உபதளபதியும் அவருடன் வந்திருக்கும் நான்கு வீரர்களும் காவலில் இருக்கட்டும். அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் ஏதும் குறைய வேண்டாம்'' என்று உத்தரவிடவே இந்திரவர்மன் வீரபாகுவை முன்னால் செல்ல விட்டு மன்னன் இருப்பிடத்திலிருந்து அவனை அகற்றிச் சென்றான்.

அவ்விருவரும் சென்றதும் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்ட பரமேசுவரவர்மன் சற்று எட்ட நின்ற தனது தளபதியான பலபத்ரவர்மனைக் கிட்டே வரச் சொல்லி எதிரேயிருந்த மஞ்சத்தில் வீரபாகுவிடமிருந்து கைப்பற்றிய ஓலைகளைப் புரட்டி வைத்து அவற்றில் தனது கவனத்தை மீண்டும் செலுத்தினான். நீண்ட நேரம் அவற்றை ஆராய்ந்த பரமேசுவரவர்மன் மனத்தில் பலத்த சந்தேகம் ஏற்பட்டதற்கான அறிகுறி அவன் வதனத்தில் படர்ந்தது. அந்தச் சந்தேகம் காரணமாக வினவினான் பல்லவ மன்னன், ''பலபத்ரவர்மரே! நீங்கள் வீரபாகுவைச் சிறை பிடித்த விஷயத்தை இன்னொரு முறை விளக்குங்கள்'' என்று.

எதற்காக ஏற்கனவே தானும் இந்திரவர்மனும் விவரித்ததை மீண்டும் விளக்கச் சொல்கிறார் மன்னர் என்பதை உணராத பலபத்ரன் மன்னன் உத்தரவைப் புறக்கணிக்க முடியாததால் மறுபடியும் அந்தப் பழைய கதையை விவரிக்கத் தொடங்கி, ''நானும் இந்திரவர்மரும் சிறைப்பட்ட விஷயத்தைத் தங்களுக்கு ஏற்கனவே விளக்கி விட்டேன். நாங்கள் சிறைப்பட்ட மூன்றாவது நாளிரவு சிறைக்கூடத்தைக் காவல்

* கங்கர்கள் ஆண்டு வந்ததால் கங்கநாடு கங்கவாடி என்று அழைக்கப்பட்டு வந்தது. இப்பொழுதுள்ள கர்நாடக ராஜ்யத்தின் தென் பகுதியே கங்கநாடு.

புரிந்த வீரர்களில் இருவர் அன்றிரவு போர் மந்திரியின் முக்கிய ஓலை ஒன்றைத் தாங்கி வீரபாகு கங்க நாடு செல்லப் போவதாகப் பேசிக் கொண்டார்கள். இதைக் கேட்டதும் திகைப்படைந்தோம். எப்படியும் வீரபாகுவைச் சிறைசெய்து ஓலை விஷயத்தை அறியத் தீர்மானித்தோம். அன்று எங்களுக்கு உணவு கொண்டு வந்த இருவரையும் கட்டிப் போட்டுச் சிறையிலிருந்து தப்பினோம். பிறகு நமது புரவிச் சாலைக்குச் சென்று அங்கிருந்த இரு புரவிகளை அவிழ்த்து எடுத்துக் கொண்டு கங்க நாட்டுச் சாலையை நோக்கி விரைந்தோம். நடுவே மறைந்திருந்த பல்லவ வீரர் நால்வரையும் உடனழைத்துக் கொண்டோம்'' என்று சொல்லிக் கொண்டே போன பலபத்ரனைக் கையின் சைகையால் எத்தனை அறைகள் இருக்கின்றன என்று வினவினான்.

''நாங்கள் சிறை வைக்கப்பட்டிருந்த பகுதியில் மட்டும் பத்து அறைகள்'' என்று கூறினான் பல்லவ தளபதி.

''அந்தப் பத்து அறைகளில் உங்கள் அறை எங்கிருந்தது?'' என்று கேட்டான் பல்லவ மன்னன்.

''நடுவில்'' என்றான் பலபத்ரன்.

''பத்து அறைகளிருக்க நடுவிலிருந்த உங்கள் அறைக்கெதிரில் வந்து சிறைக் காவலர் இந்த ஓலையைப் பற்றி ஏன் பேச வேண்டும்?'' என்று வினவினான் பரமேசுவரவர்மன்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று அறியாத பலபத்ரன் ''உலாவிக் கொண்டிருந்த சிறைக் காவலர் ஏதோ எங்கள் அறைக்கு எதிரில் நின்றார்கள். பேசினார்கள்'' என்று கூறினான்.

பல்லவ மன்னன் லேசாக நகைத்துவிட்டுச் சொன்னான். ''பேச வைக்கப்பட்டார்கள்'' என்று.

பலபத்ரவர்மன் முகத்தில் வியப்புக் குறிபடர்ந்தது. பல்லவ மன்னன் மனத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டதால், ''அப்படியானால்...'' என்று ஏதோ சொல்லத் துவங்கினான்.

''ஆம், எல்லாம் ஸ்ரீராமபுண்யவல்லபர் நடத்திய நாடகம். சாளுக்கியப் போர் பற்றிய முக்கிய ஓலையை விக்கிரமாதித்தன் நண்பனான பூவிக்ரமனுக்கு எழுதுகிறார். அந்த ரகசிய ஓலை அனுப்பப்படும் விஷயம் சாதாரண சிறைக் காவலருக்குத் தெரிகிறது. அதை அந்தக் காவலர் உங்கள் அறைக்கெதிரில் நின்று பேசுகிறார்கள். பிறகு நீங்கள் சிறையிலிருந்து தப்புகிறீர்கள். சிறைக் கூடத்தைக் காவல் செய்யும் நூற்றுக்கணக்கான வீரர்கள் உங்களைப் பிடிக்கவில்லை. இதெல்லாம் விசித்திரமாயில்லை?'' என்று சொல்லிக் கொண்டு போன



மன்னனை இடைமறித்த பலபத்ரன், ''மன்னவா! நாங்கள் உணவு கொண்டு வந்த சாளுக்கிய வீரர்களின் உடைகளை அல்லவா அணிந்திருந்தோம்'' என்றான்.

பரமேசுவரவர்மன் இகழ்ச்சியுடன் தனது தளபதியை நோக்கினான். ''நீங்கள் உங்கள் உடையிலேயே வெளியே வந்திருந்தாலும் உங்களை யாரும் தடை செய்திருக்க மாட்டார்கள். ஏன் தெரியுமா?'' என்றும் வினவினான் பல்லவ மன்னன்.

''ஏன்?'' தளபதியின் குரலில் சந்தேகமும் வியப்பும் கலந்து ஒலித்தன.

''வீரபாகுவை நீங்கள் பிடித்து இந்த ஓலையை என்னிடம் கொண்டுவர வேண்டுமென்பது ஸ்ரீராமபுண்யவல்லபரின் திட்டம்'' என்று திட்டவட்டமாகச் சொன்னான் மன்னன்.

''இதனால் அவருக்கு என்ன லாபம்?'' பலபத்ரன் கேள்வியும் திட்டமாக வெளிவந்தது.

''இந்த ஓலைகளில் கண்ட போர் திட்டப்படி நாம் படைகளை நடத்திச் செல்வோம். ஆனால் அதற்கு நேர் எதிரான திட்டப்படி பூவிக்ரமன் நம்மைச் சூழ்ந்து கொள்வான். எதிர்பாராத தாக்குதலில் நமது படைகள் முறியடிக்கப்படும். இதைத்தான் சாளுக்கிய போர் மந்திரி எதிர்பார்க்கிறார். அவர் தந்திரம் புரியவில்லையா உங்களுக்கு?'' என்று வினவிய மன்னவன், ''இன்றிரவு நமது உபதளபதிகளையும் இந்திரவர்மரையும் இங்கு கூட்டுங்கள். இதற்கு நேர் எதிரான போர்த் திட்டத்தை வகுப்போம்'' என்று உத்தரவிட்டான் பல்லவ பரமேசுவர வர்மன். பிறகு பலபத்ரன் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையையும் அசைத்தான். பலபத்ரன் வெளியே சென்ற பின்பு மீண்டும் அந்த ஓலைகளை ஆராய முற்பட்டான் பரமேசுவர வர்மன். திரும்பத் திரும்பப் பலமுறை அந்த ஓலைகளை ஆராய்ந்த பிறகு தனது இருப்பிடத்தைவிட்டு வெளியே புறப்பட்டான்.

பல்லவ மன்னன் அமைத்திருந்த பாசறை காட்டுப் பகுதியில் இருந்தபடியால் அவனது படைப் பிரிவுகள் மரங்களின் அடியிலும் இடையிடையே இருந்த புல்வெளிகளிலும் தங்கியிருந்தன. அரசனுக்கும் முக்கியமான படைத் தலைவர்களுக்கும் சில துணிக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தனவேயொழிய படைவீரர்கள் வானக் கூரையின் கீழேயே தங்கியிருந்தார்கள். எங்கும் சதா புரவி வீரர் நடமாட்டம் இருந்துகொண்டிருந்தது. கூடாரத்தின் வாயிலில் வந்து கூடாரத் துணி தலையில் துழாவ மிகக் கம்பீரமாக நின்ற பரமேசுவர வர்மன் தனது படைப்பிரிவை நோக்கிப் பெருமிதம் கொண்டான்.

காஞ்சியைப் போர் இன்றி விக்கிரமாதித்தன் கையில் ஒப்படைத்துத் தான் வெளிப்போந்துவிட்டதால் தனது படையின் சிறந்த பகுதி தன்னிடம் தங்கிவிட்டதை நினைத்து, 'இந்தப் பதினையாயிரம் புரவி வீரர்களைக் கொண்டு கங்க மன்னனை முறியடிப்பது ஒரு பெரும் காரியமல்ல' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டு மகிழ்ச்சியையும் அடைந்தான். அவரது வலையில் தான் அத்தனை சுலபமாக விழுந்து விடுவேனென்று ஸ்ரீ ராமபுண்ய வல்லபர் நினைத்ததை எண்ணிச் சிறிது வெகுளவும் செய்த பல்லவ மன்னன், 'பொறுங்கள் ஸ்ரீ ராமபுண்யவல்லபரே, உங்கள் திட்டம் தவிடு பொடியாவதைக் கண்கூடாகக் காணப்போகிறீர்கள்' என்று மனத்துள் கறுவிக் கொள்ளவும் செய்தான். பிறகு தனது புரவியில் ஏறிக் காட்டின் ஊடே சென்று தனது படைப் பிரிவுகளைப் பார்வை யிட்டான். உச்சிவேளை வரையில் படைகளைப் பார்வையிட்டுப் பிற்பகலில் மீண்டும் தனது கூடாரத்துக்கு வந்த மன்னவன் உணவருந்திய பிறகு அன்று மாலைவரை பெரும் பலகையொன்றில் ஏதேதோ கோடுகளை இழுத்துத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந் தான். சில ஓலைகளையும் எடுத்து ஏதேதோ குறிப்பிட்டுக் கொண்டிருந்தான். அன்றிரவு குறிப்பிட்ட நேரத்தில் பலபத்ரவர்ம னும் உபதளபதிகளும் வந்தபோது மன்னன் திட்டம் பூராவும் உருவாயிருந்தது.

தமது ஆசனத்தையும் எதிரேயிருந்த மஞ்சத்தையும் சுற்றித் தளபதியையும் உபதளபதிகளையும் நிற்கவைத்த பரமேசுவரவர்மன், முதலில் மஞ்சத்தின்மீது ஒரு புறத்தில் ஸ்ரீ ராமபுண்ய வல்லபரின் ஓலைகளையும் மற்றொரு புறத்தில் தான் பிற்பகலில் தயாரித்த ஓலைகளையும் விரித்து வைத்தான். ''பலபத்ரவர்மரே இந்திரவர்மரே! உபதளபதிகளே! இந்த இரு ஓலைப் பிரிவுகளையும் பாருங்கள். ஸ்ரீ ராமபுண்யவல்லபர் நம்மை ஏமாற்றத் தயாரித்துள்ள திட்டம் இது'' என்று இரு ஓலைப் பிரிவுகளையும் மாறி மாறிச் சுட்டிக் காட்டினான்.

அவற்றை நீண்ட நேரம் ஆராய்ந்த பல்லவ தளபதியும் ஒற்றனான இந்திரவர்மனும் உபதளபதிகளும் ஸ்தம்பித்து நின்றனர். வீரபாகு கொணர்ந்த ஓலைச் சுவடிகளை கொண்டு எத்தனை பாதாளத்தில் தங்களை அமிழ்த்த இருந்தார் ஸ்ரீ ராமபுண்ய வல்லபர் என்பதை உணர்ந்ததால் உக்கிரமான பெரு மூச்சும் சீற்றமான சொற்களும் அவர்களிடமிருந்து வெளிவந்தன. பரமேசுவரவர்மன் முகத்தில் மட்டும் எந்தவித உணர்ச்சியுமில்லை. மிகச் சாந்தமாக அந்த ஓலைகளின் திட்டத்தை விளக்க முற்பட்டு, ''நமது படைப் பிரிவு இப்பொழுது காவிரியின் கிழக்குப் பகுதியிலிருக்கிறது. நமது நேர் மேற்கில் காவிரியின் தென்கரையிலிருக்கிறது பூவிக்கிரமன்தலை நகரான



தலைக்காடு. கங்கநாட்டுப் படைகள் கங்க நாட்டு எல்லையில், அதாவது நமக்கு வெகு அருகில் இப்பொழுதிருக் கின்றன. ஆகவே இந்தக் காட்டில் நம்மைத் திடீரெனத் தாக்கச் சொல்லி எழுதியிருக்கிறார் ஸ்ரீ ராமபுண்ய வல்லபர். மேலோட்ட மாகப் பார்ப்பதற்கு இது சிறந்த திட்டம், சுலபமான திட்டமும் கூட ஆனால் காட்டிலிருக்கும் படைகளைத் தாக்குவது அவ்வளவு எளிதல்ல. அடர்ந்த அடவியில் புரவிப் படை வேகமாக நுழைவது கஷ்டம். ஆகவே இந்தத் திட்டத்தை நம்பி எதிரிகள் நம்மைத் தாக்குவதற்கு முன்பு நாம் அவர்களைத் தாக்க முன்னேறுவோம் என்று ஸ்ரீ ராமபுண்யவல்லபர் எதிர்பார்க்கிறார். அப்படி நாம் முன்னேறினால் காட்டின் பாதுகாப்பை இழப்போம். எதிரியின் படைகள் இப்படி நம்மை வளைத்துக் கொள்ளும்'' என்று கூறித்தான் தயாரித்திருந்த ஓலைச் சுவடிகளை காட்டினான்.

பரமேசுவரர்மன் பிறகு அந்த ஓலைகளைச் சேர்த்துக் கட்டி வைத்துவிட்டுத் தான் கோடிட்டிருந்த பலகையை எடுத்து மஞ்சத்தின்மீது வைத்தான். பிறகு மடியிலிருந்த குறுவாளை எடுத்து அந்தப் பலகைமீது வீசினான். அதன் முனை அந்தக் கோடுகளின் இணைப்பிலிருந்த ஒரு புள்ளியில் போய் நிலைத்தது. அதைச் சுட்டிக் காட்டிய பரமேசுவரவர்மன், ''இந்த இடத்தில் நாம் எதிரிகளைச் சந்திப்போம்'' என்று வீராவேசத்துடன் கூறினான்.

குறுவாளின் கூர்முனை தொட்டிருந்த புள்ளியைக் கவனித்த பலபத்ரன், ''விளிந்தை'' என்று கூறினான் உணர்ச்சியுடன்.

''ஆம், விளிந்தையில் சந்திப்போம் கங்கனை. அங்கு பாடம் கற்பிப்போம் அவனுக்கு. அந்தப் பாடம் விக்கிரமாதித்தனையும் சிறிது கலங்கச் செய்யும்'' என்ற பரமேசுவரவர்மன், ''அடுத்த வாரம் படைகள் இங்கிருந்து நகரவேண்டும் அதற்காக ஏற்பாடுகள் துவங்கட்டும்'' என்றும் உத்தரவிட்டான். தன் மார்பில் செங்கதிர்களை வீசிய 'உக்ரோதய'த்தைத் தனது வலது கையால் இறுகப் பற்றிக் கொண்ட பரமேசுவரவர்மன், ''ஆண்டவன் பிரசாதமான இந்த மாணிக்கம் விளிந்தையில் எதிரிகளைப் புறமுதுகு காட்டச் செய்யும்'' என்றும் கூறினான்.

அன்று முதல் தளவாடங்கள் சேகரிப்பும், உணவுச் சேகரிப்பும் மற்றும் பல ஏற்பாடுகளும் துரிதமாக நடந்தன. அன்றிலிருந்து எட்டாவது நாள் விளிந்தையை நோக்கிப் பல்லவன் படைகள் நகர்ந்தன. உக்ரோதயம் அகன்ற மார்பில் ஆடி ஆடி அசைய பரமேசுவரவர்மன் அதிசயம் என்ற தனது புரவியில் ஏறிப் படைகளின் முன்னணியில் சென்றான்.

# 53. விளிந்தை

கங்க நாட்டு எல்லை முகப்பிலிருந்த அடர்ந்த அடவியில் பாசறை அமைத்திருந்த பார்வேந்தனான பரமேசுவர பல்லவன் தன் படைகளை அடவியிலிருந்து நகர்த்துவதற்கு முன்பாகத் தன் படைத் தலைவர்களுக்குத் தன் போர்த் திட்டத்தை மிகத் தெளிவாக விளக்கியிருந்தான். காலையில் அவன் இட்ட உத்தரவுக் கிணங்க இரவில் மன்னன் கூடாரத்தில் குழுமியிருந்த படைத் தலைவர்களை நோக்கிய பரமேசுவரவர்மன் கண்கள் கூடாரத்தின் விளக்கு வெளிச்சத்திலும், சற்று எட்ட நாட்டப்பட்டிருந்த பந்தத்தின் சுடரொளியிலும் புலியின் கண்களைப் போலப் பிரகாசித்தன. எதிரே மஞ்சத்தில் கிடந்த பலகையிலிருந்த கோடுகளைத் தன் குறுவாளின் நுனியால் சுட்டிக் காட்டிய பரமேசுவரவர்மன், ''படைத் தலைவரே! உபதளபதிகளே! நன்றாகக் கவனியுங்கள். இப்பொழுது நாமிருக்கு மிடத்தை, அதாவது தென்பெண்ணைக்கும் காவரிக்கு மிடையிலுள்ள இந்த அடவியை, இந்தப் புள்ளி குறிக்கிறது. இந்தப் புள்ளியை நாடிவரும் இரு நீண்ட கோடுகளும் காஞ்சியிலிருந்து கங்கநாடு செல்லும் பாதையையும், தலைக்காட்டியிலிருந்து இங்கு வரும் சாலையையும் குறிக்கின்றன. இந்த அடவியிலிருந்து நாம் கிளம்பி நேராகக் காவிரிக் கரையை நோக்கிச் சென்றால் கங்க நாட்டின் தென்கிழக்கு எல்லையை அடைகிறோம். அங்கு ஏற்கனவே கங்க மன்னனின் படைகள் குவிந்து நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக் கின்றன. அவற்றை எதிர்கொள்ள நாம் போகப் போவதில்லை. இதோ அந்தச் சாலையில் செல்லப் போகிறோம்'' என்று வடபுலம் சென்ற ஒரு கோட்டைக் காட்டினான்.

இந்தக் கோட்டைப் பல்லவர் படைத்தலைவனான பலபத்ரன் கூர்ந்து நோக்கினான். ''அப்படியானால் விளிந்தை சென்று எதிரியைப் பின்பக்கத்தில் தாக்கப் போகிறீர்களா?'' என்று வினவவும் செய்தான்.

''இல்லை. நேராக வடபுலம் செல்லப் போவதில்லை. விளிந்தை இங்கிருந்து வடமேற்கிலிருக்கிறது. நம்முடைய எதிர்ப்பைக் கங்கன் தென்மேற்கில் எதிர்பார்ப்பதால் வடமேற்கில் அவன் படைகள் சிறிதளவேயிருக்கின்றன. அந்தப் படைகளை முதலில் முறியடித்தால் கங்கன் வடமேற்கில் திரும்பி வருவான். அவனுக்கும் விளிந்தைக்கும் இடையில் காவிரியாறு இருக்கிறது. இந்தக் கோடையில் அதில் நீரும் இல்லை. மணல் பகுதியில் கங்கன் படைகள் இறங்கி வரவேண்டி யிருக்கும். நாம் காவிரியின் கரையில் விளிந்தையில் இருப்போம். மணலில் வரும் படையினர் மீது நமது வில்லவரின் அம்புகள்



சரமாரியாகப் பாயும். எதிரியின் புரவிகள் அழிக்கப்படும். புரவிகளை இழந்தவர் காவிரியின் கரையேறி வந்ததும் வாட்களுடனும் வேல்களுடனும் அவர்களை எதிர் கொள்ள நமது புரவிப்படை தயாராயிருக்கும்'' என்று விளக்கினான் பரமேசுவரவர்மன்.

பல்லவ மன்னன் திட்டம் படைத் தலைவனையும் உபதளபதி களையும் வியப்பில் ஆழ்த்தியது. ''எதிரி அழிந்தான்'' என்று குதூகலத்துடன் கூறினார்கள் உபதளபதிகள், ஒருமுகமாக உற்சாகம் நிரம்பிய குரலில்.

அந்த உற்சாகத்தில் இந்திரவர்மன் மட்டும் பங்குகொள்ள வில்லை. திரும்பவும் மஞ்சத்திலிருந்த பலகையை ஊன்றிக் கவனித்தான். அவன் முகத்தில் விளக்க முடியாத ஒரு சந்தேகச் சாயை படர்ந்தது. அதைப் பல்லவ மன்னன் கவனிக்கவே செய்ததால் கேட்டான். ''இந்திரவர்மருக்கு இந்தத் திட்டத்தில் நம்பிக்கையில்லை போலிருக்கிறது'' என்று.

இந்திரவர்மன் கண்கள் பலகையிலிருந்து எழுந்து மன்னனை உற்று நோக்கின. ''திட்டம் சரியாகத் தானிருக்கிறது. எந்தப் பழுதுமில்லை. இது சரியாக நிறைவேறினால் வெற்றி மிக எளிதில் கிடைத்து விடும்'' என்று கூறினான் ஒற்றனான இந்திரவர்மன்.

''எளிதில் வெற்றி கிடைப்பது அவ்வளவு தவறா?'' என்று வினவினான் பலபத்ரன் ஆத்திரத்துடன்.

''கிடைத்தால் தவறில்லை'' என்ற இந்திரவர்மன் சந்தேகம் நிரம்பிய விழிகளைப் பல்லவர் படைத்தலைவனை நோக்கித் திருப்பினான்.

''கிடைக்காதென்பது உங்கள் கருத்தா?'' என்று வினவினான் பலபத்ரவர்மன்.

இந்திரவர்மன் கண்கள் படைத்தலைவனைவிட்டுப் பல்லவ மன்னனை நோக்கித் திரும்பின. ''மன்னவா! தங்கள் போர்த் திட்டத்தின்மீது நான் குறை சொல்வதாக நினைக்க வேண்டாம். இந்தத் திட்டத்தில் மாசு மருவு சிறிதுமில்லை. மிகத்தெளிவாகவும் எளிதாகவும் இருக்கிறது. ஆனால் இப்படி நாம் திட்ட மிடலாமென்று எதிரி ஊகிக்க மாட்டானா?'' என வினவினான்.

''எப்படி ஊகிக்க முடியும்?'' என்று பதில் கேள்வி கேட்டான் பரமேசுவரவர்மன்.

''மன்னவா! நமது படையின் இப்பகுதி காஞ்சியை விட்டு விலகிய பின்பு இக்காட்டில்தான் இருக்கிறது. எதிரிப்படை தனது

எல்லையிலிருப்பதைக் கங்க நாட்டு ஒற்றர்கள் கண்காணிக்காமல் இருப்பார்களா? இல்லை மாற்றுத் திட்டங்களைப் பற்றி விக்கிர மாதித்தனும் ஸ்ரீ ராமபுண்யவல்லபரும் யோசிக்கா மலிப்பார்களா? நம்மிடம் ஸ்ரீ ராமபுண்யவல்லபரின் ஒரு ஓலை அகப்பட்டிருக்கிறது. தாங்கள் ஊகித்தபடி வீரபாகுவின் ஓலையை நம்மிடம் அகப்படும்படி ஸ்ரீ ராமபுண்யவல்லபர் திட்டமிட்டிருக்கலாம். ஆனால் அவர் வேறு எந்த ஓலைகளை, எத்தனை விதமான ஓலைகளை கங்கனுக்கு ரகசியமாக அனுப்பியிருக்கிறாரோ? அப்படியே அவர் அனுப்ப வில்லையென்றாலும் பூவிக்ரமனும் அப்படிச் சாமான்யமான வனல்லவே? தன் நாட்டு வடபுலத்தைக் காவலின்றிப் போட்டு வைத்திருப்பானென்று என்ன நிச்சயம்!'' என்று வினவினான்.

இதைக் கேட்ட பலபத்ரனுக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. ''எல்லாவற்றையும் பூவிக்ரமன் ஊகித்துவிட வேண்டுமென்றால் அவன் பெரிய சோதிடனாயிருக்க வேண்டும்'' என்று சினத்துடன் கூறிய பலபத்ரன், ''இந்தத்திட்டம் இன்று இந்தப் பாசறையில், மன்னரால் வகுக்கப்பட்டிருக்கிறது. இதை விக்கிரமாதித்தனோ, ஸ்ரீ ராமபுண்ய வல்லபரோ, பூவிக்ரமனோ எப்படி அறிய முடியும்? அவனது ஒற்றர்கள் நமது படையின் அசைவை அவனுக்கு அறிவிப்பதானாலும் படை புறப்பட்ட பின்புதானே அறிவிக்க முடியும்? அதை பூவிக்ரமன் அறிந்தாலும் உடனே படைகளைத் தென்மேற்கிலிருந்து வடமேற்கு எல்லைக்கு எப்படித் திருப்ப முடியும்?'' என்றும் வினவினான்.

பலபத்ரனின் சினமோ ஆத்திரமோ இந்திரவர்மனை அசைத்த தாகத் தெரியவில்லை. ''நானும் நீரும் மைவிழியும் காஞ்சியில் சத்திரத்தில் மிக ரகசியமாகத்தான் தங்கினோம்.அதை எப்படி ஸ்ரீ ராமபுண்யவல்லபர் அறிந்து வந்து நம்மைச் சிறை செய்தார்?'' என்று பதிலுக்கு வினவினான் இந்திரவர்மன்.

''அந்த நிலை வேறு.'' பலபத்ரன் சொற்களில் உஷ்ணம் தொனித்தது.

''எந்த நிலையும் வேறல்ல. அறிவாளிகள் சம்பந்தப்படும் போது எப்படியும் எதிரியைக் குறைவாக மதிப்பிடுவது தவறு. இங்குள்ள நமது படையைச் சாளுக்கிய ஒற்றர்களும் கங்க நாட்டு ஒற்றர்களும் சதா கவனித்து வருகிறார்கள். மன்னர் கூறியபடி நம்மை விடுவித்தவர் ஸ்ரீ ராமபுண்யவல்லபர் என்றால் நம்மைக் கடைசி வரை கவனிக்க அவர் ஏற்பாடு செய்யாமலும் இருக்க மாட்டார். வீரபாகுவின் ஓலை என்ன பயனை அளித்திருக்கிறது என்பதை உணர ஒற்றர்களை ஏவாமலும் இருக்க மாட்டார்'' என்று கூறினான் இந்திரவர்மன்.



''அப்படியானால் உமது யோசனைதான் என்ன?'' என்று வினவினான் மன்னவன்.

''இந்தப் படையெடுப்பைச் சற்று தாமதிப்பது நல்லது. நாமாகக் கங்கனை நோக்கி முன்னேறுவதைவிட அவனையே முன்னேற விடுவது நல்லது. இடைக் காலத்தில் மன்னர் உத்தரவு கொடுத்தால் கங்க நாட்டின் விவகாரத்தை நானே சென்று கண்காணிக்கிறேன்'' என்றான் இந்திரவர்மன்.

பல்லவ மன்னன் இந்திரவர்மனைக் கூர்ந்து நோக்கினான். ''இந்திரவர்மரே! வேவு பார்ப்பது வேறு. போராடுவது வேறு. எதிரிகள் அறிவாளிகளாயிருக்கலாம். அதற்காக நமது படைப் பலத்தைக் குறைவாக மதிப்பிடுவது தவறு. தவிர, போரில் எதிர்பாராத தாக்குதல்தான் பயனளிக்கும். நமது திட்டத்தை எதிரியை உணரவிட்டுப் பிறகு படைகளை நடத்துவது பெரிய நாசத்தை விளைவிக்கும். தவிர சதா எதிரிக்குப் பயப்பட்டுப் பதுங்கியிருப்பதும் பல்லவர் வீரத்துக்குச் சான்றாகாது. எப்படியும் படைகள் புறப்பட ஒரு வாரமிருக்கிறது. அதற்குள் நீங்கள் பார்க்கிற வேவை பார்த்து விடுங்கள். ஒழுங்கான, திட்டமான காரணங்கள் காட்டப்படுமானால் இந்தத் திட்டத்தை ஒத்திப் போடுவோம். இல்லையேல் இன்றிலிருந்து எட்டாவது நாள் நமது படைகள் விளிந்தையை நோக்கி நகரும்'' என்று திட்டவட்டமாகக் கூறினான். அத்துடன் மந்திராலோசனை முடிந்து விட்டதற்கு அறிகுறியாகத் தனது ஆசனத்திலிருந்து எழுந்திருக்கவும் செய்தான். பலபத்ரனும் மற்ற உபதளபதிகளும் மிகுந்த உற்சாகத்துடன் எழுந்தார்கள். அவர்கள் கண்கள் இந்திரவர்மனை இகழ்ச்சியுடன் நோக்கின.

அவர்கள் கருத்துக்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத இந்திரவர்மன் நேராகத் தனது கூடாரம் சென்று தனது ஒற்றர்களில் நால்வரை அழைத்துக் கொண்டு அன்றிரவே புறப்பட்டான் கங்கநாட்டு தென்திசை நோக்கி. இந்திரவர்மனும் மற்ற நால்வரும் பலவிதமான வேடங்களைப் போட்டுக் கொண்டு கங்க மன்னன் படைகள் குவிந்து கிடந்த இடத்திற்கு அருகிலிருந்த கிராமங்களில் மறைந்து அங்குமிங்குமாக விசாரித்தார்கள். ஆனால் கங்கன் படைகள் இருந்த இடத்தைவிட்டு நகர்ந்ததாகத் தெரியாததால் ஆறாவது நாளிரவில் திரும்பவும் பல்லவன் பாசறை அடைந்தார்கள். அடவியை அடைந்த இந்திரவர்மன் நேராக மன்னனிடம் சென்று கங்கன் படைகள் நகரவில்லையென்று அறிவித்தான்.

மன்னன் மெல்ல நகைத்தான். உடனிருந்த தளபதியும் உபதளபதிகளும் நகைத்தார்கள். ஆனால் இந்திரவர்மன் மனத்தில்

மட்டும் ஏதோ ஓர் அவநம்பிக்கை இருந்துகொண்டே இருந்தது. அதை வெளிக் காட்டுவதில் பயனில்லையென்பதால் மேற்கொண்டு அவன் பதிலேதும் சொல்லாமல் மற்றவர்களின் இகழ்ச்சியையும் நகைப்பையும் பொறுத்துக் கொண்டான்.

மன்னனின் திட்டப்படி எட்டாவது நாள் இரவில் பல்லவர் படை நகர்ந்தது விளிந்தையை நோக்கி. அங்கிருந்து விளிந்தை இரண்டு நாள் பயணத்திலிருந்தது.

பயணம் முடிந்து காவிரிக் கரையை அடுத்திருந்த விளிந்தையை அடைந்தபோது இந்திரவர்மனை நோக்கி நகைத்த உபதளபதிகள் அதிர்ச்சியடைந்தார்கள்.

பல்லவ படையை வரவேற்க பூவிக்கிரமன் பெரும் படையுடன் விளிந்தையில் தயாராகக் காத்திருந்தான்.

# 54. விதியின் வழி

''அரியோ, அரனோ, அயனோ அல்லது அத்தனை அமரர்களும் சேர்ந்தோ, மனிதனுடைய தலையில் எழுதின எழுத்தை அழிக்க முடியாது. அழிக்கும் சக்தி அவர்கள் யாருக்குமே கிடையாது' என்று வடமொழி சுலோகம் ஒன்று கூறுகிறது. மனித சக்தி, யுக்தி இவற்றால் மட்டுமின்றி, தெய்வ பலத்தாலும் கர்மத்தின் விளைவையும் விதியின் வழியையும் மாற்ற முடியாது என்பது அந்தச் சுலோகத்தின் பொருள். அது எத்தனை உண்மையானது என்பதை விளிந்தை நகரில் உணர்ந்தான் பல்லவ வேந்தனான பரமேசுவரவர்மன். சுமார் பதினையாயிரம் புரவி வீரர்கள் கொண்ட அவன் படையும் சாதாரணப் படையன்று; அதைத் தலைமை வகித்து நடத்திய வேந்தனோ தளபதி பலபத்ரவர்மனோ உபதளபதிகளோ போருக்குப் புதியவர்களுமல்லர். முன்னோடிகளாகச் சென்று எதிரி நிலையை வேவு பார்த்த இந்திரவர்மனோ அவனது மற்ற ஒற்றர்களோ தங்கள் பணிக்குப் புதியவர்களுமல்லர். மன்னன் மார்பில் அணிந்திருந்த உக்ரோதய மெனும் மாணிக்கமோ தெய்வ பலம் பெற்றது. இத்தனை அனு கூலத்திலும் விதி மட்டும் குறுக்கே விளையாடாதிருந்தால் பல்லவ வேந்தனின் சரித்திரம் வேறு திசையில் திரும்பியிருக்கும். ஆனால் விதி தன் வலிய கரத்தை விளிந்தைப் போரில் காட்டவே செய்தது.

கதிரவன் மேல் திசையை நாடுவதற்கு ஆறு நாழிகைக்கு முன்பே விளிந்தையின் எல்லையை நெருங்கிவிட்ட பரமேசுவர வர்மன், இந்திரவர்மனை அழைத்து எதிரிநிலையை ஆராயுமாறும் எதிரி



காவிரியின் அக்கரையில் இருந்தால் அவனை மணலில் இழுக்க எத்தனை நேரமாகும் என்பதை அறிந்து வருமாறும் கட்டளையிட்டு அனுப்பினான். அத்துடன் மூன்றாக அணிவகுத்து வந்து கொண்டிருந்த தனது பெரும் படையை இரண்டாக அணிவகுத்து வரக் கட்டளையிட்டு ஒரு பிரிவுக்குத் தானும், இன்னொரு பிரிவுக்குப் பலபத்ரவர்மனும் தலைமை வகித்து, தான் ஒருபுறம் எதிரியைத் தாக்கும்பொழுது இன்னொரு புறத்தில் பலபத்ரனைத் தாக்குமாறும் உத்தரவிட்டான், அத்துடன் தனது புரவிப் படையில் விற்களைத் தாங்கி நின்ற வீரரை முன்னணிக்குச் செல்லப் பணித்து, முதலில் எதிரியின் முன்னணியில் வரும் புரவி வீரர்கள் மீது அம்பு மழை பொழியுமாறும் ஏற்பாடு செய்தான். ''முன்னணிப் புரவி வீரர் அம்புகளால் தாக்கப்பட்டவுடன் நமது இருவர் படைப் பிரிவுகளும் வேகமாக வேல்களை வீசிக் கொண்டு எதிரிப் படையை வளைக்க வேண்டும். பிறகு படைகள் நெருங்கிய பின்பு வாட்போர் துவங்கட்டும்'' என்று பலபத்ர வர்மனுக்குக் கூறினான் பரமேசுவர வர்மன். அந்த உத்தரவுகள் சில புரவி வீரர்களால் படைப் பிரிவுகளின் இடையிடையே இருந்த உபதளபதி களுக்கு அறிவிக்கப்பட்டவுடன், இரண்டு அணிகளாக, ஆனால் ஒரே சீராகப் பல்லவன் படை நகர்ந்தது.

விளிந்தை எல்லைக்குள் பரமேசுவரவர்மன் புக முயன்ற தற்கும் முன்னோடி வேவு பார்த்த இந்திரவர்மன் தனது ஒற்றர்களுடன் திரும்பி வருவதற்கும் நேரம் சரியாயிருந்தது. திரும்பி வந்த இந்திரவர்மன் முகத்தில் ஈயாடாதது மட்டுமின்றி, வந்த வேகத்தின் காரணமாக அவன் மூச்சும் பெருமூச்சாக வந்தது. அவன் நிலையைக் கண்டதும் எதிர்பாராத ஏதோ ஒன்று நடந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்த பரமேசுவர வர்மன், ''என்ன கண்டாய் இந்திரவர்மா? எதுவாயிருந்தாலும் தைரியமாகச் என்று வினவினான்.

இந்திரவர்மன் பார்வையில் சோகமிருந்தது. ''மன்னர் எதிர் பார்த்ததற்கு நேர் விரோதமாக எல்லாம் நடந்திருக்கிறது' என்றான் இந்திரவர்மன் தனது குரலிலும் சோகம் தொனிக்க.

''விளக்கமாகச் சொல்'' என்று ஆணையிட்ட பரமேசுவரவர்மன் குரலில் எந்தவிதச் சஞ்சலமும் இல்லை. துணிவின் பலம் திட்டமாகத் தெரிந்தது அவன் சொற்களில்.

''எதிரி ஆற்றுக்கு அக்கரையில் இல்லை''என்றான் இந்திரவர்மன்.

''சரி.''

''நம்மை முன்பே எதிர்பார்த்து இக்கரையில் விளிந்தைக்கே வந்து விட்டான்.''

''நல்லது.''

''விளிந்தை நகரின் வெளிப்புறத்தில் காவிரியை ஒட்டிய பெரும் சமவெளி இருக்கிறது.''

''தெரியும் எனக்கு.''

''அந்தச் சமவெளியில் தங்கியிருக்கிறான் பூவிக்கிரமன்.''

''இருக்கட்டும். அவன் படை பலம்?''

''நம்மைவிட ஒன்றரை மடங்கு அதிகம்.''

இதைக் கேட்டதும் பரமேசுவரவர்வன் அச்சமுறுவானென்றோ முன் வைத்த காலைப் பின் வைப்பானென்றோ இந்திரவர்மன் எதிர்பார்க்கவில்லை. மன்னன் மன உரத்தையும் போர் வன்மையையும் அவன் உணர்ந்திருந்தான். ஆகவே, பரமேசுவரவர்மன் திகிலளிக்கும் அந்தச் செய்தியைக் கேட்டதும் இமையைக்கூட அசைக்கவில்லை. சிறிது நேரம் ஏதோ சிந்தனையில் மட்டும் இறங்கினான். பிறகு இந்திரவர்மனை நோக்கிக் கேட்டான், ''விளிந்தையின் சமவெளியை அடுத்துக் காவிரிக்கரையைத் தவிர மேட்டுப்பாங்கான இடம் ஏதாவது இருக்கிறதா?'' என்று.

''இருக்கிறது மன்னவா, காவிரிக் கரைக்கு நேர் எதிரில் சிறிது தூரத்தில் பாசனக் கால்வாய் ஒன்று ஓடுகிறது. அதன் கரையும் காவிரிக் கரையைப் போலவே உயரமானது'' என்று அறிவித்தான் இந்திரவர்மன்.

பரமேசுவரவர்மன் முகத்தில் போர்த்திட்டம் விநாடியில் உருவாயிற்று. பலபத்ரனையும் உப தளபதிகளையும் அருகில் அழைத்து, ''பலபத்ரா! இந்திரவர்மனை அழைத்துக் கொண்டு நீ அந்தப் பாசனக் கால்வாய்க் கரை வழியாக முன்னேறு. நான் காவிரிக்கரை மேட்டில் இன்னொரு பாதிப் படையுடன் வருகிறேன். நாமிருவரும் சமதூரம் வந்ததும் கரைமீது தங்குவோம். கதிரவன் மறையும்வரை. சற்று இருள் சூழ்ந்ததும் நான் எரி அம்பு ஒன்றை ஆகாயத்தில் பறக்க விடுகிறேன். அதைக் கண்டதும் நீ வலப்புறத்தில் சமவெளியில் வெகு வேகமாக இறங்கி முதலில் வில்லவரைக் கொண்டு தாக்கு. பிறகு வேல்களை வீசு. பிறகு எதிரிப் படையை நெருங்கி நீ வலப்புறத்தில் உட்புகுந்து போரிடு. நான் இடப்புறத்தில் அதே விதம் தாக்குகிறேன். இருளில் நமது இருவர் படைக்கு மிடையில் பூவிக்கிரமன் படைகள் நசுங்கிவிடும். அப்படியில்லாமல் போர் தொடருமானால் அவ்வப்பொழுது உள்ள நிலைக்குத் தக்கபடி போர் முறையை மாற்றிக் கொள். கைலாசநாதன் அருள் புரிவான்'' என்று மிக நிதானமான, ஆனால் உறுதியான குரலில் கூறினான். பிறகு தன்னைத் தொடருமாறு தனது படைப் பிரிவுக்கு உத்தரவிட்டு முன்னேறலானான். பலபத்ரனும் அவனுக்கு எதிர்த்திசையில் தனது படைப்பிரிவை நடத்திச் சென்றான்.



விளிந்தை நகருக்குள் புகாமல் அதை ஒட்டிய காவிரிக் கரை மேட்டுச் சோலை வழியே தனது படைப்பிரிவை மெல்ல நடத்திச் சென்ற பரமேசுவரவர்மன் எதிரிப் படையிருக்குமிடத்திற்கு வெகு தூரத்திலேயே தன் படையை நிறுத்திக் கொண்டான். அப்பொழுது தான் கதிரவன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்ததால், சோலை மறைவிலேயே இருள் கவியும்வரை காத்துக் கொண்டிருந்தான். மெல்ல மெல்ல இருள் சூழ்ந்தது. சமவெளியில் தங்கியிருந்த எதிரியின் படை இருளில் ஏதோ பெரிய கரிய யானைபோல் படுத்துக் கிடந்தது. காவிரியின் சோலை மேட்டிலிருந்து காவிரியையும் எதிரே சமவெளியில் தங்கியிருந்த எதிரியின் படை வரிசைகளையும் இருமுறை மாறி மாறிக் கவனித்தான் பரமேசுவரவர்மன். கோடை காலமானதால் காவிரியில் வெண்மணலே பரந்து கிடந்தது. ஓரங்களிலும் நடுவிலும் அருவி போல் ஓடிய பளிங்கு நீரும் இருள் சூழ்ந்ததால் கரேலென்றே காட்சியளித்தது. காவிரியின் அக்கரையி லிருந்த பெரும் சோலை மரங்கள் ஏதோ பெரும் விபரீதம் ஏற்படப் போகிறது என்ற பயத்தினாலோ என்னவோ சலனமின்றி நின்றிருந்தன. இக்கரைத் தோப்பும் அக்கரைப் பச்சையைப் போலவே நிசப்தமாயிருந்தாலும் பரமேசுவரன் படைப் பிரிவின் குதிரைகளின் கனைப்பொலியும் எந்த நிலையிலும் எதிர்மீது பாயத் தயாராயிருந்த வீரர்களின் வேல்கள் வாட்களுடன் உராய்ந்ததால் ஏற்பட்ட மந்த ஒலிகளும் தோப்பின் நிசப்தத்தைப் பெரிதும் கலைக்கவே செய்தன. அந்த வீரர்கள் முன்னணியிலிருந்த பரமேசுவரவர்மன் காவிரியி லிருந்து கண்களை எதிரிப்படைமீது மீண்டும் திருப்பினான். எதிரிப்படையில் எந்தவித சன்னத்தமும் இல்லாதிருந்ததையும் படை உறங்குவதுபோலவே காட்சியளித்ததையும் படையின் நடுவில் கங்கவாடியின் கொடியைத் தாங்கிய கங்க மன்னன் கூடாரத்து முகப்பிலிருந்த இரண்டு பந்தங்களைத் தவிர வேறு பந்தங்கள் ஏதுமே இல்லாதிருந்ததையும் கவனித்த பல்லவ வேந்தன் சிறிது வியப்பும் சந்தேகமும்கொண்டான். 'இருளில் தனது படை பலம் முழுவதும் எனக்குத் தெரிய வேண்டாமென்பதற்காகப் பந்தங்களைக் கொளுத்தா திருக்கிறானா பூவிக்கிரமன்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளவும் செய்தான். இருப்பினும் சமவெளியில் இருந்த பெரும் படை தன் படையை விடக் குறைந்த பட்சம் ஒன்றரை மடங்கு அதிக மென்பதைப் புரிந்து

கொண்டதாலும், அந்தப் படையில் சிறிதும் சலனமேதும் இல்லாதிருந்ததாலும், பல்லவ மன்னன் சந்தேகம் அதிகமானாலும் எதிரி அசைவு காட்டு முன்பு தாக்குவதே வெற்றிக்கு வழி எனத் தீர்மானித்துப் பக்கத்திலிருந்த புரவி வீரன் ஒருவனை விளித்து எரியம்பு ஒன்றை வானத்தை நோக்கி அனுப்புமாறு ஆணையிட்டான். கூர் அம்பின் நுனியில் சுற்றியிருந்த எண்ணெய்த் துணியைப் பக்கத்திலிருந்த பந்தத்தில் கொளுத்திக் கொண்ட வீரன் அம்பை வில்லில் பொருத்தி நாணை இழுத்து ஆகாயத்தை நோக்கிப் பறக்கவிட்டான். அடுத்த விநாடி பரமேசுவரவர்மன் வாளை உருவிக்கொண்டு 'அதிசயம்' என்ற தனது பெரும் புரவியைத் தட்டி விட்டுக் காவிரிக் கரையின் சரிவில் வெகு வேகமாக இறங்கினான். அவனைத் தொடர்ந்து அவன் படைப் பிரிவும் சோலை மறைவி லிருந்து தடதடவென்று சமவெளியில் இறங்கியது. அதே சமயத்தில் பாசன வாய்க்காலின் மேட்டிலிருந்த பலபத்ரன் படையும் வெகு வேகத்துடன் இறங்கி வந்தது. இரண்டு படைப் பிரிவுகளுக்கு மிடையில் அடுத்த சில நிமிடங்களில் கங்க மன்னன் படை சிக்கிவிடும் தருவாயிலிருந்ததைக் கண்டு பல்லவ வீரர்கள் பெரும் கோஷமிட்டு விற்களை வளைத்து அம்புமழையும் பொழிந்தனர்.

ஆனால் திடீரென எதிரிப்படையின் ஓரங்களில் பந்தங்கள் கொளுத்தப்பட்டுப் பற்றி எரிந்ததால் எதிரியின் படை உறங்க வில்லையென்பதையும் போருக்குத் தயாராக அணிவகுத்து நிற்பதை யும் பல்லவ வீரர் கண்டனர். பந்தங்கள் கொளுத்தப்பட்டவுடன் கங்கமன்னன் படைகளின் நாற்புறங்களிலிருந்தும் சங்க நாதங்கள் கிளம்பின. அந்த நாதங்களைத் தொடர்ந்து கொம்புகள் ஊதப்பட்டன. கண்ணிமைக்கும் நேரத்தில் கங்க மன்னன் படை நான்கு பிரிவாகப் பிரிந்து ஏதோ பெரிய இரும்பு அரண் முன்னேறுவதுபோல் முன்னேறியது. சாதாரணமாக முன்னணியில் வரும் யானைப்படை பின்னணியில் வந்தது. நடு இரண்டு வரிசைகள் காலாட்படையாகவும் ஓரத்திலிருந்த இரண்டு வரிசைகள் புரவிப் படைகளாகவும் காட்சியளித்தன. அவையனைத்துக்கும் முன்னால் பெரும் புரவி யொன்றிலமர்ந்து பெரிய வாளை உருவிக் கொண்டு அலட்சியமாக வந்த கங்க மன்னன் பூவிக்கிரமன், பல்லவன் படைப்பிரிவு இரண்டும் நெருங்கு முன்பாகவே வாளை உயர்த்தி ஏதோ சைகை செய்ய நடுவிலிருந்த காலாட் படையினர் நிலத்தில் மண்டியிட்டு அம்புகளை எதிரிகளின் குதிரைகளைநோக்கி எய்தினர். பிறகு எழுந்து வேல்களையும் புரவிகளை நோக்கியே எறிந்தனர்.



பரமேசுவரவர்மனும் பலபத்ரனும் அசுரவேகத்தில் நடத்தி வந்த படைகளின் மீது இந்தத் திடீர் அம்பு வீச்சும் வேல்வீச்சும் பாயவே முன்னணிப் புரவிகள் சில அலறி வீழ்ந்ததால் படைப் பிரிவுகளின் வேகம் சிறிது தடைப்பட்டது. அந்தச் சமயத்தைப் பூவிக்ரமன் உபயோகப்படுத்திக் கொண்டு தனது புரவிப்படைகளைப் பல்லவர் படை இரண்டையும் வளைக்க ஏவினான்.

எதிரியின் புரவிப் படையைச் சமாளிப்பது பெரும் கஷ்டமா யிற்று பல்லவர் படைப் பிரிவுகளுக்கு. மெல்லத் தனது படைபலம் குறைவதைப் பார்த்த பரமேசுவரன் பெரும் ஆத்திரத்துடன் எதிரிகளின் புரவிக் கூட்டத்துக்குள் தன்னந்தனியே நுழைந்து விட்டான். அதிசயம் அவனைத் தாங்கி அம்புபோல் எதிரிகளை ஊடுருவிச் சென்றது. அவனைக் கங்க வீரர் சூழ்ந்து கொண்டனர். ஆனால் வீரனான பூவிக்ரமன் அவர்களை விலகச் சொல்லப் பல்லவ மன்னனை நோக்கித் தானே வந்தான். இரு மன்னர்களும் வாட்களைக் கொண்டு வெகு உக்ரமாகப் போர் புரிந்தனர். பூவிக்ரமன் தன் வாளைச் சுழற்றிப் பரமேசுவரவர்மன் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்து உக்ரோதயத்துடன் அதைத் தன் கையில் பற்றிக் கொண்டான். அதனால் பரமேசுவரவர்மன் தன் வாளைப் பூவிக்ரமன் தோள்மீது பாய்ச்சினாலும் புரவியைச் சிறிது பின் வாங்கச் செய்து பூவிக்ரமன் அந்த வாளின் வீச்சிலிருந்து தப்பினான். பிறகு மீண்டும் வாளை உருவிக் கொண்டு பரமேசுவரவர்மனை நோக்கி வந்தான்.

இதற்கிடையில் பலபத்ரவர்மன் படைப் பிரிவில் பெரும் சேதம் ஏற்பட்டுவிட்டதால் அதன் எதிர்ப்புக் குலையும் தருவாயி லிருந்தது. பரமேசுவரவர்மன் நடத்திவந்த படைப்பிரிவிலும் எதிர்பாராத சேதம் ஏற்பட்டதால் அப்படை மெல்லப் பின்வாங்க ஆரம்பித்தது. தன் படைகள் பின் வாங்குவதைக் கவனித்த பரமேசுவரவர்மன் சற்றுத் தலையைத் திருப்பிய சமயத்தில் பூவிக்ரமன் வாள் பல்லவ மன்னன் மார்பின் வலப்பக்கத்தில் பாய்ந்துவிட்டதால் அவன் நினைவிழந்து புரவியின் மீது சாய்ந்தான். மன்னன் நிலைமையை உணர்ந்த அதிசயம் திடீரெனத் திரும்பி வேகமாக நகர ஆரம்பித்தது. அதைத் தொடர முற்பட்ட தனது வீரர்களைப் பூவிக்கிரமன் கை உயர்த்தி அடக்கினான். படுகாயமடைந்த பல்லவ மன்னனைத் தாங்கி வந்த அதிசயத்தைக் கண்டதாலும், தங்கள் படை அதிகச் சேதமடைந்ததாலும் பல்லவர் படை துரிதமாகப் பின்வாங்க ஆரம்பித்தது. அந்தப் படையைத் தொடரத் துடித்த தனது படைத் தலைவனை நோக்கிய கங்க மன்னன், "இதற்கு மேல் ஏதும்செய்ய ஸ்ரீராமபுண்ய வல்லபர் உத்தரவில்லை. மீதியுள்ள பல்லவர் படை தப்பிச் செல்லட்டும்" என்று உத்தரவிட்டான்.

பல்லவர் படை பின்வாங்கிய அதே சமயத்தில் உக்ரோதயத்தைக் கையிலேந்திய பூவிக்ரமன் நெற்றியில் ஜெயஸ்ரீ துலங்கப் போர்க் களத்தில் நின்றான். அதே சமயத்தில் பூவிக்ரமனோ பரமேசுவர வர்மனோ எதிர்பாராத ஒரு ரதம் விளிந்தை நகரத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தது. பல்லவ சரித்திரத்தின் பாதையையும் விதியையும் பெரிதும் மாற்றப்புகுந்த ரதம் அது. அதன் வரவு விளிந்தையிலே பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

## 55. மாய மருத்துவன்

**பூ**விக்ரமனால் படுகாயப்படுத்தப்பட்ட பல்லவ வேந்தனான பரமேசுவரவர்மன் நினைவிழந்த நிலையில் அதிசயம் என்ற பட்டத்துப்புரவியால் போர்க்களத்திலிருந்து வெளியே கொண்டு போகப்பட்ட அதே சமயத்தில், பல்லவன் படை பெரும் சேதமடைந்து பின் வாங்கிய அதே நேரத்தில், போரிடும் படைகளில் எந்த மன்னன் படை மீண்டும் தங்கள் நகரத்துக்குள் நுழையுமோ என்று விளிந்தை நகர மக்கள் கிலியடைந்து வீடுகளிலேயே பதுங்கிக் கிடந்த அந்த இரவில், திடீரென அந்நகரின் பிரதான வீதியில் கொம்புகள் ஊதப்பட்டதாலும் தடதட வெனப் புரவிகள் பல புகுந்ததாலும், ஓர் அழகிய ரதம் இரண்டு வெண்புரவிகளால் இழுக்கப்பட்டுக் காற்றிலும் கடிய வேகத்தில் நுழைந்ததாலும், உள்ளே பதுங்கிக் கிடந்த மக்கள் வெளியே தலை நீட்டலாயினர். அந்த அழகிய ரதத்தின் முன்னணியில் புரவிகளின் கடிவாளங்களைக் கையிலேந்தி ரதத்துக்குள்ளேயே சந்திரோதயம் ஏற்பட்டதுபோல் அழகிய பெண்ணொருத்தி கடிவாளங்களைக் கையிலேந்திப் புரவிகளை முடுக்கி ரதத்தைச் செலுத்தி வந்ததையும் அந்த ரதத்தைச் சுற்றி சுமார் இருபத்தைந்து புரவி வீரர்கள் பூரண ஆயுதமணிந்து காவல் புரிந்து வந்ததையும் கண்ட மக்கள் மிகுந்த வியப்புடன் வாயைப் பிளந்து கொண்டு தங்கள் வீடுகளின் வாயில் தாழ்வரைகளில் நின்றனர். ரதம் செலுத்திய அந்தப் பெண்ணின் இணையிலா அழகைக் கண்ட சில பெண்மணிகள் 'புராண காலத்தில் அர்ஜுனனுக்கு சுபத்திரையும் கண்ணனுக்குச் சத்யபாமையும் ரதத்தைத் திறமையுடன் செலுத்தினார்களென்றால் அதற்குச் சான்று இதோ இருக்கிறது' என்று அந்த அழகிய பெண்மணியைச் சுட்டிக்காட்டிப் பேசிக் கொண்டார்கள். இப்படி மக்களின் பிரமைக்கு இலக்கான அந்த அழகியும் அந்தப் பிரதான வீதியின் கோடியிலிருந்த பெரிய மாளிகையின் வாயிலுக்குள் ரதத்தைச் செலுத்தி மாளிகையின் முன்னணி மண்டபத்துக்கெதிரில் ரதத்தை நிறுத்திக் கீழே



மெல்லக் குதித்து, வேகமான பயணத்தினால் முகத்திலேற்பட்ட குறுவியர்வைத் துளிகளை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். அவளைக் காத்து வந்த புரவிப்படையினரில் இருவர் புரவிகளி லிருந்து இறங்கி மாளிகைக் காரியஸ்தனைத் தேடிப் பிடித்து வந்து கதவைத் திறக்கக் கட்டளையிட்டார்கள். ''இது பல்லவ மன்னர் மாளிகை...'' என்று ஏதோ ஆட்சேபிக்க முயன்ற காரியஸ்தன் புரவி வீரர்களின் கண்ணெச்சரிக்கையைக் கண்டதும் வாயைச் சட்டென்று மூடிக் கொண்டு மாளிகைக் கதவைத் திறந்து விட்டதன்றி, கனவேகத்தில் சென்று மற்றப் பணியாளர்களையும் அழைத்து வந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பல்லவர் மாளிகையில் விளக்குகள் எங்கும் பளிச்சிட்டன. பணியாட்கள் உள்ளேயிருந்த அறைகளைத் துப்புரவு செய்தனர். ரதத்தில் வந்த அழகிக்குப் பணி விடை செய்யப் பெண்கள் நால்வரும் அந்நகரத்தின் பிரதான வீதியிலிருந்து அழைத்து வரப்பட்டனர். கங்கநாட்டு வடகிழக்கு எல்லையைத் அணைந் திருந்ததும் பல்லவ மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்டதுமான அந்த மாளிகையில் ராஜபோகத்துக்கு ஏதும் குறைவில்லாதிருந்தபடியால் ரதத்தில் வந்த அழகி வெகு சீக்கிரம் நீராட்டத்தை முடித்துக் கொண்டு புத்தாடை புனைந்து தனது காவலர் இருவரைத் தானிருந்த அறைக்கு அழைத்து, ''பல்லவ படை பின்வாங்கி நகரத்துக்குள் வந்தால் பல்லவ வேந்தனை இந்த மாளிகைக்குள் அழைத்து வாருங்கள். வேறு யாரையும் உள்ளே விடவேண்டாம்'' என்று உத்தரவிட்டாள். மாளிகை வாயிலைச் சரியாகப் பாதுகாக்கும்படி மற்ற வீரர்களுக்குச் சொல்லும் படியும் கட்டளையிட்டாள்.

அவள் கட்டளைகளைச் சிரமேற் தாங்கிய வீரர்கள் அந்த மாளிகையைத் தனிக் கோட்டையாக்கித் தற்காப்புக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்ய முற்பட்டனர். வாயில் மதிளின் பெரும் கதவுகளை நான்கு புரவி வீரர் காவல் புரிந்தார்கள். பெரும் பந்தங்களிரண்டைக் கொளுத்தி வாயிலின் இரு பக்கங்களிலுமுள்ள சிறு ஸ்தூபிகள் மீது சிலர் நாட்டினார்கள். மதிள் வாயிலை அடுத்திருந்த சுவரின் இருபெரும் துவாரங்களில் பெரும் வேல்களை வீசவல்ல இரண்டு பொறிகளையும் மாளிகைக்குள்ளிருந்து கொண்டு வந்து புகுத்தினார்கள். மற்ற வீரர்கள் உட்புறத்தில் காவலிருந்தார்கள். அவர்களில் சிலர் மாளிகையைச் சுற்றிப் புரவிகளைச் செலுத்திக் கண்காணித்து வந்தார்கள்.

ரதத்தை ஓட்டி வந்த அழகி மட்டும் தனது அறையில் உறங்காமல் மாளிகையின் மேல் உப்பரிகைக்குச் சென்று வட மேற்குத் திசையில்

கண்களை ஒட்டிக்கொண்டு நின்றாள். காவிரிக்கு அருகிலிருந்த சமவெளி, நகரத்தைத் தாண்டிக் கால் காத தூரத்திலிருந்ததால் உப்பரிகையிலிருந்து திட்டமாக எதுவும் தெரியவில்லையாயினும் மும்முரமான போர் நடப்பதைக் குறிக்கும் ஒலிகள் மட்டும் அத்தனை பெரிய இடைவெளியையும் தாண்டி அவள் காதில் விழுந்ததால், அவள் அழகிய வதனத்தில் கவலை படர்ந்ததன்றிக் கவலைக்கு அறிகுறியாக அவள் கரிய வளைந்த புருவங்களும் சிறிது சுருங்கின. அவள் முகத்தில் தோய்ந்து கிடந்த வருத்தம், போரிடும் இரு சக்திகளில் எந்தச் சக்தியின் தோல்வியையோ வெற்றியையோ அவள் விரும்பவில்லை என்பதைச் சந்தேகமற நிரூபித்தது. அவள் நின்ற இடம் பல்லவர் மாளிகையின் மேல் உப்பரிகையானாலும் அவள் மனமெல்லாம் போர்க் களத்திலேயே லயித்திருந்தபடியால் வானக் கூரையிலிருந்த நட்சத்திரங்களின் கண்சிமிட்டலையும் அழகையுங் கூட அவள் ரசிக்கவில்லை. காவிரியிலிருந்து வந்து அவள் உடலைத் தழுவிய இன்பக் காற்றும் அவளுக்குத் துன்பத்தையே விளைவித்தது. அவள் எண்ணங்கள் ஒரே இடத்தில் புதைந்து கிடைந்ததால் அந்த இடத்தை நோக்கியே கண்களும் புதைந்துவிடந்தன. அந்தத் திசையிலிருந்து திடீரெனப் பேரரவம் கேட்கத் துவங்கியதன்றி, வேகமாக வரும் புரவிகளின் காலடிகள் எழுப்பிய புழுதியும் வேகமாகத் தூரத்தே கிளம்பியதைக் கண்ட அந்த அழகி போரின் விளைவை ஓரளவு ஊகித்துக் கொண்டதால் தடதடவென உப்பரிகையிலிருந்து கீழிறங்கி வந்தாள்,

அவள் கீழே இறங்கிய நேரத்தில் சமவெளியிலிருந்து பின் வாங்கிய பல்லவர் படை விளிந்தை நகரத்தின் எல்லைக்குள் புகுந்து கொண்டிருந்தபடியால் எங்கும் காதைப் பிளக்கும் புரவிகள் குளம்பொலிகளும் கனைப்புச் சப்தங்களும் கேட்கலாயின. அந்தப் படையின் ஒரு பகுதி விளிந்தை நகரத்தின் பிரதான வீதிக்குள் புகுந்துவிட்டதையும், மரண காயமுமற்ற வீரர்களின் முனகல்களும், மிகுந்த படைப் பகுதியை ஒழுங்கு படுத்திக் கொண்டு வர உபதளபதிகள் இட்ட உத்தரவுக் கூச்சல்களும் வர வர அதிகமாயின. அந்தப் படைப்பகுதியின் முன்னணியில் வந்த பெரும் புரவியொன்று அதன்மீது மரண மூர்ச்சையிலிருந்த ஒரு வீரனைத் தாங்கி வந்ததையும், அதைச் சுற்றிலும் பல்லவ வீரர் பலர் சுற்றிக் காவல் புரிந்து வந்ததையும் மாளிகை வாயிலில் நின்ற வீரர் மாளிகையிலிருந்த அழகிக்கு அறிவித்தனர். அதைக் கேட்ட அவள் பெருவியப்படைந்து விடு விடுவென்று வாயிலுக்கு வந்து அந்தப் புரவியை நோக்கித் தானே



தன்னந்தனியே சென்றாள். அந்தப் புரவியின் மீதிருந்தது பல்லவ வேந்தனென்பதைக் கண்டதும் பெரும் சினமடைந்த அந்தப் பெண்ணரசி அந்தப் புரவியைக் காவல் புரிந்து வந்த பல்லவ வீரர் மீது நெருப்புப் பொறி பறக்கும் கண்களை வீசி, ''மன்னவனை மரண காயத்துடன் புரவிமீதுதான் கொண்டுவர வேண்டுமா? வேறு வழியில்லையா? வீரர் நால்வர் மஞ்சம் கட்டி எடுத்துவர முடியாதா?'' என்று சீறவும் செய்தாள்.

அந்த அழகியின் சீற்றம் அவர்களைப் பெரும் பிரமிப்பில் ஆழ்த்தியது. காவல் வீரர்களைத் தாண்டிவந்த பல்லவர் படைத் தலைவனான பலபத்ரன், ''தேவி, இந்தப் புரவியைவிடச்சிறந்த மஞ்சம் வேந்தனுக்குக் கிடையாது'' என்று அறிவித்தான். பலபத்ரன் உரையைக் கேட்ட அழகியின் விழிகளிலிருந்த சீற்றம் சிறிது வியப்புக்கும் இடங்கொடுக்கவே, ''நீங்கள் சொல்வது அதிசயமாயிருக்கிறது''என்று அவள் கூறினாள் ஆத்திரமும் அதிசயமும் கலந்த குரலில்.

''உங்கள் கேள்விக்கு நீங்களே பதில் கூறிவிட்டீர்கள்'' என்றான் பலபத்ரவர்மன்.

''பதில் கூறிவிட்டேனா?''

''ஆம். நான் சொல்வது அதிசயமாயிருப்பதாக 'நீங்கள் கூறவில்லையா?''

''கூறினேன்.''

''இந்தப் புரவியின் பெயரும் அதிசயந்தான்.

''பல்லவ மன்னர் புரவிக்கு அந்தப் பெயருண்டு என்பது எனக்குத் தெரியும். ஆனால் காயமடைந்த மன்னரை அந்தப் புரவி மீதுதான் கொண்டுவர வேண்டுமென்று சொல்வது விசித்திரமா யிருக்கிறது.''

''இதில் விசித்திரம் ஏதுமில்லை. மன்னரைத் தவிர அந்தப் புரவியிடம் யாரும் நெருங்க முடியாது'' என்று அறிவித்தான் பல்லவர் படைத்தலைவன்.

இதைக் கேட்டதும் அதிக வியப்புக்குள்ளான அந்த அழகி, தானே அந்தப் புரவியை அணுகினாள். அவளைக் கண்டதும் புரவி தனது செவிகளை உயரத் தூக்கியது. கண்களை உருட்டி விழித்தது. வாயைத் திறந்து பெரும் பற்களைக் காட்டி அவள் கையைக் கடிக்கவும் வந்தது. ஆனால் அந்தப் புரவியின் சீற்றத்தை லட்சியம் செய்யாமல் சிற்றிடை அசைய நடை நடந்த அந்தப் பெண்ணரசி அந்தப் புரவியின் கன்னத்தில் தட்டிக் கொடுத்து அதன் மூக்கின் இரு துவாரங்களிலும் விரல்களை

அழுத்திப் பிடித்தாள். பிறகு அதன்மீது சாய்ந்து காதில் ஏதோ வார்த்தைகளை உச்சரித்தாள். பிறகு மாளிகையின் முன்புறத்தை நோக்கி நடந்தாள் முதலில் சீற்றத்தைக் காட்டிய அதிசயப் புரவியும் மன்னனைத் தாங்கிக்கொண்டு அவளைத் தொடர்ந்து சென்றது. மாளிகைக் கட்டிட முகப்பை அடைந்ததும் அப்புரவியின் கழுத்தை அணைத்து நின்ற அந்த அழகி பலபத்ரனை அழைத்து ''வீரரே! இரண்டு மூன்று வீரர்களைக் கொண்டு மன்னனை அசையாமல் எடுத்துச் சென்று முதல் உப்பரிகையிலிருக்கும் பெரிய அறையிலுள்ள எனது பஞ்சணையில் கிடத்துங்கள். காயத்தின் நிலையைக் கவனிக்கிறேன்'' என்று கூறினாள். பிறகு மாளிகைக் காரியஸ்தனை அழைத்து அந்த ஊரிலுள்ள சிறந்த மருத்துவனை உடனடியாக அழைத்து வருமாறும் உத்தரவிட்டாள்.

அவள் உத்தரவை நிறைவேற்றக் காரியஸ்தன் பறந்தான். ஆனால் பலபத்தரன் உடனடியாக அவள் கட்டளையை ஆமோதிக்காமல், ''நீங்கள் யாரென்று எனக்குப் புரியவில்லை. புரியாமல் எங்கள் மன்னரை உங்களிடம் எப்படி ஒப்படைப்பது?'' என்று வினவினான்.

''மன்னருக்கு ரத்தசேதம் மிகவும் ஏற்பட்டிருக்கிறது. மரண மூர்ச்சையிலிருக்கிறார். நீரும் நானும் பரஸ்பரம் அறிமுகம் செய்து கொள்ளவோ ஆராய்ச்சி நடத்தவோ இப்பொழுது அவகாசமில்லை. முதலில் சொன்னபடி செய்யுங்கள்'' என்று மிரட்டினாள் அந்த ஏந்திழை.

''உங்கள் உத்தரவுக்கு நான் கீழ்ப்படிய அவசியமில்லை. நான் பல்லவர் படைத் தலைவன் பலபத்ரவர்மன்'' என்று கூறினான் பலபத்ரன்.

''மனிதனுக்குப் பதவியும் பலமும் மாத்திரம் போதாது. அறிவும் வேண்டும். தவிர மன்னன் உயிரைக் காப்பாற்றுவது உங்கள் முதல் கடமை!'' என்று சீறிய அந்த அழகி அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

அதற்கு மேல் ஏதும் பேச இயலாத பலபத்ரவர்மன் அவள் சொற்படி கேட்குமாறு வீரர்களுக்கு உத்தரவிட, வீரர்கள் மூவர் மன்னனைப் புரவியினின்று இறக்கி உள்ளே எடுத்துச் செல்லவே, அந்த அழகி மன்னனின் புரவியைத் தானே அழைத்துச் சென்று மாளிகை முன்னணித் தூணில் பிணைத்து அதைத் தேய்க்கு மாறும், அதன் மீதுள்ள ரத்தக் கறையைக் கழுவுமாறும், பிறகு தீனி வைக்குமாறும் தனது காவலருக்குப் பணித்து மாளிகைக்குள் புகுந்து உப்பரிகையின் படிகளில் வேகமாக ஏறிச் சென்றாள். தனது பஞ்சணையில் கிடந்த மன்னனின் மேலங்கியைத் தனதுகுறுவாளால் கிழித்துக் கத்தி பாய்ந்த வலது மார்பைக் கவனித்தாள். அதற்குள் சுடுநீரும் துணித் துண்டுகளும்



மாளிகைக் காரியஸ்தன் கொண்டு வரவே, துண்டொன்றைச் சுடுநீரில் தோய்த்துப் பிழிந்து காயத்தை மெள்ளத் துடைத்தும் பார்த்தாள். பிறகு மறுபடியும் சிறிது சுடுநீர் கொண்டு அக்கம் பக்கத்தில் வழிந்து கிடந்த ரத்தக் கறைகளையும் துடைத்தாள். மேற்கொண்டு ஒரு வெள்ளைத் துண்டை நாலாக மடித்துக் காயத்தில் அழுத்தி வேறு துண்டால் அவன் மார்பைச் சுற்றிப் பிணைத்தாள். அந்தச் சிகிச்சையால் ரத்தப் பிரவாகம் சிறிது நிற்கவே சற்று நிம்மதியடைந்த பார்வையைப் பக்கத்தில் நின்ற பலபத்ரன்மீது திருப்பினாள் அந்தப் பெண்.

''அம்மணி! மன்னர் நிலை எப்படியிருக்கிறது?'' என்று வினவினான் பலபத்ரன் அடக்கத்துடன்.

''உயிருக்குப் பயமில்லை. வாள் அதிக ஆழமாகப் பாய வில்லை. எலும்புகள் பலமாயிருப்பதால் அங்கேயே தடைப்பட்டு விட்டது. இருப்பினும் மன்னரை இந்தப் பஞ்சணையிலிருந்து பத்து நாட்களுக்கு அகற்ற முடியாது'' என்று பதில் கூறினாள்.

''பத்து நாட்களா!'' என்று வாயைப் பிளந்தான் பலபத்ரவர்மன்.

''ஆம்.''

''அது முடியாதே.''

''ஏன் முடியாது?''

''பூவிக்ரமன் படை இன்னும் அருகிலிருக்கிறது.''

''இருந்தாலென்ன?''

''எங்கள் படை தோற்றிருக்கிறது. எதிரி இங்கு வந்தால் பல்லவ மன்னர் கங்க மன்னனிடம் சிறைப்பட நேரிடும்.''

இதற்கு அந்த அழகி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிந்தித்து விட்டுக் கூறினாள், ''உங்கள் படையைக் கங்க மன்னர் படை தொடர்ந்து வராது'' என்று.

''வந்தால்?'' பலபத்ரன் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

''அதைத் தடை செய்ய என்னால் முடியும்'' என்றாள் அவள்.

''அத்தகைய வல்லமையுள்ள நீங்கள் யார்?''

மீண்டும் அந்த அழகியின் கமலக் கண்களில் சிந்தனை ரேகை படர்ந்தது. பிறகு வெகு அமைதியுடன் சொன்னாள் ''கங்க மன்னர் மகள்'' என்று.

பலபத்ரவர்மன் வியப்பினால் அசைவற்றுப் பல விநாடிகள் சிலை போல் நின்றுவிட்டான். பிறகு, ''ரங்கபதாகா தேவியா?'' என்று பிரமிப்பு நிரம்பிய குரலில் வினவினான்.

''ஆம்.''

''அப்படியானால் எதிரி மகள் கையில் மன்னனை ஒப்படைத்து விட்டேன்!'' என்று கூறினான் பலபத்ரன் கோபத்துடன்.

''எமனிடம் ஒப்படைப்பதைவிட எதிரி மகளிடம் ஒப்படைப் பது தவறல்ல'' என்ற ரங்கபதாகாதேவி, ''எங்கே மருத்துவர் இன்னும் வரவில்லை?'' என்று சீறினாள்.

''இதோ வந்துவிட்டேன்'' என்ற குரல் அவள் பின்னாலிருந்து எழுந்தது. கையில் மருத்துவப் பெட்டியை ஏந்தி வந்தார் மருத்துவர். அவரை எங்கோ பார்த்ததாகத் தோன்றயது பலபத்ரவர்மனுக்கு. அவரைப் பார்த்த ரங்கபதாகாதேவியும் பிரமிப்படைந்து நின்று விட்டாள் பல விநாடிகள் சிலையென.

''சிறிது தாமதித்துவிட்டேன்'' என்ற மருத்துவன் சொற்களில் பல அர்த்தங்கள் தொனித்தன. அந்த அர்த்தங்களை ரசிக்கும் நிலையில் ரங்கபதாகாதேவி இல்லை. அவள் இதயத்தில் பல கேள்விகளும் உணர்ச்சிகளும் எழுந்து அலைமோதின. 'மருத்துவர் பெரிய மாயக் காரர்' என்று ரங்கபதாகாதேவி தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

மருத்துவரே மேற்கொண்டு யாரையும் கவனிக்காமல் மன்னன் படுத்துக் கிடக்கும் பஞ்சணையை நாடி மன்னன் நாடியைப் பிடித்துப் பார்த்தார். பிறகு கங்கன் மகள் போட்டிருந்த கட்டை அவிழ்த்துக் காயத்தைப் பரிசோதித்தார். மூடிக் கிடந்த மன்னன் இமைகளையும் நீக்கிப் பார்த்து ஆசுவாசப் பெருமூச்சு விட்டார். பிறகு மருந்துப் பெட்டியிலிருந்து பச்சிலைச் சாறு நிறைந்த இரண்டு வெண்கலக் குப்பிகளைத் திறந்து, ஒரு குப்பியிலிருந்த சாறை மன்னன் மார்புக் காயத்தின் மீது விட்டுமெல்லக் கை விரல்களால் தடவிவிட்டு மீண்டும் பழையபடி கட்டைப் போட்டார். அடுத்தபடி இன்னொரு குப்பியி லிருந்த சாறில் நாலைந்து துளிகளை மன்னன் வாயில் புகட்டினார். பிறகு அறையிலிருந்த காரியஸ்தனையும் பலபத்ரனையும் வெளியே அனுப்பிவிட்டு, ''நான் கூப்பிடும்போது வரலாம்'' என உத்தரவும் இட்டார்.

பலபத்ரவர்மன் மட்டும் மூடிய கதவுக்கருகாமையிலேயே நின்றுகொண்டான். அரை ஜாமத்திற்கு மேலோடியும் உள்ளிருந்து அழைப்பு ஏதும்வராதுபோகவே மெள்ளக் கதவிடுக்கின் மூலம் உள்ளே நோக்கிய பலபத்ரவர்மன் கண்ணில் வியப்பு பெரிதும் படர்ந்தது. மஞ்சத்துக்கருகில் மருத்துவனும் இல்லை, கங்கன் மகளும் இல்லை.

# 56. தொடரும்

மரண மூர்ச்சையில் மஞ்சத்தில் கிடந்த மன்னனுக்குச் சிகிச்சை செய்ய வந்த மருத்துவனும் மங்கை நல்லாளான ரங்க பதாகா தேவியும் மஞ்சத்திற்கருகாமையில் இல்லாமல் மாயமாய் மறைந்து விட்டதைக் கதவு இடுக்கின் மூலம் கவனித்த பல்லவ தளபதி பலபத்ரவர்மன் ஒரு விநாடி திணறியே போனானென்றாலும், மறு விநாடி கதவைச் சற்று அதிகமாகத் திறந்து உள்ளே தலையை நீட்டவே முன்பு அடைந்த அதிர்ச்சியைவிட அதிக அதிர்ச்சியை அடைந்தான். அந்த அறையின் ஒரு மூலையில் மருத்துவன் ரங்கபதாகாதேவியின் இடையை இரு கைகளாலும் பிடித்துப் பரிசோதித்துக் கொண்டு நின்றிருந்ததாலும் அதை கங்கன் மகளும் சிறிது ஆட்சேபிக்காததாலும் அதிர்ச்சியுடன் வியப்பும் கோபமும் ஒருங்கே இதயத்தில் கொந்தளித்ததால் ''மருத்துவரே!'' என்று சீற்றத்துடன் குரல் கொடுக்கவும் செய்தான் பலபத்ரவர்மன். அதைக் கேட்ட மருத்துவன் சட்டென்று ரங்கபதாகாதேவியின் இடையைவிட்டு நாலடி வேகமாக நடந்து பலபத்ரன் இருந்த இடத்துக்கு வந்து கரகரத்த குரலில், ''உம்மை யார் கதவைத் திறக்கச் சொன்னது?'' என்று மிகுந்த கடுமையுடன் கேட்கவும் செய்தான்.

பலபத்ரன் வியப்பு அதிகமாயிற்று மருத்துவன் அதட்டலால். ஆகவே சுடும் கண்களை அவன்மீது நாட்டிய படைத் தலைவன், ''மன்னருக்குச் சிகிச்சை செய்யத்தான் நீர் வரவழைக்கப் பட்டிருக்கிறீர்!'' என்று கூறினான் குரலில் உஷ்ணம் தொனிக்க.

மருத்துவனும் சளைக்கவில்லை. ''யாருக்கு என்ன சிகிச்சை செய்ய வேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும்'' என்றான் சினத்துடன்.

''அது புரிகிறது.'' படைத் தலைவன் பதிலில் இகழ்ச்சி இருந்தது.

''புரிந்து கொண்டால் வெளியே செல்லுங்கள். மன்னர் பச்சிலைத் துளிகளால் தூங்குகிறார். அவருக்கு இடைஞ்சலாகப் பேசிக் கொண்டு நிற்கவேண்டாம்''. என்ற மருத்துவன் குரலில் அதிகாரமிருந்தது.

''இங்கு நான் இருப்பதால் மன்னருக்கு இடைஞ்சலா, உமக்கு இடைஞ்சலா?'' என்று கேட்டான் பலபத்ரவர்மன்.

''இருவருக்குந்தான்'' என்ற மருத்துவன் படைத் தலைவன் கையைத் தன் கையால் பிடித்து, அறைக்கு வெளியே அழைத்துக் கொண்டு போய் விட்டு, ''நான் அழைக்கும்போது நீர் உள்ளே வரலாம் என்று கூறி அறைக்குள் சென்று கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டான்.

பல்லவர் படைத் தலைவன் விழிகளில் விவரிக்க இயலாத பிரமிப்பு மண்டிக் கிடந்து. அந்த மருத்துவன் கை தனது கையைப் பிடித்த இடத்தை ஒரு விநாடி தடவி விட்டுக் கொண்டான். அந்த இடத்தில் பலபத்ரன் கை சற்றுக் கன்னிக் கிடந்தது. இத்தகைய இரும்புக் கையை உடையவன் உண்மையில் மருத்துவன்தானா?'' என்ற சந்தேகமும் அவன் மனத்தில் உண்டானாலும் அதைப்பற்றி ஏதும் செய்ய இயலாதவனாய் தாழிடப்பட்ட அறைக் கதவுக்கு வெளியிலேயே நின்றிருந்தான்.

அவனை விட்டுச் சென்ற மருத்துவன் மீண்டும் விசாலமான அந்த அறையின் மூலைக்குச் சென்று அங்கிருந்த பெரும் சாளரத்தருகில் நின்றிருந்த ரங்கபதாகாதேவியின் இடையில் தனது இடது கையைத் தவழவிட்டான். சாளரத்தை ஒட்டி வளர்ந்திருந்த செண்பக மரமொன்று தனது கிளைகளிரண்டைச் சாளரத்துக்குள்ளும் நீட்டியிருந்ததாலும் அந்த இரண்டு கிளைகளின் நுனிகளிலும் செண்பக மலர்கள் பல மலர்ந்து சிவந்த வாய்களைக் காட்டிக் கொண்டிருந்ததாலும் அவற்றின் நறுமணம் அறையெங்கும் பரவிக் கிடந்ததன்றி, சாளரத்தருக்கே நின்ற மருத்துவனையும் ஓரளவு மயக்கவே, அவன் அந்த மலர்களில் இரண்டை வலது கையால் கிள்ளி கங்கன் மகளின் கருங்கூந்தலில் செருகினான். பிறகு அவள் கூந்தலை முகர்ந்து பெருமூச்செறியவும் செய்தான். அதனால் லேசாக நகைத்த ரங்கபதாகாதேவி தனது அழகிய கண்களைச் சாளரத்துக்கு வெளியே ஓட்டிக் கொண்டும் மருத்துவனைப் பார்க்காமலும் கூறினாள், ''இதுவும் ஒருவகை மருத்துவம் போலிருக்கிறது'' என்று. அவள் குரல் மிக மெதுவாகவும் சொற்கள் மிக ரகசியமாகவும் ஒலித்தன.

''ஆம். மருத்துவத்தில் பலவகைஉண்டு'' என்றான் மருத்துவன் கையை அவள் இடையில் சிறிது அதிகமாக அழுத்திய வண்ணம்.

அவள் இடை அவனைச் சிறிது அதிகமாக நெருங்கியதால் இடையின் பின்புக் கீழ்ப்பகுதியும் அவன் காலின் பக்கத்தில் மிருதுவாகவும் கடினமாகவும், பருமனாகவும் இழைந்தது. அதனால் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தால், ''மருத்துவத்தில் மலருக்கும் இடமிருப்பது ஒரு வகை போலிருக்கிறது''. என்று அவள் பவள இதழ்கள் முணுமுணுத்தன.

''ஆம். சந்தேகமென்ன? எத்தனையோ மலர்கள் மருத்துவ சாஸ்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன.''

''அதில் செண்பகமலரும் ஒன்றா?''



''ஆம்.''

''எந்த நோய்க்கு அது மருந்தோ?''

''உணர்ச்சி நோய்க்கு.''

இதற்குப் பிறகு இருவரும் நீண்ட நேரம் பேசவில்லை. அவன் வலது கை அவளைத் தனக்கு எதிரில்லேசாகத் திருப்பியது. அவன் தலை சிறிது தாழ்ந்து அவன் கண்கள் வண்டுகளாகி அவள் முகத் தாமரையில் சஞ்சரித்தன.

சற்று முன்பாக அவள் நீராடியிருந்த காரணத்தினால் அவள் முகத்திலிருந்து எழுந்த வாசனைப் பொடியின் நறுமணம் கமகம வென்று அவன் நாசியில் புகுந்து அவன் சித்தத்தைக் கலக்கியது. அப்பொழுது பூராவாக உலராத அவள் கருங்குழல் அவன் வலது கையில் பட்டதால் அதிலிருந்த சில்லிப்பு அவன் கைக்குச் சீதளத்தைத் தந்தாலும் உணர்ச்சிகளினால் காம அக்னியை வாரி இறைத்தன. கூந்தலை முழுதும் முடியாமல் ஈரம் உலருவதற்கு அவள் இரண்டு சிறு பின்னல்களால் குறுக்கே குழலைக் கட்டியிருந்ததால் நீண்ட அவள் கருங்குழல் கீழே அவள் பருத்த பின்னெழில்களுக்குத் திரையிட்டு மறைந்திருந்தது. அந்தக் குழலின் ஒரு பகுதியை வலது கையால் மருத்துவன் 'எடுத்தபோது அவன் கைப்பட்ட இடத்தின் காரணமாகச் சிறிது நெளிந்தாள் தேவி. அவள் முகத்தை வட்டமிட்ட அவன் விழிகள் கழுத்தின் கீழும் இறங்கி, கச்சையை மீறியிருந்த மார்பு விளிம்பு வட்டங்களிலும் நிலைத்தபடியால் அவள் பெரிதும் நிலை குலைந்தாள். மார்பில் ஊசலாடிய அவள் மணியாரத்தை அவன் வலதுகை பரீட்சிக்கத் தொடங்கியபோது உண்மையில் அவன் தொட முயன்றது ஆரந்தானா என்ற சம்சயமும், சம்சயத்தால் ஏற்பட்ட இன்பவேதனையும், அவளைத் திணற அடித்துக் கொண்டிருந்தன. அந்தத் திணறலிலிருந்து சமாளித்துக் கொள்ள அவள் செவ்விய இதழ்கள் சிறிது குவிந்து திறந்து, ''மருத்துவம் அழகாயிருக்கிறது!'' என்று மெல்லச் சொற்களை உதிர்த்தன.

அவன் இதழ்களில் அசட்டு இளநகை ஒன்று படர்ந்தது. ''மருத்துவம் பிடிக்கவில்லையா?'' என்று அவன் வினவினான் இந்த இளநகையின் ஊடே. அத்துடன் அவன் கையிரண்டும் அவள் இடையின் பின்னால் பின்னி அவளைச் சற்று இழுத்து நெருக்கின.

அவளும் இளநகை கூட்டினாள். ''மருத்துவம் பிடிக்கிறதோ இல்லையோ, உங்கள் கைகள் நன்றாகப் பிடிக்கின்றன'' என்று கூறிய தேவி மெல்ல நகைக்கவும் செய்தாள்.

''எதை?'' இளவரசன் கேட்டான் மெதுவாக.

''எதை வேண்டுமோ அதை.

''வேண்டுவது எது, வேண்டாதது எது என்று புரியவில்லையே எனக்கு.''

''புரியாமல் வருவதுதான் இது.''

''எது?''

''நீங்கள் புரியும் வஞ்சகம்.''

''என்ன வஞ்சகம் செய்தேன்?''

''மருத்துவ வேடம் போட்டது ஒரு வஞ்சனை.''

''உம்.''

''உங்கள் தந்தை காயமடைந்து படுத்திருக்கையில் இதற்கு முற்பட்டது பெரும் வஞ்சனை.''

''ஆகையால்?''

''நீங்கள் பெரும் மோசக்காரர்.''

''ஓர் எழுத்துத் தவறாயிருக்கிறது தேவி.''

''எது?''

''மோசக்காரர் என்று சொன்னதில்.''

''எந்த எழுத்து?''

''ச என்ற எழுத்துக்குப் பதில் க என்ற எழுத்தை போட்டிருக்க வேண்டும்.''

இதைச் சொன்னவனும் நகைத்தான். கேட்டவளும் நகைத்தாள். நகைப்புடன் அவள் சொன்னாள், ''முதன் முதலாக உண்மையை ஒப்புக் கொண்டீர்கள்'' என்று.

அவன் பதிலேதும் சொல்லாமல் அவள் கழுத்தில் தன் இதழ்களைப் புதைத்தான். அதனால் அவள் உடலே சற்று நடுங்கியது. பிறகு அவனுடன் இழைந்தது. அந்த நிலையிலும் தேவி சொன்னாள், ''இது சரியல்ல'' என்று.

''எது சரியல்ல?'' கழுத்திலிருந்த இதழ்கள் விரிந்து சொற்களை உதிர்த்தன.

''தந்தையின் நிலையைக் கவனிக்காமல்...'' வாசகத்தை முடிக்கவில்லை அவள்.

''கவனிக்காமல்?''

''இந்த நிலையில் ஈடுபடுவது.''

சரியல்லவென்று அவனுக்கும் தெரிந்ததால் அவள் கழுத்தின் வழவழப்பிலிருந்து, சுகந்தத்திலிருந்து, உதடுகளை நீக்கினான். பிறகு அவள் அழகிய கண்களை நோக்கினான். கண்களுக்கு எதிராகக் கண்களும் உதடுகளுக்கு எதிராக உதடுகளும் நின்ற நிலையில் அவன் பெரிதும் திணறினான். அவள் கண்களிலும் அழைப்பிருந்தது, செவ்விய



உதடுகள் சற்றே விரிந்து கிடந்ததால் அவற்றிலும் அழைப்பிருந்தது. ஆனால் அந்த அழைப்பை அவள் ஏற்கனவே உதிர்த்த சொற்கள் சித்தத்தில் உறைந்து தடுத்ததால் அவன் சற்றுச் சுயநிலை அடைந்தான்.

சட்டென்று அவளைவிட்டு விலகி, பல்லவ மன்னன் மஞ்சத்தை அணுகித் தந்தையின் நிலையைக் கூர்ந்து கவனித்தான். பிறகு மன்னன் கையை எடுத்துச் சிறிது நேரம் நாடியைப் பரிசோதித் தான். கட்டுப் போட்ட இடத்தையும் சிறிது அசைத்துப் பார்த்து மிகுந்த திருப்தியடைந்த முகத்துடன் மீண்டும் ரங்கபதாகாதேவியிருந்த சாளரத்தண்டை வந்தான். ''தேவி! தந்தைக்கு எந்தவித ஆபத்து மில்லை. இப்பொழுது சிறிது ஆகாரம் கொடுக்கலாம். கதவைத் திறந்து பலபத்ரனை அனுப்பிச் சிறிது பாலைக் காய்ச்சிக் கொண்டு வரச்சொல்'' என்று கூறினான். அவன் சொற்படி கதவைத் திறந்த ரங்கபதாகாதேவி வெளியேயிருந்த பலபத்ரவர்மனுக்கு உத்தர விடவே அவன் வெறுப்புத் ததும்பிய பார்வையொன்றை அவள் மீது வீசிவிட்டு அவள் உத்தரவை நிறைவேற்றச் சென்றான்.

அவன் வெள்ளிக் குவளையில் கொண்டுவந்த பாலை ரங்கபதாகாதேவியே வாங்கி மன்னன் வாயில் மெல்லப் புகட்டினாள்.

அந்தப் பணியை அவள் முடித்ததும் பலபத்ரனை நோக்கிய மருத்துவன், ''படைத் தலைவரே! மன்னர் உயிருக்கு இனி எந்த வித ஆபத்துமில்லை. காலையில் அவர் விழித்துக் கொள்வார். பிறகு அவர் கட்டளைப்படி நடக்கலாம். அதுவரை...'' என்று சொல்லிக் கொண்டு போனதைக் குறுக்கே புகுந்து தடைசெய்த பலபத்ரவர்மன், ''தங்கள் கட்டளைப்படி நடந்துகொள்ள வேண்டும்'' என்று வாசகத்தை முடித்தான்.

''ஆம்.''

''எனக்குக் கட்டளையிட நீங்கள் யார்?''

பதிலுக்குத் தலையிலிருந்த பெரிய முண்டாசை எடுத்தான் மருத்துவன். பிறகு மருந்துப்பெட்டியிலிருந்த ஒரு திராவகத்தை எடுத்து முகத்தில் தடவி முண்டாசுத் துணியால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

பலபத்ரவர்மன் விழிகள் நிலைத்து நின்றுவிட்டன பல்லவ இளவலின் முகத்தில். ''தாங்கள்! தாங்களா!'' என்று குழறினான் படைத்தலைவன்.

''ஆம். நானேதான். இனியும் சந்தேகமா?'' என்று வினவினான் பல்லவ இளவல்.

''இல்லை. ஆனால் முகத்தை மாற்றிவிட்டீர்கள். சிறிய கோடுகளால் நெற்றியிலிருந்த சந்தனப் பொட்டும் மைப்பொட்டும்

முண்டாகும் சேர்ந்து நடுத்தர வயதுள்ள மருத்துவக் கோலத்தைக் கொடுத்து விட்டன. ஆனால் குரல்? அதை எப்படி மாற்றினீர்கள்?''

பதிலுக்கு வாயைத் திறந்து கன்னங்களின் இரு புறங்களிலுமிருந்த இரண்டு குளிகைகளை எடுத்த இளவரசன் அவற்றைப் பலபத்ரனுக்குக் காட்டி, ''சாதாரண கழைக்கோடிகளை வாயில் அடக்கினாலே குரலை மாற்றலாம். ஆனால் இந்த மருத்துவக் குளிகைகள் குரலைப் பெரிதும் மாற்றக் கூடியவை'' என்றான்.

''இளவரசருக்குச் சிற்பக்கலை தெரியும், போர்க்கலை தெரியும் என்பது பிரசித்தம். ஆனால் மருத்துவக் கலை எப்பொழுது கற்றார்?'' என்று பலபத்ரன் வினவினான்.

''அது பெருங்கதை பிறகு சொல்கிறேன்'' என்ற இளவரசன் பலபத்ரனை வெளியே செல்லும்படி கையைக் காட்டினான். அவன் சென்றதும் ரங்கபதாகாதேவியை நோக்கி, ''நீயும் இந்த மஞ்சத்தில் உட்கார வேண்டாம்'' என்றான் இளவரசன்.

''ஏன்?''

''மன்னர் நித்திரையைக் கலைக்கக் கூடாது.''

''பிறகு என்ன செய்யச் சொல்கிறீர்கள்?''

''பழையபடி சாளரத்தண்டை போ.''

ரங்கபதாகாதேவி அவனை ஒரு முறை நோக்கினாள் தன் பங்கய விழிகளால். பிறகு மெள்ள நடந்து சாளரத்தண்டை சென்று வெளியே நோக்கிக் கொண்டு நின்றாள்.

இளவரசன் மெள்ள நடந்து அவளிருந்த இடத்தை நெருங்கி அந்த மோகினியின் அழகிய தோள்களைப் பற்றினான், சற்று நெருக்கவும் செய்தான்.

''மீண்டும் பழைய கதையா?'' என்று வினவினாள் ரங்கபதாகாதேவி சிறிதளவும் திரும்பாமலே ''ஆம், தொடரும்'' என்றான் பல்லவ இளவல்.

''தொடருமா!'' வியப்புடன் ஒலித்தது அவள் குரல்.

''ஆம் காதல் ஒரு தொடர் கதை அல்லவா?'' என்று வினவினான் பல்லவ இளவல்.

''அடுத்த அத்தியாயம் ஆரம்பம் போலிருக்கிறது?''

''ஆம். அதுவும் தொடரும். அதற்கு அடுத்ததும் தொடரும். முடிவில்லாத கதை இது.''

இதைக் கேட்டதும் அவள் பேசவில்லை. அத்தியாயம் தொடர்ந்தது.

# 57. அச்சம் தந்த விளக்கம்

**சா**ளரத்தருகே நின்ற ரங்கபதாகா தேவியைப் பின்புறத்தில் நெருங்கி அவள் அழகிய தோள்களைப் பற்றிய இளவரசனின் கைகள் அத்துடன் நில்லாததால் காதல் அத்தியாயம் தொடரவே செய்தது பின்புறத்தில் வந்த பல்லவ இளவலின் பலமான உடல் அவள்மீது அதிகமாக அழுந்தவில்லையாயினும் ஓரளவு பட்டுக்கொண்டே நின்றதன் விளைவாகக் கங்கன் மகளின் அங்கங்களில் உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடவே செய்ததால், அவள் மூச்சு சற்றுப் பெருமூச்சாக வந்ததன்றி, அவள் இதயமும் சற்றுப் பெரிதாக அடித்துக் கொண்டது. அத்துடன் இளவரசன் கைகளும் அவள் தோளைப் பற்றியதுடன் நில்லாமல் சற்றுக் கீழிறங்கி இடையை வளைத்துக் கொண்டதால் பெரும் சங்கடத்தை அடைந்தாள் கங்க நாட்டுப் பேரழகி.

இளவரசனின் மனமும் கட்டுக்கடங்காமல் தவித்து எத்தனை எத்தனையோ கற்பனைகளைச் சிருஷ்டித்துச் சிறகடித்துக் கொண்டிருந்தது. நெருங்கிவிட்ட அவள் பின்னெழில்களும், குழலிலிருந்த செண்பக மலர்களின் நறுமணமும், இளவரசனை வேறு உலகத்துக்கே இழுத்துச் சென்று கொண்டிருந்ததால் அவன் அவள் காதுக்கருகில் குனிந்து, ''தேவி!'' என்று அழைத்தான்.

அப்படி அழைத்தபோது வழவழத்த அவள் கன்னங்களில் இளவரசனின் உதடுகளும் லேசாகப்பட்டமையால் அவள் உடலெங்கும் மயிர்க்கூச்சல் ஏற்பட்டு அவள் இன்பத்தின் இம்சைக்குள்ளான காரணத்தால், ''உம்'' என்ற ஒற்றை ஒலியை மட்டுமே உதடுகளிலிருந்து உதிரவிட்டாள்.

அதற்குப் பிறகு சற்றுநேரம் மௌனம் சாதித்த இளவரசன் ''நீ எப்பொழுது இங்கு வந்தாய்?'' என்று மெள்ள வினவினான்.

அந்தக் கேள்வியைத் தொடர்ந்து அந்த ஆண்மகனின் கரங்கள் தன் உடலின் பலவிடங்களில் தவழ்ந்து கொண்டிருந்ததால் அவன் துஷ்டத்தனத்துக்கு அந்தக் கேள்வி ஒரு வியாஜமென்பதைப் புரிந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''இன்றிரவுதான் வந்தேன்'' என்றாள்.

''தனியாகவா?''

''இல்லை. காவலருடன்தான் வந்தேன்''

''எதற்கு?''

''உங்கள் தந்தைக்கு உதவ.''

''என்ன! என் தந்தைக்கு உதவவா?''

''ஆமாம். அப்படித்தான் நினைத்து வந்தேன். ஆனால்...''

''ஆனால்?''

''இப்பொழுது உங்களுக்குத்தான் உதவுகிறேன்.''

''என்ன உதவியோ?''

''ஏன், உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்ட ரங்கபதாகாதேவி லேசாக நகைத்தாள்.

இளவரசன் நகைக்கவில்லை. அவன் தலை நன்றாகக் குனிந்து அவன் கன்னம் அவள் கன்னத்துடன் இழைந்தது. ''தேவி! என்ன இருந்தாலும் நீ துணிச்சலுள்ளவள்'' என்று மெள்ளக் கூறவும் செய்தான்.

அவன் சொற்களில் உறைந்த உணர்ச்சியும் கன்னத்தில் இழைந்த கடுமையான அவன் கன்னமும் அவளுக்கு வேதனை கலந்த இன்பத்தை அளித்தன. ''உங்கள் துணிவைவிட என் துணிவு அதிகமில்லை'' என்று பதில் கூறினாள் அவள்.

''என் துணிவா?'' போலி வியப்புடன் வினவினான் அவன்.

''ஆம்.''

''என்ன அப்படித் துணிவைக் காட்டிவிட்டேன்?''

''நான் இங்கிருக்க, படைத் தலைவனை வெளியே தள்ளிக் கதவைத் தாளிட்டீர்களே!''

''ஆம், இட்டேன்.''

''அதைவிட என்ன துணிவு வேண்டும்?''

''அதை எதற்காகச் செய்தேன் தெரியுமா?''

''சொல்லுங்கள்.''

''தந்தையின் உறக்கத்தை யாரும் கெடுக்கக் கூடாது என்பதற்காக.''

ரங்கபதாகாதேவி சற்றுத் திரும்பி அவனை நோக்கினாள். ''அதற்காகத்தானா?'' என்று வினவினாள் இன்ப இகழ்ச்சி ததும்பிய அழகிய நயனங்களை அவன்மீது நாட்டி.

''ஆம்.''

''அதற்காகத்தான் என்னைச் சாளரத்தண்டை அனுப்பினீர்கள்?''

''ஆம். தந்தையின் மஞ்சத்தினருகிலிருந்தால் நாம் பேசுவோம். அவருக்கு இடைஞ்சலாயிருக்கும்.''



''அந்த இடைஞ்சல் கூடாதென்றுதான் நீங்களும் சாளரத் தண்டை வந்துவிட்டீர்கள்.''

''சந்தேகமென்ன?''

ரங்கபதாகாதேவி சற்று அதிகமாகவே நகைத்தாள். ''சந்தேகம் சிறிதுமில்லை. உங்கள் நடவடிக்கைகளைப் பார்த்தாலே தெரிகிறது'' என்றும் கூறினாள்.

இளவரசன் அவள் விழிகளுடன் தன் விழிகளைக் கலந்தான். ''என் நடவடிக்கைகளில் என்ன குறையிருக்கிறது?'' என்று வினவினான்.

''ஒரு குறையுமில்லை. நிறைவாக இருக்கிறது'' என்றும் கூறி நன்றாக அவனை நோக்கிச் சுழன்று திரும்பினாள் தேவி. மெள்ளத் தான் திரும்பினாள். அந்தத் திரும்பலில் அவள் தேகம் பூராவும் அவன் உடலில் இழைந்தது. மேற்கொண்டு இருவரும் பேசவில்லை. இதயங்கள் இணைந்தன. இதழ்களும் இணைந்தன.

அந்தச் சமயத்தில் பரமேசுவரவர்மன் மஞ்சத்திலிருந்து முனகவே இருவரும் சட்டென்று பிரிந்து மன்னனிருந்த மஞ்சத்தை நாடிச் சென்றனர். மன்னன் கண்களை மெல்ல விழித்து நோக்கினான். எதிரே மைந்தனும் மற்றொரு பெண்ணும் நிற்பதைப் பார்த்ததும் அந்தக் கண்களில் சிறிது சந்தேகச் சாயை படர்ந்தது. ''இவள்?'' என்று ஏதோ சொல்ல முயன்றான் மன்னவன்.

''கங்க மன்னன் மகள். இவள்தான் உங்களை இங்கு கொண்டு வந்து சிகிச்சை செய்தவள்'' என்று கூறிய இளவரன், ''கவலைப் படாமல் உறங்குங்கள், காலையில் பேசிக்கொள்ளலாம்'' என்றும் தெரிவித்து மருந்துப் பெட்டியிலிருந்த குப்பியை எடுத்து இன்னும் இரண்டு துளி பச்சிலைச் சாற்றை மன்னன் வாயில் ஊற்ற, மன்னன் மீண்டும் கண்களை மூடிக் கொண்டான். பிறகு ரங்கபதாகாதேவியை நோக்கித் திரும்பி, ''தந்தை இனி காலை வரையில் எழுந்திருக்க மாட்டார்'' என அறிவித்தான்.

ரங்கபதாகாதேவியின் இதழ்களில் வெட்க நகை அரும்பியது. ''உங்கள் பாடு கொண்டாட்டம்தான்'' என்றாள்.

''உன் பாடு?'' என்று வினவினான் இளவரசன் இளநகை கொண்டு.

''திண்டாட்டம்.''

இளவரசன் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. அறையில் சற்று அங்குமிங்கும் உலாவினான். திடீரென்று அவளெதிரில் நின்று

சொன்னான்: ''பல்லவ குலத்தினர் இதுவரை எந்த அதர்மத்திலும் ஈடுபட்டதில்லை.''

''இதுவரை நடந்ததெல்லாம் பல்லவகுல தர்மம் போலிருக்கிறது?'' என்று வினவினாள் ரங்கபதாகாதேவி.

''காதலிப்பது, அதர்மமாக எங்கும் கூறப்படவில்லை.''

''விவாகமாகு முன்பு பெண்களைத் தொடுவது?''

''தொடுவது, கூடுவது எதுவுமே அதர்மமில்லை.''

''அப்படியா?''

''சாகுந்தலம் என்ன சொல்கிறது? துஷ்யந்தன் சகுந்தலையை அடைந்ததாகச் சொல்லவில்லையா?''

''ஓகோ!''

''என்ன ஓகோ?''

''காளிதாசனிடம் போய்விட்டீர்கள்!''

''காளிதாசன் தர்மமில்லாததை எழுதவில்லையே?''

''எதற்காக எழுதினாரோ, உங்களுக்கு இப்பொழுது சௌகரியமாயிருக்கிறது!''

அவளைக் கூர்ந்து கவனித்தான் பல்லவ இளவல். அவள் கண்களிலிருந்த அழைப்பைக் கவனித்தான். பெருமூச்சின் விளைவாக எழுந்து எழுந்து இறங்கிய பருத்த மார்புகளைக் கண்டான். அவஸ்தையால், அவள் திரும்பியபோது இடையின் இணையில்லா மெருகைக் கண்டான். ஆயிரம் மோகனாஸ்திரங்கள் அவள் உடலிலிருந்து வெளிப்பட்டதை உணர்ந்தான். அவற்றின் தாக்குதலால் திணறவும் செய்தான். இருப்பினும் அவள் பல வீனத்தையும் தங்கள் தனிமையையும் உபயோகித்துக் கொள்ள வீரனான அவன் மனம் இடம்கொடாததால் திடீரென மனத்தை இரும்பாக்கிக் கொண்டு பேச்சை வேறு திசையில் மாற்றினான். ''தேவி! போர் நிகழும் இந்த இடத்துக்கு உன்னை ஆசார்யர் எப்படி அனுப்பினார்?'' என்று வினவினான் திடீரென்று.

அந்தக் கேள்வி அவளையும் சுயநிலைக்குக் கொண்டுவந்து விட்டதால் அவள் அவனைத் தைரியமாக நிமிர்ந்து நோக்கினாள். ''ஆசார்யர் அனுப்பவில்லை'' என்றாள் திடமாகிவிட்ட குரலில்.

''வேறு யார் அனுப்பியது?'' என்று வினவினான் இளவரசன் வியப்புடன்.

ரங்கபதாகாதேவியின் பதில் அவனை அசர வைத்தது. ''மன்னர் அனுப்பினார்'' என்றாள் அவள் பெருமிதம் ஒலித்த குரலில்.



''எந்த மன்னர்?'' என்று கேட்டான் பல்லவ இளவல் யாரென்பதை அறிந்தும்கூட.

''விக்கிரமாதித்த மன்னவர்'' என்ற ரங்கபதாகா தேவியின் குரலில் மதிப்பு மரியாதையும் பணிவு நிரம்பிக் கிடந்தது.

''எங்கள் எதிரியா?''

ஆம். அத்தகைய எதிரியை அடைய நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.''

இதைக் கேட்ட இளவரசன் பெரும் பிரமிப்பில் ஆழ்ந்தான். ''விவரமாகச் சொல் தேவி! விக்கிரமாதித்த மன்னர் எதற்காக உன்னை அனுப்பினார்? என்ன உத்தரவுகளை இட்டார்?'' என்று படபடப்புடன் வினவவும் செய்தான்.

ரங்கபதாகாதேவி மஞ்சத்தினருகிலிருந்து சற்று விலகி இளவரசனிருந்த இடத்துக்கு வந்தாள். பிறகு மெள்ளச் சொன்னாள், ''இரண்டு நாட்களுக்கு முன்பு திடீரென்று விக்கிரமாதித்த மன்னர் ஆசார்யர் விடுதிக்கு வந்தார். அப்பொழுது நானும் மைவிழியும் ஆசார்யரும் பூஜை அறையில் இருந்தோம். ஆசார்யர் கண்களை மூடிக்கொண்டு தியானத்திலிருந்தார். மன்னரும் உள்ளே வந்து ஒருபுறம் ஓசைப்படாமல் உட்கார்ந்து கொண்டார். ஆசார்யர் கண்களை விழித்ததும் வியப்புடன் மன்னரை நோக்கினார். பூஜை முடிந்ததும் இரண்டு ஓலைகளை ஆசார்யரிடம் கொடுத்து ஒன்றைச் சாளுக்கிய நாட்டு எல்லையிலுள்ள வேட்டுவ மாளிகைக்கு அனுப்புமாறும் இன்னொன்றை விளிந்தைக்கு அனுப்புமாறும் உத்தரவிட்டார் விக்கிரமாதித்த மன்னவர். அத்துடன் கூறினார், 'வேட்டுவ மாளிகைக்கு இந்திரவர்மன் மகள் செல்லட்டும், விளிந்தைக்குக் கங்கன் மகள் செல்லட்டும்' என்று. ஆசார்யர் பிரமிப்படைந்ததைக் கண்ட மன்னவர் 'இரு பெண்களுக்கும் பாதுகாப்பாக என் ஆக்ஞை பெற்ற வீரர்கள் செல்வார்கள்' என்றும் கூறிவிட்டு, ''ஓலைகளுக்கு முத்திரை வைக்கவில்லை. நீங்கள் படிக்கலாம்' என்றும் சொல்லி விட்டுச் சென்றார்.

''அவர் வந்ததும் சென்றதும் எங்கள் மூவருக்குமே பெரும் பிரமிப்பை அளித்ததென்றால் அவர் சொன்ன விஷயங்கள் எங்களுக்கு அதிக வியப்பை அளித்தன. அவர் சென்றதும் ஓலைகளிலிருந்த விலாசங்களைக் கவனித்த ஆசார்யரின் வியப்பு எல்லையை மீறியதால், 'விசித்திரம் விசித்திரம்' என்ற இரு வார்த்தைகளை மட்டுமே ஆசார்யர் சொன்னார். 'என்ன ஆசார்யரே?' என்று நாங்கள் இருவரும் ஒரே குரலில் கேட்டோம். ''இரண்டில் ஓர் ஓலை சாளுக்கிய நாட்டு எல்லையிலிருக்கும் ஸ்ரீராமபுண்யவல்லபருக்கு எழுதப் பட்டிருக்கிறது.

இன்னோர் ஓலை கங்க மன்னனுக்கு எழுதப்பட்டிருக் கிறது'' என்று ஆசார்யர் ஓலைகளிரண்டையும் பிரித்துப் பார்த்தார். அவர் முகத்தில் பேராச்சரியம் தாண்டவமாடியது. ''பெண்களே! இந்தப் பாரதம் பெரும் மகானொருவனைப் பெற்றிருக்கிறது'' என்றார். ''ஓர் ஓலை பல்லவ இளவலை உடனடியாக வேட்டுவ மாளிகையிலிருந்து விடுதலை செய்யும்படி ஸ்ரீராமபுண்யவல்லபருக்கு உத்தரவிடுகிறது. இன்னொன்று போரை நிறுத்தி, சொந்த நாடு திரும்பும்படி கங்க மன்னனுக்கு உத்தரவிடுகிறது'' என்று கூறிய ஆசார்யர், 'இந்த உத்தரவுகளுக்கு என்ன காரணம்?'' என்று தன்னைத் தானே உரக்கக் கேட்டுக் கொண்டார். காரணம் மகாகவியான அவருக்கே விளங்கவில்லை. மறுநாள் எங்களை அனுப்ப வந்த சாளுக்கிய தளபதி விளக்கினார். அந்த விளக்கம் விக்கிரமாதித்த மன்னருடைய பெருந்தன்மை, வீரம், முன்னோக்கம் அத்தனைக்கும் இணையற்ற சான்றாக விளங்கியது'' என்றாள் தேவி.

அவள் சொன்னதைக் கேட்ட இளவரசன் உணர்ச்சிகள் பலவிதமாகப் புரண்டன. ''என்ன விளக்கம் அது?'' என்றான் ராஜசிம்மன்.

''சொல்கிறேன், வாருங்கள்'' என்று மீண்டு சாளரத்தை நோக்கி நடந்தாள் தேவி.

அங்கு அவள் சொன்ன அந்த விளக்கம் பல்லவ இளவலுக்குப் பெருமளவு பிரமிப்பையும் ஓரளவு அச்சத்தையும் கூட விளைவித்தது.

## 58. விக்ரமாதித்தன் சாம்ராஜ்ய திட்டம்

முதலாம் விக்கிரமாதித்தன் உத்தரவுகளுக்கான காரணங்கள் முழுவதையும் விளக்குவதாகக் கூறிவிட்டு மீண்டும் அறைச் சாளரத்தை நோக்கிச் சென்ற கங்கன் மகள் ரங்கபதாகா தேவியைத் தொடர்ந்த ராஜசிம்ம பல்லவன் அவள் அறைச் சாளரத்தை அடைந்த பின்பும் பழையபடி அவளைத் தொடவோ நெருங்கவோ முயலாமல் சற்று எட்டவே நின்றான். அவளையும் இந்திரவர்மன் மகளையும் சாளுக்கியருக்குச் சிறிதும் பயனளிக்காத இரு பணிகளில் விக்கிரமாதித்தன் ஈடுபடுத்திய விசித்திரத்துக்குக் காரணம் எப்படி ஆசார்யருக்கு முதலில் விளங்கவில்லையோ அப்படி அவனுக்கு விளங்காததாலும், கங்கன் மகள் சொன்ன விவரங்கள் அவன் உணர்ச்சிகளை வேறு திசையில் திருப்பி விட்டதாலும் அவன் ஓரளவு பிரமை பிடித்த கண்களை அவள்மீது நாட்டிக்கொண்டு, ''சொல் தேவி! சாளுக்கிய தளபதி அப்படி என்ன விளக்கம் தந்தார்?'' என்று வினவினான்.



ரங்கபதாகாதேவி சிறிது நேரம் சாளரத்துக்கு வெளியே தலை நீட்டிய கிருஷ்ண பட்சத்துச் சந்திரனை நோக்கிக் கொண்டு நின்றாள். பிறகு திரும்பிப் பல்லவ இளவலை நோக்கிக் கூறினாள் ஏதோ பழைய கதையைத் தொடர்வதைப் போல். ''விக்ரமாதித்த மன்னர் இரு ஓலைகளைக் கொடுத்து என்னையும் மைவிழியையும் அவற்றை எடுத்துச் செல்லுமாறு கூறிவிட்டுச் சென்றாரல்லவா?'' என்று துவங்கி, மேலும் சொன்னாள். ''அன்று முழுவதும் ஆசார்யருக்கும் எங்களுக்கும் எதுவுமே தோன்றவில்லை. தனது போர் மந்திரியின் முயற்சிகளைத் தோற்கடிக்கும் முறையில் ஓலைகளை மன்னன் ஏன் தீட்டினானென்று பலமுறை ஆசார்யர் எங்களைக் கேட்பதுபோல் தன்னையே கேட்டுகொண்டார். ஆனால் ஆசார்யருக்கே புரியாதது எங்களுக்கு எப்படிப் புரியப் போகிறது? நாங்களும் குழப்பத்தி லிருந்தோம். அந்தக் குழப்பத்தில் எங்களுக்கும் ஒரு சந்துஷ்டியும் இருந்தது. நீங்கள் ஸ்ரீராமபுண்யவல்லபர் பிடியிலிருந்து தப்பிவிட முடியும் என்பதாலும் இந்த விளிந்தைப் போர் நடவாவிட்டால் உங்கள் தந்தைக்கும் கஷ்ட நஷ்டங்களிருக்காது என்பதாலும் நானும் மைவிழியும் மிகவும் மகிழ்ந்தோம். ஆனால் மறுநாள் காலையில் சாளுக்கிய தளபதி வந்த பிறகுதான் எங்கள் மகிழ்ச்சியின் பூர்ணத்துவம் குறைந்தது. மன்னன் திட்டத்தின் ஆழத்தையும் பெருந்தன்மையையும் நாங்கள் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது.''

இங்கு சற்றுத் தாமதித்த தேவியை நோக்கி, ''தளபதி என்ன சொன்னார்?'' என்று கேட்டான் பல்லவ இளவல்.

உடனடியாக அதற்குப் பதில் சொல்லாத தேவி நடந்ததை அப்படியே கூறலானாள். ''மறுநாட் காலை கதிரவன் உதித்ததுமே சாளுக்கிய தளபதி ஆசார்யரின் மாளிகைக்கு இரண்டு ரதங்களுடனும் சுமார் ஐம்பது சாளுக்கிய வீரர்களுடனும் வந்ததை நானும் மைவிழியும் மாளிகை உப்பரிகையிலிருந்து கவனித்தோம். உடனே கீழே ஓடிவந்து ஆசார்யரிடம் விஷயத்தைக் கூறினோ. ஆசார்யர் மாளிகையின் முன் மண்டபத்திலேயே அதாவது உங்களை நான் முதலில் சந்தித்தேனே அந்தக் கூடத்திலேயே சாளுக்கிய தளபதியைச் சந்தித்தார். சாளுக்கிய தளபதி கால தாமதம் செய்யாமல் சாளுக்கிய நாட்டு எல்லைக் காட்டுக்கும் விளிந்தை நகருக்கும் செல்ல ரதங்களும் காவல் வீரர்களும் தயாராக வந்திருப்பதை ஆசார்யரிடம் தெரிவித்தார். ''இந்திரவர்மன் மகளுக்கு ஒரு ரதமும் தேவிக்கு ஒரு ரதமும் கொண்டு வந்திருக்கிறேன். ஒவ்வொரு ரதத்தையும் இருபத்தி ஐந்து வீரர்கள் காத்துச் செல்வார்கள. பயணத்தின் இடையில் தங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய ஆங்காங்குள்ள சத்திரங்களுக்கு உத்தரவிட முன்னோடிகள் அனுப் பட்டிருக்கிறார்கள்'' என்று கூறினார் தளபதி.

''ஏற்பாடுகள் குறைவின்றிச் செய்யப்பட்டிருக்கின்றன'' என்று ஒப்புக் கொண்ட ஆசார்யர், ''மன்னவர் என்னிடம் இரு ஓலைகளை அளித்துப் போனார்'' என்று கூறித் தளபதியைக் கூர்ந்து நோக்கினார்.

தளபதியின் கண்களும் சலனமின்றி ஆசார்யரை ஏறெடுத்து நோக்கின. ''ஆம் மன்னர் கூறினார்'' என்ற தளபதி மன்னர் என்ற சொல்லை மிகுந்த பணிவுடன் உச்சரித்தார்.

''இந்த ஓலைகளில் பல்லவ மன்னருக்கும் இளவரசருக்குந் தான் பயன். சாளுக்கியர்களுக்குப் பயனேதுமில்லை'' என்றார் ஆசார்யர்.

''பல்லவர்களுக்கு உதவி செய்வதற்காகவே இந்த ஏற்பாடுகளை மன்னர் செய்திருக்கிறார்'' என்றார் தளபதி குரலில் உணர்ச்சி ஏதும் காட்டாமல்.

''பல்லவர்களிடம் திடீரென்று இத்தனை பரிவு சாளுக்கிய மன்னருக்கு ஏன் ஏற்பட்டிருக்கிறது?'' என்று வினவினார் ஆசார்யர்.

தளபதி சிறிது சிந்தனையில் ஆழ்ந்துவிட்டுச் சொன்னார். ''பல்லவ இளவரசரைச் சிறை செய்ய ஸ்ரீராமபுண்யவல்லபர் இட்ட உத்தரவுகள் விக்கிரமாதித்த மன்னருக்குத் தெரியாது தெரியக் கூடாது என்று ஸ்ரீராமபுண்யவல்லபர் என்னிடமே கூறினார். ஆகையால் கங்க நாட்டுச் சாலைகளிலும் சாளுக்கிய நாட்டுப் பாதைகளிலும் உள்ள சத்திரங்களில் இளவரசரை மடக்கச் செய்த ஏற்பாடுகள் பிறகுதான் ஒற்றர்கள் மூலம் மன்னருக்குத் தெரிந்தன. அதுவும் ஸ்ரீராமபுண்ய வல்லபர் இளவரசரை சாளுக்கியர் வேட்டுவ மாளிகையில் சிறை செய்த பின்புதான் மன்னருக்கு விஷயம் தெரியும். தெரிந்ததும் மன்னர் வெகுண்டார். பல்லவ இளவரசர் வேறு வழியாகத் தப்பிய போது அவரை நேரிலேயே சந்தித்த மன்னர் அவரைக் கவனிக்காதது போல சென்றார். இளவரசரை நேரில் போரில் சந்திப்பதாகக் கடல்மல்லையில் மன்னர் கூறியிருந்ததால் அவரைச் சிறை செய்ய இஷ்டப்படவில்லை அவர் உத்தரவையும் மீறி ஸ்ரீராமபுண்ய வல்லபர் இளவரசரைச் சிறை செய்ய நடவடிக்கை எடுத்தது மன்னருக்கு விருப்பமில்லாததால் ஸ்ரீராமபுண்ய வல்லபருக்கு ஓலை கொடுத்திருக்கிறார். விளிந்தை போரிலும் ராஜதந்திரம் என்னும் பெயரால் கபடமான வழிகள் பின் பற்றப்பட்டிருப்பதாக மன்னர் எண்ணுகிறார். ஆகவே அதை நிறுத்த கங்கமன்னனுக்கு ஓலை தீட்டப்பட்டிருக்கிறது.''

இத்துடன் முடிக்கவில்லை தளபதி. ''விக்ரமாதித்த மகாராஜா என்னிடம் சொன்னதை அப்படியே சொல்கிறேன் கேளுங்கள் ஆசார்யரே! 'கங்கநாட்டுப் போர் அவசியமானதல்ல. காஞ்சி மாநகரின் கலைச் செல்வங்களை அழிக்க இஷ்டமில்லாததால் காஞ்சியிலிருந்து விலகிய பரமேசுவரவர்மனை நாம் வஞ்சகத்தால் வெல்வது அதர்மம் மட்டுமல்ல, நமது வீரத்துக்கும் இழுக்கு. தவிர, பல்லவ மண்டலத்தை மட்டும் வெற்றி கொள்வது நமது உத்தேச மல்ல. பல்லவ ராஜ்ய வெற்றியை நிலைப்படுத்திக் கொண்டு தெற்கு நோக்கிச் சோழ நாடுவரை வெற்றி கொள்ள நிச்சயித்திருக்கிறேன். அதற்குக் கங்கநாடு போர் போன்ற சில்லறைச் சண்டைகள் பெரும் இடையூறு. பல்லவ இளவரசனையும் அவன் சகாக்கள் இருவரையும் சிறை செய்ய நமது யுக்தியையும் வீரத்தையும் செலவழிப்பது வீண் வேலை. ஆகவே ஸ்ரீராமபுண்யவல்லபர் உடனடியாகக் காஞ்சிக்குத் திரும்பட்டும். பல்லவ இளவரசன் தந்தையிடம் போகட்டும். அவர்கள் படை திரட்டும் முன்பு காஞ்சியின் எல்லைகளையும் பல்லவ கேந்திர ஸ்தானங்களையும் நமது படையின் ஒரு பகுதியின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்குவோம். தெற்கு நோக்கிச் சோழநாடு செல்லுவோம். சோழநாடு கைக்குள் அடங்கிவிட்டால் வாதாபியி லிருந்து உறையூர்வரை சாளுக்கிய சாம்ராஜ்யம் விரிவடைந்து போகும். அத்தகைய சாம்ராஜ்யத்தை உடைக்கப் பரமேசுவரவர் மனாலோ, ராஜசிம்மனாலோ முடியாது. அப்படி அவர்கள் படை திரட்டி நமது சாம்ராஜ்யத்தை உடைக்க முயன்றால் போர்க்களத்தில் சாளுக்கிய வீரத்தை உணருவார்கள். இத்தகைய பெரிய திட்டத்தை விட்டு நமது போர்மந்திரி சில்லறைத் திட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார். அவர் செய்த தவறுகளை முதலில் திருத்துவோம். முதலாவது விக்கிரமாதித்தன் பல்லவர்களை நேர் முறையில் வெற்றி கொண்டான் என்று பிற்காலச் சரித்திரம் கூறட்டும்.' இப்படிச் சொன்னார் மன்னவர். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய எனக்கு உத்தரவிட்டார்'' என்றும் விவரித்தார் சாளுக்கிய தளபதி. இதைக் கேட்ட ஆசார்யர் அசந்து போனார். ''இப்பேர்ப்பட்ட மன்னனைப் பெறுவதற்குப் பாரதம் பெரும் தவம் செய்திருக்கவேண்டும்'' என்று பகிரங்கமாகவே தளபதியிடம் கூறினார். பிறகு எங்களைப் புறப்படும்படி ஆக்ஞாபித்தார். நாங்களிருவரும் ரதங்களில் கிளம்பினோம். மைவிழி சாளுக்கிய நாட்டுப் பாதையில் சென்றாள். நான் இவ்வழி வந்தேன். பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியும்.''

இப்படி நடந்த விவகாரங்களைக் கூறின ரங்கபதாகாதேவி அதற்கு மேல் மௌனம் சாதித்தாள். அவள் மட்டுமென்ன இளவரசனும் நீண்ட நேரம் மௌனத்தில் இறங்கினான். அவன் மனத்தில் எண்ணங்கள் அலை புரண்டன. பல்லவர்களின் ராஜ்யத்தில் தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளவும் மேலும் மேலும் தெற்குத்

திசையில் படையெடுத்துச் சென்று சோழநாடு உட்பட சாளுக்கிய சாம்ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொள்ளவும் விக்கிரமாதித் தன் வகுத்துள்ள திட்டம் அப்பழுக்கில்லாதது என்பது பல்லவ இளவலின் சித்தத்துக்குத் திட்டமாகத் தெரிந்தது. அது மட்டுமல்ல, அத்தகைய விஸ்தரிப்பைப் பெருந்தன்மையுடனும் பல்லவர்கள் போரிட ஒரு வாய்ப்பை அளித்தும் ஏற்படுத்திக் கொள்ள அவன் தீர்மானித்திருப்பது சுயபலத்தில் அவனுக்குள்ள நம்பிக்கையையும் வரலாற்றில் சிறந்த இடத்தைப் பிடித்துக் கொள்ள அவனுக்குள்ள ஆர்வத்தையும் தெளிவாக்குவதைப் புரிந்து கொண்டான் ராஜசிம்மன். இத்தகைய எதிரியை வெற்றி கொள்வதும் அவன் படைபலத்தை உடைப்பதும் சுலபமான வேலையல்ல என்பதையும் பல்லவ இளவரசன் சந்தேகமற உணர்ந்து கொண்டான். அந்த உணர்வின் காரணமாக எதற்கும் சஞ்சலப்படாத அவன் உள்ளமும், சஞ்சலத்துக்கு உள்ளாகியது. ஸ்ரீராமபுண்யவல்லபரின் வலையிலிருந்து தனது தந்தை தப்ப முடியவில்லையென்பதையும், அந்தப் போரில் தனது தந்தை அடைந்த தோல்வி பல்லவ வரலாற்றில் கறைபடிந்த ஒரு கட்டமாகு மென்பதையும் நினைத்ததால் ராஜசிம்மன் பெரிதும் நெஞ்சமுடைந்து நின்றான்.

அவன் மௌனத்தையும் முகத்தில் தோன்றிய வேதனை உணர்ச்சிகளையும் கவனித்த ரங்கபதாகாதேவி அவனருகில் வந்து, "போரில் வெற்றியும் தோல்வியும் சகஜமல்லவா?" என்று வினவினாள் தனது அழகிய விழிகளை அவன் விழிகளுடன் கலக்க முயன்று.

ஆனால் அவள் பங்கய விழிகளுடன் உறவாட மறுத்த பல்லவ இளவல் தலையைக் குனிந்துகொண்டே, "வெற்றி தோல்வி சகஜம் தேவி. ஆனால் எதிரியின் தயவால் தப்புவது சகித்துக் கொள்ளக் கூடியதல்ல. அதுவும் எதிரி, இரண்டு பெண்களை அனுப்பி எங்களைக் காப்பது விரும்பக் கூடியதல்ல" என்று கூறினான்.

ரங்கபதாகாதேவியின் கண்களில் சற்றே சினம் துளிர்த்தது. "இந்த ஓலையை ஆண்கள் மூலம் அனுப்பியிருந்தால் உங்களுக்குச் சகஜமாயிருக்கும் போலிருக்கிறது" என்றாள் சீற்றத்தை லேசாகக் குரலிலும் காட்டி.

ராஜசிம்மன் அவள் குரலிலிருந்த சீற்றத்தைக் கவனித்தான். அதன் விளைவாக அவள் முகத்தில் கண்களை ஓட்டினான். சீற்றம் துளிர்த்த நிலையிலும் அவள் விழிகள் தனிப்பட்ட ஓர் அழகைப் பெற்றிருந்தைக் கவனிக்கவும் செய்தான். அவள் தோள்களை அன்புடன் பற்றி, "தேவி!



தவறாகப் புரிந்து கொண்டாய் என் உள்ளத்தை. விக்கிரமாதித்தன் இந்த ஓலைகளைச் சாதாரணத் தூதர்களிடம் அனுப்பியிருக்கலாம். தண்டி மகாகவிக்குக்கூட இவை தெரியவேண்டிய அவசியமில்லை. ஆனால் முதல் நாள் அவரிடம் சொல்லிவிட்டு உன்னையும் மைவிழியையும் காரணமாகவே அனுப்பியிருக்கிறான். இந்த ஓலைகளின் செய்தி இனி கவிகள் வட்டாரங்களில் பரவும். நீயும் மைவிழியும் ரதங்களில் சென்றதைக் காஞ்சி நகர மக்கள் பார்த்திருப்பார்கள். காரணம் வெகு சீக்கிரம் காஞ்சி நகரம் முழுவதும் பரவிவிடும். பரமேசுவரவர்மனையும் ராஜசிம்மனையும் விக்கிரமாதித்தன் தப்புவித்தான் என்ற செய்தி தமிழகம் முழுவதும் தெரிய வரும். அதன் விளைவு எங்களுக்குப் பெருமை தரக் கூடியதல்ல. புரிகிறதா?" என்று வினவினான்.

தேவிக்கு நன்றாகப் புரிந்திருந்தாலும் அதைப்பற்றி அவள் சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. "எங்களை அனுப்புவதற்கும் காரணம் சொன்னார் சாளுக்கிய தளபதி" என்றாள் அவள் திடமான குரலில்.

"என்ன காரணம்?" என்று கேட்டான் பல்லவ இளவல் சினம் ஒலித்த குரலில்.

"இந்த ஓலைகளில் கண்ட உத்தரவுகள் ஸ்ரீராமபுண்ய வல்லப ரின் திட்டங்களுக்கு நேர் எதிரிடையாக இருப்பதால் சாதாரணத் தூதர்களை அனுப்புவதைவிட எங்களை அனுப்புவது சிறந்தது என்று மன்னர் கருதியதாகக் கூறினார் தளபதி" என்றாள் தேவி.

இந்தச் சமாதானம் பொதுவாக ஒப்புக் கொள்ளக்கூடிய தென்றாலும் ராஜசிம்மன் மனம் அதை ஒப்புக் கொள்ள மறுத்தது ஆகவே அதற்குப் பதிலேதும் சொல்லாமல் அவன் சாளரத்தை அணுகி வெளியே நோக்கினான். அவன் மனநிலையைத் தேவி நன்றாகப் புரிந்து கொண்டாள். மேற்கொண்டுதான் கூறும் எந்த விவரமும் அவன் மனத்துக்குச் சாந்தி அளிக்காது என்பதைப் புரிந்துகொண்ட தால் வேறு பாதையில் பேச்சைத் திருப்பி, "மைவிழியை நீங்கள் சந்திக்க வில்லையா?" என்று வினவினாள்.

அதைக் கேட்டதும் சாளரத்தினின்று திரும்பிய பல்லவ இளவல், "இல்லை. நான் அவளைச் சந்திக்கவில்லை" என்று கூறினான்.

"அப்படியானால்..." என்று ஏதோ கேள்வியைத் துவங்கிய ரங்கபதாகாதேவி சட்டென்று பேச்சை நிறுத்தினாள் இளவரசன் முகத்திலிருந்த வெறுப்பைக் கவனித்து.

"நானே தப்பினேன் சாளுக்கியர் வேட்டுவ மாளிகையிலிருந்து. ஆனால் மைவிழி என்னை விடுவிக்கவில்லையே தவிர அங்கும் ஒரு பெண்ணின் உதவியால்தான் தப்பினேன்" என்றாள் ராஜசிம்மன்.

"மூன்றாவது ஒருத்தியைப் பிடித்து விட்டீர்களா?" என்றாள் தேவி.

"ஆம்."

"இப்படியே போனால் உங்கள் அந்தப்புரம் மிகப் பெரிதாகி விடுமே."

"ஆகாது."

"ஏன்?"

"என்னைத் தப்புவித்த பெண்ணுக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். மூதாட்டி அவள்."

இதைக் கேட்டதும் ரங்கபதாகாதேவி மகிழ்ச்சியுடன் நகைத்தாள். அரசகுமாரன் மேற்கொண்டு சொன்னான். "வயது அதிகமானாலும் உங்களிருவரையும்விட நல்ல புத்திசாலி. ஸ்ரீராமபுண்யவல்லபரையே ஏமாற்றினாள். உணவுப்பொருட்கள் வாங்கப் பக்கத்து நகரத்துக்குச் செல்லும் வண்டியில் ஒரு நாள் அவர் அறியாமல் அந்த மூதாட்டி என்னை ஏற்றிச் சென்றாள். அங்கிருந்த மருத்துவர் வீட்டில் விட்டுப் போனாள். நான் மருத்துவ வேடம் பூண்டு இந்நகருக்குப் போரைத் தடுக்க வந்தேன். வருவதற்குள் காரியம் மிஞ்சிவிட்டது. ஸ்ரீராமபுண்ய வல்லபர் திட்டம் நிறைவேறி விட்டது" என்று தான் தப்பிய விதத்தையும் போரின் முடிவையும் தொகுத்துச் சொல்லித் துன்பப் பெருமூச்சு விட்டான் இளவரசன்.

ரங்கபதாகாதேவி அவனை மேற்கொண்டும் கேட்டாள். "உங்கள் நண்பர்களை அங்கேயே விட்டு வந்தீர்களா?" என்று.

"ஆம்" என்றான் பல்லவ இளவல்.

கங்கன் மகள் மேலும் ஏதோ கேட்கத் துவங்கிய சமயத்தில் அந்த அறைக் கதவை யாரோ சற்றுப் பலமாகவே தட்டினார்கள். ஆகவே கேள்வியை நிறுத்திக் கொண்டே ரங்கபதாகாதேவி விடு விடு என்று சென்று கதவைத் திறந்தாள். கதவுக்கு வெளியே மைவிழியும் அவளுக்குப் பின்னால் சீனனும் நின்றிருந்தார்கள். அவர்கள் மட்டுமல்ல நின்றது அங்கே. அவர்களுக்குப் பின்னால் அவள் சித்தத்தையும், ஏன், பல்லவ இளவலின் சித்தத்தையுங் கூடச் சிதற அடிக்கக்கூடிய மற்றொருவரும் நின்றிருந்தார்.

# 59. சீன மந்திரம்

இரவின் மூன்று ஜாமங்கள் ஓடி நான்காவது ஜாமம் துவங்கிவிட்ட சமயம் அது. கிருஷ்ண பட்சத்து இந்து, இரவின் இருளைப் பூர்ணமாகக் கிழித்துத் தன் வெள்ளிய கிரணங்களைப் பாய்ச்சியிருந்ததால், வெளிப்புறத்தில் மட்டுமின்றி அறைக்குள்ளும் சாளரத்தின் மூலம் செண்பக மரத்தின் கிளைகளையும் இலைகளையும் ஊடுருவிவிட்ட நிலவு, பற்பல சித்திரங்களை அறையின் தரையிலும் சுவர்களிலும் தீட்டியிருந்தது. செண்பக மரத்துக் கிளைகள் காற்றில் ஆடியதால் அந்தச் சித்திரங்கள் அவ்வப்பொழுது உரு மாறியதன் விளைவாக, ஏதேதோ ஓவியங்களை மாற்றி மாற்றி வரைந்து கொண்டிருந்தது, தேய்பிறைத் தேன்நிலவு. அந்த நிலவின் ஊடே சென்று கதவைத் திறக்க முற்பட்ட ரங்கபதாகாதேவியின் உடலிலும் நிலவின் வட்டங்கள் கல்லிழைத்து அவள் பின்புற எழில்களின் அசைவுகளுக்குப் பெரும் சிறப்பை ஊட்டின. அதைக் கவனித்து மயங்கி அவளை அணுகிச் சென்ற பல்லவ இளவலும் வெளியே நின்றவர் களைக் கண்டதும் அவளைவிட அதிகப் பிரமையை அடைந்தான். மைவிழி அத்தனை சீக்கிரத்தில் அங்கு வந்தது மட்டு மின்றி அவளுடன் சீனனும் வந்தது அவனுக்குப் பிரமிப்பாயிருந்த தென்றால், அவர்களுக்குப் பின்னால் நின்ற மனிதன் அவன் சித்தத்தையும் ரங்கபதாகாதேவியின் சித்தத்தையும் அறவே சிதற அடித்தார். அங்கு நின்றவர் ஸ்ரீராமபுண்யவல்லபர்!

அவர் எதற்காக மைவிழியுடனும் சீனனுடனும் வந்தாரென்பது இளவலுக்கு மட்டுமல்ல தேவிக்கும் புரியவில்லை அதுவும் பல்லவர்படையின் வசத்திலிருக்கும் விளிந்தை நகருக்கு அவர் வந்த துணிவை எண்ணி அவ்விருவரும் எண்ணச் சுழல்களில் சிக்கிவிட்ட தால், மைவிழியையோ, சீனனையோ உள்ளே அழைக்கக்கூட யோசனை தோன்றாமல் இருவரும் சிலவிநாடிகள் மௌனமாகவே நின்றனர். அந்த மௌனத்தை ஸ்ரீராமபுண்ய வல்லபரே கலைத்து, "அறை வாயிற்படிக்கு அப்புறமும் இப்புறமும் நிற்பதை விட உள்ளேயோ வெளியிலேயோ பேசி சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வது நல்லதல்லவா?" என்று சர்வசாதாரணமாக வினவினார்.

சரித்திரப் பிரசித்தி பெற்றவரும் நிகரற்ற ராஜ தந்திரியுமான ஸ்ரீராமபுண்யவல்லபர், வைரிகளான பல்லவர் காவலுள்ள மாளிகைக் குள் வந்ததன்றி சர்வ சாதாரணமாகப் பேசுவதையும் கவனித்த பல்லவ

இளவல் அவர் துணிவை மனத்துக்குள் பாராட்டவே செய்தான். ஆனால் சிறிது சிந்தித்துவிட்டுச் சொன்னான், ''தந்தை படுகாயப் பட்டுப் படுத்திருக்கிறார். ஆகவே நாம் வேறு அறையில் பேசுவோம்'' என்று. பிறகு ரங்கபதாகாதேவியை நோக்கி, ''தேவி! நீயும் மைவிழியும் யாங்சின்னும் தந்தையைக் கவனித்துக் கொள்ளுங்கள். நான் சாளுக்கிய அமைச்சர் அவர்களுடன் பேசிவிட்டு வருகிறேன்'' என்று கூறி விட்டுச் சற்று எட்ட நின்றிருந்த பலபத்ரவர்மனை நோக்கி, ''படைத்தலைவரே! வாருங்கள் சாளுக்கியர் போர் மந்திரி தங்க ஓர் அறையை ஏற்பாடு செய்வோம்'' என்று அவனையும் அழைத்துக் கொண்டு அந்த மாளிகையின் உப்பரிகைத் தாழ்வரையில் முன்னே நடந்தான்... அங்கிருந்த அறைகளில் காலியானதும் பெரியதுமான ஓர் அறையைத் திறக்கச் சொல்லி, ''இங்கு நீங்கள் தங்கலாம்'' என்று கூறியதன்றி, அங்கிருந்த பஞ்சணையைப் பணியாட்களை விட்டுத் தட்டச் சொல்லி, ''அமருங்கள் அமைச்சரே!'' என்று உபசரித்து அவர் எதிரில் பணிவுடன் நிற்கவும் செய்தான் ராஜசிம்ம பல்லவன்.

பஞ்சணையில் அமர்ந்த ஸ்ரீராமபுண்யவல்லபர், அறையில் பணியாட்கள் ஏற்றி வைத்த விளக்கில் பல்லவ இளவலின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். அந்த முகத்தில் கேள்விக்குறிகள் பலவும் வியப்பும் ஓரளவு விரிந்து கிடைப்பதைக் கண்டு சிறிது சிந்தனையில் ஆழ்ந்து விட்டு, ''தந்தையின் உயிருக்கு ஏதும் ஆபத்தில்லையே?'' என்று வினவினார்.

''உயிருக்கு ஆபத்தில்லை'' என்று பதில் கூறினான் இளவரசன் வெறுப்பு மண்டிய குரலில்.

''மகிழ்ச்சி'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர் ஆசுவாசப் பெருமூச்சு விட்டு.

இளவரசன் கண்களில் லேசாகக் கனல் துளிர்த்தது. ''இதில் மகிழ்ச்சிக்கு என்ன இருக்கிறது?'' என்று வினவவும் செய்தான் சினம் நன்றாகத் தொனிக்குக் குரலில்.

''தந்தை உயிர் தப்பியது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்லவா?'' என்று கேட்டார் போர் மந்திரி.

''இல்லை.''

''ஏன்?''

''சுத்த வீரர்கள் போரில் மடிவதையும் வீர சொர்க்கத்தையும் விரும்புவார்கள்.''



''உன் தந்தையும் அதைத்தான் விரும்பியிருப்பார். என் உத்தரவு இட்டமாயில்லாவிட்டால் அவருக்கு அது கிடைத்தும் இருக்கும்'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

வியப்புத் ததும்பிய விழிகளைப் பல்லவ இளவரசன் சாளுக்கிய போர் மந்திரியின் முகத்தில் நிலைக்கவிட்டான். அதைக் கண்டாலும் காணாதது போலவே சொன்னார் ஸ்ரீராம புண்யவல்லபர், ''எந்தக் காரணத்தைக் கொண்டும் பல்லவ மன்னரைக் கொல்லவோ சிறைபிடிக்கவோ கூடாது என்று கங்க மன்னனுக்குத் திட்டமாக உத்தரவிட்டிருந்தேன்'' என்று.

அதுவரை அவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டு மௌனமாக நின்றிருந்த பலபத்ரவர்மன் குறுக்கே புகுந்து, ''அமைச்சர் அவர்கள் சொன்னது முற்றும் உண்மை'' என்று ஒத்துப் பாடினான்.

அதைக் கேட்டதும் சரேலென்று படைத்தலைவன் பக்கம் திரும்பிய இளவரசன், ''அதைப்பற்றி உமக்குத் தெரியுமா?'' என்று வினவினான் வியப்பும் சினமும் கலந்த குரலில்.

''கங்க மன்னருடைய வாள் தாக்கியதும் தங்கள் தந்தை புரவிமீது நினைவிழந்து சாய்ந்துவிட்டார். கங்கமன்னர் இஷ்டப் பட்டிருந்தால் அவரைக் கொன்றிருக்கலாம். அல்லது சிறைபிடித் திருக்கலாம். ஆனால் இரண்டையும் செய்யவில்லை மன்னரின் புரவியை நெருங்க முற்பட்ட வீரரையும் கங்கமன்னர் தடுத்தார். இல்லையேல் நமது படை இன்னும் அதிக சேதம் அடைந்திருக்கும்'' என்று போர்க் காட்சியின் இறுதிக் கட்டத்தை விளக்கிச் சொன்னான் பலபத்ரவர்மன்.

பல்லவ இளவலின் முகத்தில் கோபம் முன்னைவிட அதிகமாகச் சுடர்விட்டது. ''பலபத்ரவர்மரே! இதை ஒப்புக் கொள்ள உமக்கு வெட்கமாயில்லை?'' என்று வினவவும் செய்தான் கோபத்தின் ஒலி சிகரத்தை எட்டிய குரலில்.

பலபத்ரவர்மன் தலைநிமிர்ந்து திடத்துடன் கூறினான்: ''இளவரசரே! இந்த வெற்றி பூவிக்கிரமனுடையதல்ல. இதோ அமர்ந்திருக்கும் ஸ்ரீராமபுண்யவல்லபரின் வெற்றி. விளிந்தையின் சம வெளியில் நாம் எதிரியை எதிர்பார்க்கவில்லை. காவிரியின் அக்கரையில் எதிர்பார்த்தோம். போரைச் சமவெளியில் எதிர் பார்க்கவில்லை. காவிரி மணலில் எதிர்பார்த்தோம். ஆனால் நமது திட்டங்களை முன்னோக்கியே போர் அமைச்சர் எதிர் பார்த்து, மாற்றுத் திட்டத்தை வகுத்தார். தவிர எதிரியின் படையும் நமது படையைவிட ஒன்றரைமடங்கு அதிகமானது.''

இளவரசன் பலபத்ரவர்மனுக்குப் பதிலேதும் சொல்ல வில்லை. ஸ்ரீராமபுண்ய வல்லபரையே நோக்கினான் சுடு விழிகளால். அதைக்கவனித்த ஸ்ரீராமபுண்யவல்லபர், ''ராஜசிம்மா! என்மீது சீற்றங் கொண்டு பயனில்லை. இந்தப் போர் நடை பெற்றது எனக்கிஷ்ட மில்லை. இதைத் தடுக்க ஓலை எழுதித் தரும்படி உன்னையே கேட்டேன் தண்டி மகாகவியின் மாளிகையில். நீ ஒப்பவில்லை. இந்தப் போரின் முடிவு முன்னதாகவே எனக்குத் தெரியும். தவிர வீரனான பரமேசுவரவர்மன் தோல்வியடைவதையும் நான் விரும்பவில்லை. ஆனால் பரமேசுவரவர்மன் போரிலிறங்குவது திட்டமான பிறகு எதிர்த் திட்டங்களை வகுக்க வேண்டியது என் கடமையாயிற்று'' என்று கூறிவிட்டு மேலும் சொன்னார்: ''ராஜசிம்மா! பரமேசுவரவர்மன் மகாவீரன். தவிர தீவிர தெய்வபக்தி வாய்ந்தவன். எங்கள் படையெடுப்பு ஏற்பட்டபோது போரில் வல்லமை பொருந்திய தன் மகனைக் கோவில் கட்டப் பணித்திருந்தான். காஞ்சியின் கலைச் செல்வங்கள் அழியாதிருக்க அந்த நகரில் போரைத் தவிர்த்து வெளியேறினான். அப்பேர்ப்பட்ட மன்னவன் உயிர் வாழ்வது அவசியம். இந்தத் தோல்வியால் அவன் பெயர் கெடாது. அவன் வீரம் சாளுக்கிய மன்னனுக்கு நன்றாகத் தெரியும். எனக்கும் தெரியும். நான் இங்கு வந்திருப்பதே அதற்கு அத்தாட்சி.''

''நீங்கள் வந்திருப்பது எப்படி அத்தாட்சி அதற்கு?'' என்று வினவினான் ராஜசிம்மபல்லவன்.

''விளிந்தையில் இருப்பது உங்கள் பெரும்படை. உங்களுக் கிடையில் நான் தனியாக வந்திருக்கிறேன். ஏன்? பரமேசுவரவர்மன் பெருந்தன்மையும் வீரமும் எனக்குத் தெரியும். என்னைச் சிறை செய்வதை அவன் கௌரவக் குறைவாகக் கருதுவான் என்பது எனக்குத் தெரியும்'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர். பிறகு சிறிது ஆலோசித்துவிட்டு, ''பல்லவர் குலத் தோன்றலே! வேட்டுவ மாளிகை மூதாட்டியின் உதவியால் நீ தப்பிச் சென்ற அன்றிரவே மைவிழி அங்கு வந்து சேர்ந்தாள் எங்கள் மன்னர் உத்தரவுடன். ஆகவே உன் சகாக்களையும் மைவிழியையும் அழைத்துக் கொண்டு வெகு துரிதமாக இங்கு வந்து சேர்ந்தேன் இந்த நாள் இங்கு போர் முடிந் திருக்குமென்பதும் எனக்குத் தெரியும். கங்க நாடு சம்பந்தப்பட்டவரை என் பணி முடிந்துவிட்டது. ஆகையால் நாளைக் காலையில் நான் காஞ்சிக்குக் கிளம்ப உத்தேசிக்கிறேன்'' என்றும் கூறினார்.

இதற்குப் பதில் என்ன சொல்வதென்பதை அறியாததால் இளவரசன் நீண்ட நேரம் அவர் முன்பு மௌனமாக நின்றான். பிறகு



பலபத்ரவர்மனை நோக்கி, ''நீங்கள் செல்லுங்கள் சாளுக்கியர் போர் மந்திரி உறங்கட்டும். மீதி விஷயங்களை நாளைக் காலையில் கவனிக்கலாம்'' என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டுத் தந்தை படுத்திருந்த அறையை நோக்கிச் சென்றான்.

பல்லவ மன்னன் படுத்திருந்த அறையில் நிசப்தம் நிலவிக் கிடந்தது. ஆனால் அதை அடைந்த பல்லவ இளவலின் இதயத்தில் பல கேள்விகளும் பதில்களும் எழுந்து பேரிரைச்சல் போட்டுக் கொண்டிருந்தன. ஸ்ரீராமபுண்யவல்லபரின் திட்டமும் கங்க மன்னன் வீரமும் பல்லவர்களை முறியடித்துவிட்ட முடிவு அவன் மனத்தில் ஒரு போர்க்களத்தையே விளைவித்திருந்ததது. எதிர்பார்த்த எதிரியை எதிர்பாராத இடத்தில் சந்தித்த தந்தையின் ஆரம்ப அதிர்ச்சியையும் பிறகு துணிவுடன் போரிட்ட விதத்தையும் எண்ணிப் பார்த்தான் இளவரசன். அத்துடன் எதிரி தன் தந்தையைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் அவன் மனத்தில் பெரும் வேதனையையும் வெட்கத்தை யும் விளைவித்துக் கொண்டிருந்தன. இப்படி ஏதேதோ நினைப்புகள் சித்தத்தில் எழுந்தொலிக்க அந்த அறைக்குள் புகுந்த பல்லவ இளவல் தந்தை படுத்திருந்த மஞ்சத்தின் பக்கத்தில் ரங்கபதாகாதேவி, மைவிழிச் செல்வி, யாங்சின் மூவரும் நின்று கொண்டு மன்னனைக் கவனித்துக் கொண்டிருந்தைக் கண்டதும் அவர்களுடன் தானும் சேர்ந்து கொண்டான். இளவரசன் பஞ்சணை அருகில் வந்ததும் யாங்சின் அவனை நோக்கி, ''தங்கள் தந்தையின் காயம் மிகச் சொற்பமானது'' என்றான்.

''உனக்கெப்படித் தெரியும்?'' என்று வினவினான் இளவரசன்.

''இதோ இந்தக் கட்டு இருக்கும் நிலையிலிருந்து தெரிகிறது'' என்றான் சீனன்.

''இதில் என்ன புதுமையைக் கண்டுவிட்டாய் நீ?''

''காயம் ஆழமாயிருந்தால் சற்றாவது ரத்தக் கழிவு கட்டை நனைத்திருக்கும்.'''

''அது ஏற்படாமலிருக்கப் பச்சிலைச்சாறு தடவியிருக்கிறேன்.''

''எந்தச் சாறு தடவினாலும் உட்காயத்தில் சிறிது ரத்தக் கசிவு இருக்கும்'' என்று திட்டமாகக் கூறினான் சீனன்.

''தந்தை எப்பொழுது விழித்துக் கொள்வார்?'' என்று வினவினான் இளவரசன் அடுத்தபடி.

''உங்கள் தூக்கத் துளிகளின் சக்தி குறைந்ததும் விழித்துக் கொள்வார். பிறகு காயத்தின் வலி அதிகமாக இருக்கும்'' என்று கூறிய

சீனன், ''அதை நிறுத்த என்ன செய்வீர்கள்?'' என்று இளவரசனை வினவியதன்றி, ''வேறென்ன செய்வீர்கள்? மறுபடியும் பச்சிலைத் துளிகளைப் புகட்டித் தூங்கச் செய்வீர்கள்'' என்று இகழ்ச்சியுடன் கூறவும் செய்தான்.

இதைக் கேட்ட இளவரசன் சிறிதுகோபத்துடன், ''நீ மட்டும் என்ன செய்துவிடுவாய்?'' என்று கேட்டான்.

யாங்சின் அதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை ''மன்னர் இந்தக் காயத்திலிருந்து குணப்பட்டு எழுந்து நடக்க எத்தனை நாளாகும்?''என்று வினவினான், பல்லவ இளவரசை நோக்கி.

இதற்கு இளவரசன் பதில் சொல்லுமுன்பாக ரங்கபதாகாதேவி பதில் கூறினாள், ''பத்து நாட்களாகும்'' என்று.

''குறைந்த பட்சம் ஒரு வாரம் ஆகும்'' என்று நாட்களில் மூன்றைக் குறைத்துக் கூறினான் இளவரசன்.

சீனன் அவ்விருவரையும் உற்று நோக்கி, ''அதுவரை இந்த நகரத்தில் அதுவும் எதிரிப் படையின் அருகிலிருக்க உத்தேசமா?'' என்று வினவினான்.

''கங்க நாட்டுப் படையால் இந்தப் படைக்கு ஆபத்து ஏதுமில்லை'' என்றாள் ரங்கபதாகாதேவி.

சீனன் தன் வாயால் ஏதோ சப்புக் கொட்டினான். ''அதற்காக மன்னர் இங்கு படுத்துக் கிடக்க வேண்டியதில்லை'' என்று அறிவித்தான்.

''வேறென்ன செய்வதாம்?'' என்று கேட்டாள் ரங்கபதாகாதேவி.

சீனன் அவர்கள் பிரமிக்கும்படியான, நம்பத்தகாத, மிக அதிசயமான பதிலைக் கூறினான், ''மன்னர் நாளைக் காலையில் எழுந்து நடப்பார்'' என்று.

''அதற்குச் சீன நாட்டு மந்திரம் இருக்கிறதா?'' என்று வினவினான் இளவரசன்.

''ஆம் அதை நாளைக் காலையில் நீங்கள் கண்கூடாகப் பார்க்கப் போகிறீர்கள்'' என்றான் சீனன்.

அவன் சொன்னதை யாரும் நம்பவில்லை. ஆனால் மறுநாள் என்னவோ அவன் சொன்னபடிதான் நடந்தது. சீனத்தில் அப்படி யொரு மந்திரம் உண்டென்பதை அறிந்த எல்லோரும் பிரமித்தார்கள். ஏன், எதற்கும் பிரமிக்காத ஸ்ரீராமபுண்ய வல்லபரே பிரமித்தார். அப்படியொரு விசித்திரத்தைச் சிருஷ்டித்தான் சீனனான யாங்சின்.

# 60. சிகிச்சை

**ப**ல்லவ மன்னன் எழுந்து நடமாடப் பத்து நாளாவது ஆகுமென்பதைப் பரிகசித்து, மறுநாளே அவர் எழுந்து நடமாட வகை செய்வதாகக் கூறிய சீனனான யாங்சின் மறுநாட்காலை விளிந்தையின் மாளிகையிலிருந்தே மறைந்துவிட்டான். அவன் புரிவதாகப் புகன்ற விந்தையைக் காண விழைந்து அவனைத் தேடிய இளவரசன், அவன் முதலிரவின் கடைசி ஜாமத்தில் படுக்கச் சென்ற அறையில் படுக்கவில்லை என்பதை அங்கிருந்த பஞ்சணையைப் பார்த்ததும் புரிந்து கொண்டதால் - 'சீனன் எங்கு தான் போயிருப்பான்?' என்று தன்னைத்தானே' கேட்டுக் கொண்டதன்றி, அவனைக் கண்டுபிடிக்கக் காவலர் இருவரையும் ஏவினான். காவலர் அந்த அரண்மனையையும் சுற்றுப் புறத்தையும் சல்லடை போட்டுச் சலித்தும் சீனனைக் காணாததால் நகரத்துக்குள்ளும் சென்று பலவிடங்களில் தேடியும் பயனற்ற நிலையிலேயே திரும்பினர் மாளிகைக்கு. சீனன் எங்கும் காணவில்லை யென்பதை அவர்கள் கூறக் கேட்ட இளவரசன் அவன் ஏதோ அலுவலாகச் சென்றிருக்கிறானென்பதை ஊகித்துக் கொண்டதால், அதைப் பற்றி மேற்கொண்டு கவலைப்படாமல் காலைக் கடன்களையும் நீராட்டத்தையும் முடித்துக் கொண்டு தந்தையின் பஞ்சணையருகே வந்தான். அவனுக்கு முன்னதாகவே நீராடி முடித்துப் புத்தாடை புனைந்து இருவிதப் புது அலங்காரங்களோடு மன்னனின் பஞ்சணை முகப்பில் உட்கார்ந்து கொண்டிருந்த ரங்கபதாகாதேவியும் மைவிழியும் இளவரசன் வந்ததும் எழுந்து அவனை வரவேற்றனர். பல்லவ மன்னனும் பச்சிலை மயக்கம் நீங்கிக் கண்களை விழித்துக் கொண்டிருந்ததால் மைந்தனைக் கண்டதும் வேதனை கலந்த புன்முறுவல் ஒன்றை உதடுகளில் படரவிட்டுக் கொண்டான்.

பரமேசுவரவர்மனின் வேதனைக் காரணத்தை உணர்ந்தும் உணராதவன் போலவே நடித்த பல்லவ இளவல், தந்தையை நோக்கி, ''இப்பொழுது காயத்தின் வலி எப்படியிருக்கிறது?' என்று வினவினான்.

''காயத்தின் வலி அதிகமாயிருக்கிறது. ஆனால் மனத்தின் வலியைவிட அது குறைவுதான்'' என்று மெல்லச் சிரமப்பட்டுப் பதில் கூறினான் பல்லவ மன்னன்.

''மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள். சாளுக்கியர்களுடனோ கங்கர்களுடனோ நமது போர் இன்னும் முடியவில்லை'' என்று தைரியம் சொன்னான் இளவரசன்.

பரமேசுவரவர்மன் வதனத்தில் வேதனை ரேகை மீண்டும் விரிந்ததால் அவன் சொன்ன பதிலிலும் வேதனை நன்றாகத் துளிர்த்தது. ''கங்கர்களுடன் போர் நேற்று முடிந்துவிட்டது'' என்று கூறினான் பரமேசுவரவர்மன் மன உளைச்சலுடன். ஆனால் அதே சமயத்தில் அவன் முகத்தில் சற்று மகிழ்ச்சிக் குறியும் ஆவலும் படர்ந்ததைக் கவனித்த இளவரசன் அவற்றுக்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் மன்னன் கேட்டான், ''போர்கள் கிடக்கட்டும் ராஜசிம்மா! அரங்கன் கோவிலையும் கைலாசநாதர் கோவிலையும் எந்த நிலையில் வைத்திருக்கிறாய்?'' என்று. அந்தக் கேள்வியைக் கேட்டபோது மன்னன் குரல் முன்னைவிடச் சற்றுத் திடமாகவும் ஒலித்தது.

அந்தக் கேள்வியை அவன் கேட்ட அதே சமயத்தில், ''பரமேசுவரவர்மா! நீ நீடூழி வாழ வேண்டும்'' என்ற ஸ்ரீராம புண்யவல்லபரின் குரல் பஞ்சணையின் பக்கத்தில் ஒலிக்கவே இளவரசனும் பெண்களிருவரும் மட்டுமின்றி மன்னனும் திரும்பி, அவரை நோக்கினான். அந்த நோக்கில் ஒரு விநாடி சினம் துளிர்த்ததாயினும் மறுவிநாடி அது மறைந்துவிட ''ராஜசிம்மா! ஸ்ரீராமபுண்யவல்லபருக்கு ஓர் ஆசனம் எடுத்துப் போடு'' என்று உத்தரவிட்டான் பரமேசுவரவர்மன்.

இளவரன் கொண்டுவந்து போட்ட ஆசனத்தில் அமர்ந்த ஸ்ரீராமபுண்யவல்லபர் பரமேசுவரவர்மன் வதனத்தைத் தமது கையால் தடவிக் கொடுத்ததன்றி, ''சாளுக்கியர் செய்த துர்ப்பாக்கியம் நீ அவர்களுக்கு எதிரியாய்ப் பிறந்திருக்கிறாய்'' என்று வருத்தத்துடன் கூறவும் செய்தார்.

''துர்ப்பாக்கியம் சாளுக்கியர்களைத் தொடரவில்லை. என்னைத் தான் தொடர்ந்திருக்கிறது'' என்றான் பரமேசுவரவர்மன்.

''பரமேசுவர வர்மா! உன் முன்னோர் செய்த வினை உன்னைப் பாதித்திருக்கிறது. உன் மகனைப் போலவே நரசிம்ம வர்மன் என்று பெயர் கொண்ட உன் மூதாதை வாதாபியை நாசம் செய்திராவிட்டால் விக்ரமாதித்தனின் இந்தப் படையெடுப்பு நேரிட்டிருக்காது. படையெடுப்பு நேரிட்டிருக்காவிட்டால் அரங்கனுக்கும் கைலாச நாதனுக்கும் நீ கோவில் எழுப்பச் செய்திருக்கும் முயற்சி தடைபட்டிருக்காது. அந்த முயற்சி தடைப்பட்டது உன் துர்ப்பாக்கியம் மட்டுமல்ல; சாளுக்கியர் துர்ப்பாக்கியமும் கூட. ஏன், கலை உலகத்துக்கே அது துர்ப்பாக்கியம்'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர் வருத்தத்துடன்.



பரமேசுவரவர்மன் முகத்தில் மந்தகாசம் விரிந்தது. ''தங்கள் பாராட்டுதலுக்கு நன்றி இருப்பினும் அந்தத் தடையை ஏற்படுத்தியது தாங்கள் தானே?'' என்று வினவினான் பரமேசுவரவர்மன்.

''ஆம், மன்னவா! அதில் சந்தேகமில்லை. விக்கிரமாதித்தனின் போர் மந்திரியென்ற முறையில் எனது கடமையைச் செய்ய வேண்டியதாயிற்று. ஆனால், இதை நான் மகிழ்ச்சியுடன் செய்யவில்லை மன்னவா. மிகுந்த மனவருத்தத்துடன் தான் இந்தத் திட்டத்தைத் தயாரித்தேன்'' என்றார் ஸ்ரீராமபுண்யவல்லபர்.

அதைப் பற்றி மேலும் விவாதிக்க இஷ்டப்படாத பரமேசுவர வர்மன் தனது மகனை நோக்கி, ''ராஜசிம்மா, ஸ்ரீராமபுண்யவல்லபர் காஞ்சி திரும்ப ஏற்பாடு செய்'' என்று உத்தரவிட்டான்.

''இவரையா!'' என்றான் ராஜசிம்மன் உக்கிரத்துடன்.

''ஆம், ராஜசிம்மா! தனி மனிதர்களுடன் நமக்குப் பகையில்லை. தவிர, போர் மந்திரி நமது அறப்போக்கில் நம்பிக்கை வைத்து, தனித்து மைவிழியுடன் வந்திருக்கிறார். அவரைத் தகுந்தபடி பாதுகாப்புடன் திருப்பி அனுப்பிவிடு'' என்று உத்தரவிட்டான்.

ஸ்ரீராமபுண்யவல்லபர் தமது ஆசனத்தைவிட்டு எழுந்தார். ''மரண காயமடைந்த நிலையிலும் அறம் தவறாத பல்லவ மன்னவா! நினைவு வந்ததும் மைந்தனிடம் அரங்கன் கோவிலைப் பற்றியும் கைலாசநாதர் கோவில் பற்றியும் விசாரிக்கும் மனவலிமையும் கலை உணர்ச்சியும் இறைப்பற்றும் உள்ள இணையற்ற வேந்தனே! உன் படைகள் தோல்வியடைந்தாலும் உன் கலைச் சிறப்பு காலமுள்ளவும் நிற்கும். உன்னைப் பகைவனாகப் பெற்றது விக்கிரமாதித்தனுக்குப் பெரு நஷ்டம். அவன் பெறக் கூடிய வெற்றிகளைவிட உன் கலைப் பணிகள் வரலாற்றில் சிறந்த இடம் பெறும்'' எனக்கூறி ஆசீர்வதிக்கும் முறையில் தமது வலது கையை அவன் சிரத்தில் வைத்துவிட்டு அவ்வறையை விட்டு அகன்றார்.

அவர் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் யாங்சின் கையில் நீண்ட பட்டுப் பை ஒன்றுடன் உள்ளே நுழைந்தான். வந்தவன் நேராக மன்னனிருந்த பஞ்சணையருகில் வந்து, ''இளவரசே! இந்தப் பெண்களிருவரையும் அறைக்கு வெளியில் போகச் சொல்லுங்கள். நல்ல உஷ்ணமான நீர் கொண்டு வர ஒரு காவலனை அனுப்புங்கள்'' என்று கூறியதல்லாமல் பெண்களை வெளியே செல்லும்படி தானே பணிக்கும் முறையில் கையை ஆட்டினான்.

''நாங்கள் போக உத்தேசமில்லை'' என்றாள் ரங்கபதாகாதேவி திட்டமாக.

சீனன் இளவரசனை நோக்கினான் இளவரசன்பார்வையிலும் தனக்கு ஏதும் அனுகூலமில்லாது போகவே, ''சரி, உங்கள் இஷ்டம். ஆனால் நான் சிகிச்சை துவங்கியதும் எது நடந்தாலும் யாரும் குறுக்கிடக் கூடாது. குறுக்கிட்டாலோ அல்லது என் பணியிலிருந்து எவ்வகை யிலாவது என்னைத் திருப்ப முயன்றாலோ மன்னர் உயிர் இப்பஞ்சணையில் முடிந்துவிடும்'' என்று எச்சரித்த சீனன், ''சீக்கிரம் சுடுநீர் வரட்டும்'' என்றான் உத்தரவிடும் தோரணையில். அவன் கேட்டபடிசுடுநீர்வந்ததும், அதைப் பஞ்சணையின் ஓர் ஓரத்தில் வைத்த சீனன் தன் கையிலிருந்த பட்டுப் பையை அவிழ்த்து அதிலிருந்து மெல்லிய ஆறு ஊசிகளை எடுத்துச் சுடுநீர் இருந்த பாத்திரத்தில் போட்டான் பிறகு மெல்லிய பட்டுநூல் கோத்த இன்னொரு பெரிய ஊசியையும் பட்டு நூலுடன் சுடுநீரில் போட்டான் பிறகு தன் கச்சையிலிருந்த புதுக் கத்தியொன்றையும் நீரில் போட்டு விட்டு மஞ்சத்தைவிட்டுச் சற்று விலகி நிற்கும்படி மற்றவர்களுக்கு உத்தரவிட்டான்.

அவன் செய்கைகள் இளவரசனுக்கும் இரு பெண்களுக்கும் வியப்பையும் பயத்தையும் ஒருங்கே அளித்தபோதிலும் அவர்கள் அவன் கூறியபடி விலகியே நின்றனர். சீனன், மன்னனை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு மன்னனின் கைகளிரண்டையும் கால்கள் இரண்டையும் சில நிமிடங்கள் நன்றாக உருவிவிட்டான். இடது காதை நிமிண்டிப் பார்த்தான். அந்தப் பரிசோதனைக்குப் பிறகு அவன் முகத்தில் ஓரளவு திருப்தி நிலவியதை இளவரசன் கண்டாலும் அந்தத் திருப்திக்குக் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் சீன நாட்டின் அந்தச் சிகிச்சை முறையைக் கவனமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

மேற்படி பல பரிசோதனைகளை நடத்திய பிறகு, சீனன் சுடுநீர் பாத்திரத்திற்குள் இருந்த மெல்லிய நீண்ட ஊசிகளை எடுத்து இடது கையில் வைத்துக் கொண்டு, ஒன்றன்பின் ஒன்றாக ஊசிகளைப் பல இடங்களில் பொருத்தலானான். இரண்டு ஊசிகளை மன்னனின் இடது காதில் குத்திச் சரசர வென்று திருகி நரம்புகளில் புகுத்தினான். மற்றும் இரண்டு ஊசிகளையும் இரண்டு கைகளில் முழங்கை களுக்குக் கீழே அடிப்புறத்தில் செருகினான். இன்னுமிரண்டு ஊசிகளைக் கைகளின் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கு மிருந்த இடைவெளிகளில் செருகினான். பிறகு அந்த ஆறு ஊசிகளையும் ஒவ்வொன்றாக வேகமாகச் சுழற்றினான் சில வினாடிகள். இத்தனை ஊசிகளை அவன் செருகியும் மன்னன் முகத்தைச் சிறிதும் சுளித்தானில்லை. ஊசிகளைக் குத்தி முடித்ததும் சீனன் புதுக் கத்தியை எடுத்து அதனால் மன்னன் மார்பிலிருந்த கட்டை அறுத்துப் பிரித்தான். பிறகு மார்புக் காயத்தை ஊன்றிக் கவனித்து விட்டு அந்தக் காயத்திலிருந்த பச்சிலைச் சாற்றைச் சுடுநீரால் துணிகொண்டு துடைத்துவிட்டுக், காயத்தைக் கத்தியால் மீண்டும் கிழித்தான். அதிலிருந்து வந்த குருதியைக் துணியால் அழுத்தித் தடுத்துவிட்டு, பட்டு நூல் கோத்திருந்த ஊசியை எடுத்துக் கத்தி கிழித்த இடத்தைப் பட்டு நூலால் வேகமாகத் தைத்தான். பிறகு பட்டுப் பையிலிருந்து ஒரு மெழுகுத் துணியை எடுத்து நூல் வைத்த இடத்தில் அழுத்தி விட்டான். மெழுகுத்துணி அந்த இடத்தை இரும்பெனப் பிடித்துக் கொண்டது. அதற்கு மேல் கட்டு ஏதும் போடாத சீனன் மன்னன் காதிலும் கையிலும் செருகியிருந்த ஊசிகளை எடுத்துப் பட்டுப் பையில் பழையபடி வைத்துக் கொண்டான். பிறகு தன் கையைக் கழுவிவிட்டு இளவரசனை நோக்கி, ''மன்னர் இனி எழுந்து நடமாடலாம்'' என்று கூறினான்.



இளவரசன் முகத்திலும் இரு பெண்களின் முகத்திலும் நம்பிக்கைக் குறி ஏதுமில்லை. ஆனால் சீனன் மெல்ல மன்னனின் கையைப் பிடித்து எழுப்பி உட்கார வைத்தான். ''மஞ்சத்தை விட்டு இறங்கி நடவுங்கள்'' என்றான். எதற்கும் அஞ்சாத பரமேசுவர வர்மனும் மஞ்சத்தைவிட்டு இறங்கினான். தன்னைப் பிடித்துக் கொள்ள முயன்ற இரு பெண்களையும் இளவரசனையும் ஒதுங்கச் சொல்லிவிட்டு அறையில் பத்தடி நடந்து திரும்பி வந்தான். அப்படி நடந்து வந்த மன்னனைச் சீனனைத் தவிர மற்றவர் வியப்புடன் பார்த்தனர். மன்னன் முகத்திலும் வியப்பு இருந்தது. ''எனக்கு மார்புக் காயத்தின் வலிகூடத் தெரியவில்லை'' என்றான் மன்னன்.

இளவரசனின் பிரமிப்பு உச்சநிலை அடைந்தது.

''இது என்ன சிகிச்சை?'' என்று வினவினான் சீனனை நோக்கி.

*''நரம்புச் சிகிச்சை'' என்றான் சீனன்.

''நரம்புகளை என்ன செய்கிறாய்?''

---

• *இத்தகைய சஸ்திர சிகிச்சைக்கு Acupuncture என்று சொல்லுகிறார்கள். இந்தச் சிகிச்சை சீனாவில் 3000 ஆண்டு களாக இருந்து வருகிறது. அமெரிக்காவின் பிரபல இதய ஸ்திர சிகிச்சை நிபுணர் Dr. Michael Debkey இதைப் பற்றி Reader's Digest 1973 நவம்பர் இதழில் விரிவான கட்டுரை எழுதியிருக்கிறார்.*

''நமது உடலில் பல இடங்களில் மர்ம ஸ்தானங்கள் இருக்கின்றன. நரம்புகளுக்கும் அத்தகைய மர்ம ஸ்தானங்கள் உண்டு. அந்த இடங்களை ஊசிகளால் அடைத்துவிட்டால் உடலின் எந்தப் பாகத்தை அறுத்தாலும் வலி தெரியாது. பிறகு நாங்கள் ஆயுத சிகிச்சையை ஆரம்பிக்கிறோம். காயம் பட்ட பகுதியைக் கிழித்துப் பட்டு நூலால் தைத்துவிடுகிறோம். அதற்குப் பிறகு ரத்த விரயம் நின்றுவிடுகிறது. காயத்தின் வலியும் தடுக்கப்படுகிறது ஆகவே காயமடைந்தவனின் சக்தி பழைய நிலைக்குத் திரும்புகிறது'' என்று விளக்கினான் சீனன். அத்துடன் சொன்னான், ''இனி மன்னருக்கு முழு ஆகாரம் கொடுக்கலாம். இனி அவருக்கு யார் உதவியும் தேவையில்லை'' என்று.

இளவரசனும் இரு பெண்களும் சீனனை வைத்த கண்கொட்டாமல் பல நிமிடங்கள் பார்த்தனர். பரமேசுவரவர்மனின் பிரமிப்பு அவர்கள் அனைவர் பிரமிப்பைவிட அதிகமாயிருந்தது. ''சஸ்திர சிகிச்சைக்குப் பாரத நாடுதான் பெயர் போனதென்று இன்றுவரை நினைத்திருந்தேன். சீனர்கள் நம்மை மிஞ்சிவிட்டார்கள்'' என்று கூறியதன்றிச் சீனனை அருகில் அழைத்து, ''யாங்சின்! உனக்கு என்ன வேண்டும் சொல். உக்ரோதயமிருந்தால் அதைக் கொடுத்திருப்பேன். அதைப் பூவிக்கிரமன் பறித்துக் கொண்டான். வேறு எது வேண்டுமானாலும் கேள்'' என்றான்.

''முக்கியமாக ஒன்று வேண்டும்'' என்றான் சீனன்.

''என்ன அது?''

''புத்தர் கோவில். அதைக் காஞ்சியில் கட்ட வேண்டும்.''

பரமேசுவரவர்மன் இளவரசனை நோக்கினான்... ''அரங்கன் கோயிலுக்கும் கைலாசநாதர் ஆலயத்திற்கும் அடுத்தபடி அதைக் கட்டிக் கொடு'' என்று உத்தரவிட்டான். பிறகு சீனனை நோக்கி, ''யாங்சின்! நமது படை நாளை நகர முடியுமா?'' என்று வினவினான்.

''இன்றே நகரலாம். தங்கள் உடல் நலத்துக்கு இனி எந்தக் குறைவுமில்லை'' என்றான் சீனன்.

ஆனால் அதற்கும் இளவரசன் உட்படவில்லை, 'வேறு திட்டம் இருக்கிறது'' என்று கூறினான்.

இந்தச் சமயத்தில் ரங்கபதாகாதேவி கூறினாள், ''எனக்கும் ஒரு தனித் திட்டம் இருக்கிறது'' என்று. அத்திட்டத்தை அவள் விளக்கியும் கூறினாள். அதைக் கேட்ட இளவரசனின் இதயம் சுக்கு நூறாக உடையும் போலாகி விட்டது.

# 61. தேவி புராணம்

**சீ**னனான யாங்சின்னின் விசித்திர சிகிச்சையால் யாரும் எதிர்பாராத, எவரும் ஊகிக்க முடியாத பிரமிக்கத்தக்க குணத்தை யடைந்துவிட்ட பரமேசுவரவர்மன், அன்றைய பிற்பகலில் தனது அறைக்குள் ராஜ நடை போடத் துவங்கியதன்றி தனது அடுத்த திட்டத்தைப் பற்றிப் பேசவும் முற்பட்டது இளவரசனுக்கும் மற்றவருக்கும் மிதமிஞ்சிய வியப்பை அளித்ததென்றால், அவனிடம் காஞ்சி செல்ல விடைபெற வந்த ஸ்ரீராம புண்யவல்லபருக்கு வியப்புக் கலந்த அதிர்ச்சியை அளிக்கவே, தாம் காண்பது கனவா நனவா என்பதை நிர்ணயிக்க முடியாமல் வாயிற்படியிலேயே அவர் பல வினாடிகள் சிலையென நின்று விட்டார் ''உள்ளே வாருங்கள் அமைச்சரே'' என்று பரமேசுவரவர்மன் தன்னை அழைத்தபோது அவன் குரலிலிருந்த திடத்தைக் கவனித்த சாளுக்கியரின் போர் அமைதி மந்திரி, தாம் காண்பது உண்மைதானா என்பதை உறுதி செய்து கொள்ளக் கண்களை ஒரு முறை தமது விரல்களால் கசக்கியும் விட்டுக் கொண்டார். அவருடைய பிரமிப்பைக் கவனித்த பல்லவ இளவல் புன்முறுவல் கொண்டு, ''அமைச்சரே! தந்தையின் நிலை தங்களுக்கு மட்டுமல்ல. எங்களுக்கும் பிரமிப்பைத்தான் அளித்திருக் கிறது. ஆனால் நீங்கள் காண்பது கனவல்ல, உள்ளே வாருங்கள்'' என்று அழைக்கவே ஸ்ரீராமபுண்யவல்லபர் வாயிற்படியைத் தாண்டி உள்ளே வந்ததன்றி, பரமேசுவரவர்மன் மார்பையும் முதுகையும் தடவிக் கொடுத்து, பல்லவர்கோனே! இத்தகைய ஒரு விந்தையை இதுவரை நான் கண்டதில்லை. இதை விளைவித்த வல்லவன் யார்?'' என்று வினவினார்.

தான் ஏதோ தகாத காரியத்தைச் செய்து விட்டவன் போல் சற்று வெட்கப்பட்டு எட்ட நின்று கொண்டிருந்த சீனனைச் சுட்டிக் காட்டிய பரமேசுவரவர்மன், ''விந்தையை விளைவித்தவன் இதோ இருக்கிறான்'' என்று கூறவே ஸ்ரீராமபுண்யவல்லபர் சீனனை உற்று நோக்கிப் பாராட்டுவதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்துவிட்டு, ''மன்னவா! நீ ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் கைலாசநாதரும் அரங்கனும் தான் இவனை உங்களிடம் அனுப்பியிருக்க வேண்டும்'' என்று கூறவும் செய்தார். அத்துடன் ''இன்னும் கொஞ்ச நேரத்தில் காஞ்சிக்குக் கிளம்ப உத்தேசித்திருக்கிறேன். விடை பெற்றுக் கொள்ளவே இங்கு வந்தேன். என்னுடன் யார் வரப்போகிறார்கள்?'' என்று கேட்டு ரங்கபதாகாதேவியை உற்று நோக்கினார்.

அவர் முகத்திலிருந்த கேள்வியைப் புரிந்துகொண்ட ரங்கபதாகாதேவி; ''நான் காஞ்சிக்கு வரவில்லை. எனக்கு வேறு திட்டமிருக்கிறது'' என்று தீர்மானமாகக் கூறிவிடவே ஸ்ரீராமபுண்ய வல்லபர் இளவலை நோக்கி விஷமப் புன்முறுவல் செய்தார்.

பல்லவ இளவல் அந்த விஷம முறுவலின் காரணத்தைப் புரிந்துகொண்டு ஏதோ பதில் சொல்லத் துவங்கு முன்பாக பரமேசுவரவர்மன் குறுக்கிட்டு, ''அமைச்சரே! கங்க மன்னர் மகளுக்கு வேறு திட்டமிருக்கிறதாம். யாருக்கு என்ன திட்டமிருக்கிறதென்று இதுவரையில் எனக்கும் தெரியவில்லை. ஆகவே தாங்கள் சென்று வாருங்கள். தங்களுடன் உபதளபதி வீரபாகுவையும் அழைத்துச் செல்லுங்கள்'' என்று கூறினான்.

இதைக் கூறியபோது மன்னர் குரலில் ஒலித்த இகழ்ச்சியைக் கவனித்த ஸ்ரீராமபுண்யவல்லபர், ''வீரபாகு...'' என்று ஏதோ சொல்லத் துவங்கவே, ''என்னை ஏமாற்றப் பொய் ஓலை கொடுத்தனுப்பினீர்களே, அதே வீரபாகுதான், எங்கள் காவலிலிருக்கிறான். அவனை அழைத்துச் செல்லுங்கள்'' என்று பரமேசுவரவர்மன் குறுக்கிட்டு வாசகத்தை முடித்தான்.

சரியென்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த ஸ்ரீராமபுண்ய வல்லபர், ''சாளுக்கிய சக்கரவர்த்திக்கு ஏதாவது செய்தி இருக்கிறதா?'' என்று கேட்டார் பரமேசுவரவர்மனை நோக்கி. சக்கரவர்த்தி என்ற சொல்லைச் சிறிது அழுத்தியும் சொல்லிப் பல்லவ மண்டலம் விக்கிரமாதித்தன் பிடியிலிருப்பதை மறைமுகமாகக் குறிப்பிடவும் செய்தார்.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் கேள்விக்குப் பரமேசுவரவர்மன் விடை கூறுமுன் பல்லவ இளவல் பதில் கூறினான். ''சாளுக்கிய மன்னரிடம் சொல்லுங்கள், காஞ்சிப் போர் இன்னு முடியவில்லையென்று. அவர் விருப்பப்படி வெகு சீக்கிரம் அவரை வாளுடன் சந்திக்கிறேன் என்று அறிவியுங்கள்'' என்று இரு வாக்கியங்களில் மன்னர் என்ற சொல்லைச் சற்று அழுத்திச் சொல்லி, விக்கிரமாதித்தன் இன்னும் சக்கரவர்த்தியாகவில்லையென்று குறிப்பிட்டான்.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''ராஜசிம்மா! உன் செய்தியை அப்படியே தெரிவிக்கிறேன் விக்கிரமாதித்தனிடம். நீங்களிருவரும் போரிடும் சிறப்பைப் பார்க்க ஆண்டவன் எனக்குச் சீக்கிரம் அருள் புரியட்டும்'' என்று கூறிவிட்டு மன்னனிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார். பரமேசுவரவர்மன் உத்தரவுப்படி பலபத்ரவர்மன் வீரபாகுவை



விடுதலை செய்து ஸ்ரீராமபுண்யவல்லபருடன் அனுப்பி வைத்தான். அடுத்த ஒரு நாழிகைக்குள் ஸ்ரீராமபுண்ய வல்லபரின் ரதம் காஞ்சியை நோக்கி விரைந்தது. அவர் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்ததால் ரதத்தில் தம்முடன் உட்கார்ந்திருந்த வீரபாகுவை அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அதனால் மனம் நொந்து வீரபாகு, ''தங்கள் கட்டளையிலிருந்து சிறிதும் நான் மாறவில்லை'' என்றான் மெதுவாக.

ஸ்ரீராமபுண்யவல்லபர் சற்றுத் திரும்பி அவனை இகழ்ச்சியுடன் நோக்கி, ''அது எனக்குத் தெரியும்'' என்றார்.

''என்னையும் மீறித்தான் பலபத்ரவர்மனும் இந்திரவர்மனும் என்னைப் பல்லவ மன்னரிடம் கொண்டு போனார்கள்'' என்று மறுபடியும் சொன்னான் வீரபாகு.

ஸ்ரீராமபுண்யவல்லபரின் இதழ்களில் இகழ்ச்சி அதிகமாகப் படர்ந்தது. ''உன்னைப் பிடிக்க அவர்களை அனுப்பியதும் நான் தான்'' என்றார்.

ஸ்ரீராமபுண்யவல்லபர் புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் தாங்கள் அடுத்தபடி செய்ய வேண்டியதைப் பற்றி விவாதிக்கத் தொடங்கிய பரமேசுவரவர்மன் படைகளை அன்றே நடத்திக் கொண்டு பழைய பாசறைக்குச் செல்லத் திட்டமிட்டதையறிந்த ராஜசிம்மன், ''வேண்டாம். வேறுதிட்டம் இருக்கிறது. பிறகு சொல்கிறேன்'' என்றான்.

அந்தச் சமயத்தில் ரங்கபதாகாதேவி தனது பார்வையொன்றால் அவனை அந்த இடத்திலேயே தேங்க வைத்தாள். ''இளவரசர் திட்டத்தைப் பிறகு கூறுவார், ஆனால் எனக்கும் ஒரு திட்டம் இருக்கிறது. அதை இப்பொழுதே கூறமுடியும்'' என்றாள்.

இளவரசன் வியப்பு நிறைந்த விழிகளை அவள்மீது நாட்டினான். ''என்ன திட்டம் அது?'' என்று வினவவும் செய்தான் வியப்பு குரலிலும் ஒலிக்க.

''உங்கள் திட்டத்துக்கு நேர்மாறான திட்டம்'' என்ற ரங்கபதாகாதேவியின் குரலில் திடமிருந்தது. அவள் நின்ற தோரணையில் ராஜரீகமும் இருந்தது.

பரமேசுவரவர்மன் சற்றுப் பின்னடைந்து பஞ்சணையில் அமர்ந்து தேவியை நோக்கினான் ஏதும் பேசாமல். 'என் மைந்தனுக்கும் இந்த மலர்விழியர்களுக்கும் ஏதோ *பிரணய கலகம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

* *பிரணய கலகம்: காதலர்களுக்குள் ஏற்படும் ஒருவகை ஊடல்.*

ஆனால் அவள் எண்ணியது தவறென்பதை அடுத்தபடி இளவரசனுக்கும் கங்கன் மகளுக்கும் ஏற்பட்ட உரையாடல் நிரூபித்தது.

''என்ன திட்டமோ அது?'' என்று கேட்டான் இளவரசன்.

ரங்கபதாகாதேவி தன் அழகிய விழிகளால் அந்த அறையிலிருந்த அனைவரையும் ஒருமுறை ஆராய்ந்துவிட்டு, ''உங்கள் தந்தையின் தோல்வியை வெற்றியாக மாற்ற உத்தேசித்திருக் கின்றீர்கள்'' என்று கூறினாள்.

''எப்படி?'' இளவரசன் மீண்டும் கேட்டான் சற்றுச் சினத்துடன்.

''மீதி இருக்கும் உங்கள் படையைச் சீர்செய்து விளிந்தையை உங்கள் கோட்டையாக்கிக் கொள்வீர்கள். என் தந்தையைக் காவிரிக் கரைக்கருகே சமவெளியிலேயே நிறுத்தப் பார்ப்பீர்கள். அதிக நாள் சமவெளியில் அவர் தமது படைகளை நிறுத்த முடியாது. விளிந்தை நகருக்குள்ளும் வரமுடியாது. காவிரி மணல் வழியாக அக்கரை சென்று கங்க நாட்டை அடைய முயன்றால் காவிரிக் கரையிலிருந்து உங்கள் படைவீரர் என் தந்தையின் படைகளை அழிக்க முடியாவிட்டாலும் அதிகச் சேதம் விளைவிக்க முடியும். இது உங்கள் திட்டம். இதை நான் அனுமதிக்க முடியாது'' என்று ரங்கபதாகாதேவி ராணியைப் போல் மிக்கக் கம்பீரமாக நின்றாள்.

''வேறு என்ன செய்வாய்?''

''உங்கள் திட்டத்தை உடைப்பேன். இனிமேல் கங்கர்களுக்கும் பல்லவர்களுக்கும் போர் கூடாது.''

''காரணம்?''

''உங்களுக்கே தெரியும்.''

என்ன காரணத்தைப் பற்றி அவள் கூறுகிறாளென்பதை இளவரசன் புரிந்து கொண்டாலும் அதை அறிந்து கொள்ளாதது போலவே பேசத் தொடங்கி, ''ஏன், விளக்கமாகத்தான் சொல்லேன்'' என்று வினவினான்.

ரங்கபதாகா தேவி பொருள் நிரம்பிய பார்வையொன்றை அவன்மீது வீசிவிட்டுச் சொன்னாள்: ''நான் இங்கு வந்த போது விக்கிரமாதித்த மகாராஜாவின் ஓலையொன்றைக் கொண்டு வந்தேன். அதை எனது தந்தையிடம் கொடுத்து விளிந்தைப் போரைத் தவிர்க்கும்படி சாளுக்கிய மன்னர் கூறினார். நான் வருமுன்பே போர் முடிந்து விட்டது. ஆனால் சாளுக்கிய மன்னர் உத்தரவை நிறைவேற்ற வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. இனியும் போராடத் துடிக்கும் உங்கள் ஏற்பாட்டையும் மாற்ற வேண்டியிருக்கிறது. அதற்காக நான்



திட்டமிட்டுவிட்டேன். அதை முன்னிட்டு இன்னும் சில நாழிகைகளில் புறப்படுகிறேன்.''

''எங்கு?'' பரமேசுவரவர்மன், ராஜசிம்மன் இருவரும் ஒரே குரலில் கேட்டார்கள்.

''என் தந்தையிருக்கும் இடத்திற்கு'' என்றாள் ரங்கபதாகா தேவி.

''அங்கு போய்?'' என்று வினவினான் ராஜசிம்மன் சினத்துடன்.

''பிறகு புரிந்து கொள்வீர்கள்.''

''எதை?''

''ரங்கபதாகாதேவி ராணிபோல் கம்பீரமாகத் திரும்பினாள். ''என் திட்டத்தை முறியடிக்க உங்களால் முடியாதென்பதை'' என்ற பதிலை உதிர்த்த அவளது பவள உதடுகளில் பெரிதும் உறுதியிருக் கிறது.

''தேவி, காவ்யதர்சத்தில் போர்த் திட்டங்களும் இருக் கின்றனவா?'' என்று வினவினான் ராஜசிம்மன் இகழ்ச்சியுடன்.

''இல்லை, புராணத்தில் இருக்கிறது

''எந்தப் புராணத்தில்?''

''ரங்கபதாகா தேவியின் புராணத்தில்.'' இதைச் சொல்லி நகைத்தாள் ரங்கபதாகாதேவி. ஆனால் அவள் சொற்களோ நகைப்போ புறக்கணிக்கக் கூடியவை அல்ல என்பதைப் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அடுத்த நாளே கிடைத்தது பல்லவ இளவலுக்கு. அந்த வாய்ப்பு அவனையும் பரமேசுவரவர்மனையும் திக்பிரமைக் குள்ளாக்கியது. புராணம் புதிதாகவும் இருந்தது, வலுவாகவும் இருந்தது.

# 62. அவள் செய்த சத்தியம்

ரங்கபதாகா தேவியின் கம்பீரமான தோற்றத்தையும் துணிவு நிறைந்த சொற்களையும், மேற்கொண்டு கங்கநாட்டுப் படைகளுடன் போர் நேரிடாதிருக்கத் தான் திட்டம் தயாரித்திருப்பதாகவும், அத்திட்டத்தைப் பல்லவ இளவல் முறியடிக்க முடியாதென்றும் அவள் செய்த சபதத்தையும் கேட்ட பரமேசுவரவர்மன் மட்டுமின்றி அந்த அறையிலிருந்த மைவிழியும் சீனனும் கூடப் பிரமித்துப் போய் வேறு வழியின்றி மௌனம் சாதித்தனர். ஆனால் அவள் ஏன் கங்கர்களுக்கும் பல்லவர்களுக்கும் மேற்கொண்டு போர் கூடாதென்று கூறுகிறாளென்று மைவிழி மட்டும் நன்றாக உணர்ந்திருந்தாளாதலால் பொறாமை கலந்த கடும் பார்வையொன்றை ரங்கபதாகாதேவியின் மீது நாட்டினாள். பல்லவ இளவலிடம் வேரூன்றிவிட்ட ரங்கபதாகா தேவியின் காதல்,

கங்கர்களையும் பல்லவர்களையும் விரோத பாவத்திலிருந்து நீக்க முயல்கிறதென்பதை மைவிழி சந்தேகமற உணர்ந்து கொண்டதால், ''உன் நெஞ்சிலிருப்பது எனக்குத் தெரியாதா?'' என்று கேட்கும் பாவனையில் தேவியின் கண்களுடன் தன் கண்களைக் கலக்கவிட்டாள். தவிர தேவி பல்லவ இளவலுடன் முதல் நாளிரவில் தனித்து அந்த மாளிகையில் தங்கியிருக்கிறாளாதலால் அவர்களுக்குள் என்ன நேரிட்டு விட்டதோ என்ற எண்ணம் அந்தப் பார்வையிலிருந்தது.

பெண்ணுக்குப் பெண் உணராதது உலகத்தில் என்ன இருக்கிறது? ஆகவே மைவிழிச் செல்வியின் பெரிய கண்கள் உணர்த்திய சொற்களை நன்றாக உணரவே செய்த ரங்கபதாகாதேவி அதற்கு மேலும் அந்த அறையில் நிற்காமல், ''மைவிழி! சற்று வா என்னுடன். என் பயணத்துக்கு வேண்டியவற்றைக் கவனிப்போம்'' என்று கூறி அவள் இடையில் கையைச் செலுத்தி அவளை இழுக்காத தோஷமாய் அறைக்கு வெளியே அழைத்துச் சென்றாள். அங்கிருந்த தனியறையொன்றுக்கு அவளை அழைத்துச் சென்று கதவையும் சாத்திக் கொண்ட ரங்கபதாகாதேவி வினவினாள். ''மைவிழி! அவர் இருந்த அறையில் என்னை எதற்காக அப்படிப் பார்த்தாய்?'' என்று.

மைவிழியின் இதழ்கள் பேசத் துடித்தன. அவள் பெரிய கண் அரைவாசி மூடின. ''எப்படிப் பார்த்தேன்'' என்ற கேள்வியிலும் உதடுகளின் துடிப்புத் தெரிந்தது.

ரங்கபதாகா தேவி அவளை அணைத்துக் கொண்டாள். ''மைவிழி! என்னிடமிருந்து எதற்கு மறைக்கிறாய்?'' என்றும் வினவினாள்.

''மறைப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது?'' என்று மைவிழி வினவினாள்.

''என்னிடம் இல்லாதது ஒன்று உன்னிடமிருக்கின்றது. இத்தனை நாள் இல்லாத அது இப்பொழுது உன்னிடமிருக்கிறது'' என்றாள் ரங்கபதாகாதேவி.

''என்னிடமா?'' மைவிழியின் கேள்வியில் வியப்பு ஒலித்தது

''ஆம்.''

''அது என்னவோ?''

''பொறாமை.''

''பொறாமையா?''

''ஆம். பொறாமை.''

''எதற்குப் பொறாமை?''



''நேற்றே நான் இங்கு வந்துவிட்டதற்கு.''

''அதற்குப் பொறாமைப் படுவானேன் நான்?''

''அதற்குப் பொறாமைப்படவில்லை நீ. அதனால் ஏற்பட்டு விட்டதாக நீ அஞ்சும் விளைவுக்கு.''

அதைக் கேட்ட மைவிழி தன் பெருவிழிகளை நிலத்தில் ஓட்டினாள். ''அப்படி ஒன்றும்...'' என்று ஏதோ கூற முற்பட்டு வாசகத்தைப் பாதியில் நிறுத்தினாள்.

ரங்கபதாகாதேவி அவளை மேலும் இறுக அணைத்தாள். ''அப்படியொன்றும் ஏற்படவில்லை. ஏற்பட நான் அனுமதிப்பேனென்று நினைக்கிறாயா?'' என்றும் வினவினாள்.

நல்ல வலுவுள்ள ரங்கபதாகாதேவியின் கைகளால் இறுக்கப்பட்ட மைவிழியின் உடல் சிறுக வலித்தது. ''வலிக்கிறது தேவி'' என்றாள் மைவிழி சலிப்புத் தட்டும் குரலில்.

ரங்கபதாகாதேவி தனது பிடியைச் சற்றே தளர்த்தி ''இப்படித்தான் என்னை அழைப்பதா?'' என்றும் வினவினாள் சற்றுச் சினம் துளித்த குரலில்.

''வேறு எப்படி அழைப்பது.''

''ஆசார்யரின் மாளிகையில் பஞ்சணையில் அக்கம் பக்கத்தில் படுத்திருந்தோமே.''

''ஆம்.''

''அப்போது எப்படி அழைத்தாய்?''

''ஆம் அக்கா. மறந்துவிட்டது.''

இதைக் கேட்டது ரங்கபதாகாதேவி நகைத்தாள். ''பொறாமை எத்தனை மறதியை ஏற்படுத்தி விடுகிறது?'' என்றும் நகைப்பின் ஊடே கூறினாள்.

மைவிழியின் வதனத்தில் வெட்கத்தின் சாயை மெல்ல மெல்லப் படரலாயிற்று. ''அக்கா'' என்று அடுத்தபடி அவள் அழைத்தபோது அவள் குரல் பெரிதும் மாறியிருந்தது.

''ஏன் மைவிழி?'' என்ற தேவியின் குரலில் கனிவு இருந்தது.

''நான் யாரென்பதை உணர்த்தி விட்டாய்'' என்றாள் மைவிழி வருத்தம் தோய்ந்த குரலில்.

''நீ யார்?''

''பெண்.''

"உம்."

"அதிலும் ஒற்றர் மகள்."

"அதெல்லாம் பேசாதே மைவிழி. முன்பே உனக்குச் சொல்லியிருக்கிறேன் நமக்குள் தாரதம்மியம் இல்லையென்பதை."

"முன்பு சொன்னாய். இப்பொழுது நிரூபித்துவிட்டாய்."

"என்ன நிரூபித்துவிட்டேன்."

இம்முறை மைவிழியின் தளிர்க்கரங்கள் ரங்கபதாகா தேவியின் இடையைச் சுற்றின. "அக்கா! நான் என் பொறாமைக் குணத்தைக் காட்டினேன். பொறாமை கொண்டேன் உன்னிடம், அவருடன் நீ தனித்திருந்ததற்கு. அதனால் என் தாழ்வையும் காட்டிவிட்டேன். ஆனால் நீயோ அரசகுமாரியென்பதை மட்டுமின்றி நிதான புத்தியையும் கனிவையும் என்னிடம் காட்டி விட்டாய்" என்று அவள் இதழ்கள் சொற்களையும் உதிர்த்தன.

ரங்கபதாகா தேவியின் கைகளும் மைவிழியைச் சுற்றி மீண்டும் தழுவின. "மைவிழி! அப்படியெல்லாம் சொல்லாதே. அது மட்டுமல்ல" என்று பேசிக் கொண்டிருந்தவள் திடீரென்று மைவிழியின் வலது காதில் தனது உதடுகளைக் கொண்டு போய், "அடி கள்ளி! எனக்கும் உன்னிடம் பொறாமை இருக்கிறதடி. ஆனால் அதை நான் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. இன்று முதல் நீ அவருடன் தனித்திருக்கப் போகிறாய். நானோ தொலைவில் இருக்கப் போகிறேன்" என்று ரகசியக் குரலில் கூறினாள்.

"அக்கா!" பொய்க் கோபமிருந்தது மைவிழியின் குரலில்.

"கோபித்துப் பயனில்லையடி முல்லைக்கொடி. சாதாரணப் பெண்ணுக்கும் அரச மகளுக்கும் அதுதான் வித்தியாசம். என் பொறாமையை நான் மறைத்துக் கொள்கிறேன் மற்றவர் முன்னிலையில். உன்னால் அது முடியவில்லை. எதனால் தெரியுமா?" என்று வினவினாள் ரங்கபதாகாதேவி.

முல்லைக் கொடியென தேவி தன்னை அழைத்ததன் காரணத்தைப் புரிந்து கொண்ட மைவிழியின் நினைப்பு தண்டி மகாகவியின் மாளிகையின் அறைப் பஞ்சணைக்கும் அங்கு தங்களிருவருக்கும் நடந்த உரையாடலுக்கும் ஓடியது. அங்கு தேவியின் கட்டமைந்த தேகத்தைப் பற்றியும் அத்தனை சதைப் பற்றில்லாத தனது உடலழகைப் பற்றியும் தாங்களிருவரும் பேசிக் கொண்டதும் மைவிழிக்கு நினைவுக்கு வந்தது. ஆகவே அன்றைய வசனங்களையே திருப்பினாள் மைவிழி, "இல்லை செந்தாமரை! என்ன இருந்தாலும் நான்சாதாரணப் பெண்தான். உன் மனப்பக்குவம் எனக்கில்லை" என்று.



ரங்கபதாகாதேவி மைவிழியின் இடையிலிருந்து தனது கைகளை நீக்கி அவள் இரு கன்னங்களையும் பிடித்துக் கொண்டு, "மைவிழி! நாம் இருவரும் சாதாரணப் பெண்களில்லை யென்பதை நினைவில் வைத்துக் கொள்" என்று உறுதி நிரம்பிய குரலில் கூறினாள்.

"எந்த விதத்தில் நாம் உயர்வு?" என்று கேட்டாள் மைவிழி, தேவியின் கண்களுடன் தனது கண்களைக் கலந்து.

"இணையிலா ஓர் அரசகுமாரனை நாம் இருவரும் காதலிக்கிறோம்."

"ஆம்."

"அது மட்டுமல்ல."

"வேறென்ன?"

"இணையிலாக் கலைஞனையும் காதலிக்கிறோம்."

"ஆம்."

"அதனால் நமது பொறுப்பு அதிகமாகிறது."

"எப்படி?"

"சாதாரணப் பெண்கள் போல் நாம் உணர்ச்சிக்கு இடங் கொடுக்கக்கூடாது."

"அதெப்படி முடியும்?"

இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை ரங்கபதாகாதேவி. சற்றுச் சிரித்துவிட்டு மெல்லச் சொன்னாள், "மைவிழி! நேற்றிரவு பல்லவ மன்னர் மரண மூர்ச்சையிலிருந்தார். மூன்று ஜாமங்கள் நானும் இளவரசரும் தனியாகத்தானிருந்தோம்" என்று.

"கதவைத் திறந்தபோது நான் பார்த்தேனே!"

"அந்த மூன்று ஜாமங்களும் அவர்..."

"உம்."

"வாளாவிருந்திருப்பாரென்று நினைக்கிறாயா?"

"இல்லை, நினைக்கவில்லை அக்கா. கட்டழகியொருத்தி கையிலிருக்கும்பொழுது எப்படி வாளாவிருந்திருப்பார்?"

"என்ன செய்திருப்பார் என்று நினைக்கிறாய்?"

"எதையும் செய்திருப்பார்" என்ற மைவிழி மெல்ல நகைத்தாள்.

"இல்லை மைவிழி" என்ற ரங்கபதாகாதேவி தான் ராணி யென்பதைக் காட்டினாள். "அத்து மீறி எதையும் செய்யவில்லை அவர். நானும் அனுமதிக்கவும் இல்லை. நாங்களிருவரும் அரச குடும்பம்.

கந்தர்வ மணம் எங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தும் கட்டுக்குள் அடங்கியிருந்தோம் மைவிழி. சூழ்நிலை எத்தனை இன்பமாக இருந்தது தெரியுமா? சாளரத்தின் ஓரத்தில் செண்பகமரம். கிருஷ்ணபட்சத்துச் சந்திரனும் உள்ளே வெள்ளிக் கிரணங்களை ஓட்டியிருந்தான். செண்பக மலரின் நறுமணம், சந்திரனின் குளிர்க் கிரணங்கள், தனிமை, இத்தனையிருந்தும், அவர் வெகு கண்ணியமாக நடந்து கொண்டார். செண்பக மலர்களைச் சூட்டினார் என் தலையில். என்னைத் தழுவவும் செய்தார். அவ்வளவுதான் மைவிழி'' என்று முந்திய இரவின் சூழ்நிலையை நினைத்துக் கூறினாள் ரங்கபதாகா தேவி. அவள் குரலில் உண்மை கணீரென்று ஒலித்தது. மேலும் அதே குரலில் சொன்னாள் தேவி: ''மைவிழி! பல்லவர்களின் பெரும் வரலாறு போர்களால் எழுதப்படவிருக்கும் கட்டத்தில் நாமிருவரும் இருக்கிறோம். பாரதத்தின் சிற்பக் கலையின் சிறப்பு அந்த வரலாற்றில் இடம் பெறப் போகும் நிலையிலும் நிற்கிறோம். இரண்டையும் சிருஷ்டிக்கப் போகிறவர் பல்லவ இளவல். அவர் காதலிகளாகிய நாமும் வரலாற்றுப் பாத்திரங்கள். அந்தக் கண்ணியத்துக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும். இதோ நான் கிளம்பப் போகிறேன் என் தந்தை இருக்குமிடத்திற்கு. இனி நீதான் அவருடன் தனிமையிலிருக்கப் போகிறாய்...''

''அதனால்?''

''நான் நடந்து கொண்டதுபோல நீயும் நடந்து கொள்'' என்றாள் ரங்கபதாகாதேவி

''அதாவது?''

''அதிகமாக அவருக்கு இடங்கொடுத்துவிடாதே. அவரது கூறிய அறிவு இனிப் போர்த் துறையிலிருக்க வேண்டும்.''

''அதற்காக?''

''போர்கள் முடிந்து அவர் நெற்றியில் நீயும் நானும் ராஜ திலகம் இடும்வரை கட்டுப்பாட்டுடனிரு.''

''அது அவருக்குப் புரிய வேண்டுமே?''

''புரிய வை.''

''சரி அக்கா.''

''சத்தியம் செய்.''

''எப்படி?''

''அவர் சத்தியம் செய்யச் சொன்னால் எப்படிச் செய்வாய்?''



''இப்படிச் செய்வேன்'' என்று மைவிழி தன் இதழ்களை ரங்கபதாகாதேவியின் அழகிய கன்னத்தில் புதைத்தாள்.

''வேறு முறையும் இருக்கிறது'' என்ற வாயிற்படியிலிருந்து வந்த குரல் இருவரையும் திகைத்துத் திரும்பிப் பார்க்கச் செய்தது. கதவை லேசாகத் திறந்துகொண்டு வாயிற்படிக்கருகில் ராஜசிம்ம பல்லவன் இதழ்களில் முறுவல் காட்டிக் கொண்டு நின்றான்.

# 63. உணர்ச்சி ஊஞ்சல்

பரஸ்பரம் தழுவி நின்ற பாவையர் இருவர்மீதும் பரிகாசப் பார்வையை வீசிய வண்ணம் உள்ளே நுழைந்த பல்லவ இளவல் அந்தப் பைங்கிளிகள் இருவரையும் தனது இரு கைகளால் அணைத்து, ''சத்தியம், சபதம் என்று ஏதேதோ சொற்களைக் கேட்டேன். என்னைப் பற்றி ஏதாவது சதி நடக்கிறதா?'' என்று வினவினான். சத்தியம் செய்யக் கன்னத்தில் இதழ்களைப் புதைப்பதைவிட வேறு முறையிருப்பதாகச் சொன்ன பல்லவ இளவலின் சொற்களைக் கேட்டவுடனேயே தனித்தனியாகப் பிரிந்து விட்ட மங்கையரிருவரும் அவன் இருகரங்களில் அவனிருபக்கமும் இழுக்கப்பட்டதால் ஒருவரை யொருவர் நோக்கிக் கண்களாலேயே ஏதோ பேசிக் கொண்டதன்றி அவனைப் பார்க்க வெட்கப்பட்டுக் கண்களை நிலத்தில் ஓட்டினர். அந்த நிலையில் ரங்கபதாகாதேவி சொன்னாள்: ''உங்களைப் பற்றிச் சதி செய்ய என்ன இருக்கிறது? நாங்களென்ன ஒற்றர்களா அல்லது படைத் தலைவர்களா?'' என்று வினவினாள்.

இளவரசனின் இரு கைகளும் அவர்களது இரு இடைகளிலும் ஆர்வத்துடன் ஊர்ந்ததன்றி, ''உங்களைவிடச் சாமர்த்தியமுள்ள ஒற்றர்களும் படைத் தலைவர்களும் எனக்குத் தெரிந்தவரை பல்லவ சாம்ராஜ்யத்தில் கிடையாது'' என்று கூறி அவ்விருவரையும் மாறிமாறிப் பார்த்தான் பக்கவாட்டில்.

''எந்த விதத்தில் நாங்கள் ஒற்றர்கள்?'' என்று கேட்டாள் மைவிழி அவனது வலது பக்கத்தில் தனது தலையைத் திருப்பி.

''எந்த விதத்தில் நாங்கள் படைத்தலைவர்கள்?'' என்று வினவினாள் ரங்கபதாகாதேவி அவனது இடது புறத்தில் தனது பார்வையைத் திருப்பி.

அப்படி இருபுறமும் இளவரசனைப் பார்த்து இருகேள்விகளை வீசிய அந்த இரு மங்கையரும் பரஸ்பரம் அர்த்தபுஷ்டியுள்ள கண்களைக் கலந்து கொள்ளவும் செய்தனர். பல்லவ இளவல் அவர்கள்

கேள்விகளிலிருந்த சூட்சுமத்தையும் உணர்ந்தான். பார்வைகளின் விஷமத்தையும் உணர்ந்தான். ஆனால் எதையும் உணராதவன் போல் அவர்களிருவரையும் அழைத்துச் சென்று அங்கிருந்த பஞ்சணையில் அக்கம் பக்கத்தில் உட்காரவைத்து விட்டு அவர்களிருவரையும் பல விநாடிகள் கவனித்துக் கொண்டு மௌனமாக நின்றான் அவர்கள் எதிரே. அந்த இருவரின் இருவித இணையிலா அழகு அவன் இதயம் பூராவையும் ஆக்கிரமித்துக் கொண்டு நின்றதன்றி அவ்விருவரில் அதிக அழகு யார் என்பதை நிர்ணயிக்கச் சித்தமும் சக்தியற்றுவிட்டது. பஞ்சணையில் உட்கார்ந்திருந்த அந்த இரு பைங்கிளிகளில் ரங்கபதாகாதேவி சற்று அதிகச் சதைப் பிடிப்புடனும் மைவிழி அவளைவிடச் சற்று ஒல்லியாகவும் காணப்பட்டாலும் அவ்விருவரின் அழகு அம்சங்கள் தனித்தனிச் சிறப்பைப் பெற்றிருந்தன. ரங்கபதாகாதேவியின் அழகிய கன்னங்கள் சற்றுப் பருமனாகவும் இதழ்கள் இழுபட்டபோது குழிவிழுந்தும் இதயத்தை இழுத்தன வென்றால் மைவிழியின் கன்னங்கள் வழவழத்தும் அவள் முறுவல் கொட்டியபோது ஆழமான குழிகள் அவற்றில் விழாவிட்டாலும் சற்றே நீண்டு விழுந்த இழுகோடுகளின் அழகும் அவனுக்கு எல்லையற்ற வசீகரத்தை அளித்தன. ரங்கபதாகாதேவியின் கார் மேகவிழிகள் அதிகப் பெரியனவாயில்லாவிட்டாலும் அவற்றில் சதாதோன்றிய ஒளி அவள் பார்வையை மோகனப் பார்வையாக அடித்தது. அவற்றுக்கு நேர்விரோதமாய் மல்லைக் கடலினும் பெரியவாய் மைவிழியின் கண்களில் தாண்டவமாடிய விஷம அலைகள் இளவரசனைக் கபளீகரம் செய்துவிடுவனபோல் விழித்தன. கெட்டிக் கரும்பு போன்ற புஷ்டியுடன் கூடிய ரங்கபதாகாதேவியின் கைகளும் கொடிகள் போல் ஒடிய மைவிழியின் கரங்களும் இருவித அழகையும் மென்மையும் பெற்றிருந்தன. அவர்கள் இருவரின் இருவித இடைகளும் இடைகளுக்குக் கீழே காணப்பட்ட இருவித பருத்த எழில்களும் தமிழ் மொழியில் பெரும் கவிஞர்கள் சுட்டிக் காட்டியதுபோல் தேர்த்தட்டுகளாக விளங்கின. இத்தனையையும் பார்த்துப் பார்த்து இதயம் கலங்கிய இளவரசன் கடைசியில் நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டான்.

அப்படி அவன் தங்களை அக்கக்காக ஆராய்வதைக் கண்ட இருபெண்மணிகளின் இதயங்களும் அலைகடல் துரும்புகளெனத் தவித்துக் கொண்டிருந்தன. நாணமும் ஆசையும் அவர்கள் கண்களை நிலையற்றதாகச் செய்தன. அவர்களது அழகிய உடல்களும் நிலையற்றுச் சற்றே பஞ்சணையில் அசைந்தன. அந்த மூவரில் ரங்கபதாகாதேவி முதலில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''இளவரசர் மௌனமாகி விட்டார்போல் இருக்கிறது'' என்று விஷமமாகப் பேசினாள்.



அவளது விஷமச் சொற்களால் தன் உணர்ச்சிகளை ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்ட இளவரசன், ''ஆம், மௌனியாகி விட்டார்'' என்று கூறி மெல்ல நகைத்தான்.

''ஏனோ?'' என்று வினவினாள் மைவிழி சற்றுப் புன்முறுவல் கோட்டி.

''பெண்களுடன் பேசி எந்த ஆடவன் வெற்றி கொள்ள முடியும்?'' என்று பதிலுக்குக் கேட்டான் இளவரசன்.

''அப்படியென்றால் நம்முடன் பேச இளவரசருக்கு இஷ்டமில்லை. வா, நாம்போவோம் மைவிழி'' என்று கூறிக் கொண்டே பஞ்சணையிலிருந்து எழுந்திருக்க முற்பட்ட ரங்கபதாகா தேவியைத் தோளைப் பற்றி அழுத்தி உட்கார வைத்த இளவரசன், அடாடா! அதற்குள் எத்தனை கோபம்! எத்தனை துடிப்பு!'' என்று கூறிவிட்டு, ''நீங்கள் இரு கேள்விகள் கேட்டீர்கள் என்னை'' என்று அவனே உரையாடலைத் தொடங்கினான்.

''ஆம், கேட்டோம்'' என்றாள் ரங்கபதாகாதேவி அலுப்புடன் உட்காருபவள் போலப் பாசாங்கு செய்து.

''எங்களை ஒற்றர்கள் என்றீர்கள். எந்தவிதத்தில் என்று கேட்டேன்'' என்றாள் மைவிழி துடுக்கு ஒலித்த குரலில்.

''எங்களைப் படைத் தலைவர்க்கு ஒப்பிட்டீர்கள். எப்படி என்று நான் கேட்டேன்'' என்றாள் தேவி பொய்க் கோபம் குரலில் ஒலிக்க.

இப்படி மாறி மாறிக் கேள்விகளை வீசிய மங்கையரிரு வரையும் இளவரசன் நோக்கிவிட்டு, ''ஒவ்வொருத்தருக்காகப் பதில் சொல்லுகிறேன். மைவிழி! நீங்கள் எப்படி ஒற்றர்கள் என்று கேட்டாய் நீ. ஒற்றர்களின் அலுவல் என்ன?'' என்று வினவினான் மைவிழியை நோக்கி.

''எதிரிகளின் நாட்டில் உலாவுவது, எண்ணங்களை அறிவது.''

''எதிரிகளின் நாட்டில் உலாவுவதும் எதிரிகளின் எண்ணங்களை அறிவதும் ஒற்றர்களின் கடமை. அது குற்றமல்ல. ஆனால் சொந்த நாட்டில் உலாவி, சொந்தமுடையவர்களின் எண்ணங்களை ரகசியமாய் அறிவதும், அவற்றைத் தனிமையில் பேசுவதும் துரோகம்.''

''யார் எண்ணங்களை அறிய முயன்றோம்?''

''பல்லவ இளவரசனின் எண்ணங்களையும் நடவடிக்கைகளையும்.''

''ஓகோ! அதற்குத் தண்டனை உண்டு போலிருக்கிறது!''

''உண்டு.''

''என்ன தண்டனை?''

''காலத்தில் அறிவிக்கப்படும். கொடுக்கப்படும்.''

''கடுமையாயிருக்குமோ?''

''மிகக் கடுமையாயிருக்கும்.'' இதை இளவரசன் கூறிய போது அவன் குரலில் விஷமம் கலந்த உறுதியிருந்தது. அந்த உறுதி மைவிழியைத் தலை குனியச் செய்தது.

அவள் மௌனமானவுடன் ரங்கபதாகாதேவி கேட்டாள். ''எங்களைப் படைத் தலைவர்களுக்கு ஒப்பிட்டதற்கும் இளவரசருக்குத் தகுந்த காரணங்கள் இருக்கவேண்டும்'' என்று.

''தகுந்த காரணங்கள் இல்லாமல் உவமை கூறமாட்டான் பல்லவ இளவரசன்.''

''அப்படியா!'' ரங்கபதாகாதேவி மெல்லப் புன்முறுவல் கோட்டினாள். ''கொஞ்சம் விளக்குங்கள்.''

''படைத் தலைவனுக்கு வேண்டிய குணங்கள் என்ன?''

''படைக் கலங்கள் அனைத்தையும் மற்ற வீரர்களைவிட அதிகச் சிறப்புடன் கையாளும் திறன் வேண்டும். ஆற்றல் வேண்டும். படைகளைப் பிரித்து அணிவகுத்து, வெற்றி கொள்ளும் ஆற்றல் வேண்டும்.''

''அப்படியானால் என் உவமையில் என்ன தவறு இருக்கிறது?''

''அப்படி என்ன படைக் கலங்களை வைத்திருக்கிறோம்?''

''புருவவிற்கள், வாள் விழிகள், அம்பினும் கூர்ந்த முனைகளுடன் என்னை நோக்கிச் சீறும் இரண்டு...''

''போதும் போதும், நிறுத்துங்கள்.''

''நான் நிறுத்திவிடுகிறேன். ஆனால் இந்தப் படைக்கலங்களின் வன்மையில் எனக்குச் சந்தேகமில்லை. அவற்றை உபயோகிக்க உங்களுக்குள்ள திறனை நான் ஏற்கனவே அனுபவித்தாகி விட்டது.''

இளவரசனின் இந்தச் சொற்களைக் கேட்ட ரங்கபதாகாதேவி அவனைக் காதலும் நாணமும் நிரம்பிய கண்களுடன் நோக்கினாள்.



மேற்கொண்டு அவள் பேசவில்லை. இளவரசன் பேசினான். ''படைகளைப் பிரித்து, அணிவகுத்து... என்று ஏதேதோ கேட்டாயே தேவி?'' என்று.

''வேண்டாம், வேண்டாம், உங்கள் விளக்கம் போதும்.''

இளவரசன் பேச்சை நிறுத்தி, பஞ்சணையில் உட்கார்ந்திருந்த அவ்விருவரையும் கைகளைப் பிடித்துத் தூக்கினான். ''தேவி! மைவிழி இங்கில்லாதபோது நீ இருந்தாய் என்னுடன். நீ உன் தந்தையிடம் செல்லப் போவதால் மைவிழி இருப்பாள் எனக்கு ஆதரவாக. நாம் மூவரும் சேர்ந்திருக்கும் காலம் வரும். அந்த நாளை எதிர்பார்த்துப் பொறுத்திருப்போம்'' என்று கூறிய பல்லவ இளவல் அவர்களிருவரையும் தன் உடலிடம் நெருக்கினான். பல்லவ காஞ்சியில் பல நாட்களுக்கு முன்பு இருந்த நிலை அது. மூவர் எண்ணங்களும் அந்நிலைக்கு ஓடின. அதற்குப் பின் ஏற்பட்ட பிரிவும் அவர்கள் நினைவுக்கு வரவே, அவர்கள் மூவரது நெஞ்சிலிருந்தும் ஒரே சமயத்தில் துன்பப் பெருமூச்சு வந்தது. எண்ணங்கள் அல்லாடின, ஆசைகள் அலை மோதின. உல்லாச நிலையில் மூவரும் உணர்ச்சி ஊஞ்சலில் ஊசலாடினார்கள். ஆனால் அது நீடிக்க வழி இல்லை. பிரிவுக்கு நேரம் வந்து விட்டது. மீண்டும் இணைப்பு வெகு தூரத்தில் இருந்தது. அதை மூவரும் உணர்ந்தே இருந்தார்கள்.

# 64. பூவையின் திட்டமும் பூவிக்கிரமன் பிரமிப்பும்

**வா**ழ்க்கையில் பணத்துக்கும் சரி, பதவிக்கும் சரி, உணர்ச்சிக்கும் சரி, எதற்குமே ஏற்றத்தாழ்வு உண்டு. அந்த ஏற்றத் தாழ்வுகளால் அடியோடு பாதிக்கப்படாதவன் யோகியாகிறான். அடியோடு பாதிக்கப்படுபவன் ஒன்று போகியாகிறான் அல்லது ரோகியாகிறான். சற்றுப் பாதிக்கப்பட்டாலும் சமய சந்தர்ப்பங்களை உத்தேசித்து அவற்றினின்று சட்டென்று விலகிக் கொள்கிறவன் விவேகியாகிறான்.

விளிந்தையின் மாடியறையில் மங்கையர் இருவரையும் தழுவி உணர்ச்சிகளில் ஊசலாடிய ராஜசிம்ம பல்லவனும் அத்தகைய விவேகிகளில் ஒருவனாதலால், தனது உணர்ச்சிகளை ஓரளவு அடக்கிக் கொண்டு அவற்றிலிருந்து விடுபட்டு வெகு சீக்கிரம் சுயநிலை அடையவே, அம்மங்கையரைத் தழுவிய தனது கைகளை எடுத்துக் கொண்டு அவர்களிடமிருந்து சிறிது விலகி நின்று அவர்களை உற்று

நோக்கினான். ஆண் மகன் கைபடாத போது தங்கள் உணர்ச்சிகளை அடியோடு காட்டாதிருப்பது பெண்களின் சுபாவமானாலும், தொட்டதும் துவண்டுவிடும் தன்மையும் அவர்கள் இயற்கையாகையால் ரங்கபதாகாதேவியும் மைவிழியும் அவனிடமிருந்து விடுதலையடைந்தும் உணர்ச்சிகளிலிருந்து விடுதலையடையாத காரணத்தால் அவனைப் பார்க்க சக்தியற்று நீண்ட நேரம் நிலத்தில் கண்களை ஓட்டியே நின்றனர். மூவருக்கும் பேச விஷயங்கள் பல இருந்தும் பேசும் சக்தியில்லாததால் மூவரும் பல வினாடிகள் மௌனம் சாதித்தே நின்றாலும் ஆண் மகனான ராஜசிம்மனே அந்த மௌனத்தை முதலில் கலைத்து, ''தேவி! நீ பயணப்படும் சமயம் வந்துவிட்டதென்று நினைக்கிறேன்'' என்றான்.

ராஜசிம்ம பல்லவனின் சொற்கள் அவள் உணர்ச்சிகளில் ஊடுருவி உடைத்து அவளை இவ்வுலகுக்குக் கொண்டு வந்ததால் அவள் மெல்லத் தலைநிமிர்ந்து தனது பங்கய விழிகளை அவன் முகத்தில் நாட்டி, பவள இதழ்களை விரித்து, ''ஆம். கிட்டத் தட்ட மாலை நேரம் வந்துவிட்டது. நான் புறப்பட வேண்டும்'' என்றாள்.

ராஜசிம்ம பல்லவன் முகம் திடீரெனக் கடுமைப்பட்டு விட்டதன்றி, ''அப்படியானால் அதற்கான ஏற்பாடு செய்யட்டுமா?'' என்ற குரலிலும் உணர்ச்சி வறண்டு கிடந்தது.

''ஏற்பாடுகள் என்று தனிப்பட ஏதும் வேண்டாம். சாளுக்கிய விக்கிரமாதித்த மன்னர் என்னுடன் அனுப்பிய வீரர்களை நீங்கள் சிறைப்படுத்தாத வரையில் சகல ஏற்பாடுகளையும் நானே செய்து கொள்ள முடியும்'' என்றாள் ரங்கபதாகாதேவி அலட்சியத்துடன்.

''உன்னுடன் வந்த வீரர்களை நான் சிறை செய்யவில்லை. அவர்கள் சுதந்திரத்துடன் தானிருக்கிறார்கள்'' என்றான் ராஜ சிம்மன்.

''உங்களுக்கிருக்கும் பரிவு உங்கள் படைத்தலைவருக்கு இல்லாதிருக்கலாம். அவர் சிறை செய்திருந்தால்?'' என்று வினவினாள் தேவி.

''என் உத்தரவில்லாமல் யாரையும் யாரும் சிறை செய்ய முடியாது. அவர்கள் ஒற்றர்களாயிருந்தாலொழிய'' என்ற இளவரசனின் குரல் உறுதியுடன் ஒலித்தது.

''சாளுக்கிய வீரர்கள் ஒற்றர் படையைச் சேர்ந்தவர்களல்லவா?'' என்று விஷமமாகக் கேட்டாள் தேவி.

''நீ கூட எதிரியின் மகள்தான். அதுவும் எங்களை முறியடித்த எதிரியின் மகள். உன்னைச் சிறை செய்தாவிட்டோம்?''



''நான் பெண்.''

''அதனால்?''

''சிறை செய்யவில்லை.''

''ஆண் எதிரியைவிடப் பெண் எதிரிதான் அபாயம். உண்மையில் சிறை செய்வதானால் உன்னைத்தான் சிறை செய்ய வேண்டும்.''

''அதுதான் ஏற்கெனவே சிறை செய்துவிட்டீர்களே?''

''நானா?''

''ஆம்.''

''எப்படி?''

இதைக் கேட்ட ரங்கபதாகாதேவி மட்டுமின்றி மைவிழியும் சேர்ந்து நகைத்தாள். அந்த நகைப்பின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்ட ராஜசிம்மன் மிகுந்த சங்கடப்பட்டு அந்த அறையை விட்டுச் சரேலென்று வெளியேறினான். அறைக்கு வெளியே சென்றதும் காவலனொருவனை விட்டு, பலபத்ரனை அழைத்து வரச்சொன்ன பல்லவ இளவல் ரங்கபதாகாதேவி புறப்படுவதற்கான ஏற்பாடு களைச் செய்யும்படி உத்தரவிட்டான்.

அவன் சென்றபின் அறைக்குள் தனித்து விடப்பட்ட மங்கையிருவரும் ஒருவரையொருவர் உற்று நோக்கிக் கொண்டு சற்று நேரம் மௌனமாயிருந்தனர். உற்ற சகோதரிகள் போல் ஒன்றிவிட்ட அவ்விருவருக்கும் கூடப் பிரிவு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தபடியால் இருவரும் தங்கள் மார்புகள் ஏறி இறங்கப் பெருமூச்சு விட்டனர். ''வருகிறேன் மைவிழி'' என்று கடைசியில் விடை பெறும் சொற்களை உதிர்த்த ரங்கபதாகாதேவியின் குரலில் பெரும் வேதனையிருந்தது நன்றாகத் தெரிந்தது இந்திரவர்மன் மகளுக்கு. அந்த வேதனையின் காரணத்தைப் புரிந்து கொண்ட மைவிழி, ''கவலைப் படாமல் போய்வா அக்கா! நான் சத்தியத்தை மறக்க மாட்டேன்'' என்றாள்.

ரங்கபதாகாதேவியின் விழிகள் அவளை நிர்மலமாகப் பார்த்தன, ''நீ என்னும் கவலை எனக்கில்லை மைவிழி. அவருடைய பிற்காலத்தில், சிறப்பில், வீரத்தின் விளைவில் எனக்குள்ள அக்கறை உனக்கும் உண்டு என்பது எனக்குத் தெரியும். உன்னைப் பிரிவதே எனக்குக் கஷ்டமாயிருக்கிறது'' என்று கூறிய ரங்கபதாகாதேவி மைவிழியை அணைத்துக் கொண்டாள்.

''அக்கா! மீண்டும் என் புத்தியை நான் காட்டிவிட்டேன்'' என்று வருத்தத்துடன் சொன்னாள் மைவிழி.

''மைவிழி!'' கோபத்துடன் ஒலித்தது தேவியின் குரல்.

''ஏன் அக்கா!''

''எப்பொழுதும் உன்னைக் குறைத்து பேசாதே.''

''இருப்பதைத்தானே சொன்னேன் அக்கா?''

''எல்லோருக்கும் உணர்ச்சிகள் இருக்கத்தான் செய்கிறது. அதை எல்லோரும்தான் வெளியே காட்டிக் கொள்கிறார்கள். அதனால் என்ன தவறு? கபடமுள்ளவர்களால் உள்ளத்து உணர்ச்சிகளை மறைக்க முடிகிறது. நீ வெளுத்தவள். உன்னால் மறைக்க முடியவில்லை. இதுதான் உண்மை மைவிழி. நீ எதைச் சொன்னாலும் உன்னிடமுள்ள என் அன்பு மாறாது அப்படி மாறினால்...''

''மாறினால்?''

''ஒரே ஒருவரைக் கட்டிக் கொள்ளும் நாமிருவரும் வாழ்க்கையை எப்படி இன்பமாக நடத்த முடியும்?'' இப்படிக் கூறிய ரங்கபதாகாதேவி அவளை மீண்டும் ஒருமுறை அணைத்து விட்டு அவளுடன் அறையைவிட்டு வெளியேறினாள்.

அந்த வினாடி முதல் புறப்படுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்ட ரங்கபதாகாதேவி பரமேசுவர வர்மனிடமும் மற்றவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு தனது தந்தையின் பாசறையிருக்குமிடம் நோக்கிக் கிளம்பினாள். அவளுக்குப் பரமேசுவரர்மன் மிகுந்த வருத்தத்துடனேயே விடை கொடுத்தான். ''கங்கன் செல்வமே! என்னை மரணத்திலிருந்து மீட்டதை என்றும் மறக்கவே மாட்டேன் என்று சொல் உன் தந்தையிடம். வெகு சீக்கிரம் உன்னை மீண்டும் காஞ்சியில் எதிர்பார்க்கிறேன். அதாவது சுதந்திரக் காஞ்சியில், சாளுக்கியர் பிடியிலிருந்து மீண்ட காஞ்சியில், பல்லவ காஞ்சியில் எதிர் பார்க்கிறேன்'' என்று கூறினான் பல்லவமன்னன் தேவியை நோக்கி.

தேவி அவனுக்குப் பதில் ஏதும் சொல்லாமலேயே வணங்கி விடைபெற்றுக் கொண்டு அந்த அறையிலிருந்து வெளியேறினாள். மாளிகை வாயிலில் அவள் ரதம் தயாராக இருந்தது. சாளுக்கியக் காவலரும் ரதத்தைச் சூழ்ந்து நின்றனர். ரதத்தில் ஏறிய ரங்கபதாகாதேவி புரவிகளின் கடிவாளத்தைத் தானே கையிலேந்திக் கொண்டு தன்னை அனுப்பக் காத்திருந்த பல்லவ இளவலிடமும் மைவிழியிடமும் விடை பெற்றுக் கொண்டாள்.

அவள் புறப்படு முன்பு ஒரு கேள்வி மட்டும் கேட்டான். பல்லவ இளவல், ''நீ ஏதோ என் திட்டத்துக்கு மாற்றுத்திட்டம் தயாரித்திருப்பதாகக் கூறினாயே, அது என்ன திட்டமென்று கூறமாட்டாயா?'' என்று.

''கூறுவதற்கில்லை'' என்ற தேவியின் குரல் உறுதியாயிருந்தாலும் அவள் இளநகை கூட்டவே செய்தாள்.

'என்னிடமிருந்தும் ரகசியமா?'' என்று வினவினான் பல்லவ இளவல்.

''நீங்கள் எதிரியல்லவா?''

''யாருக்கு?''

''என் தந்தைக்கு.''

''அதனால்?''

''திட்டத்தைச் சொல்லுவதற்கில்லை'' என்று கூறிய ரங்கபதாகாதேவி கடிவாளத்தை இருமுறை இழுக்க புரவிகள் அமர்ந்தன.

அந்த ரதம் போவதை நின்ற இடத்திலிருந்து கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக்கொண்டே நின்றான் பல்லவ இளவல். அவன் இதயம் அவள் பிரிவால் துன்பத்தின் எல்லையை அடைந்த உருண்டவை ரதத்தின் சக்கரங்களல்ல, தனது உணர்ச்சிகள் என்பதைப் புரிந்து கொண்ட பல்லவ இளவலின் துயரம் தோய்ந்த கண்களை மைவிழி திருப்பினாள். அவன் முகத்தில் தோய்ந்து கிடந்த துயரத்தைக் கண்ட மைவிழி, ''ஐயோ பாவம்'' என்று கூறிவிட்டு ஏளனம் கலந்த பார்வையொன்றை அவன் மீது வீசிவிட்டு விடுவிடு என்று மாளிகைக்குள் சென்று விட்டாள். அவள் சொற்களையும் ஏளனத்தையும் கவனித்த பல்லவ இளவல் ''இதென்னடா சங்கடம்?'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அவளைத் தொடர்ந்து மாளிகைக்குள் நுழைந்தான். அவன் மனத்தில் போராட்டங்கள் பல விளைந்து கொண்டிருந்தன.

அவன் மனதில் மட்டுமென்ன, ரதத்தைச் செலுத்தித் தந்தையின் பாசறையை நோக்கிச் சென்ற ரங்கபதாகாதேவியின் இதயத்திலும் போராட்டங்கள் நிகழந்து கொண்டுதானிருந்தன. தான் காஞ்சியை விட்டுப் புறப்பட்டுச் சில தினங்களே ஆகியிருந்தாலும் அது தந்தையின் காதுக்கு எட்டியிருக்கும் என்பதில் அவளுக்குச் சிறிதும் சந்தேகமில்லை. தவிர, தனக்கும் பல்லவ இளவலுக்கும் ஏற் பட்டுள்ள உறவும் ஓரளவு அவருக்குத் தெரிந்திருக்கும் என்பதையும் அவள் உணர்ந்தே இருந்தாள். யார் அவருக்கு இந்தச் செய்திகளைச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கங்க நாட்டு ஒற்றர்கள் மூலம் அவர் விவரங்களைப் புரிந்து கொண்டிருப்பார் என்ற விஷயம் அவளுக்கு